யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைப் பிரசுரம்—10.

உ

## மகாபாரதம்

# கிருட்டிணன்றூது-உரை

THE SAIVA PRAKASA PRESS

(வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களியற்றிய

விசேடக் குறிப்புரையுடன்.)

1934.

பிரதிகள் 1500.] [விலை ரூபா 1—10.

V. Mahadevan,
University Entrance Class
J.H.C.
15-3-45
10

உ

வில்லிபுத்தூரார்

இயற்றிய

# பாரதம்—உத்தியோகபருவம்

# ருட்டிணன்றூது

## சருக்கம்.

இஃது

திருத்தியும், விளக்கியும், புதுக்கியும்

எழுதப்பட்ட

**பொழிப்புரையுடன்**


யாழ்ப்பாணம்

சைவபரிபாலன சபையாரால்

தமது

சைவப்பிரகாசயந்திரசாலையில்

அச்சிடப்பெற்றது.

சு-ம பதிப்பு.

பவ௵ புரட்டாதிமீ.

1934.

கரு00.]

[விலை ரூபா க.



(Copyright Registered.)

உ

# முன்னுரை.

வில்லிபாரதம் - கிருஷ்ணன்றூது சருக்கத்தில் **1—190** செய்யுட்கள் **1941**-ம்ஆ **S. S. C.** பரீக்ஷை இலக்கியங்களுள் ஒன்ருக நியமிக்கப்பட்டுள்ளன. ஷெ சருக்கம் பொழிப்புரையுடன் யாழ் - சைவபரிபாலன சபையாரால் வெளியிடப்பட்டுப் பலவருடங்களாக உலவி வருதலை யாவரும் அறிவர். இந்துசாதன மனேஜர் அவர்களின் வேண்டுதலால், அப்பதிப்பிற்கு அநுபந்தமாக ஷெ பரீக்ஷைக்குப் பயிலும் மாணவர்களுக்குப் பயன்படும் வண்ணம் விசேடக்குறிப்புரை ஒன்று எழுதி உதவினேன். ஷெ பரீக்ஷைக்குப் பயிலும் மாணவர்களுக்கு யான் கல்வி பயிற்றுங்கால், அவர்களுக்கு உள்ள குறைகளை ஓரளவுக்கு என் அநுபவத்தில் அறிந்துள்ளேனுகையால், அக்குறைகளைச் சிறிதளவாவது பூர்த்திசெய்ய வேண்டுமென்ற ஆவலால் எழுதப்பட்ட சிறு குறிப்புரையாதலின், இதனைப் பூர்த்தியான பேருரை என்று சொல்வதற்கில்லை. அன்றியும், காகித விலை எற்றம்பெற்ற இக்காலத்தில், ஷெ சபையார் பொழிப்புரைமாத்திரம் உள்ள புத்தகத்துக்கு இதற்குமுன் விதித்த விலையிலும் கூட்டாமல் மாணவர்க்கு எளிய விலைக்கே இதனை உபகரிக்கும் நோக்கங்கொண்டமையும் விஷயச் சுருக்கத்தையே இலக்காகக் கொண்டு இஃது இயற்றப்படுதற்கு ஒரு பிரதான காரணமாம். இவ்விசேடக் குறிப்புரையினுல் 88 பக்கங்கள் கூடுதலாயின இப்பொழுதும் இதன் விலையை முன்னுள்ள அளவாகவே விதித்தனர். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அவர்கள் செய்யும் கைம்மாறற்ற பல தொண்டுகளில் இதுவும் ஒன்ரும் எனல் மிகையாகாது.

மாணவர்க்கு உதவுதலாகிய நோக்கமொன்றையே குறிக்கொண்டு எழுதப்பட்ட இக்குறிப்புரையின்கட் குறைகளுளவேல், அமைதி உறுவித்துக் கோடல் ஆன்ரோர் கடனுகும்.

வண்ணார்பண்ணை
26 - 4 - 40.

இங்ஙனம்,
**வித்துவான், ந. சுப்பையபிள்ளை.**

# மதிப்புரை.

( உயர்திரு சுவாமி உருத்திரகோடீசுவரர் அவர்கள் எழுதியது )

1941-ம் ஆண்டுக்குரிய S. S. C. பரீக்ஷை இலக்கியமாக வில்லி பாரதம் - கிருஷ்ணன்தூது சருக்கத்தில் 1—190 செய்யுட்கள் நியமிக்கப்பட்டுள. யாழ் - சைவபரிபாலன சபைப் பதிப்பாகப் பல வருடங்களுக்கு முன்னரே வெளிவந்த ஷெ சருக்க உரைப் புத்தகம் மேற்படி பரீக்ஷைக்குத் தோற்றும் மாணவர்க்குப் பயன்படும் வகையில், ஏற்ற அளவுக்கு விஷயங்களை விரித்து **ஒரு விசேடக் குறிப்புரை** எழுதியுதவின் நல்லது என்று இந்துசாதன மானேஜரவர்கள் தூண்டியமையினால், அதற்கிசைந்து, வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியரும், பண்டித பாலபண்டித வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம்வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய **வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்கள்** அவ்வாறு ஒருரையினை அப்பதிப்பிற்கு அநுபந்தமாக இயற்றி உதவுவாராயினர். முன்னைய பதிப்பானது பொழிப்புரையாயிருந்தபடியால், மாணவர்க்குத் தாமாக உணர்ந்துகொள்ளற்கு அரியனவாகிய அரும் பதங்களுக்கும் அருந் தொடர்களுக்கும் பொருள்கள், அப்பொருள்களை விளங்குதற்குக் கருவியாக வேண்டப்படும் சொல்லிலக்கணம், தொடரிலக்கணம், பகுபதமுடிபுகள், பதங்களின் அவயவார்த்தங்கள், புணர்ச்சி முடிபுகள், சொல்லாற்றல் பொருளாற்றல்களாற் பெறப்படும் குறிப்புப்பொருள்முதலிய பொருள் நயங்கள், சிலேடை உவமை உருவகம் தற்குறிப்பேற்றம் பிறிது மொழிதல் (ஒட்டு) முதலிய அணிநயங்கள், செய்யுட்பேத லட்சணங்கள் இன்னோரன்னவற்றை மாணவர் இலகுவாகவும் தெளிவாகவும் விளங்கிக்கொள்ளுதற்குரிய முறையில் விவரித்து, பாஷாஞானமும் இலக்கியச்சுவை யுணர்வும் வளர்ச்சியுறுதற் கேற்ற விஷயங்களை விடாதுகொண்டுமிளிருகின்ற இவ்விசேடக் குறிப்புரை ஷெசபையார் பதிப்பிற்கு ஓர் அங்கமாக நின்று அதற்குச் சிறப்பைத் தருகின்றது என்னலாம்.



இது ஷெ பதிப்பின் பொழிப்புரையிலும் விசேடவுரையிலும் முன்னமே உரைக்கப்பட்ட பொருளைப் பெரும்பாலும் தழுவியும், அவற்றுற் பெறப்படாதனவும் விளங்காதனவும் சுருக்கப்பட்டனவுமாகிய விஷயங்களை விரித்தும் விளக்கியும் செல்லுகிறது; மேலும், கொண்டு கூட்டுப் பொருள்கோள் வகையால் பொழிப்புரை நடைபெறுமிடங்களில், செய்யுளிலுள்ள பதங்களை [+] இவ்வித 'சக' அடையாளத்தால் இணைத்து அந்நுவயங் கொளுத்தியும், மாணவர்க்கு வியுற்பத்திஞானம் பெருகல்வேண்டி ஆங்காங்குக் கொள்ளத்தக்கனவாகிய பக்ஷாந்தரமான உரைகளை எடுத்து விளக்கியும், தள்ளத்தக்க போலி யுரைகளை நியாயங்காட்டி மறுத்தும், அவற்றுள்ளும் விரிதல்நோக்கி விடத்தக்கவைகளைப் பராமுகஞ் செய்து விட்டொழித்தும், பிரமாணமாகிய சைவபுராணங்களுக்கு மாறுபட்ட பிறசமயக் கோட்பாடுகளாகிய வரலாறுகளைப் போற்றாது, மாறுபடாத புராண வரலாறுகளையே எடுத்து விளக்கியும் செல்கின்றது. சுருங்கச் சொல்லுகில், கிளிப்பிள்ளைப் பாடமாகவன்றி, மாணவர்கள் தாமாகப் பலவற்றையும் ஆராய்ந்து தமது உய்த்துணரும் வன்மையைப் பெருக்கிக்கொள்ளவும், பாஷையறிவை வளர்த்துக்கொள்ளவும் வேண்டும்வழிவகைகளை மாணவர்க்கு விளக்கும் நோக்கத்தைத் தன்னகத்துக் கொண்டு மிளிர்தலின், மாணவர்க்கும் பிறர்க்கும் இவ்வுரைநூல் பெரிதும் பயன்படும் என்பது எமது அபிப்பிராயம். இவ்வுரையை ஆதியோடந்தம் நோக்குவோர்க்கு மேற்குறித்த விஷயங்கள் உண்மையாதல் புலப்படும்.

[சிலேடைப்பொருள் முதலிய நயங்களைப்பற்றி அறியலுறின், 97, 185, 64, 72, 80, 117, 119, 124-ம் பா முதலியவற்றின் உரைகளை நோக்குக. இருவர் மாறுகோளொருதலை துணிதலைப்பற்றி அறியலுறின், 31, 41, 62, 84, 120, 131-ம் பா முதலியவற்றின் உரைகளை நோக்குக. சிவபரத்துவத்துக்கு மாறுபாடில்லாத பிரமாணமாகிய புராணவரலாறுகளைப்பற்றி அறியலுறின், 4, 15, 23, 59, 91-ம் பா முதலியவற்றின் உரைகளை நோக்குக.]

கலாநிலையம்,
யாழ்ப்பாணம்.
26-4-40.

உருத்திரகோடீசுவரர்.

## உள்ளுறை


| | பக்கம். |
|---|---|
| மூலம் | 1 |
| நூல் வரலாறு | 40 |
| வில்லிபுத்தூரார் வரலாறு | 41 |
| முற்சரித்திரத் தொடர்பு | 44 |
| பொழிப்புரை | 46 |
| விசேடக் குறிப்புரை | 121 |
| பிழையும் திருத்தமும் | 203 |




## நூன்முகம்.

புலவர்சிகாமணியாகிய வில்லிபுத்தூரார் இயற்றிய பாரதத்து உத்தியோகபருவத்துள்ள கிருஷ்ணன்றூது சருக்கம் அந்நூலுட் பெரிதுஞ் சிறந்த பாகமாகும். இச்சருக்கம் தமிழ் வித்தியாசாலைகளிற் பெரும்பாலும் எட்டாம் வகுப்பிற் பயிலும் மாணவர்கட்குச் செய்யுட்பாடமாக ஆசிரியர்களால் நியமிக்கப்பெற்றுள்ளது. கேம்பிரிஜ் சர்வகலாசங்கத்தாரும் தங்கள் "ஸீனியர் சேர்ட்டிவிக்கற்" பரீக்ஷைக்குள்ள தமிழ்ப் பாடங்களு ளொன்றாக இச்சருக்கத்தைப் பலமுறைகளில் நியமித்துள்ளனர். மேலும் இது 34-ம், 35 - ம் ஆண்டுக்ளில் நிகழும் பிரவேசபண்டித வகுப்பு மாணவர்க்குப் பாடமாக நியமிக்கப்பெற்றுள்ளது.

இற்றைக்குப் பல வருடங்கட்கு முன்னர் இக்கிருஷ்ணன்றூது சருக்கம் ஒரு பொழிப்புரையுடன் இச் சைவ பரிபாலன சபையாரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. மாணவர்கள் பயில்வதற்கு அவ்வுரை போதியதன்றென வித்தியாசாலை ஆசிரியர் சிலர் தெரிவித்தமையினால், அவ்வுரையைத் திருத்தியும், புதுக்கியும், விளக்கியும், செய்யுட்களில் இடையிடையே சுட்டப்பட்ட சரித்திரங்களை விரித்தும் இயன்றவரையில் எழுதியுள்ளேம். நூலாசிரியர் வரலாறு, சரித்திரத்தொடர்பு என்னுமிவற்றையும் நூதனமாக எழுதிச் சேர்த்திருக்கின்றேம். இவ்வுரையை யாமெழுதுங்காலத்தும் அச்சிடுங் காலத்தும் உடனின்று பல அரிய திருத்தங்களைச் செய்த, இந்துக் கல்லூரித் தமிழ் ஆங்கில போதகாசிரியரும் எமது அரிய நண்பருமாகிய ஸ்ரீ. அ. க. இளையதம்பி உபாத்தியாயரவர்களின் பேருதவி என்றும் பாராட்டற்பாலதாகும். உரையெழுதும் பயிற்சியற்ற யாம் எழுதிய இவ்வுரை பூரணமற்றதாயினும் மாணவர்கட்குப் பயன்படுமென்பதே எமது நம்பிக்கை. இவ்வுரை விஷயமாகச் செய்யற்பால திருத்தங்களை, கற்றோர் எமக்குத் தெரிவிப்பரேல் அவற்றை நன்றியறிதலுடன் ஏற்று அடுத்த பதிப்பிற் றிருத்தி வெளியிடச் சித்தமாயிருக்கின்றேம். [இது நான்காம்பதிப்பாகும்]

இங்ஙனம்,

வண்ணார்பண்ணை.
பவ வருஷம், புரட்டாசி மீ

**ம. வே. திருஞானசம்பந்தன்.**

உ

## மகாபாரதம்--உத்தியோக பருவம்.

# கிருட்டிணன்றூது சருக்கம்.

### காப்பு.

நீடாழி யுலகத்து மறைநாலோ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபார தஞ்சொன்னநா
ளேடாக மாமேரு வெற்பாக வங்கூ ரெழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ.

---

பேர்படைத்த விசயனுடன் மும்மைநெடும் பிறவியினும் பிரியா
னாகிச், சீர்படைத்த கேண்மையினாற் றேரூர்தற் கியைந்தருளுஞ்
செங்கண் மாலைப், பார்படைத்த சுயோதனற்குப் படையெடே
னமரிலெனப் பணித்த கோவைக், கார்படைத்த நிறத்தோனைக்
கைதொழுவார் பிறவாழிக் கரைகண் டாரே. (௧)

ஞானமன்பொ டினிதுரைத்து ஞானமுனி யகன்றதற்பின் சாம
பேத, தானதண்ட மெனநிருபர் தருமமுறை மையிற்புகலுந் தகுதி
நோக்கித், தூநறுந்தண் டுளவோனைத் தூதுவிடு வதற்கெண்ணிச்
சுனைக டோறு, மேனலந்தண் கிரிப்பெருந்தே னிறைக்குமெழிற்
குருநாட னியப்பு வானே. (௨)

செஞ்சொன்முனி சஞ்சயனுக் கியாமுரைத்த கருமமுமுன்
சென்ற காலை, யஞ்சொன்முனி புரோகிதனுக் கவனிசைத்த கரும
முநீ யறிதி யன்றே, நஞ்சுதனை மிகவருந்தி நன்மருந்து மந்திரமும்
விரைந்து நாடா, தெஞ்சினர்தங் களைப்போல விருக்குமதோ யார்
மனத்து மிருக்குஞ் சோதீ. (௩)

அருஞ்சமரம் புரியும்வகை யவருரைத்தா ரானு மறமொன்
றின்றிப், பெருஞ்சமரம் விளைக்குமது கடனன்றென் றருள்வெள்ளம்
பெருகக் கூறும், பொருஞ்சமர நெடுமுரசப் பூங்கொடியோன் றனை
நோக்கிப் புயப்போர் வாண, னிருஞ்சமரந் தொலைத்தபிரா னிளைஞ
ரையு முடனிருத்தி யியம்பு வானே. (௪)

செய்வா ரினமுகளுந் திருநாடு பெறநினைவோ செல..
பையரா வருங்கானிற் பயின்றுதிரி தரநினைவோ பகைத்த ..
லுய்வா ரெனவிரைவி னுருத்தெழுந்து பொரநினைவோ வுண்மை
யாச, வைவரா மவனிபர்க்கு நினைவெதென் றருள்புரிந்தா னமரர்
கோமான். (௫)

வயிரமெனுங் கடுநெருப்பை மிகமூட்டி வளர்க்கினுயர் வரைக்கா
டென்னச், செயிரமரில் வெகுளிபொரச் சேரவிரு திறத்தேமுஞ்
சென்று மாள்வோங், கயிரவமுந் தாமரையுங் கமழ்பழனக் குருநாட்
டிற் கலந்து வாழ, வுயிரனையாய் சந்துபட வுரைத்தரு ளென்று
னறத்தி னுருவம் போல்வான். (௬)

அரவுயர்த்தோ னுடன்மறுசூ தாடிநீர் வென்றவந்நா ளவன்
றன் சொன்ன, விரதமொழி தவிராமல் வெங்கானம் போய்மீண்
டீர் வெய்யோ னுங்கள், குருநிலத்திற் பாதியினிக் கொடாதிருந்தா
லாங்கவனைக் கொன்று போரி, லிருநிலத்தை ஆளவினித் துணி
வதே கடனென்று னெம்பிரானே. (௭)

குரவரையுங் கிளைஞரையுங் குலத்துரிய துணைவரையுங் கொன்று
போர்வென், றரவநெடுங் கடலாடை யவனியெலாந் தனியாளு
மரசு தன்னிற், காவுறைவு மனத்தாதை முனிக்குரைத்த மொழிப்
படியே கானந் தோறும், இரவுபகற் பலமூல சாகநுகர்ந் துயிர்
வாழ்த லினிது நன்றே. (௮)

கோதிலா னிந்தமொழி கூறுதலு மாமாயன் கூற லுற்றான்,
மோதமருக் கிளைத்துநீர் மொய்த்தபெருங் கானகத்தே முடுகிச் சென்
றூற், பூதலத்தோ ரேசாரோ புகன்றபெரு வஞ்சினமும் பொய்த்
திடாதோ, நீதியோ வெனவுரைத்தா னுங்கதற்கு நிகழ்தரும
னிகழ்த்த லுற்றான். (௯)

நீதூது நடந்தருளி யெமதுநினை வவர்க்குரைத்தா னினைவின்
வண்ணந், தாதூதி யளிமூரலுந் தண்பதியுந் தாயமுந்தான் றரா
னாகின், மீதூது வளைக்குலமும் வலம்புரியு மிகமுழங்க வெய்ய
காலன், மாதூதர் மனங்களிப்பப் பொருதெனினும் பெறுவனிது
வசையு மன்றே. (௰)



மூந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரி னடந்துழவர் முன்றி
ரேறு, நந்தூரும் புனனாட்டின் றிறம்வேண்டு நாடொன்று நல்கா
னாகில், ஐந்தூர்வேண் டவையிலெனி லைந்திலம்வேண் டவை
மறுத்தா லடுபோர் வேண்டு, சிந்தூர திலகநுதற் சிந்தூரத்தின்
மருப்பொசித்த செங்கண் மாலே. (௧௧)

மூத்தோன்மற் றிவையுரைப்ப விளையோன்வெஞ் சினமனத்
தின் மூள மூள, நாத்தோமி லுரைபதறக் கதுமெனவுற் றெழுந்
திறைஞ்சி ஞால மெல்லாம், பூத்தோனே பூந்தவிசிற் பூவைபுணர்
மணிமார்பா புன்மை யாவுந், தீர்த்தோனே யூனமிலான் மானமிலா
துரைப்பதற்கென் செய்வ தென்றான். (௧௨)

விரிகுழற்பைந் தொடிநாணி வேத்தவையின் முறையிடுநாள்
வெகுளே லென்று, மரபினுக்கு நமக்குமுல குள்ளளவுந் தீராத
வசையே கண்டாய், எரிதழற்கா னகமகன்று மின்னமும்வெம்
பகைமுடிக்க விளையா நின்றாய், அரவுயர்த்தோன் கொடுமையினு
முரசுயர்த்தோ யுனதருளுக் கஞ்சினேனே. (௧௩)

கானுள வுனைவிடுத்த கண்ணிலா வருளிலிதன் காதன் மைந்
தன், றானுளந் தரணியெல்லா மொருதுடைக்கீழ் நீயாளத் தருவ
னின்றே, மேனாண் முரிமையறக் கவர்ந்த பெருந் துணைவனுனை
வெறுத வண்ணம், வானுள வானவர்கோன் றன்பதமற் றவன்
றனக்கே வழங்கு வேனே. (௧௪)

போர்முடித்தா னமர்பொருது புலம்புறுசொற் பாஞ்சாலி பூந்
தண் கூந்தற், கார்முடித்தா னிளையோர்முன் கழறியவஞ் சினமுடித்
தான் கடவுட் கங்கை, நீர்முடித்தா னவனறிய நீயறிய வசை
யின்றி நிலைநின் றோங்கும், பேர்முடித்தா னிப்படியே யார்முடித்தா
ரிவனுடனே பிறப்பதே நான். (௧௫)

அணிந்துவருஞ் சமரிலெதிர்ந் தரவுயர்த்தோ னுடனரச ருடல
மெல்லாந், துணிந்திரண்டு படப்பொருது தொல்லையுல கரசாளத்
துணிவ தல்லாற், றணிந்தறமுங் கிளையுறவுங் கொண்டாடித் தானின்
னாந் தனித் தூதேவிப், பணிந்திரந்து புவிபெற்றுண் டிருப்பதற்கே
துணிநின்றான் பட்ட பாடே. (௧௬)

பரிவுடன்மற் றிவைகூறும் பவனகுமா ரனைமலர்க்கை பணித்து நோக்கிக், குருகுலத்தோர் போரேறே குற்றமது பார்க்குங்காற் சுற்ற மில்லை, யொருகுலத்திற் பிறந்தார்க ளுடன்வாழும் வாழ்வினைப்போ லுறுதி யுண்டோ, விருவருக்கும் வசையன்றோ விருநிலங்கா ரணமாக வெதிர்ப்ப தென்றான். (௧௭)

உரிமையுடன் றம்பியான் றுணர்வறியா மையினவைக்க ணுரைத்த மாற்றம், பரிபவமோ கேட்டோர்க்குப் பரிபவமென் பதுபிறராற் பட்டா லன்றோ, கருதிலிது மற்றெவர்க்கு மொவ்வாதோ கண்மலரிற் கை படாதோ, பொருதொழிலுங் கடைநிலத்திற் கிடந்ததே யெனமொழிந்தான் புகழே பூண்பான். (௧௮)

சூடுகின்ற துளாய்முடியோன் சாருடனே முனிவர்களுஞ் சுருதி நான்குந், தேடுகின்ற பதஞ்சிவப்பத் திருநாடு பெறத்தூது செல்லவேண்டா, வாடுகின்ற மடப்பாவை தன்வாழு மென்வாழும் வழுவாவண்ணங், கோடுகின்ற மொழியவன்பா லெனைத்தூது விடுகவினிக்கொற்ற வேந்தே. (௧௯)

மலைகண்ட தெனவென்கை மறத்தண்டின் வலிகண்டு மகவான் மைந்தன், சிலைகண்டு மிருவர்பொருந் திறல்கண்டு மெமக்காகத் திருமால் நின்ற, நிலைகண்டு மிவள் விரித்த குழல்கண்டு மிமைப்பொழுதினோரார் தம்மைக், கொலைகண்டு மகிழாம லவன்குடைக்கீ ழுயிர்வாழக் குறிக்கின்றாயே. (௨௦)

வெம்புயவீ மனும்வெகுண்டு மீண்டுமிவை யெடுத்துரைப்ப மேகமேனிப், பைம்பொனெடுந் தனித்திகிரிப் பரந்தாமன் கருணையுடன் பரிந்து நோக்கி, யப்புவியின் முன்பிறந்தோ ராசநெறி முறையுரைத்தா லதுகே ளாமற், றம்பியரு மறுப்பரோ தலைவவினிக் கடுங்கோபந் தணிக வென்றான். (௨௧)

மைக்கால முகிலூர்தி வானவர்கோன் றிருமதலை வணங்கி நின்று, முக்காலங் களுமுணரு முகுந்தனுக்கு முதல்வனுக்கு மொழிவான் மன்னோ, வக்காலம் பொறுத்தவெலா மமையாம லின்னமிருந் தறமே சொன்னா, லெக்காலம் பகைமுடித்துத் திரௌபதியுங் குழன்முடிக்க விருக்கின் றாளே. (௨௨)



தேவரா யினும்பழைய தயித்தியரா யினுமற்றுஞ் செப்புகின்றோர், யாவராயினு மெதிர்ந்தோ ருயிருணவென் றிருப்பதுவே யென்கை வாளி, மூவரா யவர்களுக்கு முதல்வனா கியமூர்த்தி முகிறோய் பூக, மீவரா னுகளும் வயற் குருநாடென் னிவனவன்பால் வேண்டு மாறே. (௨௩)

தீண்டாத கற்புடைய செழுந்திருவைத் துகிலுரியச் செயலொன் றின்றி, நீண்டானே கரியானே நிமலாவென் றாற்றினளாய் நின்று சோர, மாண்டார்போ லதுகண்டு மன்னவையில் யாமிருந்த மாசுதீர, வேண்டாவோ வேண்டுவது மேம்படுநல் லறமேயோ வேந்தர் வேந்தே. (௨௪)

பொன்னாருந் திகிரியினன் போனாலும் பொறைவேந்தன் புகன்ற வெல்லாஞ், சொன்னாலு மவன்கேளான் விதிவலியாற் கெடுமதிகண் டோன்றா தன்றே, யெந்நாளு முவர்நிலத்தி னென்முளைவித் திடினும்விளை வெய்தி டாது, பன்னாகந் தனக்கமிர்தங் கொடுத்தாலும் விடமொழியப் பயன்கொடாதே. (௨௫)

பார்த்தனிவை புகன்றிறைவன் பணித்தருள விருந்ததற்பின் பரிவினோடுந், தீர்த்தனிரு பதமிறைஞ்சித் தருமனையுங் கைதொழுதுசினங்கொள் வேலா, னீத்தநெடுங் கடலெழுபா ரடலைவர் பெறுவவெனு நிகழ்ச்சி பொய்யோ, கோத்தருமந் தனிலாண்மை கூறாதோகூறுகநீ கொற்ற வேந்தே. (௨௬)

கேவலந்தீர் வலியபகை கிடக்கமுதற் கிளர்மழைக்குக் கிரியொன்றேந்து, கோவலன்போ யுரைத்தாலுங் குருநாடு மரசுமவன் கொடுக்கமாட்டா, னாவலம்பூ தலத்தரசர் நாடிரந்தோ மெனநம்மை நகைபாவண்ணங், காவலன்றன் படைவலியு மெமதுதடம் புயவலியுங் காணலாமே. (௨௭)

அன்னநடை யரம்பைதனை யவுணர்கவர்ந் திடவிமையோ ராசுக்காக, முன்னமவ ருடன்பொருது சிறைமீட்டா னங்குலத்து முதல்வனன்றோ, மன்னவையில் யாங்காண மடவாலைத் துகிலுரிந்த வலியோன் றன்பா, லின்னமிரந் தவன்குடைக்கீ ழிருந்தக்கா னம்மையுலகென்சொ லாதே. (௨௮)

கானகம்போய்க் காந்துறைந்து கடவநாட் கழித்ததற்பின் கான நீங்கி, யினமிலா வகைவந்தார் நந்துணேவ ரெனச் சிறிது மிரங்கா னுகின், மாநகரும் வளநாடு முரிமையுந்தன் மொழிப்படியே வழங்கா னுகிற், றுனறியா தவன்பிறர் போய்க் கற்பித்தா லறிவனே தாணி வேந்தே. (௨௯)

நகுலனிவை யுரைத்ததற்பி னன்றெனக்கை யமைத்தருளி நகுலன் சொல்லு, மிகல்விசயன் றன்மொழியுந் திறல்வீம னியம்பியதும் யாவுங் கேட்டோம், புகலரிய வுணர்வுடையோய் புகழுடையோய் திறலுடையோய் புகனீ யென்ன, முகிலனைய திருமேனி முகுந்த னுக்கு மனமுருக மொழிகின் றுனே. (௩0)

சிந்தித்த படிநீயுஞ் சென்றுலென் றெழிந்தாலென் செறிந்த தூறு, மைந்தர்க்குன் முதல்வனிலம் வழங்காம லிருந்தாலென் வழங்கிறு லென், கொந்துற்ற குழலிவளு முடித்தாலென் விரித்தாலென் குறித்த செய்கை, யந்தத்தின் முடியும்வகை யடியேற்குத் தெரியுமோ வாதிமூர்த்தி. (௩௧)

முருகவிழ்க்கும் பசுந்துளப முடியோனே யன்றலகை முலைப்பாலுண்டு, மருதிடைச்சென் றுயர்சகடம் விழவுதைத்துப் பொதுவர்மனை வளர்ந்த பாலே, யொருவருக்குந் தெரியாதிங் குன்மாயை யானறிவே னுண்மையாகத், திருவுளத்துக் கருத்தெதுவோ வதுவெனக்குங் கருத்தென்றுன் றெய்வ மன்னன். (௩௨)

இவ்வண்ணஞ் சாதேவ னியம்புதலு நகைத்தருளி யிகலோர் சொன்ன, வெவ்வண்ணம் புகலாமல் விருரைத்தா னிவனென்ன வவனே டாங்கோர், பைவண்ண மணிக்கூடந் தனிலெய்திப் பாரதப் போர் பயிலா வண்ணம், உய்வண்ணஞ் சொல்லுகநீ யுபாயமெனத் தொழுதுரைப்பா னுரங்கொள் வேலான். (௩௩)

வேறு.

நீபா ரதவமரில் யாவரையு நீருக்கிப்
பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணு
கோபாலா போரேறே கோவிந்தா நீயன்றி
மாபா ரதமகற்ற மற்றுர்கொல் வல்லாரே. (௩௪)



பாராளக் கன்னனிகற் பார்த்தனைமுன் கொன்றணங்கின்
காரார் குழல் களைந்து காலிற் றளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து நின்னையும்யான் கட்டுவனேல்
வாராமற் காக்கலாம் மாபாரத மென்றுன். (௩௫)

முன்னநீ கூறியவை யெல்லா முடித்தாலும்
என்னைநீ கட்டுமா றெவ்வா றெனமாயன்
உன்னைநீ தானு முணராதா யுன்வடிவம்
தன்னைநீ காட்டத் தளைந்திடுவன் யானென்றுன். (௩௬)

மாயவனு மன்பன் மனமறிவான் கட்டுகவென்
றுயவடிவு பதினாறு யிரங் கொண்டான்
ஆயவனு மூலமாந் தோற்றமுணர்ந் தெவ்வுலகுந்
தாய வடியிணைக டன்கருத்தி னுற்பிணித்தான். (௩௭)

நீதேவ னென்றறிந்து நெஞ்சாற் றளைக்கட்டுஞ்
சாதேவன் கண்களிக்கத் தானேயாய் முன்னின்றுன்
பூதேவருங் கனகப் பூங்கா நிழல்வைகு
மாதேவருந் தேடிக் காணு மலரடியோன். (௩௮)

அன்பா லின்றென்னை யறிந்தே பிணித்தமைநன்
றென்பாதந் தன்னை யினிவிடுக வென்றுரைப்ப
வன்பா ரதப்போரில் வந்தடைந்தே மைவரையும்
நின்பார்வையாற் காக்க வேண்டு நெடுமாலே. (௩௯)

என்றென் றிறைஞ்சி யிருதாம ரைத்தாளில்
ஒன்றுங் கதிர்முடியாற் கோமென் றுரைத்தருளி
யின்றிங் கிருவேமு மிப்போ துரைத்தமொழி
யொன்றும் பிறரறிய வோதா தொழிகென்றுன். (௪0)

ஆண்டிருந்த வவைநீங்கி யறிவுடையோ ரிருவோரும்
பாண்டவர்கண் முன்னெய்திப் பழுதில்புகழ்ப் பாஞ்சாலி
நீண்டகருங் குழல்சோர நின்றுளை முகநோக்கி
யீண்டவரி லிளையோனுஞ் சந்துமிக வினிதென்றுன். (௪௧)

தருமனுக்குங் கருத்திதுவே தமருடன் போர் புரியாமல்
இருநிலத்தி லுடன் வாழ்த லெனக்குநினை வென்றுரைத்தான்

வரிமலர்க்கண் புனல்சோர மலர்மறந்த குழல்சோர
விரைமலர்ச்செஞ் சேவடிக்கீழ் வீழ்ந்தழுதா ண்மின்னனையாள். ()

சாலக் கனகன் றனிமைந் தனைமுனிந்த
காலத் தவனறைந்த கற்றூணிடை வந்தாய்
மூலப்பே ரிட்டழைத்த மும்மதமால் யானைக்கு
நீலக் கிரிபோன்முன் னின்ற நெடுமாலே. (௪௩)

கற்றைக் குழல்பிடித்துக் கண்ணிலான் பெற்றெடுத்தோன்
பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்திருந்தார்
கொற்றத் தனித்திகிரிக் கோவிந்தா நீயன்றி
யற்றைக்கு மென்மான மார்வேறு காத்தாரே. (௪௪)

மன்றி லழைத்தெனக்கு மாசளித்த மன்னவன்பாற்
சென்று தமக்கைந்தூர் திறல்வீரர் பெற்றிருந்தா
லன்று விரித்த வருங்கூந்தல் வல்வினையே
னென்று முடிப்பதினி யெம்பெருமா னென்றழுதாள். (௪௫)

தண்டிருந்த திவன்கரத்திற் றனுவிருந்த தவன்கரத்தில்
வண்டிருந்த பூங்குழன்மேன் மாசிருந்த தெனவிருந்தாள்
கண்டிருந்தீ ரெல்லீருங் கருதலர்பா லூர்வேண்டி
யுண்டிருந்து வாழ்வதற்கே யுரைக்கின்றீ ருரையீரே. (௪௬)

சண்டமுகி லுருமனைய சராசந்தன் றனக்கஞ்சி
வண்டுவரை யாளுக வடமதுரை கைவிட்ட
திண்டிறன்மா தவன்மதியோ திகழ்தருமன் றன்மதியோ
பண்டுமவர் கருத்தறிந்து பார்போய்வேண் டுவதென்றான். (௪௭)

சாத்தகிநின் றிவையுரைப்பச் சடைக்குழலா ளழுதாற்றக்
கோத்தருமன் முதலாய குலவேந்த ரைவரையும்
பார்த்தருளி யருள்பொழியும் பங்கயக்க ணெடுமாலு
மேத்தரிய பெருங்கற்பி னிளையாளுக் கிவையுரைப்பான். (௪௮)

தொல்லாண்மைப் பாண்டவர்க்குத் தூதுபோய் மீண்டதற்பின்
நல்லாயுன் பைங்கூந்த லுனே முடிக்கின்றேன்
எல்லாருங் காண வினிவிரிப்ப தெண்ணரிய
புல்லார்த மந்தப் புரமாதர் பூங்குழலே. (௪௯)



மைக்குழலாய் கேளாய் மருவா ருடற்புலத்துப்
புக்குழலா குங்கொழுவாம் போர்வா ளபிமன்னுத்
தொக்குழலும் வெங்கோன்மைத் தொல்வேந்தர் தங்குலமும்
இக்குழலுஞ் சேர முடியா திராதென்றான். (௫௦)

பெண்ணீர்மை குன்றாப் பெருந்திருவின் செங்கமலக்
கண்ணீர் துடைத் திருதன் கண்ணிற் கருணையெனுந்
தெண்ணீரி னாற்பொருந்தத் தேற்றினான் சாற்றுகின்ற
மண்ணீ ரனலநிலம் வான்வடிவா மாமாயன். (௫௧)

நன்று பிணியோர் துறந்தோ ரடங்காதோர்
கன்று சினமனத்தோர் கல்லாதவ ரிளையோர்
ஒன்று முறைமை யுணரா தவர்மகளிர்
என்றுமிவர் மந்தணத்தி னெய்தப் பெறுதாரே. (௫௨)

என்னக் கழறி யிருந்தோ ருரைதவிர்த்து
நின்னொப்பவ ரில்லாய் நீயே கெனவுரைப்ப
மன்னர்க்கு மன்னவன்பான் மாயோனுந் தூதாகிப்
பொன்னுற்ற நேமிப் பொருபரித்தேர் மேற்கொண்டான். (௫௩)

சங்கு மணிமுரசுஞ் சல்லரியுந் தாரைகளும்
எங்கு முழங்க வெழில்வெண் குடைநிழற்றப்
பொங்கு கவரி புடையிரட்ட வெண்ணில்லா
வங்க மொருநான்கு மவனிபருந் தற்சூழ. (௫௪)

கல்வரையும் பாலைக் கடுஞ்சுரமும் கான்யாறும்
நல்வரையு நீர்நாடு நாளிரண்டிற் சென்றருளித்
தொல்வரைய கோபுரமு நீண்மதிலுஞ் சூழ்ந்திலங்கும்
மல்வரைய தோளான் வளமா நகர்கண்டான். (௫௫)

வேறு.

மேவு செந்துகிர்த் திரளுமா மரகதவிதமுங்
கோவை வெண்கதிர்த் தரளமு நிரைநிரை குயிற்றித்
தாவும் வெம்பரித் தேரினன் றனக்கெதிர் சமைத்த
தாவ ணங்களிற் றோன்றின பச்சிளங் கமுகம். (௫௬)

வம்புலா மகில் சந்தனம் வருக்கை மாகந்தஞ்
சம்பகந் தமா லம்பல திசைதொறுந் தயங்க
உம்பர் நாயகன் வரவுகண் டுளங்களி கூர்ந்து
தும்பி பாடின தோகை நின்றாடின சோலை. (௫௭)

அணிகொ ளத்தின புரியெனு மணங்குசெந் திருவின்
கணவ னுக்கெதிர் காட்டுநீ ராசனங் கடுப்ப
மண மிகுத்தசெந் தாமரை மலருடன் சிறந்த
புணரி யிற்பெரும் புனலையுங் கொள்வன பொய்கை. (௫௮)

நடந்த நாயகன் கோலமாம் வேலைசூழ் ஞாலம்
இடந்த நாளிடை யதுவழி யாகவந் தெழுந்து
படர்ந்த பாதல கங்கையப் படர்மதில் சூழ்ந்து
கிடந்த தாமெனச் சிறந்தது தாழ்புனற் கிடங்கு. (௫௯)

அடிநி லத்திலே படிவன விடிமுகி லனைத்தும்
முடிநி லத்தினுக் குடுபதத் தினு முடிவில்லை
நெடிய சக்கரப் பொருப்பையு நிகரிலா விதற்கோர்
படிவ குத்ததா மெனும்படி பரந்தது புரிசை. (௬௦)

பகலி னுங்கடும் பரிதிதன் கதிர்பரப் பாமால்
இகலி யெங்கணு மெறிந்துகால் பொருதலி னேத்திப்
புகலு கின்றமந் தாகினித் தரங்கமே போல
அகல் விசும்பிடை மிடைவன நெடுங்கொடி யாடை. (௬௧)

புயங்க பூமியோ புரந்தரற் கமைத்த பொன்னுலகோ
தயங்கு செல்வநீ டளகையோ நிகரெனுந் தரத்த
வியங்கு கார்முகில் வரையினின் றெழுவன போல
வயங்கு காரகி னறும்புகை யுயிர்ப்பன மாடம். (௬௨)

மன்னர் வேழமுஞ் சேனையு மெதிரெதிர் மயங்கப்
பின்னு முன்னுமெம் மருங்கினும் பெயரிடம் பெறுமற்
றுன்னி நின்றவ ரேகுமி னேகுமின் றொடா
என்னு மோசையே யுள்ளன வீதிகளெல்லாம். (௬௩)

வரையெ லாம்பல வனமெலாங் கடலெலாம் வளைந்த
தரையெ லாம்படு பொருளெலாந் தனித்தனி குவித்த



நிரையெ லாங்கவ ராவண நீர்மையைப் புலவோர்
உரையெலாந் தொடுத் துரைப்பினு முவமைவே றுளதோ. (௬௪)

விரவு கான்மல ரினும்பல வீரரின் விதங்கள்
பரவை வெண்மண லினும்பல புரவியின் பந்தி
யிரவில் வானமீ னினும்பல யானைபி னீட்ட
நிரைகொள் கார்த்துளி யினும்பல தேரணி நிலையே. (௬௫)

ஆசி லாமறை யந்தண ராலய மொருபான்
மாசி லாமுடி மன்னவர் மாளிகை யொருபாற்
காசி லாமதி யமைச்சர்தங் கடிமனை யொருபாற்
பேசி லாவள வணிகர்தம் பேரிட மொருபால். (௬௬)

மங்கலந் திகழ் மனையெலாம் வலம்புரி யோசை
திங்கடோய் நெடுந் தலமெலாஞ் செழுஞ் சிலம்போசை
அங்கண் மாநக ரனைத்துமும் முரசதி ரோசை
யெங்க ணுங்கட வுளரிடந் தொறுமுழ வோசை. (௬௭)

முன்றி லின்கணின் றிடம்பெறு வரசர்மா முடிகள்
ஒன்றொ டொன்றறைந் தெற்றிமே லொளிர்பொறி சிதறிச்
சென்று சென்றுறு திசைதொறுந் திகழ்ந்தது செம்பொற்
குன்றெ னும்படி குருகுல நாயகன் கோயில். (௬௮)

என்றி சைக்குநல் லொளிநிமி ரெழின்மணி மகுடக்
குன்றி சைக்கும்வண் கோபுர நீணகர் குறுகித்
தென்றி சைக்குளிர் செண்பக மலர்தொறுஞ் சிறைத்தேன்
நின்றி சைக்கும்வண் சோலைவா யமர்ந்தன னெடுமால். (௬௯)

அன்று தூதுகொண் டிலங்கைதீ விளைத்தவ னவர்க்
கின்று தூதுவந் தெயிற்புறத் திறுத்தன னென்னுத்
துன்று தூதுவண் டினமுரா றொடையலான் றனக்குச்
சென்று தூதுவ ரியம்பினர் சேவடி வணங்கி. (௭௦)

தொல்லை நாயகன் வந்தன னென்றலுஞ் சுரும்பார்
மல்லன் மாலையா னேவலான் மாநகர் மாக்கள்
எல்லை நீண்மதில் வட்டம்யோ சனையெழு நூறுஞ்
செல்வ மாநகர்த் தெருவினை யொப்பனை செய்தார். (௭௧)

மின்னு மாமுகிற் பல்லிய விதங்கண்முன் முழங்க
மன்னர் மன்னவ னெழுந்தனன் மாலெதிர் கொள்வான்
என்னை நீயவற் கெதிர்செல்வ தென்றுதன் மருகன்
றன்னை வன்பொடு தகைந்தனன் கொடுமைகூர் சகுனி. (௭௨)

சீர்வ லம்புரி திகிரிசேர் செங்கையான் றனக்குக்
கார்வ லம்புரி கோயிலுங் காட்சியு மமைத்துப்
போர்வ லம்புரி நிருபரு மினைஞரும் போற்றத்
தார்வ லம்புரி யவனிருந் தனன்பொலந் தவிசின். (௭௩)

தொல்ப கீரதி மைந்தனுந் துரோணனுஞ் சுதனும்
வில்வி தூரனுங் கிருபனு முதலிய வேந்தர்
மல்கு மூவிரு பத்துநா றுயிர மகிபர்
செல்வ நாயகற் கியோசனை யிரண்டெதிர் சென்றார். (௭௪)

வந்து வந்திரு மருங்கினு மன்னவர் வணங்கப்
பைந்து ழாய்முடிப் பரமனுங் கண்மலர் பரப்பி
யந்தமா நகர் புகுந்தபி னரசனிற் புகாமற்
புந்திகூ ரருள் விதூரன்வாழ் வளமனை புகுந்தான். (௭௫)

வேந்தர் யாரையும் விடைகொடுத் தகன்றபின் விமலன்
வாய்ந்த மாளிகை நடுவணோர் மண்டபங் குறுகி
யாய்ந்து வல்லவர் நவமணி யழுத்திய வரியே
றேந்து மாசன மிடப்பொலிந் ததன்மிசை யிருந்தான். (௭௬)

இருந்து வந்தரு ளிறைவனை யிறைஞ்சின னிறைஞ்சிப்
பெருந்து வந்தனைப் பிறப்பையு மிறப்பையும் பிரித்தான்
மருந்து வந்தனை யமரருக் கருளிய மாயோன்
விருந்து வந்தன னென்றுள முருகிய விதூரன். (௭௭)

கோடு கொண்டகைக் குரிசிலை யலர்ந்தகோ கனகக்
காடு கண்டெனக் கண்டுதன் கண்ணிணை களியாத்
தோடு கொண்டதார் விதூரனிப் பிறப்பையுந் தொலைத்தான்
வீடு கண்டவர்க் கியம்பவும் வேண்டுமோ வேண்டா. (௭௮)

உள்ளின னுணர்ந் துள்ளமு முருகின னெழுந்து
துள்ளினன் விழுந்திணையடி சூடினன் றுயரைத்



தள்ளி னன்மலர்த் தடக்கையாற் றத்துவ வமுதை
யள்ளி னானெனக் கண்களா லருந்தின னளியோன். (௭௯)

முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ
பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ யெய்தற்
கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடி லென்றான். (௮0)

மும்மை யாகிய புவனங்கண் முழுதையு மருந்து
மெம்மை யாளுடை நாயகன் விருந்தினுக் கிசைந்தான்
அம்ம வென்றன னுறுநா றுயிர மடையர்
தம்மை நோக்கின னவர்களும் விரைவுடன் சமைத்தார். (௮௧)

வந்த கொற்றவேல் வரிசிலை யவர்க்கும் வாளவர்க்குங்
கந்த டர்ப்பன கரிக்குப்வெங் கவனவாம் பரிக்கும்
ஐந்து பத்துநா றுயிரம ரசர்க்கு மெவர்க்கும்
இந்தி ரற்குமெய் தாவமு தெனும்படி யியற்ற. (௮௨)

அமைத்த வாசநன் னீர்கொடு மஞ்சன மாடிச்
சமைத்த பல்கறி யடிசிறம் விருப்பின லருந்தி
யுமைக்கு நாயக னிரவொழித் தருளின னுதவ
விமைப்பி லாரமு தருந்திய வியல்பென விருந்தார். (௮௩)

வாச நீரும்வண் சுண்ணமு முறைமுறை வழங்கப்
பூச றத்துழிப் பூசினர் சூடினர் புனைந்தார்
வீசு சாமர மிரட்டவெண் மதிக்குடை நிழற்றக்
கேச வன்மணிக் கேசரித் தவிசிடைக் கிளர்ந்தான். (௮௪)

ஞான கஞ்சுக விதூரன்வாழ் மனையின யகனும்
போன கம்பரி வுடனுகர்ந் திருந்தவப் பொழுதிற்
றானு மேருவுக் கப்புறத் தவ்வமு தருந்தப்
பானு வும்பெருங் குடதிசைப் பாவையிற் படிந்தான். (௮௫)

கருதி யந்தணர் யாவருந் தங்கடன் கழிப்பச்
சுருதி யென்னும்வெஞ் சாபமே லம்புகை தொடுத்துப்
பருதி தன்பெரும் பகைவர்மேல் விடுத்தலிற் பாந்த
குருதி யாமென நிவந்தெழச் சிவந்தது குடபால். (௮௬)

தரங்க வாரிதிப் புறத்தெதிர் மலைந்தவெஞ் சமரில்
உரங்கொள் கூர்நெடும் படைகளா லுடன்றமர் தேகர்
துரங்க மேழுடைக் கடவுளை நிரைநிரை துணித்த
கரங்கள் போன்றன கரைதொறும் வளர்துகிற் காடு. (௮௭)

நீதியிற் புகல் பகலெலா நீரர மகளிர்
மீது றைத்தெழும் வெவ்வெயில் படாவகை விரித்துப்
போது புக்கதென் றினம்படச் சுருக்கிய பூம்பட்
டாத பத்திரம் போன்றன தாமரை யடவி. (௮௮)

கலந்து மங்கல முழவுவெண் சங்கொடு கறங்க
மிலைந்த பூங்குழல் வனிதையர் மெய்பிளக் கெடுப்பக்
கலந்த தாமரைத் தடமெலாங் குவிந்தது கண்டு
மலர்ந்த தாமரை வாவிபோன் றதுநகர் வட்டம். (௮௯)

உரக புங்கவன் மணிமுடி யொப்பன தீப
மிரும ருங்கினு மாயிர மாயிர மேந்த
அரிசு மந்தபே ராசனத் தழகுட னிருந்த
புரவ லன்றனைப் புண்ணிய விதுரனும் போற்றி. (௯0)

பொங்க ராவணை பொலிவறப் போந்தபின் பொதுவர்
தங்கள் பாடியில் வளர்ந்துமா மருதிடைத் தவழ்ந்த
கங்கை மாநதி கால்வழி கருணையங் கடலே
யிங்கு நீதனி நடந்தவா றுரைத்தரு ளென்றான். (௯௧)

தோட்டு வந்துசெந் தேனுகர் சுரும்புசூழ் தொடையாய்
காட்டு வந்துமுன் றிரிந்துதங் கடவநாட் கழித்து
நாட்டு வந்தபே ரைவர்க்கு நற்குரு நாடு
கேட்டு வந்தன மென்றனன் விதுரனுங் கேட்டான். (௯௨)

முழக்கி னுயர் முரசுயர்த் தவன்றனக் குரிமை
வழக்கி னலதிந் தடல ர வுயர்த்தகோன் வழங்கான்
றழக்கி னிவிரு திசையினு முரசெழச் சமரி
லுழக்கி னலல துணர்வனோ வென்றவ னுரைத்தான். (௯௩)

வானை வாவிபி லுகண்டெழ வளரிளங் கமுகின்
பானை வாயளி முரன்றெழும் பழனநா டுடையா



னுளை வாழ்வவர்க் களித்தில னெனிலெதிர் நடந்து
மூளை வாயுக முடிப்பர்வெம் போரென மொழிந்தான். (௯௪)

விரைந்து பாய்பரி மன்னவ ரிதம்பட மெலிவுற்
றிரந்து வேண்டினுங் கிளைஞருக் கொருபொரு ளீயார்
பரந்த போரினி லெதிர்த்தவர் படப்படப் பகழி
துரந்த போதவர்க் குதவுவர் சொன்னவை யெல்லாம். (௯௫)

என்று பாரினி லியற்கையும் விதுரனுக் கியம்பி
வென்று போர்கெழு நேமியான் விடைகொடுத் தருளிக்
குன்று போற்புயக் காவலர் கொடுந்துடி கறங்க
மன்ற னுண்மலர்ப் பாயலின் மீதுகண் வளர்ந்தான். (௯௬)

குளிரு மாமதி முகத்தொளிர் குமுதவாய் மலர்த்தித்
தளவ வாணகை பரப்புவண் சததள மலர்க்கை
யளவி லேகுவித் தளியொடு மகன்றிலா மையினுற்
களிகொ டோள்விலைக் கணிகையைப் போன்றதக் கங்குல். (௯௭)

அளைந்த வாரிருட் கடல்பொரு தொருபுடை யண்டம்
பிளந்த தாமெனக் கரும்படாம் பீறிய தென்ன
வளைந்த வேழ்கடல் வற்றமேல் வடவையின் முகத்தீக்
கிளர்ந்த தாமெனக் கிளர்ந்தன விரவியின் கிரணம். (௯௮)

இகலும் வாளர வுயர்த்தவ னிருந்ததொல் பதிபி
லகில நாயக னொருதனி நடந்தவா றறிந்து
மகர வாரிதி யகன்றுமா மருங்குற வணைந்த
திகிரி போலவந் தெழுந்தன னிரவிகீழ்த் திசையில். (௯௯)

வேறு.

சோதி வானநதி மைந்த னும்பழைய சுருதியாலுயர் துரோ
ணனு, மாதி யாகவுயி ரினும்வியப்புற வடுத்த மன்னவ ரநேகரு,
நீதி யாலும்வகை யைந்துபத்தொட றுபத்தொ ராயிரவர் நிருபருந்,
தீதி லாததிற லக்குரோணிபதி னென்று பெற்றமிகு சேனையும்.

தொக்க வெண்கவரி யாலவட்டநிரை சொட்டை வாள்பரிசை
துகிலுடன், கைக்க ளாசியிவை கொண்டுலாவிவரு கன்னி மங்

கையர்க ளனைவரு, மிக்க வேதியர்கள் வல்லபல்கலை விதத்தி
லுள்ளவர்கள் யாவருந், தக்க தம்பியரும் வந்து சூழவுயர் தாணி
மேனிருபர் தம்பிரான். (௧௦௧)

நிரைகதிர்க் கனக நீள்சுவர்ப்பவள வுத்திரத் திடை நிரைத்த
வொண், பருமணிக் கிரண பற்பராகவயி ரத்துலா மிசை பரப்பி
வெண், டாளவர்க்க வயி டூரியப் புதிய கோமளப் பலகை தைத்
துமா, மரக தத்தினொரு கோடி தூணிரை யமைத்த மண்டப
மருங்கரோ. (௧௦௨)

முட்ட நித்தில நிரைத்த பந்தரி னகைத்த சிரரி முகத்தகால்,
வட்ட மெத்தைகொ டமைத்த பீடமிசை வாச வண்கொலென
வைகினான், பட்ட வர்த்தனரு மகுட வர்த்தனரும் வந்து சேவடி
பணிந்தபி, னிட்ட பொற் றவிசின் முறைமை யாலினி திருக்க
வென்றவரை யேவியே. (௧௦௩)

காவன் மன்னவர் முகங்க டோறுமிரு கண்பரப் பியமர்
கருதுவோ, ரேவ லின்கண்வரு தூதனை மிடைய னின்று நம்
மவையி லெய்தினை, லோவ வின்றி யெதிர் சென்று கண்டுதொழு
துறவு கூறிலினி யுங்களூர், தீவ லஞ்செய வடர்ப்ப னென்றுநனி
சீறினான் முறைமை மாறினான். (௧௦௪)

இந்த வண்ணமுரை செய்து மன்னவையில் ராச ராசனு
மிருக்கவே, தந்த வண்ணனுடன் வந்த வண்ணலொளி தங்கு
கண்டுயி லுணர்ந்தபின், கந்த வண்ணமலர் கொண்டு கைதொழுது
காலையிற்பல கடன்கழித், திந்த வண்ணமு னிருந்த பேரவையி
லேயினா னிசைகொள் வேயினான். (௧௦௫)

துன்னு கங்கைமக னுந்துரோணனொடு சுதனு நீதிபுனை விது
ரனு, மன்னர் மன்னனை யொழிந்த மன்னவரும் வந்து சேவடி
வணங்கினார், கன்ன னுந்தலை கவிழ்ந் திருந்தன னளன்றுளஞ்
சகுனி கருகினான், முன்ன நின்றவர்க ளிட்ட பீடமிசை மொய்த்து
ழாய் முகிலு மெய்தினான். (௧௦௬)

முன்ன கங்குடை கவித்த காளமுகின் முன் னிருந்தபின் முகங்
கொடா, தென்ன கந்தனை யொழித்து நென்னலிடை யிந்தமா
நகரி லெய்தியும், பொன்ன கங்கொள்புப விதுரனில்லிடை புகுந்த



தென்கொலிது புகலெனாப், பன்ன கந்தனை யுயர்த்த கோவுமுரை
பகர மாலுமெதிர் பகருவான். (௧௦௭)

என்னி னின்னிலொரு பேத மில்லையிது வென்னி னின்னி
லது வென்னினா, மின்னின் மின்னிலகு விறனெடும்படை விது
ரன் வந்தெதிர் விளம்பினா, னுன்னி லின்னமுள தொன்று பஞ்
சவ ருரைக்க வந்ததொரு தூதன்யா, னின்னி லின்னடிசி லுண்டு
நின்னுடன் வெறுக்க வெண்ணுவது நீதியோ. (௧௦௮)

அரவ மல்கிய பதாகை யாய்மதி யமைச்ச ராயர சழிப்பி
னுங், குரவர் நல்லுரை மறுக்கி னும்பிறர் புரிந்த நன்றியது
கொல்லினா, மொருவர் வாழ்மனையி லுண்டு பின்னுமவ ருட
னழன்று பொர வுன்னினா, மிரவி யுள்ளளவு மதிய முள்ளளவு
மிவர்களே நரகி லெய்துவார். (௧௦௯)

சீத நாண்மலர் மடந்தை கேள்வனிவை செப்பவுந் தெரிய
வொப்பிலா, நாத நாயகன் முகத்தில் வைத்தவிரு நயன னாகி
மிக நகைசெயாத், தூத னாகிவரு தன்மை சொல்லுகென மன்
னர் மன்னனிது சொன்னபின், வேத நாறுமல ருந்தி வண்டுளப
விரைசெய் தாரவனு முரை செய்வான். (௧௧௦)

சூதி னாலர சிழந்து நின்றுணைவர் சொன்ன சொல்லும்வழு
வாதுபோ, யேதி லார்களென நொந்து தண்ணிழ லிலாத கானி
னிடை யெய்தியுந், தீதி லாவகை குறித்த நாள்பல கழித்து வந்
தனர் செகத்தினிற், கோதி லாதகுரு குலம கிபவவ ருரிமை
நண்பொடு கொடுத்தியே. (௧௧௧)

சொல்ல வாவுரக துவச நின்னுரிய துணைவர் தங்களை
யழைத்துநீ, வல்ல வாறுசில நாட ளித்தவர்க டம்முடன் கெழுமி
வாழ்தியே, னல்ல வாய்மைநிலை யுடைமை யென்றரசர் நாடொ
றும்புகழ்வர் நண்புகொண், டல்ல வாமென மறுத்தி யேலறமு
மாண்மையும் புகழு மல்லவே. (௧௧௨)

என்று கேசவ னியம்ப வங்கெதி ரிராச ராசனு மியம்புவா,
னன்று சூதுபொரு துரிமை யாவையு மிழந்து போயினர்க ளவரு,
மின்று நீவிரகின் மீள வுங்கவர வெண்ணி னானவரி லெளியனோ,
சென்று கானிலவ ரின்ன முந்திரிவ துறுதி யென்றுநனி
சீறியே. (௧௧௩)

நீவெ றுக்கிலெ லிருந்த மன்னவர் திகைக்கி லென்பல
நினைக்கிலென், போய்ந கைக்கிலெ னுரைத்த வுண்மைமொழி
பொய்த்த தென்றமரர் புகலிலென், வேய்ம லர்த்தொடைய லைவ
ரென்னுடன் மிகைத்து வெஞ்சமர் விளைக்கிலென், னீயி ருக்குமிட
மெனினு மிப்புவியில் யான வர்க்கர சினிக்கொடேன். (௧௧௪)

கார்வ ழுங்குருமெ னச்சி னத்தினொடு கண்ணி லான்மதலை
களறவும், பார்வ ழுங்கநினை வில்லை யேலவனி பாதி யாயினும்
வழங்குவாய், தார்வ ழுங்குதட மார்ப வென்னவது தானு மன்
னவன் மறுக்க வைந், தூர்வ ழுங்கென வுற்றி ரந்தனனிவ்
வுலகெலா முதவு முந்தியான். (௧௧௫)

மாட ளிக்குலநெ ருங்கு பைந்துளப மாலையாய் மகர வேலை
சூழ், நாட ளித்திடவு மைந்து பேருடைய நகரளித் திடவும்
வேண்டுமோ, காட ளிக்கவத னிடைதி ரிந்துறை கரந்து போயி
னர்கள் காணவோர், வீட ளிக்கினும்வெ றுப்ப ரோவிதனை
விடுக வென்றெதிர் விளம்பினன். (௧௧௬)

தந்தை காதலுறு தன்மைகண் டிளைய தாய்ப யந்தவிரு
தம்பியர்க், கிந்த வாழ்வுமர சுங்கொ டுத்தவனு நின்கு லத்தொ
ருவ னிங்குளான், முந்த மாநிலம னைத்தி னுக்குமுயர் முறை
மையா லுரிய வரசருக், கைந்து மாநகரு நீகொ டாதொழியி
னென்ன தாகுமுன தரசியல். (௧௧௭)

ஒருகு லத்தினி லிரண்டு மன்னவரு டன்பிறந் துரிமை
யெய்தினு, விருகு லத்தவரு மொக்க வாழ்வுறுத லெக்கு லத்
தினுமி யற்கையே, பொருகு லக்களிறு வளர்தி சைக்கண்மிகு
புகழ்பரப் பியெழு புவிபெறுங், குருகு லத்தவ ரியற்கை நன்
றென மொழிந்தனன் கரிய கோவலன். (௧௧௮)

பேர ரவணை துறந்த மாயனிவை பேசவன் பினொடு பின்னை
யுஞ், சீர ரவினையு யர்த்த கோவும்விழி தீயெ னும்படி செயிர்த்
துளே, போர ரநிருபன் மணிநெ டுஞ்சுடிகை யாயி ரங்கொடு
பொறுத்தபார், வீர ரானவர தல்ல வோவுரிமை வேண்டு மோ
வென விளம்பினன். (௧௧௯)

பொய்வ ளர்ந்தமொழி மன்னன் மற்றிவைபு கன்றபின்பு புய
வலியினு, லைவர் தங்களர சுங்கொ டாமலட லாண்மை கொண்



டெதிர டர்த்தியே, மெய்வி ளங்கவரு குருநி லத்தினிடை வந்து
வெஞ்சமர்வி ளைக்கவே, கைவ ழங்குகென நின்ற தூணிடைய
றைந்துரைக் குமிவை காவலன். (௧௨௦)

புன்பி றப்புடைய பொதுவர் தங்களொடு புறவி லாநிரை
புரந்திடு, முன்பி றப்புமுர லோடு கோவிய ருணைப்பி ணித்தது
மறந்துநீ, மன்பி றப்பிலுயர் குருகு லத்தவர்தம் வாய்மைதா
னுமொரு மாசிலா, வென்பி றப்புமுண ராம லோசபையி லிந்த
வாசகமி யம்பினாய். (௧௨௧)

எவ்வி லங்குசிலை யைவர்வந் தணுகில் யான யர்ந்தெளி திருப்
பனோ, கோவி லங்குபொர வஞ்சு மோகரட குஞ்ச ரங்கள்பகை
கொண்டகான், மேவி லங்குமுன்ம லைத்தல் கையறைய வேண்டு
மென் றதுநின் மேன்மையோ, நாவி லங்குமென வெண்ணி
யோமிகவு நன்று நன் றரசர் ஞாயமே. (௧௨௨)

அளிவ ருங்குழல்பி டித்து மன்னவயி லைவருக் குமரி
யானநா, னெளிவ ருந்துகிலு ரிந்த போதருகி ருந்துகண் டவர்க
ளல்லவோ, துளிவ ரும்புனல்ப ரிந்த ருந்தியிடு சோறு தின்
றுயிர் சுமந்ததோ, வெளிவ ரும்படியி ருந்த பாவியரு மின்று
மானநிலை யுணர்வரோ. (௧௨௩)

அன்னை யானவரு மிருவ ராமுதல ளித்ததந் தையரு மை
வராம், பின்னை யாசைகொடு குருகு லத்துரிமை பெறுவ ராமொரு
பிறப்பிலோர், மின்னை யாமிவர்க ளைவ ரும்பரிவி னொடுதனித்
தனி விரும்புவா, ரென்னை யாமவரொ டொருகு லத்தரச னென்
பதம் மவிவை யென்கொலாம். (௧௨௪)

ஞால முற்றுமுடை யவன்மொ ழிந்திடந கைத்துவண் டுவரை
நாதனுஞ், சால முற்றுமினி யவர்க ருத்தெனநி னைந்து பேரவைத
ணந்துபோய்க், கோல முற்றசிலை விதுரன் வாழ்வுபெறு கோயில்
சென்றுநனி குறுகினன், சீல மற்றவர்சி னத்த போது மொரு
நீதி லாதவர் செயிர்ப்பரோ. (௧௨௫)

கரிந்து மாலைசரு காக வும்புதிய கமல வாண்முகம் வெயர்க்
கவுந், திருந்து கண்ணிணைசி வக்க வுங்கொடிய செய்ய வாயிதழ்
துடிக்கவு, மிருந்த பேரவையி நெடிது யிர்த்திடுமி ராசரா சனவ
னுக்கிவன், விருந்து செய்தவுற வென்கொ லென்றரச ரெதிர்வி
துரனை விளம்புவான். (௧௨௬)

அந்தவி டத்தெறி பம்பா மொத்துட லஞ்சுழ லச்சுழ லக்
குந்தியு றித்தயி ருண்டவர் பொற்கழல் கொண்டுசு ழற்றுத லான்
முந்தம ரர்க்கமு தந்தா மைக்கடன் முன்சுழ லச்சு ழலு
மந்தா மொத்தனர் குந்தமெ டுத்தெதிர் வந்தும லைந்தவ ரே. ( )

முட்டிய தொல்குரு திக்கடன் மல்கலின் முட்டிகொள் பல் விரலா
னெட்டுட லப்வகிர் பட்ட தினுள்விழ நித்தர்செய் கொல்வினை யான்
மட்டற வல்விற லுற்றெதிர் செல்கவி மைக்கட லெல்லை யிலே
யிட்டன கல்வரை யொத்தனர் வெல்கழ லெக்குல மல்லரு மே. ( )

எப்புவி நிற்பன வெக்கிரி நிற்பன வெக்கட னிற்பன வெண்
றிப்புவ னத்துயிர் முற்று மயக்குற வுட்கின செய்த்திமை யோர்
மைப்புய லொத்தொளிர் பச்சை நிறத்தினன் வர்க்க மலர்க் கழலா
லொப்பற மட்குழி யுற்றவ ரைப்பட வொத்திமி தித்த லுமே. ( )

கொண்டன்முழக்கெனவப்புவியைக்கடல் கொண்டெழுதற்கெதிருஞ்
சண்டமு ழக்கென வன்பவ னக்கினை தந்தமு ழக்கென வே
வண்டின மொய்த்தெழு வண்டுள பத்தொடை வண்டுவ ரைத்திருமா
லண்டமு கட்டுற நின்றுசி ரித்தன னங்கணெ ருப்பெழ வே. ( )

ஒன்றுப டக்கட லப்புமு கப்பன வுப்பர்கு லத்தரு வுஞ்
சென்றுமு றிப்பன வெண்டிசை யிற்குல சிந்துர மெற்றுவ வெண்
குன்றமு டைப்பன பைம்பொ னுரக்கிரி கொண்டுதி ரிப்பன வா
லன்றுத னித்தனி நின்றும லைத்தரு ளங்கைகள் பற்பல வே. ( )

துகிரிதழ் வைத்துநல் வளைகண்மு ழக்கின தொடர்சில கைத்தல மே
யகிலப்வெ ருக்கொள வரிமழு வெற்றின வவைசில கைத்தலமே
புகலும்வ டிக்கணை யுதணமெ டுத்தன பொருசில கைத்தலமே
திகழ்விச யத்தொடு சிலைகள்கு னித்தன சிலசில கைத்தலமே. ( )

வெங்கணை யத்திரள் குந்தநி றப்படை வெப்புமு லக்கைகள் போர்
பொங்கிய வச்சிர முந்துக லப்பைகள் புண்கமு வர்க்கமயி
லெங்குமலைத்தெழு செஞ்சுரி கைத்திர டண்டமி வற்றினெடுந்
தங்கிய சக்கர பந்தித ரித்தன தண்பல கைத்தலமே. (௨௦௫)

மேலெழு மங்கதிர் வாளுறை போம்படி வீசின வான்புடையே
தோலின மேந்தின நீள்கவ ணேந்தின சோரிகள் சோர்ந்திடவே



ஞாலமெ லாம்பொரு தோமரம் வாங்கின நாவொரு மூன்றனவாஞ்
சூலமொ டோங்கின பாசமொ டோங்கின சூழ்சில பூங்கரமே. ( )

சிலசில கைத்தல மடுகழ லிற்பல செறிகழல் கட்டினவே
சிலசில கைத்தல மறுதுபு யத்திடை செறிதொடை யிட்டனவே
சிலசில கைத்தல மணிகொளு ரத்திடை பணிக டிருத்தினவே
சிலசில கைத்தலம் விரல்கொடு சுட்டின செறுநர்தி கைத்திடவே. ( )

மாயிரு ஞாலமெ லாம்வெளி யாயொளிர் மரகத சோடையுறப்
போயிரு பாலும்வ ளைந்துவ ளைந்தெதிர் பொருமுனை வெம்படையோ
டாயிர மாயிர மங்கைபு றப்பட வண்டரு மாதவரும்
பாயிர நான்மறை பாடிவி யந்துப ணிந்துபு கழ்ந்தனரே. (௨௦௮)

ஆரண னேயா னேபுவ னங்க ளனைத்தையு மன்றுதவுங்
காரண னேகரு ணாகர னேகம லாசனி காதல னே
வாரண மேபொது வேயொரு பேரிட வந்தரு ளும்புயலே
நாரண னேமுனி யேன்முனி யேலென நாகர்ப ணிந்தனரே. ( )

மாதவ னேமுனி யேலெமை யாளுடை வானவ னேமுனியேல்
யாதவ னேமுனி யேலித யத்திலி ருப்பவ னேமுனியே
லாதவ னேமுனி யேன்மதி வெங்கன லானவ னேமுனியே
னீதவ னேமுனி யேன்முனி யேலென நின்றுப ணிந்தனரே. ( )

கங்கைம கன்கதி ரோன்மக னம்பிகை காதன்ம கன்றனய
னங்கவை யின்கணி ருந்தந ராதிப ரடையவெ ழுந்தடைவே
செங்கை குவித்தசி ரத்தின ராயுணர் வொன்றிய சிந்தையரா
யெங்கள்பி ழைப்பினை யின்றுபொ றுத்தரு ளென்றுப ணிந்தனரே.

கண்ணபொ றுத்தருள் வெண்ணெ யருந்திய கள்வபொறுத்தருள் கார்
வண்ணபொ றுத்தருள் வாமபொ றுத்தருள் வரதபொ றுத்தருணீ
திண்ணம னத்துணர் வொன்றுமி லாதவர் செய்தபெருப்பிழையென்
றண்ணன்ம லர்க்கழல் சென்னியில் வைத்தெதி ரன்றுது தித்தனரே.

தேவரும் வாசவ னுந்தவ ருந்திசை முகனுந ராதிபரும்
யாவரு மன்பினொ டாயிர நாகமு மெண்ணி யிறைஞ்சுதலான்
மூவரு மொன்றென நின்றரு ளாதனு முனிவுத விர்ந்தருளா
மீவரு மண்டமு முந்திரு பேனியொ டுங்கினன் மீளவுமே. (௨௧௩)

தன்னிலு யர்ந்தவர் யாருமி லாமுகில் சதுர்மறை யின்படியே
யெங்கில முந்திரு வடியின்ம றைந்திட விப்படி நின்றிடவும்
பின்னையு மஞ்சிய யர்ந்தில னெஞ்சுபெ யர்ந்தில னுசனமுஞ்
சென்னியி லுங்காம் வைத்திலன் வண்புகழ் சிறிது மொழிந்திலனே.

தொல்லவை யின்கணி ருந்தந ராதிப துன்மதி யாலெனைநீ
கொல்லநி னைந்தது நன்றென வன்றிறல் கூறின னெம்பெருமா
னெல்லையி னின்குல முற்றும டிந்திட வுற்றம லைந்தொர்கணத்
தெல்லையின் வெஞ்சமர் நூறுவன் யாவரு மேறுவர் வானுலகே. ()

அஞ்சின நின்னைய ழித்திட நின்னுட னன்றுபெ ருஞ்சமர்வாய்
வெஞ்சுட ராயுத மொன்றுமெ டுக்கில மென்றுவி ளம்பியது
மெஞ்சம லைந்தெதிர் வந்துயிர் கொள்ளுது மென்றுந னித்தனியே
பஞ்சவர் கூறிய வஞ்சின வாசக மும்பழு தாமெனவே (௨௧௧)

என்றுரை யாடிநெ டுங்கடல் வண்ணனெ ழுந்தரு ளப்பிறகே
சென்றன ரெம்முடி மன்னவ ரும்பணி சேர்கொடி யோனையலார்
நின்றுப சாரமு ரைத்தவர் தம்மைநி றுத்திய நந்தரமே
வன்றிற லங்கர்பி ராணொடு கூறினன் மற்றொரு வாசகமே. (௨௧௭)

வண்மையி னுலுய ரங்கர்கு லாதிப மதிகுலம் வாழ்வுறவந்
துண்மையி னுலுயர் மன்னவ ரைவரு முன்னிலு னக்கிளையோர்
பெண்மையி னுலுயர் குந்திவ யிற்றிடை பெருமையி னுலிதயத்
திண்மையி னுலுயர் நின்னையு மன்பொடு தினகர னல்கினனே. ()

எயுநெ டுங்கொடி முரசுடை யோனையெ ழிற்றரு மன்றரவே
வாயுவ ழங்கினன் வீமனை நல்கினன் விஜயனை வாசவனு
மாயுநி கழ்ந்திடு வேதம ருத்துவ ரன்பொட ளித்தனர்செங்
தேயுவெ னுந்திற னகுலனை யுஞ்சக தேவனை யும்பெரிதே. (௨௧௯)

அந்தணன் முன்றரு மந்திர மைந்தினி லறுவரையுங் கடவுட்
குந்திப யந்தனள் யானினி யென்பல கூறுவ துங்களினீ
ரிந்தநி லப்பெறு வீர்தவிர் கிற்பெற யாரினி வேறுரியார்
வந்தினி நும்பியர் தம்மொடு சேர்கென மாயன்மொ ழிந்தனனே



கன்றால் விளவின் கனியுகுத்துங் கழையா னிரையின் கணமழைத்துங்
குன்றான் மழையின் குலந்தடுத்துங் குலவுஞ் செல்வக் கோபாலா
வின்று லெனதுபி றப்புணர்ந்தே னென்றென் புருகி யெம்பியர்பாற்
சென்று லென்னை நீயறியச் செகத்தா ரென்றுஞ் சிரியாரோ. ()

ஆரென் றறியத் தகாதவெனை யரசு மாக்கி முடிசூட்டிச்
சீருந் திறமுந் தனதுபெருந் திருவு மெனக்கே தெரிந்தளித்தான்
பாரின் றறிய நூற்றுவர்க்கும் பழிதீர் வென்றிப் பாண்டவர்க்கும்
போரென் றறிந்துஞ் செய்ந்நன்றி போற்று தவிற் போவேனோ. ()

இரவிக் குரிய திருமதலை யிவ்வா றுரைக்க விசைவண்டு
விரவிப் பயிலுந் துழாய்முடியோன் வேறோர் மொழியும் விளம்பாம
லுரவிற் றடந்தோ ளுரவோனை யேகென் றருளி யொருசார்வெம்
புரவித் தா மா நின்றானை வருகென் றழைத்துப் புகல்கின்றான். ()

போயே கானம் பலதிரிந்து புகன்ற விரதம் பொய்யாதோ
ராயே வந்த பாண்டவர்க ளைந்தூர் வேண்ட மறுத்ததற்குச்
சேயே யனைய சிலைமுனிவன் சேயே நாளைச் செருக்களத்தி
னீயே கரியென் றெடுத்துரைத்தா னெடியோன் றுளபமுடியோனே

ஆறு வுனதாண் மைக்குநிக ரவனி தலத்தில் வேறுண்டோ
நூறு திபனே போர்க்களத்தி னுகக் கொடியோன் பணிந்துன்னைச்
சேனு பதியா கென்றாலுஞ் செலுத்தே னென்று நீமறுத்தி
யாறு லுய்வ ரைவரு மற்றவர்பா லுனக்கு மன்புண்டே. (௨௨௫)

ஆயோ தனத்தி லடலரியே றனையான் றன்னை யிவ்வாறு [தான்
மாயோனுரைத்துத் தன்விரலின் மணியா ழியைமண்ணிடை வீழ்த்
சேயோ னதனை யெடுத்தவன்றன் செங்கை கொடுக்க வாங்காமற்
றாயோ யூர்கோள் பரிதிதனைச் சூழ்ந்ததகல் வான் மீதென்றே. ()

வரித்தா மரைக்கட் டிருநெடுமால் வான்வாய் நோக்க வரிவிற்கைப்
பரித்தா மாவு மாழியுடன் பரிதிவடி வந்தனைப் பார்த்தான்
விரித்தாழ் கவிகைக் கருங்கள்வன் கிளர்நூன் முனிவன் மைந்தனையும்
பிரித்தா னவனுஞ் சூழுற்று னென்று ரிருந்த பேரவையோர். ()

தனிவந் தகலுந் தூதனைப் போய்த் தானே யணுகித் தடஞ்சாப
முனிவன்புதல்வன்மோதிரந்தொட் டருஞ்சூண் முன்னர்மொழிகின்று

னினிவந் துறவாய் நின்றானு மெங்ஙன் றெளிவ திவனையெனத்
துனிவந் தாசர் முகநோக்கிச் சொன்னா னிடியே றன்னானே. (௨௨௮)

துளியார் மதுவின் வலம்புரித்தார்த் துரியோதனன்றான்சொல்லியது
மொளியா ரவையில் வாள்வேந்த ரொருவர்க் கொருவ ருரைத்தனவுங்
களியானை யனுன் செவிப்படலுங் கலங்கிச் சித்தமிவ ரென்னைத்
தெளியா வண்ணம் பேதித்தான் றிருமா லென்றே சிந்தித்தான். ()

தண்ணந் துளப முடியோனுந் தனித்தங் கிருந்து தன்மனத்தி
னெண்ணம் பலித்த தெனமகிழ்ந்தே யிளையோன் றனக்கு விடைநல்கி
விண்ணின் றமரர் மிகத்துதிக்க விதுரன் மனையின் மேவியபின்
றிண்ணங் கடவுட் குலவாசன் வருமா றறிந்து சிந்தித்தான். ()

அந்தக் கணத்தில் வந்திறைஞ்சு மாகண் டனை முகநோக்கிக்
கந்தத் துளப முடியோனுங் கண்ணுங் கருத்துங் களிகூரத்
தந்தத் தொழிலி னரிசுமந்த தவிசி னிடையே யுடனிருத்தி
முந்தக் கருது கின்றவினை முடிப்பா னுபாய மொழிகின்றான். ()

கிரியின் சிறகை யரிபடையாய் கேண்மோ வாண்மைக் களமீதில்
வரிவெஞ் சிலைக்கை விசயனுக்கு மாறாய் முனிந்து வருகின்ற
வெரியுங் கனல்வாய் விடவரவொன் றிவனுக் குற்ற பகையான
வரியின் புதல்வன் றனக்கொரு பேரம்பாகியதா ரறியாதார். ()

கன்னன் விசயன் றனைக்கொல்லிற் கடற்பார் முழுதுங் கண்ணில்லா
மன்னன் புதல்வன் றனக்கேயா மொழிந்தோர் தாமு மடிந்திடுவார்
முன்னஞ் சூதின் மொழிந்தபகை முடியா திருக்கி லவர்க்கல்ல
நின்னெஞ் சறிய யானறிய நினக்கே வசையு நிலையாமே. (௨௩௩)

கவசங் கனக குண்டலமென் றிரண்டு புனையி கற்பாந்த
திவசம் பொரினுங் கன்னனுயிர் செகுப்பார் மண்ணிற் சிலருண்டோ
வவசங் கிளைஞ ருறத்துணைவ ராற்றக் களத்தி லடுகுரக்குத்
துவசம்படைத்தோன் படும்பயந்த துணைவாவின்னே சொன்னேனே.

வல்லார் வல்ல கலைஞருக்கு மறைநூ லவர்க்குங் கடவுளர்க்கு
மில்லா தவர்க்கு முள்ளவர்க்கு மிரந்தோர் தமக்குந் துறந்தவர்க்குஞ்
சொல்லா தவர்க்குஞ் சொல்பவர்க்குஞ் சூழுஞ் சமயா திபர்களுக்கு
மல்லா தவர்க்கு மிரவி மக னரியதான மளிக்கின்றான். (௨௩௫)



மைந்தர்க் குறுகி வேண்டில் வல்லை முனிவர் வடிவாகிச்
சந்தப் பனுவ லிசைமாலைத் தானுகானை விரைந் தெய்தி
யந்தக் கவச குண்டலங்க ளளிப்பா யென்று லவனொன்று
மிந்தப் புவியின் மறுத்தறியா னுயிரே யெனினு மீந்திடுவான். ()

இரண்டு மவன்பா னீகவரி லிருந்தே ரூர்ந்திப் படியரசர்
திரண்டு வரினும் வெஞ்சமரிற் றிண்டேர் விசயனெதிர் நில்லார்
முரண்டு பொருவிற் கன்னனுந் தன்முன்னே யெய்தி முடிசிதறிப்
புரண்டு மடியுமென வணங்கிப் புத்தே ளரசன் போகின்றான். ()

வேறு.

தண்டுதா ளெனக் குனிந்துட லலமாத் தாளிணை தளர்ந்துதள்ளாடக், கண்டியா வருங்கை தொழக் கவித்த கைக்குடை யுடன் கங்கைநீர் நுரையை, மொண்டுமே லுறச்சொரிந் ததாமென நரை திரையுடன் மூப்பொரு வடிவங், கொண்ட தாமென வொருமுனி யாகியே கொற்றவன் வாயில்சென் றடைந்தான். (௨௩௮)

அடுத்த தானமும் பரிசிலு மிரவலர்க் கருளுடன் முற்பக லளவுங், கொடுத்து நாயகன் புகுந்தன னெளநீர் குறுகுமி னென்றவன் கோயிற், றடுத்த வாயிலோர் மீளவு முணர்த்தலிற் றலைவனுந் தருகென விரைவின், விடுத்த நான்மறை முனிவைமுன் காண்டலும் வேந்தனுந் தொழுதடி வீழ்ந்தான். (௨௩௯)

என்ன மாதவம் புரிந்தனன் பரிந்துநீ ரீண்டெழுந் தருளுதற்கென்று, பொன்னி னாசனத் திருத்திமெய் யன்புடன் பூசையு முறைமையிற் புரிய, வன்ன வேதியன் றளர்ந்தவென் னடையினு லானதே பிறபக லென்று, சொன்ன வேலையி னகைத்துனக் களிப்பனீ சொன்னவை யாவையு மென்றான். (௨௪௦)

அருத்தி யீதல்பொற் சுரதரு வினுக்குமற் றரிதுநீ யளித்தியோவென்று, விருத்த வேதியன் மொழிந்திட நகைத்துநீ மெய்யுயிர் விழைந்திரந் தாலுங், கருத்தி னேடெனக் களித்திலே னெனி லெதிர் கறுத்தவர் கண்ணிணை சிவப்ப, வுருத்த போரினிற் புறந்தரு நிருபர்போ யுறுபத முறுவனென் றுரைத்தான். (௨௪௧)

வந்த வந்தணன் கவசகுண் டலங்களை வாங்கிநீ வழங்கெனக் கென்னத், தந்தனன் பெறுகென வவன்வழங்க விண்டலத்தி

லோர்தனி யசரீரி, யிந்திரன்றனை விரகினுன் மாயவ னேவினுன் வழங்கனீ யெனவுஞ், சிந்தை யின்கணோர் கலக்கமற் றளித்தனன் செஞ்சுடர்த் தினகரன் சிறுவன். (௨௪௨)

அண்டர் யாவரு மலர்மழை பொழிந்தன ரந்தர துந்துபி யார்ப்பக், கொண்டல் வாகனன் கொண்டமெய் யொழிந்துதன் கோலமெய்யுடன் வெளிநின்ருன், கண்டு மாமன முருகியே களித்திடுங் கன்னனுக் கந்நெடுங் கடவுண், மண்டு போரினில் வயந்தரு மிதுவென மற்றெருரு கொற்றவே லெடுத்தே. (௨௪௩)

வெலற்கருந் திறல்விசயன்மே லொழித்துநீ வெஞ்சின மடங்கல்போ னெஞ்சிற், கலக்க மொன்றறப் பொருதிறல் புனைந்திடு கடோற்கசக் கானைதன் னுயிரே, யிலக்கு வந்தெதிர் மலைந்தபோதிதற்கென வேவென மறையையு மியம்பிச், சொலற்க ருப்புகழ்ச் சுரபதி கொடுப்பவத் தோன்றலுந் தொழுது கைக்கொண்டான். ()

நிரந்த ரம்புகழ் நிலைபெறுங் கன்னனை நெஞ்சுற மகிழ்ந்தவ ணிறுத்திப், புரந்த ரன்பசுந் தண்டுழா யணிந்திடும் புயல்வண னிருந்துழிப் போந்தே, யிரந்து சென்றுதான் மொழிந்தது மவ்வள வீந்தது மாங்கவற் கிசைத்தான், வரந்தருந் திருமா லதைவினவி யவ்வாசவன் றனக்குரை வழங்கும். (௨௪௫)

உண்மை யாகவெஞ் சமர்முகத் தெறிபடை யொன்றும் வந்துடலுற வொட்டாத், திண்மை யானுயர் கவசகுண் டலங்களைச் சென்றிரந் தவற்கிவன் கொடுத்தா, னெண்மை யாயினுங் கிளைஞரே யேற்பினு மியல்பிலாப் புன்செல்வ ரீயார், வண்மை யாளர்தம் மாருயிர் மாற்றலார் கேட்பினு மறுக்கிலா ரென்றே. (௨௪௬)

வாசவன் றனக்கு விடைகொடுத் ததன்பின் வந்தகா ரியந்தனை முடிப்பான், கேசவன் றனது தாதையோ டுதித்த கேண்மைகூர் தெரிவையைக் கிட்டித், தேசவன் றந்த குரிசில்பால் விரைவிற் செல்கெனப் பயந்தசே யிழையும், பாசமுன் னுறமா லேவலாற் றனது பாதபங்கயஞ் சிவப்பித்தாள். (௨௪௭)

வந்து குந்திநின் கோயி லெய்தினளென வாயிலோ ருரைத்திட மைந்தன், முந்து மன்புடன் றெழுதெதிர் கொண்டுநன் முறைமையா லாசனத் திருத்தி, யிந்துவின் கதிர் கண்டு மேன்மே லுற்றிரங்கி வான்கரை கடந்தேறுஞ், சிந்து வெண்டிரைச் சிந்துவொத் துருகுந் தெரிவையோ டுரைசில செப்பும். (௨௪௮)



அன்னை வந்ததென் னருந்தவப் பயனென வன்பினு லின்புற வணங்கி, யென்னை வந்தவா றென்ன மற்றவளு மீன்றதா யானுனக் கென்று, முன்னை வந்தொரு மந்திரந் தவமுனி மொழிந்ததுங் கதிரவ னருளாற், பின்னை வந்ததும் பேழையில் விடுத்ததும் பிழையிலா துரைத்திடக் கேட்டே. (௨௪௯)

மாய ஞர்விர கிதுவென மனத்தினின் மதித்து வந்த ளித்திடும் வள்ள, னீயனு ளெனைப் பயந்தவ ளென்னினு நின்மொழி நெஞ்சுறத் தேறேன், பேய ஞர்சிலர் பேரறி வின்மையாற் பெற்றதா யெனக்கென வந்து, தூய நாகரி னமைந்ததோர் துகிலாற் றுன்பமுற் றென்புரு வானுர். (௨௫௦)

அடாது செய்தவர் படாதுபட் டனரெனு மங்கர்கோ னருண்மொழி கேட்டுத், தடாத வன்புடைக் கெடாததா மொழிபகர் தையலு மையலிற் றவிர்ந்து, படாம தென்கையிற் றருகென வருதலும் பயந்திலே னெனிலெனை முனியென், றெடா விரித்தலைத் துடற்படப் போர்த்தெதி ரீன்றதா யாமென விருந்தாள். (௨௫௧)

இருந்ததா யீன்ற வன்றுபோ லுருகி யிருதடங் கொங்கைபால் சொரிந்தா, ளருந்துவான் போல விரவிசேய் விரும்பி யாதரத் துடன் புளகாஞன், புரிந்ததா யன்போ டிறுகுறத் தழுவிப் பொன்முடி மோயின ளுபிராப், பரிந்துநா னன்றே புனைவளர்த் தெடுக்கப் பாக்கியஞ் செய்திலே னென்றுள். (௨௫௨)

வருகவென் மதலா யிளைஞ ரைவருநின் மலரடி யன்பினுல் வணங்கி, யுரிமையான் மனமொத் தேவலே புரிய வொருதனிச் செய்யகோ லோச்சி, யரசெலாம் வந்துன் கடைத்தலை வணங்க வாண்மையுஞ் செல்வமும் விளங்கக், குருகுலா திபர்க்குங் குரிசிலாய் வாழ்வு கூர்வதே கடனெனக் குறித்தாள். (௨௫௩)

பெற்றநீர்மக வன்பி லாமையோ வன்றிப் பெரும்பழி நாணியோ விடுத்தீ, ரற்றைநாட் டொடங்கி யென்னையின் றளவு மாருயிர்த் துணையெனக் கருதிக், கொற்றமா மகுடம் புனைந்தா சளித்

துக் கூடவுண் டுரிய தம்பியருஞ், சுற்றமா னவரு மென்னடி வணங்கத் தோற்றமு மேற்றமு மளித்தான். (௨௫௪)

மடந்தை பொற்றிரு மேகலை மணியுகவே மாசறத் திகழ் மே காந்த, விடந்தனிற் புரிந்தே நானயர்ந் திருப்ப வெடுக்கவோ கோக்கவோ வென்றான், றிடம்படுத் திடவே யிராச ராசனுக்குச் செருமுனைச் சென்றுசெஞ் சோற்றுக், கடன்கழிப் பதுவே யெனக்கினிப் புகழுங் கருமமுந் தருமமு மென்றான். (௨௫௫)

பின்னையும் பற்பன் மொழிந்தபின் பலவும் பேசியென் பூசலோ விளைந்த, துன்னிரீ ரிங்கு வந்ததென் காவா துண்மையா துள்ள வாறுரைமி, னென்ன மைந்தனு மிப்பரிசினு லுரைப்ப வீன்றறத் துறந்தவன் றையினு, மன்னைநெஞ் சழிந்தே யிருகணீர் சொரிய வலறிவாய் குழறிநொந் தழுதாள். (௨௫௬)

ஆண்டுமா மகனு மிருகணீர் துடைத்தவ் வன்னையைப் பன் முறை தேற்றி, மூண்டவல் வினையின் பயனலா தியார்க்கு முயற்சியால் வருவதொன் றுண்டோ, வேண்டும் யாவையுமே தருகுவே னீரும் வேண்டிய வேண்டுக வென்னப், பாண்டுவின் றிருமா மனைவியு மதற்குப் பண்பினு லின்னன பகர்வாள். (௨௫௭)

பார்த்தன் வெஞ்சமரி னின்னுடன் மலைந்தாற் பகைப்பெரும் பாந்தளம் பகழி, கோத்தலும் பிழைத்தான் மறித்துநீ விடுத்துக் கோறலென் றொருவரங் குறித்தாள், வாய்த்தமற் றவர்க ளிளைஞ ரென்றவரை மலையலென் றொருவரங் குறித்தாண், மூத்தவன் காத லிளைஞர்தம் பொருட்டான் மொழிந்தமை கேட்டிவை மொழிவான். (௨௫௮)

தெறுகணை யொன்று தொடுக்கவு முனைந்து செருச்செய் வோன் சென்னியோ டிருந்தான், மறுகணை தொடுப்ப தாண் மையோ வலியோ மானமோ மன்னவர்க் கறமோ, வுறுகணை யொன்றே பார்த்தன்மேற் றொடுப்ப னொழிந்துளோ ருய்வரென் றுரைத்தான், தறுகண ரலர்க்குந் தறுகணு னவர்க்குந் தண் ணளி நிறைந்தசெங் கண்ணன். (௨௫௯)

பெருவர மிரண்டும் பெற்றபின் றன்னைப் பெற்றதா யினைக் கரங் குவித்துத், தருவா மெனக்கு மிரண்டுள வுலகிற் சராசரங்



களுக்கெலாந் தாயீர், வெருவரு மமரிற் பார்த்தனு லடியேன் வீழ்ந்தபோ தவனிப ரறிய, மருவரு முலைப்பா லெனக்களித் துந்தம் மகனெனும் வாய்மையு முரைப்பீர். (௨௬௦)

உய்வரு திறல்வெம் போர்முடிப் பளவு முமச்சுதான் மக னெனுந் தன்மை, யைவரு மறியா வண்ணநீர் காப்பீ ரல்லதங் கவர்சிறி தறியின், மைவருங் கடற்பா ரனைத்தையு மெனக்கே வழங்குவர் வழங்கினல் யானென், கைவருந் துணைவன் றனக் கலால் வழங்கேன் கடைப்பிடி கருமமீ தென்றான். (௨௬௧)

என்றலு மதுகேட் டீன்ற தாயொக்கு மென்று கொண்டிவ் வரநேர்ந்து, வன்றுயர் மேன்மேல் வளரயான் றளரா வகையுபி ருனக்குமுற் பெயர்வ, தென்றினி யெனத்தன் கண்கணீர் சொரியவி னைந்துநைந் தழுதழு திரங்கி, யென்றருண் மதலை தனைத்தழீஇ நிறுத்தி யாதவ னிருந்துழிச் சென்றாள். (௨௬௨)

கண்ணனுங் குந்தி கன்னனோ டுரைத்த கருத்தெலாந் திருத் தமாக் கேட்டாங், கெண்ணமு முடிந்த தெனமகிழ்ந் தந்த வணங் கையு மில்லிடை யிருத்தித், தண்ணளி யுடன்றன் பின்வரு நிருபர் தம்மையு முறைமுறை நிறுத்திப், பண்ணமை தடந்தேர் மீதுகொண் டன்றே பாண்டவ ருறைநக ரடைந்தான். (௨௬௩)

தூதுபோ யரவத் துவசனோ டுறுதி சொன்னது மறுத்தவன் சினந்து, மோதுபோர் புரியத் துணிந்ததும் விதுரன் மூரிவில் லிறுத்ததுங் கங்குற், போதுபோர் வஞ்சம் விளைத்ததுங் கன்னன் புரந்தரற் கீந்ததும் பயந்த, பாதுபோய் வரங்கள் பெற்றவை யொழிய மற்றெலா மைத்துனர்க் குரைத்தான். (௨௬௪)

# பாரத நூலாசிரியர் வரலாறு.

பரத வமிசத்து அரசர்களின் சரித்திரத்தைக் கூறும் நூல் பாரதம் எனப்படும். இது முதனூலாற் கொண்ட பெயர்; தத்தி தாந்தம். இங்கே குறித்த பரதன் துஷ்யந்தராசனுக்குச் சகுந்தலை யிடத்தே பிறந்த புத்திரன். இவனுக்குச் சர்வதமனனென்றும் பெயர். இவன் வமிசத் துற்பவித்தவர் பாரதர் எனப்படுவர். தரு மார்த்த காம மோக்ஷ மென்னும் புருஷார்த்தம் நான்கனையும் பயத்த லானும், வேதத்தை இருக்கு முதல் நான்காக வகுத்த வியாச முனிவர் கூற, ஐங்கரக் கடவுள் தமது செங்கரமொன்றில் ஒற்றை வெண்மருப்பை எழுத்தாணியாகக்கொண்டு மாமேருவெற்பாகிய ஏட்டகத்துப் பொறித்தமையானும், இந்நூல் ஐந்தாம் வேதமென விதந்து கூறப்படும். இம்மகாபாரதம் இதிகாசங்களுள் ஒன்றாகும். (இதிகாசம்: நாற்பயன் பயக்கும் புராதன கதையைத் கூறு நூல்.) வடமொழியில் வியாசர் செய்த பாரதத்தைச் சங்கப்புலவர்களுள் ஒருவராகிய பெருந்தேவனார் தமிழில் வெண்பாவா லியற்றினர். அது பெருந்தேவனார் பாரதமெனப்படும். புலவரும் பாரதம் பாடிய பெருந்தேவனா ரெனப்படுவர். அவர்க்குப் பின் நமது கவிசிரேட்ட ராகிய வில்லிபுத்தூராழ்வார் விருத்தப்பாவா லியற்றுவாராயினர். இதனை வில்லிபாரதமென்பர். இது சங்கிரகமா யிருத்தலைக் கண்டு தொண்டைநாட்டு மாதலம்பேட்டையில் இற்றைக்கு முன்பின் நூறு வருடங்கட்கு முன் வசித்த அருங்கவிப் புலவரும் சைவசம யத்தினருமாகிய நல்லாப்பிள்ளை என்பவர் வில்லிபாரதத்துள்ள ௧0 பருவங்களுட் சுருங்கச் சொல்லியிருப்பவற்றை முதனூலி லுள்ள வாறே விரித்து, வில்லிபுத்தூரார் பாடிய அவ்வவ்வினப் பாக்களாலே பாடி அவற்றினிடையே பெய்தும், ஈற்றில் நின்ற எட்டுப் பருவங் களைத் தாமே பாடியுஞ் சேர்த்தனர். அந்நூல் நல்லாப்பிள்ளை பாரதம் என வழங்கும். அது ௧௫௩00 கவிகள் வரையிற் கொண் டது. அதனை ஆதாரமாகக் கொண்டே, நமது நாட்டிற் சாமா னிய சனங்களாற் படிக்கப்படும் பாரதக் கதை (வசனம்) எழுதப் பெற்றுள்ளது. நல்லாப்பிள்ளை பாரதம் சொன்னயம் பொருணயத் திற் குறைந்ததன்று. அவர் கவியருமை யறியு மாற்றலிலார் சிலர் வெற்றெனத் தொடுத்த லென்னுங் குற்றமுடைத்தென வெளிற் றுரை பிதற்றுவர்.



இனி வில்லிபுத்தூரார் வரலாறு வருமாறு:

நூலாசிரியர் குமாரர் வரந்தருவார் கூறிய சிறப்புப் பாயிரத்தை யும் கர்ணபரம்பரையையும் ஆதாரமாகக்கொண்டே இவர் வரலாறு ஈண்டு வரைதற்பாலதாம். இவர் பெண்ணைநதி பாயும் நடுநாடென் னுந் திருமுனைப்பாடி நாட்டிலே சனியூரிலே பிராமணவருணத்திலே வீரராகவாசாரியாரென்பவரது புதல்வராகப் பிறந்து, தக்க பருவத் தில் ஆரியமுந் திராவிடமும் பயின்று, ஆசு மதுரஞ் சித்திரம் வித் தார மென்னு நால்வகைக் கவியும் பாடுவதில் வல்லுனராய்த் தமிழ் நாட்டு மூவேந்தராலுஞ் சன்மானிக்கப்பெற்றவராய், தாம் வழிபடு கடவுளாகிய திருமான்மீது திவ்விய பிரபந்தங்களைப் பாடிவருவா ராயினர். அக்காலத்தில் திருமுனைப்பாடிநாட்டில் வக்கபாகை என் னும் நகரத்திலே கொங்கர் குலாதிபதியாக அரசுசெய்து, கல்வி செல் வம் கொடை என்னுமிவற்றிற் சிறந்து, புலவர் குழாத்தைச் சேர்த்து, முச்சங்கத் தமிழ்நூல்களையும் அபிவிருத்திசெய்து, கண்ட னென்னுஞ்சோழனுக்கு முடிசூட்டி, நாற்றிசையினுஞ் சென்று அவன் பகைவரைச் செயித்து, அவன் புலிக்கொடியை யெங்கும் நிலைநாட்டி, பலவளங்களையும் மேலோங்கச்செய்து வாழ்ந்த வரபதி யாட்கொண்டானென்றும் கொங்கராயனென்றுங் கூறப்படும் பெயர் களையுடைய பெருந்தகையாளன் இவரது கல்வித்திறமையைச் செவி யுற்று, இவரைத் தன்னிட மழைத்துப் பெரிதுஞ் சன்மானித்து, தமிழ்மக்கட் குபகாரமாக மகாபாரதக்கதையைச் சங்கிரகமாகப் பாடும்படி வேண்ட, இவர் பாடினர் என்பர்.

இஃதன்றி, இந்நூலாசிரியர் சகோதரருக்கும் இவருக்கு மிடையே தாயபாக சம்பந்தமாக வெழுந்த வியாச்சியத்தைத் தீர்த் தற்பொருட்டு அக்கொங்கராயனிடந் தெரிவிக்க, அவன் பாரதத் தைப் பாடிக் கொண்டுவந்தபின் விவாதந் தீர்த்துவிடுவதாகக் கூற இவர் பாடிக் கொடுசென்றாரென்றும், பின்னர்த்துரியோதனாதியர்க் கும் பாண்டவர்க்கு மிடையே தாயபாகங் காரணமாக எழுந்த யுத் தத்தையும் பயனையுஞ் சிந்தித்து, இவர் தம் பாகத்தைச் சகோதர ருக்குத் தாமே கொடுத்தனரென்றுஞ் சிலர் கூறுவர்.

வில்லிபுத்தூரார் விஷ்ணுபத்தி பெரிதும் உடையவரென்றும், சிவதூஷணஞ்செய்யு மியல்பினரென்றும், சந்தக்கவி பாடுவதில் நிக ரற்றவராய் ஏனைய புலவர்களுடன் வாதஞ்செய்து, தோல்வியுற்றவர்

களின் காதினை, ஆட்கொண்டான் கொடுத்த ஆயுதத்தால் அரிவது வழக்கமென்றும், இங்ஙன மொருசமையத்தில் அனந்தனென்னும் பாவலரொருவர் அபஜெயமுற, இவர் அவரது காதை அரியச்செல்ல, அப்புலவர்விநோதமாக, "என்பெயரையுடையசேஷனுக்குங்காதில்லை, எனக்கு மில்லாது போதல் நன்று" என்று கூற இவர் அப் புலவரது சமையோசித வார்த்தையில் மகிழ்ந்து, கர்ணபங்கஞ் செய் யாது சென்றாரென்றும், பின்னர் இவர் திருவண்ணாமலைக்குச் செல்ல அங்குள்ள கவிவாணர்கள் இவரது வருகையை யறிந் தஞ்சி அறு முகக்கடவுள் திருவருட்செல்வராகிய அருணகிரிநாதரிடம் அடைக் கலம் புகுந்தனரென்றும், அவர் அப்புலவர்களை அஞ்சவேண்டா மெனப் புகன்று, தம்முடன் வாதம்புரிய வந்த வில்லிபுத்தூரரை நோக்கி, "நீர் ஓர் அந்தாதி பாடுதிர்; யான் அதற்கு உடனே பொருள் கூறுகின்றேன்; பின்பு யான் பாடும் அந்தாதிக்கு நீர் அர்த் தஞ் சொல்லுதிர்" என, அதற்கியைந்து, வில்லிபுத்தூரார் திருமான் மீது ஓர் அந்தாதி பாட, உடனே அருணகிரிநாதர் அர்த்தங்கூறி முடித்துப் பின்னர்க் கந்தரந்தாதியைப் பாட அதில் வரும், 'திதத் தத்தத்' என்றற்றொடக்கத்துக் கவிக்குப் பொருள்சொல்ல வியலாது மயங்கி, வில்லிபுத்தூரார் தாம் வைத்திருந்த கர்ணசேதனஞ்செய்யுங் கருவியை அவரிடங் கொடுக்க, அவர் அதனைப் பெற்று, "இனிபாயி னும் புலவர்களை மானபங்கஞ் செய்யாதீர்" எனப் புத்தி கூறி விடுத் தனரென்றும், வில்லிபுத்தூரார் வரும் மார்க்கத்தில் ஒரு சிவாலயம் எதிர்ப்பட, அவர் அவ்வாலயந் தமக்குப் புலப்படாவண்ணம் ஆலயத் திற்குந் தமக்குமிடையே எழினியிடுவித்து, அப்பாற் சென்றபோது கண்ணொழி மழுங்கி யுளம் வருந்தி அயலே நின்ற பரிசனர் மூலயாக அருணகிரிநாதர்க்கு அச்செய்தியைத் தெரிவிக்க, அவர் சிவாபராதத் தால் அது நிகழ்ந்ததென வுணர்ந்து மனநொந்து,

"புரத்தை நரசிங்கத்தைப் போர்வேளைக் கூற்றை
எரித்தவர்க்குத் தாச னெதிரே—நிரைத்தபுகழ்த்
தேன்காட்டுஞ் சோணகிரித் தேசிகனைப் போற்றாமல்
என்கெட்டுப் போனானிவன்."

என்னும் வெண்பாவைப் பாடியருளிக் கண்ணொளி பெறச் செய்து, மீண்டும் அவரைத் தன்னிடம் அழைத்துச் சிவநிந்தை செய்யவொண் ணாதென நன்மதி புகட்டி, அவர் பாடிய பாரதத்திலுள்ள சிவநிந்தை களை நீக்கும்படி பணிக்க, வில்லிபுத்தூரார் சிவபாத்துவத்தி னுண்



மையை யுணர்ந்து, சிவநிந்தைகளைக் களைந்து சிவபாத்துவத்தை விளக்கிப் பாடினரென்றுஞ் சொல்வர். இவ்வாசிரியர் தம்முடன் வாதஞ்செய்து தோல்வியெய்திய புலவர்கட்குக் கர்ணசேதனஞ் செய்தனரென்பதற்கு, "குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டிய னிங்கில் லைக் குறும்பியளவாய்க் காதைக் குடைந்து தோண்டி, யெட்டிய மட்டு மறுப்பதற்கோ வில்லியில்லை" என்னுந் தனிக்கவி ஆதார மாகக் கொள்ளக் கிடக்கின்றது. இவர் சிவபத்தி சிவபாத்துவ சம் மதமுடையரென்பது இந்நூலிலுள்ள தற்சிறப்புப்பாயிரத்தில், "மன்னுமாதவன் சரிதமு மிடையிடை வழங்கு, மென்னு மாசையால் யானுமீ தியம்புதற் கிசைந்தேன்" என்னுஞ் சிலேடைமொழிப் பிர யோகத்தானும், அருச்சுனன் தவநிலைச்சருக்கத்தில், "ஆசறுகடவு ளோர்க்கு மருமறைதனக்கு மெட்டாத், தேசவன்" எனவும், "கற் றவர் வளைத்துத் திரிபுரமெரித்தோன் கற்றவர் கருத்தினுற் காண் போன்" எனவும், "தத்துவமறைக்கு மெட்டுதற்கரிய தன்வடிவில்" எனவும், "ஓரேனந்தனைத் தேட வொளித்தருளு மிருபாதத் தொரு வன்" எனவும், "வள்ளலெனையாளுடைய மாதவனுமாதவனு மல் லமர் தொடங்கியுறவே" எனவுஞ் சிவபிரானைக் குறித்துக் கூறியமை யானும், அச்சருக்கத்திலே எம்பெருமான் றிருமேனியில் விசயன் வில்லடி பட்டமையைக் கூறும், "விண்ணிலுறைவானவரில்" என்றற் றொடக்கத்து வரு மிரு செய்யுளானும், பதின்மூன்றாம்போர்ச் சருக் கத்துள்ள தோத்திரப்பாக்களானும், பிறவாற்றானும் இனிது புலப் படுமென்க. இவர்காலத்தில் வடமொழிப்பதங்கள் விரவிய சந்தப் பாக்கள் பெரிதும் பாடப்பட்டன வென்பது இந்நூலானும், இந் நூலாசிரியர் காலத்தவரான அருணகிரிநாதரியற்றிய நூல்களானும் அறியத்தகும். வில்லிபுத்தூரர்காலம் இவ்வளவினதென வரையறுத் துக் கூறுதற்குத் தக்க வாதாரங் கண்டிலேம். அருணகிரிநாதர், இரட்டைப்புலவர், இந்நூலாசிரியர் நால்வரும் ஓரேகாலத்தின ரென் பதற்குமாத்திரஞ் சில ஆதாரங்களுள. சற்றேறக்குறைய ருOO வரு டங்கட்கு முன் வாழ்ந்தனரென்றுங் கூறுவர்.

"பெருங்காப்பியநிலை பேசுங்காலை" என்னும் சூத்திரத்திற் கண்டபடி இந்நூல் காப்பியநடையிலே சொல்லணி பொருளணி களும் பலவகைச் சந்தங்களும் பொருந்தியுள்ளது. திருவள்ளுவர் முதலிய முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் ஆங் காங்குப் பெய்யப்பெற்றுள்ளன. யுத்தம் பாடுதலில் தமிழாசிரியர்

களுள் இவரை நிகரற்றவரெனலாம். வியாசபாரதத்தையே பெரிதும் அனுசரித்தனரென வடமொழிவல்லார் கூறுகின்றனர். சிறப்புப்பாயிரத்தை நோக்கும்போது இந்நூல் முழுவதும் பாடினரென்றே புலப்படுகின்றது. முதற் பத்துப் பருவங்களொழிந்த வேனைய பருவங்களின் கதி யெவ்வாறாயிற்றென் றறிகிலேம். கம்பராமாயணத்திற்போல இந்நூலகத்தும் இடையிடையே ஆக்குவித்தோனைச் சிறப்பித்திருக்கின்றனர். அதனைக் காண்டவதகனச் சருக்கம், நிரைமீட்சிச்சருக்கம், பதினாறும்போர்ச்சருக்கம், பதினேழாம்போர்ச்சருக்கம் என்னு மிவற்றிலுள்ள ௫௦-ம் ௧௦௪-ம் ௯௦-ம் ௩௩-ம் கவிகளான் முறையே நோக்குக. இந்நூலின் மாண்பையும் இந்நூலாசிரியரின் மாண்பையுங் குறித்து எமது சிற்றறிவிற் கெட்டியவளவிற் கூறப்புகினும் விரியுமாகலின் அஃதஞ்சி விடுத்தாம்.

## சரித்திரத் தொடர்பு.

சந்திரவமிசத்தரசனாகிய சந்தனு என்பவன் கங்கையைக் கூடி வீட்டுமனையும், பரிமளகந்தியைக் கூடிச் சித்திராங்கதன் விசித்திரவீரியன் என்பவர்களையும் பெற்றான். சித்திராங்கதன் ஒரு கந்தருவனால் இறந்து விட விசித்திர வீரியன் அம்பிகை அம்பாலிகை என்னும் இரு பெண்களையும் மணந்து, புத்திரில்லாதவனாய்ப் பலநாளிருந்து இறந்தான். பின்னர்ப் பரிமளகந்தியுடைய வேண்டுகோளின்படி வியாசரால் அப்பெண்களிடத்தில் முறையே திருதராட்டிரன் பாண்டு என்பவர்களும், அம்பிகையின் தோழியிடத்தில் விதுரன் என்பவனும் பிறந்தார்கள்.

திருதராட்டிரனிடத்திலே துரியோதனன் முதலிய நூற்றுவர்களும் பிறந்தார்கள். பாண்டு, "மனைவியைக் கூடின் இறப்பாய்" என்று கிந்தம முனிவனாலே சபிக்கப்பட்டவனா யிருந்தான். இவனுடைய மனைவியாகிய குந்தி என்பவள், இவனை விவாகஞ் செய்யு முன்னே துருவாசமுனிவர் உபதேசித்த மந்திரத்தினுண்மையைப் பரீக்ஷிக்கும் பொருட்டுச் சூரியனை நினைத்துச் செபித்து, அவனோடு கூடிக் கன்னனைப் பெற்றாள்.

அக்குந்தியானவள், நாயகனாகிய பாண்டுவுடைய அனுமதிப்படி அந்த மந்திரத்தாலே தருமனையும் வாயுவையும் இந்திரனையுங் கூடி முறையே தருமன் வீமன் அருச்சுனன் என்பவர்களைப் பெற்றாள். பின்பு இவனுடைய மற்றை மனைவியாகிய மாத்திரி என்பவள், இவனுடைய அனுமதிப்படி குந்தியிடத்தில் அந்த மந்திரத்தை முறையே பெற்றுச் செபித்து, தேவமருத்துவரைக்கூடி நகுலன் சகதேவன் எனனும் இரு புத்திரர்களைப் பெற்றாள். இப் புத்திரர்கள் ஐவரும் பாண்டவர்கள் என்றுஞ் சொல்லப்படுவர். பாண்டவர்களும் நூற்



றவர்களுஞ் சிறுபருவத்திற்றானே பெரும் பகை உடையரானார்கள். அவருள்ளே துரியோதனன், வீமனைக் கயிற்றாற் கட்டிக் கங்கையில் இடுதல், பாம்புகளைக் கடிக்கவிடுதல், முதலிய பல தீங்குகளைச் செய்தான்; அவைகளால் வீமன் யாதும் இடையூறு அடைந்தானல்லன். பின்னொரு காலத்திலே துரியோதனன் அவர்களைக் கொல்லும்படி நினைத்து, மந்திரியாகிய புரோசனனைக் கொண்டு வஞ்சமாக ஓர் அரக்கு மாளிகையைக் கட்டுவித்து ஐவரையும் அதில் இருக்கும்படி செய்வித்தான். ஒரு நாள் வீமன் அம்மாளிகையின் வரலாற்றை அறிந்து தானே அதை எரித்து விட்டுத் தருமர் முதலியோரோடும் இடும்ப வனத்தைச் சேர்ந்தான். அங்கே எதிர்த்த இடும்பனைக் கொன்று அவன் றங்கை இடும்பையை மணந்து கடோற்கஜனைப் பெற்றான். துரியோதனன் முதலியோர் அரக்கு மாளிகையிற்றானே ஐவருந் தாயும் இறந்தனர் என்று எண்ணியிருந்தார்கள்.

பின்பு, ஐவரும் பிராமண வேடம் பூண்டு வேத்திரகீய நகரத்தில் இருக்குங் காலத்திலே திரௌபதியினுடைய சுயம்வரத்தைக் கேள்வியுற்று அச்சபையிற் போயிருந்தார்கள். அங்கேகுறிக்கப்பட்டிருந்த வில்லை வளைத்து அம்பு தொடுத்துக் குறித்த இலக்கை வீழ்த்துதல் அச் சபையிற் கூடிய பல அரசர்களாலும் இயலாதாக, அருச்சுனன் அது செய்து மணமாலை சூட்டப் பெற்று எல்லாரையும் வென்று விளங்கினான். பின்பு தாய் சொற்படியும் வியாச முனிவர் சொற்படியுமாக ஐவரும் அப்பெண்ணை விவாகஞ் செய்து கொண்டார்கள்.

சிலகாலஞ் சென்ற பின் தருமர் இராசசூயயாகஞ் செய்து சகல செல்வங்களையும் பெற்றிருத்தலைத் துரியோதனன் கண்டு பொறாமை கொண்டு சகுனி முதலியோரோடு ஆலோசித்து ஒரு மண்டபங் கட்டுவித்து அதைப் பார்த்தற்கென்று பாண்டவரை அழைப்பித்துச் சூதாடுவித்து வென்று அவர்களுடைய நாடுகளையுஞ் செல்வங்களையும் அபகரித்துக் கொண்டு, காட்டிலே ௧௨ வருஷமும் நாட்டிலே ஒருவரும் அறியாதபடி ஒருவருஷமும் இருந்து வந்த பின்பு அவர்களுடைய நாடுகளைக் கொடுப்பதாக வாக்குச் செய்தான்.

அவர்கள் அப்படியே வாசஞ்செய்து முடித்தபின்பு, தம்புரோகிதராகிய உலூக முனிவரைத் துரியோதனனிடத்திலே தூதனுப்ப, அவன் அவர்களுடைய நாட்டைக் கொடுக்க உடன்படாது மறுத்து திருதராட்டிரனோடு ஆலோசித்துத் தம்புரோகிதராகிய சஞ்சய முனிவரை அனுப்ப, அவர் போய் ஐவருக்கும் ஞானப்பிரசங்கஞ் செய்து அவர்களைத் தவஞ்செய்யும்படி தூண்டலும், அவர்கள் அதற்கு உடன்படாது சத்துருசங்காரஞ் செய்து பிரதிக்ஞையை முடிப்பதே தந்துணிபென்று கூறி அவரை அனுப்பினார்கள்.

# கிருட்டிணன் றூது சருக்கம் பொழிப்புரை.

## காப்பு.

சுருங்காத தவமெய்ம்மையினை யுடைய முனிசிரேட்டராகிய வியாசமுனிவர், நெடிய கடல்சூழ்ந்த நிலவுலகத்தில் நான்கு வேதங்களோடு ஐந்தாம் வேதமென்று நிலைபெற, மகாபாரதக் கதையைச் சொன்னநாளில், மகாமேருமலையை ஏடாகவும், யுத்தத்திலே கூர்ந்த தம்முடைய கொம்பை எழுத்தாணியாகவுங் கொண்டு அக்கதையை எழுதும் விநாயகக் கடவுளை யாம் வணங்கி அன்புசெய்வாம், என்பதாம்.

ஏ, அரோ அசைநிலைகள். சொன்ன நாள் எழுதும் பிரான் என்பது "இறப்பே யெதிர்வே" என்னுஞ் சூத்திரத்தால் இறந்தகாலத்தோடெதிர்காலம் மயங்கிய வழுவமைதி. ஆகவென்னுஞ் செயவெனெச்சங்களிரண்டும் காரணப் பொருளவாய், வருவித்த கொண்டு என்னும் பிறகருத்தாவின் வினையோடு முடிந்தன. அது எழுதும் என்னும் பெயரெச்சங்கொண்டது. இனிக் கொண்டு என்னுஞ் சொல் வருவியாது ஆக வென்னுஞ் செயவெனெச்ச மிரண்டும் "சூரியனுதிக்க வந்தான்" என்பது போலக் காரணகாரிய மென்னும் இரண்டுமின்றி நின்றதெனக் கொள்ளினுமிழுக்காது. முனிராசன் வடநூன்முடிவு. மஹா என்னும் வடமொழி மா எனத் தற்பவமாயிற்று. எல்லா வளங்களுஞ் சுரத்தற்கேதுவாகிய மழைக்கு முதலாதல்பற்றி நீடாழி யெனவும், அக்கடலாற் சூழப்பட்டமையின் எல்லா வளங்களையுந் தருமியல்பினதென்பது போதர ஆழியுலகமெனவும், வியாசமுனிவர் கூறிய மகாபாரதக் கதையை மேருகிரியிலே தமது கோட்டா லெழுதிய அத்துணை விருப்புடைய விநாயகக்கடவுள் அக்கதையைச் சுருக்கித் தமிழில் மொழிபெயர்த்துக் கூறும், இந்நூலும் இடையூறின்றி இனிது முடியுமா றருள்புரிவரென்னுங் கருத்தால விநாயகக் கடவுளுக்குப் பிறவடை கொடாது மபாரதஞ் சொன்னநாள் எழுதும்பிரான் எனவும், பெருங்கதையாகிய மகாபாதத்தைக் கடினமாகிய மேருமலையில் எழுதும்பொழுதும் மழுங்காத் தகையதென்பதுபோதர, ஆகவங்கூர் கோடெனவும் கூறினர். இந்நூற்கு மகாபாரதம் என்னும்பெயர் முதநூலால் வந்தது. ஸ்ரீகிருட்டிணர் அருச்சுனனுக்குபதேசித்த வேதசாரங்களே செறிந்த பகவற்கீதையைத் தன்னிடத்துடைமையினானும், விட்டுணுமுதலிய தேவர்களுடைய சரித்திரங்களைக் கூறுதலானும், சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோராகிய மக்கள் எளிதிலுணர்ந்து உய்யும்படி உறுதிப்பொருள்களைக் கூறுதலானும் வேதங்களை நான்காய்ப்பகுத்த வியாசமுனிவராற் கூறப்பட்டவுரிமையினானும் மகாபாரதம் ஐந்தாம் வேதமெனப்பட்டது. பரதன் என்னும் அரசன்குலத்திற் பிறந்த பாரதர்களுடைய கதையைக் கூறுதலின் இந்நூற்குப் பாரதமெனக் காரணப் பெயராயிற்று. முனிவர்கள் வேதங்களோடு சீர்தூக்



கிப்பார்த்தபொழுது இந்நூல்அவற்றினும்பெருமையும் பாரமுமுடைத்தாயிருந்தமை பற்றிப் பாரதமெனக் காரணக்குறியாயிற் றென்பாருமுளர். இங்கே பாரதம் என்றது உயிர்க்குறுதிபயக்கும் பொருளையுடைய மேன்மையை. மறை என்பது மறைந்த பொருளையுடையது எனப் பொருடருதலாற் காரணப்பெயர். அது அலையென்பது போல வினைமுதற்பொருளுணர்த்தும் இகரவிகுதி புணர்ந்து கெட்டுநின்றது. "எவ்வயிற் பெயரும் வெளிப்படத்தோன்றி யவ்விய னிலையல் செவ்விதென்ப" என்பதனால் யாமென்னும் எழுவாய் தோன்றாமல் நின்று கூர்வாம் என்னும் பயனிலை கொண்டது.

க. புகழினைப் படைத்த அருச்சுனனுடனே நெடிய மூன்று அவதாரங்களினும் பிரியாதவராய்ச் சிறந்த நட்பினாலே அவனுக்குத் தேர் செலுத்த உடன்பட்டருளிய செம்மையாகிய கண்களையுடைய திருமாலை, பூமியை ஆளுந் திறத்தைக்கொண்ட துரியோதனனுக்குப் போரிற் படைபெடேன் என்று பிரதிக்ஞை செய்த தலைவரை, மேக வண்ணராகிய கண்ணபிரானை வணங்குபவர்கள், பிறவியாகிய சமுத்திரத்தை நீந்தி முத்தியாகிய கரையைக் கண்டவர்கள் என்பதாம்.

உம்மை-முற்று. பிறவிஎன்பது ஈறு குறைந்து நின்றது. திருமால் பூபாரந்தீர்க்க வந்தபொழுது அவரோடு கேண்மைகொண்டு நின்ற அருச்சுனன்றானே, முன்னர் நாராயணனாயவதரித்தபொழுது நரனாகியும், பின்னர்; இராமனாயவதரித்தபொழுது இலக்குமணனாகியும் பிரியாது கேண்மைகொண்டு நின்றனனென்பது, "உன்னையான் பிறிவதில்லை யொருமுறை பிரிந்து மேனாள், நன்னிலா வெறிக்கும் பூணாய் நரனு நாரணனுமானோம்" எனவும், "பின்னொரு பிறப்பில் யாமே ராமலக்குமப் பேர்பெற்றோம், இந்நெடும் பிறப்பில் நீயும் யானுமா யீண்டு நின்றோம்" எனவும் முதற்போர்ச் சருக்கத்திற் கண்ணபிரான் விஜயனுக்குக் கூறியவாற்றான் இனிது விளங்கும். கண்ணபிரான் சுயோதனனுக்குப் படையெடேனென்றதையும், விஜயனுக்குத் தேரூர்தற்கிசைந்தமையையும் வாசுதேவனைப் படைத்துணையழைத்த சருக்கத்துட்காண்க.

உ. அன்போடு ஞானப்பிரசங்கத்தை நன்றாகச்சொல்லி ஞானியாகிய சஞ்சயமுனிவர் போனபின்பு, செந்நினையையுடைய குளிர்மையாகிய மலைகளினுள்ள மிக்க தேன்வாவிகடோறுஞ்சொரிகின்ற அழகிய குருநாட்டையுடைய தருமர், சாமம் பேதந் தானந் தண்டம் என்று அரசர்க்குரிய தருமநூல்கள் கிரமமாகச் சொல்லும் தகுதிப்பொருளை உற்றுநோக்கி, சுத்தமாகிய நறிய குளிர்ந்த துளசிமாலையையுடைய கிருஷ்ணரைத் துரியோதனனிடத்தே தூதனுப்புதற்கு நினைத்து அவரை நோக்கி இவ்வாறு கூறுவார் எ-ம்.

ஞானம் தருமம் என்பன ஆகுபெயர்கள். தகுதியுடையதனைத் தகுதி என்றார். ஏகாரம் ஈற்றசை: சாம பேத தான தண்ட மென்பன அரசர்கட்குரிய

நால்வகை உபாயங்களாம். சாமம் பகைவரை நல்வார்த்தைகூறி உறவாக்குதல்; பேதம் பகைவர் தம்முள்ளே பொருமாறு பிரித்து வெல்லுதல்; தானம் பகைவருக்குப் பொருளீந்து தம்வயமாக்குதல்; தண்டம் பகைவரோடு யுத்தஞ்செய்து வெல்லுதல்.

௩. எவர் மனத்திலுமிருக்குஞ் சோதிசொரூபரே! செம்மையாகிய சொற்களையுடைய சஞ்சயமுனிவருக்கு யாங் கூறிய கருமத்தையும் முன்னர்ச் சென்றபோது நமது புரோகிதராகிய அழகிய சொற்களையுடைய உலூக முனிவருக்கு அத்துரியோதனன் சொல்லிய கருமத்தையும் நீர் அறிவீரன்றே! நஞ்சினை அதிகமாக உட்கொண்டு அதன் கொடுமையைப் பரிசரித்தற்கு நல்ல மருந்தையும் மந்திரத்தையும் விரைந்து தேடாமல் செயலின்றிக் கிடப்பவர்களைப் போல இருக்கலாமா? எ-ம்.

துரியோதனன் சொல்லிய கருமமென்றது, பாண்டவருடன் யுத்தம் செய்யின் நீவிரே தோல்வியுறுவீரென உலூகமுனி கூறியதற்குத் துரியோதனன் வெல்பவர் யார் தோற்பவர் யார் என்பது சமரிற் றெரியுமென்றதை.

௪. துரியோதனனாதியோர் செய்தற்கரிய பெரிய யுத்தத்தைச் செய்யுமாறு கூறினாராயினும், தருமஞ் சிறிதுமின்றிப் பெரிய யுத்தத்தைச் செய்வது நமக்கு முறைமையன்றென்று இவ்வாறு கருணை வெள்ளம் பெருகும்படி கூறிய போர் பொருந்திய நெடிய அழகிய முரசக்கொடியினராகிய தருமராசனைப் பார்த்து, மல்லில் வலிய புயங்களையுடைய வாணாசுரனைப் பெரிய போரிலே தோல்வியுறச்செய்த கிருஷ்ணபிரான் இளையவர்களையும் ஒருங்கு இருத்திக் கூறுவார்.

வாணாசுரன் இந்திரன் முதலிய தேவர்கட்குப் பேரிடர் புரிந்தனனேனும் சிவபூசைசெய்தானாதலின் அவனுடன் பொருது தோல்வியுற்ற கண்ணபிரான் பின்னர்ச் சிவபிரானது திருவருள் பெற்று அவ்வசுரனைச் செயித்தனரென உபதேச காண்டங் கூறும். இரண்டாயிரம் வலிய புயங்களையுடையனாதலின் 'புயப்போர் வாணன்' என்றார்.

௫. வயல்களிலே வரான்மீன்கள் குதித்து விளையாடுகின்ற அழகிய குருநாட்டைப் பெற்றுக்கொள்ளக் கருத்தோ: மாறுபட்ட யுத்தத்திலே உய்வார் யாரென்று விரைவினோடுஞ் சீறி எழுந்து, போர்செய்து பகைவரை வென்று பிரதிக்ஞா பாலனஞ்செய்து, இவ்வாறாகிய தண்டத்தால் நாட்டை அடையக் கருத்தோ; இவ்வாறின்றி மீண்டும் படம்பொருந்திய பாம்புகள் சஞ்சரிக்கின்ற காட்டின் கட்சென்று அலைந்து திரியக்கருத்தோ; ஐந்து அரசர்களாகிய உங்க



ளுக்கு உள்ள கருத்து யாது உண்மையாகக் கூறுமின் என்று தேவர்களுக்குத் தலைவராகிய கிருஷ்ணர் சொல்லியருளினார் எ-ம்.

ஓகாரங்கள் வினாவில் வந்தன. செய் - வயல். உய்வரார் என்பதனை ஒரு சொல்லாக்கி உய்யலாற்றார் எனப் பொருள் கூறுதலும் ஒன்று.

௬. தருமத்தின் அவதாரத்தை நிகர்த்த தருமரானவர் அவரை நோக்கி, கடிய நெருப்புப்போலும் விரோதத்தை மூட்டி மிக வளர்த்தால் நாம் இரு பக்கத்தேமுங் குற்றமாகிய போர்முனையிலே சென்று கோபத்தோடு பொருதலால், உயர்ந்த மூங்கிற் காடு எரிதல்போல ஒருங்கே அழிந்துபடுவேம்; ஆதலால் எங்கள் உயிர் போல்பவரே, வெள்ளாம்பல் மலரும் தாமரை மலருங் கமழாநின்ற வயல்களையுடைய குருநாட்டிலே இருபக்கத்தேமுங் கலந்து வாழும் பொருட்டு நீரே தூதாகச் சென்று சொல்லியருளும் என்று கூறினார்.

வரைக்காடு - மூங்கிற்காடு; மூங்கில் தம்மு ளொன்றோ டொன்று உரோஞ்சுண்ணுவதால் மூண்ட நெருப்பே அம்மூங்கிற்காடு முழுவதையும் நாசஞ்செய்தாற் போல, ஒரு குலத்தோராகிய துரியோதனனாதியரும், பாண்டவரும் தம்முள் மாறுபட்டுப் பகையென்னுங் கடுநெருப்பு மூள, அமர் புரிந்து, ஈற்றில் அழிவாரென்பார் "வரைக்கா டென்ன" என்றார். "முந்தூள் மாட்டுறு கனலியென்னத் தன்குலம் முடிப்பான் வந்தாள்" என்றார் பிறரும். (முந்தூள் - மூங்கில்). சமர், கயிரவம், தாமரை என்பன ஆகுபெயர்கள். மேலும் இவ்வாறு வருவன உய்த்துணர்ந்துகொள்க. சந்து - தூது. ஒரு சொன்னீர்மைப்பட்டு நின்ற சந்துபட என்னுஞ் செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத் திரிக்கப்பட்டது. சந்துபட - இணக்கமுண்டாக எனினுமாம்.

௭. எம்பெருமானாகிய கிருஷ்ணர் அவர்களை நோக்கி, நீங்கள் சர்ப்பக்கொடியை யுயர்த்திய துரியோதனனோடு மறுசூது விளையாடி வெற்றிபடைத்த அத்தினத்திலே அவன் சொல்லிய நியமவாக்குத் தவறாமல் வெம்மையாகிய காட்டிற் சென்று திரும்பி வந்துவிட்டீர்கள். இன்னும் அக்கொடியோன் உங்களுடைய குருபூமியின் பாகத்தைக் கொடாதிருந்தால் அவனைப் போரிலே கொன்று பெரிய பூமியை ஆளும்பொருட்டுத் துணிவதே இனி உங்கட்குக் கடனாம் என்று கூறினார் எ—ம்.

மறுசூதாடி நீர் வென்ற வந்நாள்: தருமபுத்திரர் ஈற்றிலே தமது புண்ணியத்தைப் பணயமாக வைத்துச் சூதுபொருது சகுனியை ஜெயித்தசமையம். இதன் விரிவைச் சூதுபோர்ச் சருக்கத்திற் காண்க.

௮. தருமர் அவரை நோக்கிச் சொல்லுவார்:—ஆசிரியரையும் சுற்றத்தாரையும் வமிசத்துக்கு உரிய சகோதரரையும் போரிற் கொன்று வெற்றியடைந்து, ஒலிபொருந்திய நெடிய கடலாகிய உடையையுடைய பூமிமுழுதையும் தனியே ஆளுகின்ற அரச வாழ்க்கையினும், கரவுதங்கிய மனத்தினையுடைய பெரிய தந்தையாராகிய திருதராட்டிரன், சஞ்சயமுனிவர் வழியாற் சொல்லியனுப்பிய மொழிப்படியே காடுகடோறும் உலாவி இரவும் பகலும் பலமூல சாகங்களைப் புசித்து இனிமையாக உயிர்வாழ்தலே நல்லது எ-ம்.

பலம்-பழம். மூலம்-கிழங்கு. சாகம்-இலைக்கறி. [மூலபாடத்தில் "கரவுறைவும்" என்றிருப்பதைக் "கரவுறையும்" எனத் திருத்திக்கொள்க.]

௯. குற்றமில்லாத தருமராசர் இந்த வாக்கியத்தைச் சொல்ல, பெரிய கிருஷ்ணர் சொல்லலுற்றார்:—நீங்கள் மோதுகின்றபோருக்கு இளைத்து, நெருங்கிய பெரிய காட்டினிடத்தே விரைந்து போனால், பூமியிலுள்ளவர்கள், இவர்கள் தாயத்தாரை வெல்லலாற்றாது தம்முடைய இராச்சியத்தை இழந்தார்களே என்று ஏசார்களோ? முன்னே சொல்லிய பெரிய சபதமும் பொய்ப்படாதோ? இது நீதியோ? என்று சொன்னார். அப்பொழுது அதற்கு உத்தரமாக விளங்காநின்ற தருமர் சொல்லலுற்றார் எ-ம்.

ஓகாரங்கள் மூன்றும் எதிர்மறைப் பொருளில் வந்தன.

௧௦. நீர் தூதாகச் சென்றருளி எங்களுடைய கருத்தை அவர்களுக்குச் சொன்னால், அத்துரியோதனன் நங்கருத்தின்படி வண்டுகள் தாதுக்களை ஊதி ஒலிக்கின்ற சோலைவளத்தாற் குளிர்ந்த நகரத்தையும் தாயபாகத்தையுந் தாரொழிவானாயின், மேலாக ஊதப்படுகின்ற சங்குக் கூட்டங்களும் வலம்புரிச் சங்குகளும் மிகமுழங்க கொடிய யமனுடைய பெரிய தூதர்கள் மனமகிழ, அவர்களோடு போர்செய்தாயினும் அவற்றைப் பெறுவேன்; இவ்வாறு செய்வது அபகீர்த்தியும் அன்று எ-ம்.

௧௧. முந்தியூருகின்ற கொடிய பாம்பாகிய கொடியினையுடைய துரியோதனனது பழைய அத்தினபுரியின்கண் சென்று மள்ளர்களுடைய முற்றங்கடோறுஞ் சங்குகள் ஊருகின்ற நீர்வளத்திறத்தினையுடைய நாட்டை வேண்டுதிர்; அங்ஙனம் ஒரு நாட்டைத் தாரானாயின், ஐந்து ஊர்களையேனும் வேண்டுதிர்; அவைகளும் இல்லையென்றால், ஐந்து வீடுகளையேனும் வேண்டுதிர்; அவற்றையும் இல்லையென்று மறுத்தால், கொல்லுகின்ற போர்த்தொழிலை வேண்டிக்



V. Mahadevan, University entrance
J.H.C

கொள்ளுதிர்; சிவந்த திலகத்தை யணிந்த நெற்றியையுடைய யானையின் கொம்பைமுரித்த செம்மையாகிய கண்களையுடைய கிருஷ்ணரே, என்று கூறினார் எ-ம்.

கஞ்சனுடைய அநுமதியினாற் பத்திரன் தம்மைக் கொல்லும்படி தூண்டிவிட, வந்த குவலயாபீடம் என்னும் யானையை மிதித்துக் கொன்று கொம்பைப் பறித்து அதனாற் பத்திரனையுங் கொன்றார் என்னும் பௌராணிகசரித்திரம் ஈண்டு அநுசந்தேயம்.

௧௨. மூத்தவராகிய தருமராசர் இவ்வசனங்களைச் சொல்ல, தம்பியாகிய வீமன் மனத்திலே கொடிய கோபம் மிக மூள, நாக்குக் குற்றமில்லாத மொழிகளைச் சொல்லலாற்றாது தடுமாற, மிக விரைவாக எழுந்து அவரை வணங்கி, பூமியை எல்லாம் படைத்தவரே, புட்பாசனத்திலுள்ள இலக்குமியோடு பொருந்திய கௌஸ்துபமென்னும் மணியை அணிந்த மார்பினையுடையவரே, துரியோதனனால் எமக்கு நேர்ந்த இழிவுகளையெல்லாந் தீர்த்தவரே. குற்றமில்லாத தமையனார் மானமில்லாமற் சொல்வதற்கு யாஞ் செய்வது யாது என்றான் எ-ம்.

மற்று அசைநிலை. மூள என்பதின் அடுக்கு மிகுதிபற்றி வந்தது.

௧௩. விரிந்த கூந்தலையும் பசிய வளையலையும் உடைய திரௌபதியானவள், அரசர்கள்நிறைந்த சபையின்கண்ணே துரியோதனன் மானபங்கஞ் செய்வித்தமையால் நாணமுற்று வருந்தி முறையிட்ட நாளிலே, யாம் அவரைத் தண்டிக்க முயன்றபொழுது, கோபியாதொழிக; என்று தடுத்து நமக்கும் நம்முடைய வமிசத்துக்கும் உலகமுள்ள நாள்வரையும் தீராத வசையையே செய்தீர்; எரிகின்ற அக்கினிபொருந்திய காட்டையடைந்து அங்கு வாசஞ்செய்து முடித்து, அதனை அகன்று வந்தும், இன்னுங் கொடிய பகைவரை முடிக்க இளைக்கின்றீர்; சர்ப்பக்கொடியை உயர்த்திய துரியோதனனுடைய கொடுமையினின்றும், முரசக்கொடியை யுயர்த்திய அண்ணாவே, உம்முடைய அருளுக்கு மிக அஞ்சினேன் எ-ம்.

துரியோதனனுடைய கொடுமை போர்செய்தற்காயினும் இடந்தரும்; நும்மருள் அதற்கும் இடந்தராது என்பான், "அரவுயர்த்தோன் கொடுமையினு முரசுயர்த்தோ யுனதருளுக் கஞ்சினேனே" என்றான்.

௧௪. காட்டை ஆளும்படி உம்மை விடுத்த கண்ணில்லாத அருளற்ற திருதராட்டிரனுடைய அன்புள்ள புத்திரன் அரசாளுகின்ற

பூமியையெல்லாம், நீர் ஒற்றைக்குடையின் கீழ் அரசாளும்வண்ணம் இன்றைக்கே தருவேன், முன்னாளில் நம்முடைய உரிமைப்பாகத்தை முற்றாக அபகரித்துக்கொண்ட பெரிய சகோதரனாகிய அவன்உம்மை வெறாதபடி அவனுக்குச் சுவர்க்கத்தை ஆளும்படி அவ்விந்திரனுடைய பதத்தைக் கொடுப்பேன் எ-ம்.

தான் அசைநிலை. இன்றே என்புழி ஏகாரம் தேற்றம்; அவன் நம்மோடெதிர்ந்து பொருது இறந்தபின் வீரசுவர்க்கம் புகுதல் ஒருதலையாகலால், நஞ்செயல் அவனுக்குக் கேடாகாது நன்மையேயாய் முடிதலின்; நும்மருட்குணத்துக்கு இழுக்கில்லை என்பான், "துணைவனானை வெறாதவண்ணம் வானாள வானவர்கோன் றன்பதமற்றவன்றனக்கே வழங்குவேனே" என்றான். இது குறிப்பினாலே நீர் அவன்மேல் அருளை வைக்கலாகாது என்னும் பொருளைத் தந்து நின்றது. அது துணைவன் என்றொழியாது, "மேனாணம் முரிமையறக் கவர்ந்த பெருந்" துணைவன், என அடைகொடுத் தோதியவாற்றால் இனிது விளங்கும்,

க௫ பின்னும்வீமன் கிருஷ்ணரை நோக்கிச் சொல்லுவான்:- நமது தமையனார் போரைச் செய்து முடித்தார்; அவ்வாறு போரைச் செய்து முடித்துப், புலம்பாநின்ற சொற்களையுடைய திரௌபதியினது அழகிய குளிர்ந்த முகில்போலுங் கூந்தலை முடிவித்தார்; தம்பிமார் முன்னே சொல்லிய சபதத்தை முடிப்பித்தார்; திவ்வியமாகிய கங்காசலத்தை அணிந்த கடவுளாகிய பரமசிவனறிய நீர் அறிய இகழ்ச்சி இன்றி நிலைநின்று உயருங் கீர்த்தியை முடித்தார்; இவ்வாறு வேறு யாவர் முடித்தார்? நான் இவரோடு பிறத்தலாயிற்றே எ-ம்.

ஈண்டுக் குறிப்பினாலே ஒன்றும் முடித்திலர் என்னும் பொருள் தோன்றுதல் காண்க. முடித்தான் என வந்த முற்றுக்களுள் தன்வினையேயாய் நின்றனவும் பிறவினைவிகுதி தொக்கு நின்றனவும் உய்த்துணர்ந்துகொள்க. பிறப்பதே என்புழி ஏகாரங் கழிவிரக்கம்.

க௬. துரியோதனனோடு மற்றை அரசர்களும் அணிவகுத்து வருகின்ற போர்முனையிலே எதிர்ந்து பொருது, அவர்களுடைய உடல்களையெல்லாம் இவ் விரண்டாகத் துண்டஞ்செய்து பழைய உலகத்தை அரசாளுமாறு துணிவதேயன்றி, இவ்வண்ணந் தாங் கோபமாறி, தருமத்தையுஞ் சுற்றத் தொடர்பையும் இன்னுங்கொண்டாடி, ஒப்பில்லாத தூதை அனுப்பி, அம்மாற்றானை வணங்கி, அவனிடத்தே பூமியை யாசித்துப் பெற்று உண்டு வாழுதற்கே துணிகின்றார்; இங்ஙனமாயின், நம் பெருந் தகைமைகள் அழிந்தனவே என்றான் எ-ம்.



ஏகாரங்கள் முறையே பிரிநிலையுந் தேற்றமுமாம். பட்ட என்புழித் தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாகக் கூறப்பட்டது.

க௭. பரிவினோடு இவ்வசனங்களைச் சொல்லிய வாயுவின் புத்திரனாகிய வீமனைத் தருமர்பார்த்து, மலர்போலுங் கையையமைத்து குருகுலத்தாருட் சிறந்த போரின் வல்ல ஆண்சிங்கமே! குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை; ஒரு வமிசத்திலே உடன் பிறந்தவர்களோடு கூடிவாழும் வாழ்க்கைபோல உறுதிபயப்பது பிறிதொன்றுஉளதோ? பெரிய பூமியைப் பெறுதல் காரணமாக எதிர்ப்பது இருதிறத்தாருக்கும் அவமதிப்பாமன்றோ என்று கூறினார் எ-ம்.

ஓகாரம் எதிர்மறை. அன்றோ என்பது அன்றே என்பதன் பொருளில் வந்தது.

க௮. கீர்த்தியையே பூணுபவராகிய தருமர், பின்னும் அவனை நோக்கி அந்நாளிலே இராசசபையிலே நம்முடைய தம்பிமார்கள், உரிமையினோடு அறியவேண்டுவனவற்றை அறியாமையினாலே சொல்லிய வசனம் கேட்டோருக்கு அவமானமென்று கொள்ளப்படுமோ? தம்மவரல்லாத பிறரால் வரினன்றோ அவமானமென்று கொள்வது; நினைக்கில் அது யாவர்க்கும் ஒவ்வாதோ? ஒருவனுக்குத் தன் கண்ணாகிய மலரிலே தன் கை ஊறு செய்வதாகப் படாதோ? பெரிய நிலங் காரணமாகப் பொருஞ் செய்கையுங் கடையாய்க் கிடந்ததே என்று கூறினார் எ-ம்.

ஓகாரங்கள் எதிர்மறை. ஏகாரங்கள் முறையே தேற்றமும் பிரிநிலையுமாம். உம்மை இழிவுசிறப்பு. உணர்வு-உணரவேண்டுவன.

க௯. பின்னும் வீமன் தருமரை நோக்கிச் சொல்லுவான்:— துளசிமாலையை அணிகின்ற முடியினையுடைய கிருஷ்ணர், தேவர்களோடு முனிவர்களும் நான்கு வேதங்களும் ஆராய்கின்ற திருவடிகள் சிவக்கும்வண்ணம் நாம் நம்முடைய திருநாட்டைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டுத் தூதுபோகவேண்டா; வெற்றியையுடைய அரசரே, வாடுகின்ற மடத்தினையுடைய திரௌபதியின் பிரதிக்ஞையும் என் பிரதிக்ஞையும் தவறாதபடி, தவறுகின்ற மொழிகளையுடைய அத்துரியோதனன்மாட்டு இனி என்னையே தூதாக அனுப்புக எ-ம்.

அவனிடத்துத் தூதனுப்பவேண்டாம்; நீர் அனுமதிசெய்யின், நானே சென்று அவனைக்கொன்று சபதம் முடிப்பேன் என வீமன் கூறினான் என்றபடி.

௨௰. மலையின் வலியைக் கண்டதுபோலக் கோபம் பொருந்திய என்னுடைய கையிலுள்ள தண்டாயுதத்தினது வலிமையைக் கண்டும், இந்திர குமாரனாகிய அருச்சுனனுடைய காண்டீவம் என்னும் வில்லின் வலிமையைக் கண்டும், நகுல சகாதேவர் என்னும் இருவருடைய யுத்தஞ்செய்கின்ற வலிமையைக் கண்டும், கிருஷ்ணர் எம்பக்கல் நின்ற நிலையைக் கண்டும், இத்திரௌபதி விரித்த கூந்தலைக் கண்டும், ஓர் இமைப்பொழுதினுள்ளே பகைவர்களைக் கொலைசெய்து மகிழாமல் அவனுடைய குடையின்கீழ் இருந்து உயிர் வாழும்படி எண்ணுகின்றீரே! எ-ம்.

௨௧. வலிய புயங்களையுடைய வீமனும் கோபித்து மீண்டும் இவ்வசனங்களை எடுத்துச் சொல்ல, முகில்போலுந் திருமேனியையும் பசுமையாகிய பொன்போன்ற நெடிய ஒப்பில்லாத சக்கராயுதத்தையும் உடைய கிருஷ்ணர் அருளினோடு அன்புகூர்ந்து பார்த்து, அழகிய பூமியிலே மூத்த சகோதரர்கள் இராசநீதியை முறைமையாகக் கூறினால், தம்பிமார் அதனைக் கேளாமல் மறுப்பார்களோ? தலைவனே இனிக் கடிய கோபத்தை ஒழிக என்று கூறினார் எ-ம்.

௨௨. மிக்க கருநிறமுடைய மேகவாகனனாகிய தேவேந்திரனுடைய அழகிய குமாரனாகிய அருச்சுனன் வணங்கிநின்று, மூன்று கால நிகழ்ச்சிகளையும் அறியும் கிருஷ்ணருக்கும் தமையனாருக்கும் சொல்லுவான்:-அக்காலத்திலே அவர் செய்த தீங்குகளைப் பொறுத்த பொறையெல்லாம் போதாமல் இன்னும் தருமத்தையே சொல்லிக்கொண்டு இருந்தால், திரௌபதியும் எக்காலத்திலே பகையை முடிப்பித்துக் கூந்தலை முடிக்க இருக்கின்றாள் எ-ம்.

௨௩. தேவர்களாயினும் பழைய அசுரர்களாயினும் வேறும் சொல்லப்படுகின்றார் எவராயினும் எதிர்த்தாருடைய உயிர்களை அழித்தற்கென்றே என் கை அம்பு இருப்பது. மூவராயுள்ளவர்கட்கும் முதல்வராகிய கிருஷ்ணரே. முகில் படிகின்ற கமுகுகளின் மேலே வரான்மீன்கள் பாய்கின்ற வயல்களையுடைய குருநாட்டை இவர் அவனிடத்திலே வேண்டிக்கொள்ளுமாறு என்னை! எ-ர்.

செப்புகின்றார் என்புழிப் படுவிகுதி தொக்கது. வேண்டிக்கோடல் வேண்டா; நானே பொருது வென்று பெறுவேன் என்பது குறிப்பெச்சம். ஆயினும் என்பன விகற்பப்பொருளில் வந்த இடைச்சொல். இங்கே மூவரென்றது விட்டுணுவின் வியூகர்களாகிய சங்கரிடணன், பிரத்தியுமணன், அநி



ருத்தன் என்னுமூவரையுமென்க. இவர்களுக்கும் படைப்பு முதலியவற்றில் அதிகாரப் பொதுமையாற் பிரமா முதலிய பெயரெய்தும். இதனை வாயுசங்கிதையிற் காண்க.

௨௪. அரசர்க்கு அரசரே, பிறரெவருந் தீண்டலாகாத கற்பினையுடைய செழுமையாகிய திரௌபதியை இராசசபையிலே நிறுத்தி வஸ்திரத்தை உரிய, அவள் செய்வதின்னதென் றறியாதவளாய், நெடியவரே, கரியவரே, திருமலரே என்று அழுதவளாகி நின்றுதளர, நாம் அதனைக் கண்டும் இறந்தவர்போலச் சும்மா இருந்த குற்றத்தைத் தீர்க்கவேண்டாமோ? இங்ஙனமின்றி நுங் கருத்தின்படி அவனிடத்தே பூமியை வேண்டிக்கொள்வது மேம்பட்ட நல்ல தருமந்தானோ எ-ம்.

திரு ஆகுபெயர், ஓகாரங்கள் எதிர்மறை. ஏகாரந் தேற்றம்.

௨௫. அழகிய சக்கரப்படையையுடைய கிருஷ்ணர் தூது சென்றாலும், சென்று பொறுமையையுடைய அரசராகிய அண்ணர் சொல்லியவற்றையெல்லாம் அவனுக்குச் சொன்னாலும் அவன் கேட்கமாட்டான். தீய ஊழின் வலிமையினால் உண்டாகிய கெடுதற்குக்காரணமாகிய புத்திமேலிடுகையினாலே அறிதற்பாலனவற்றை அறியும் ஞானக்கண் தோன்றமாட்டாதன்றே; உவர் நிலத்திலே எக்காலமும் நெல்முளைகளை விதைத்தாலும் விளைவு சேராது; (நச்சுப்) பற்களையுடைய நாகத்திற்கு அமிர்தத்தைக் கொடுத்தாலும் நஞ்சையன்றிப் பயனைக் கொடுக்கமாட்டாது எ-ம்.

௨௬. அருச்சுனன் இவ்வசனங்களைச் சொல்லிக் கிருஷ்ணர் எவியருள இருந்ததன்பின்பு, கோபங்கொண்ட வேற்படையையுடைய நகுலன் அன்பினோடுங் கிருஷ்ணருடைய இரண்டு பாதங்களையும் வணங்கி, தருமரையும் வணங்கிக் கூறுவான்:—வலிமையையுடைய பஞ்சபாண்டவர்களும் முன்னர் இழந்த நெடிய எழு கடல்களாலுஞ் சூழப்பட்ட பூமியைப் பெற்றுக்கொள்வார்கள் என்னும் நிகழ்ச்சி பொய்யோ? இராசதரும நூலிலே ஆண்மை என்னும் ஆற்றல் விசேடித்துக் கூறப்படாதோ? வெற்றியையுடைய அரசரே நீர் சொல்லுக எ-ம்.

[மூலபாடத்தில் "நீத்தனெடுங்கட" லென விருப்பதை "நீத்தநெடுங்கட" லெனத் திருத்திக்கொள்க]

உஎ. தனிமையிற்றீர்ந்த வலிய பகை உள்ளத்தேகிடத்தலால், முன்னே கிளர்ந்த மழையைத் தடுத்தற்குக் கோவர்த்தனம் என்னும் மலையொன்றை ஏந்திய கிருஷ்ணர் போய்ச் சொன்னாலும், அத்துரியோதனன் குருநாட்டையும் இராச்சியத்தையும் கொடுக்கமாட்டான்; ஆதலால் நாவலந்தீவாகிய இப்பூமியிலுள்ள அரசர்கள் நாட்டை இரந்தோம் என்றதனால் எங்களை நகையாதபடி, (போர் செய்யப் புகுந்தால்) அவ்வரசனுடைய படைவலிமையையும் எங்கள் பெரிய படைவலிமையையும் பார்க்கலாமே எ-ம்.

உஅ. முன்னாளிலே அன்ன நடைபோலும் நடையினையுடைய உருப்பசி என்னும் அரம்பையை அசுரர்கள் கவர்ந்துகொள்ள, தேவேந்திரனுக்காக அவர்களோடு பொருது சிறைமீட்டவன் எங்கள் வமிசத்து முதல்வனாகிய புரூரவா என்பவனன்றோ? இங்ஙனமாக இராசசபையிலே நாம் பார்த்திருக்கத் திரௌபதியின் வஸ்திரத்தை உரிவித்த வலியவனிடத்திலே இன்னும் நிலத்தை யாசித்து அவனுடைய குடையின் கீழே இருந்தால், உலகம் நம்மை யாது கூறாதா?

வலியோன் என்றது குறிப்பினால் வலியிலன் என்னும் பொருளைத்தந்து நின்றது. புரூரவா என்பவன் உருப்பசியின் சிறைமீட்டமையைச் சம்பவச் சருக்கத்துக் காண்க.

உகூ. பூமியைப் பரிபாலிக்கும் அரசே, அத்துரியோதனன் நம்முடைய சகோதரர்கள் காட்டின்கட் போயிருந்து கடவனவாகிய பன்னிரண்டு வருஷம் என்னும் நாட்களையும் கழித்ததன்பின்பு காட்டை நீங்கி நாட்டிலே ஒருவருஷம் மறைந்திருந்து குற்றமில்லாதபடி வந்தார்கள் என்று சிறிதும் இரங்கானாயின், தன் வாக்கின்படியே பெரிய நகரையும் வளத்தினையுடைய நாட்டையும் உரிமையையும் தாரானாயின், இவ்வாறு செயற்பாலனவற்றைத் தானே அறியாதவன் பிறர்போய் அறிவித்தால் அறிவானோ? எ-ம்.

நெறியென்பது ஈண்டு எழனுருபெனக்கொள்க. ஓகாரங்கள் எதிர்மறை.

கூ0. நகுலன் இவற்றைச் சொல்லியதன் பின்பு கிருஷ்ணர் நல்லது என்று கையமைத்தருளி சகாதேவனை நோக்கி, நகுலனுடைய சொல்லும், வலிமையையுடைய அருச்சுனனது சொல்லும் வலிமையை யுடைய வீமன் சொல்லிய சொல்லும் ஆகிய எல்லாவற்றையுங் கேட்டோம்; சொல்லுதற்கரிய அறிவினையுடையாய், கீர்த்தியையுடையாய், வலிமையையுடையாய், நீ உன் கருத்தைச் சொல்லு என்று கேட்க, அவன் முகில்போன்ற திருமேனியையுடைய கிருஷ்ணருக்கு மனம் உருகுமாறு சொல்லுகின்றான்.



திரிகால உணர்வுடையோனாதலின் சகாதேவனைப் புகலரிய உணர்வுடையோயென விளித்தார்.

கூக. ஓ! ஆதிக்கடவுளே, எண்ணியபடி நீர் தூதுபோனாலென், போகாதொழிந்தாலென், நெருங்கிய நூறு புத்திரருண் மூத்தவனாகிய துரியோதனன் நிலத்தைக் கொடுத்தாலென், கொடாதிருந்தாலென், இத்திரௌபதியும் பூங்கொத்துப்பொருந்திய கூந்தலை முடித்தாலென், முடியாது விடுத்தாலென், நீர் செய்ய எண்ணியவை இறுதியில் முடியும் வகை அடியேனுக்குத் தெரியும் எ—ம்.

கூஉ. நறுமணத்தை விரிக்கும் பசிய துளசிமாலையை யணிந்த முடியினை யுடையவரே, அந்நாளிலே கஞ்சன் அனுப்பிய பூதனை என்னும் பேயினுடைய முலைப்பாலையும் உயிரையும் உண்டு, மருதமரங்களினிடையே புகுந்து, உயர்ந்த பண்டி விழும்படி உதைத்து, இடையர் வீட்டில் வளர்ந்த கிருஷ்ணரே, இங்கே உம்முடைய மாயை ஒருவருக்குந் தெரியாது; யான் உண்மையாக அறிவேன்; உம்முடைய திருவுள்ளத்துக் கருத்து யாதோ அதுவே எனக்குங் கருத்தாம் என்று தெய்வம் போன்ற சகாதேவன் சொன்னான் எ-ம்.

செயற்பாலது இன்னதென்று நீர் உம்முள்ளே நிச்சயித்துக்கொண்டு அதனை வெளிப்படுத்தாது, எம்மைப் பரீட்சிக்கின்றீர் என்பான், 'ஒருவருக்குந் தெரியாதிங்குன்மாயை' என்றான். குபேரனுடைய புத்திரராகிய நளகூபன், மணிக்கிரீவன் என்னும் இருவரும் நாரதமுனிவருடைய சாபத்தினாலே மருதுகளாய் நின்றவர்கள்; இவர் அவற்றினிடையே தவழ்ந்து சென்றபொழுது சாபம் நீங்க அவர்கள் பழையவடிவம் பெற்றார் என உணர்க. கிருஷ்ணர் தொட்டிலிற் கிடக்கும்போது அவரைக் கொல்லும்படி பண்டிவடிவங்கொடு வந்த சகடாசுரனை உதைத்துத் துகள்படச்செய்தனரென்க.

கூங. இப்படியே சகாதேவன் சொல்லக் கிருஷ்ணர் சிரித்தருளி, வலியவராகிய மற்றையோர் சொன்ன அந்தப் பிரகாரஞ் சொல்லாமல், இவன் எனது உபாயத்தை வெளிவிட்டான் என்றெண்ணி, அவனுடனே அங்குள்ள நிறங்களையுடைய மணிகளான் அமைக்கப்பட்ட ஒரு சாலையின்கட் சேர்ந்து, அவனை நோக்கி நீ பாரத யுத்தத்தைச் செய்யாதபடி உய்யும் வகைக்காகிய உபாயஞ் சொல்லுக என்று கேட்க, வலிமை பொருந்திய வேலையுடைய சகாதேவன் சொல்லுவான் எ—ம்.

திரிகாலவுணர்ச்சி உடையவனாகிய சகாதேவன் உண்மையைத் தன் சகோதரர் சமுகத்தில் வெளியிடின் விபரீதமுண்டாமெனவஞ்சி, "அம்பலத்திற் பொதியவிழ்த்தலாகா" என்ற பிரகாரம் கண்ணபிரான் அவனைப் பிரத்தியேகமான இடத்திற்கு அழைத்துச் சென்றாரென்க.

கச. முகிலின் வண்ணமுடையவரே, நீர் பாரதயுத்தத்திலே (துட்டர்கள்) எல்லாரையும் பொடிபடுத்திப் பூமியின் பாரத்தைத் தீர்க்க விரும்பினீர்; கோபாலரே! போரின் ஆண்சிங்கமே! கோவிந்தரே! பெரிய பாரதயுத்தத்தை நீக்க நீரன்றி வேறு யாவர் வல்லார்?

முயன்ற நீரே மாற்றுவதல்லது பிறர் மாற்றுதல் இயலாதென்பது இதன்றாற்பரியம். அகலல் விரிதலுமாம்; ஆகவே பாரதயுத்தத்தை விரிக்க நீரே வல்லீர் என்னும் பொருளுந் தோன்றுதலுங் காண்க.

கரு. கன்னன் பூமியை ஆள, நான் அவனுக்குப் பகையாகிய அருச்சுனனை முன்னர்க் கொன்று திரௌபதியினுடைய கருமையார்ந்த கூந்தலைக் களைந்து, நும்மையும் நேராகக் கைகளாற் பிடித்து, நும் பாதங்களில் விலங்குபூட்டிக் கட்டுவேனாயின் பெரிய பாரத யுத்தம் வாராமற் காக்கலாம் என்று கூறினான் எ-ம்.

கசு. கிருஷ்ணர் (அவனை நோக்கி) நீ முன்னர்க் கூறியவற்றையெல்லாம் முடித்தாலும் நீ என்னைக் கட்டுமாறு எங்ஙனம்? என்று கேட்க, அவன் நும்பெருமையை நீர்தாமும் அறியீர்! ஆனால் நீர் உம்முடைய வடிவத்தைக் காட்ட யான் கட்டுவேன் என்றான் எ-ம்.

கஎ. கிருஷ்ணருந் தம்மேலன்புள்ள அச்சகாதேவனுடைய மனக்கருத்தை அறியும்பொருட்டுக் கட்டுக என்று சொல்லி, பதினாறாயிரம் வடிவங்கொண்டார்; சுத்தனாகிய அவனும் மூலவடிவை ஞானத்தினாலே அறிந்து எவ்வுலகங்களிலுந் தாவிய இரண்டு பாதங்களையுந் தன் அன்பாகிய பாசத்தினாலே கட்டினான் எ-ம்.

பதினாறாயிரம் என்பது ஈண்டு அத்தொகை குறியாது பன்மைகுறித்து நின்றது. "எவ்வுலகுந்தாயவடியிணை" யென்றது, வாமன ரூபங்கொண்ட காலத்து எல்லாவுலகங்களையும் அளந்த அடிகளை.

கஅ. அந்தணர்களும் பொன் மலர்களையுடைய சோலையின் நீழலில் இருக்கும் பெரிய தேவர்களுந் தேடிக் காணா மலர்போலுந் திருவடிகளையுடைய கிருஷ்ணர்தம்மை யறிந்து "நீரே தேவர்"



என்று மனத்தினாலே கட்டின சகாதேவன் கண்களிகூரத் தாமேயாகி அவன் முன்னர் நின்றார் எ.ம்.

தம்முடைய உண்மைவடிவங்காட்டி நின்றார் என்பார் 'தானேயாய் முன்னின்றான்' என்றார். ஏகாரம் பிரிநிலை. உம்மைகள் எண்ணின்கணின்ற சிறப்பும்மைகள்.

ககூ. என்னை அறிந்து இப்பொழுது அன்பினாற் பிணித்தமை நல்லது; இனி, என்னுடைய பாதத்தை விடுக, என்று கிருஷ்ணர் சொல்ல, அவன் அவரை நோக்கி, நெடிய கிருஷ்ணரே, நீர் வலிய பாரத யுத்தத்திலே, தஞ்சமென்று வந்து உம்மையடைந்த ஐவராகிய எங்களையும் உம்முடைய திருநோக்கத்தினாலே காத்தருளவேண்டும்.

ஈண்டுக் கூறியவாற்றானும் யுத்தஞ் செய்வதே சகாதேவனுடைய கருத்தென்பது இனிது துணியப்படும்.

சo. என்றிவ்வாறு பலமுறை கூறி வணங்கித் தம்முடைய இரு பாதாரவிந்தங்களிலும் பொருந்திய ஒளியார்ந்த முடியையுடையவனாகிய அச்சகாதேவனுக்குக் கிருஷ்ணர் அப்படியேயாகுக என்று சொல்லியருளி, இன்றைக்கு இவ்விடத்திலே நாங்களிருவேமும் இப்போது பேசின ஒரு வசனத்தையும் பிறரறியச் சொல்லாதொழிக என்று கூறினார் எ-ம்.

ஓம் என்பது உடன்பாட்டை உணர்த்தும் வடமொழி அவ்வியயம். உம்மை முற்றும்மை.

சக. ஞானமுடையவர்களாகிய கிருஷ்ணரும் சகாதேவனுமாகிய இருவரும் தாமிருந்த சபையை விட்டகன்று பாண்டவர்களின் முன்னர்ச் சென்று நீண்ட கரிய கூந்தல் சோர நின்றவளாகிய குற்றமில்லாத புகழையுடைய திரௌபதியின் முகத்தை (அவ்விருவருட்) கண்ணபிரான் நோக்கி, இப்பொழுது பஞ்சபாண்டவருள் இளையவனாகிய சகாதேவனும் தூதுசெல்வதே நன்றெனக் கூறினன் எ-ம்.

சஉ. தருமபுத்திரருக்கும் இதுவே கருத்தாகும். பெரிய பூமி காரணமாகச் சுற்றத்தாரோடு யுத்தஞ்செய்யாமல் கூடிவாழ்தலே எனக்கும் கருத்தாகும் என்று சொன்னார்; மின்போன்ற இடையையுடையவளாகிய திரௌபதி (அதுகேட்டு) செவ்வரி பரந்த மலர் போன்ற கண்கள் நீர் சிந்த, புஷ்பங்களை மறந்த கூந்தல் சோர, வாசனை பொருந்திய தாமரைப் பூப் போன்ற செம்மையாகிய பாதங்களின் கீழே வீழ்ந்து புலம்பினாள் எ-ம்.

௪௩. கிருஷ்ணரை நோக்கித் திரௌபதி கூறுகின்றாள்:—இரணியனானவன் தன்னுடைய புத்திரனாகிய பிரகலாதனனை மிகக் கோபித்த காலத்தில் அவ்விரணியன் அறைந்த சற்றாணிலே நரசிங்க ரூபத்தோடு வந்தீர்! முதலையினாற் பிடிபட்டு ஆதிமூலம் என்னும் பெயரிட்டு அழைத்த மும்மதங்களையுடைய பெரியயானைக்குமுன்னே நீலகிரிபோல வெளிப்பட்டு நின்றருளிய நெடிய கிருஷ்ணரே! எ-ம்.

தவவலிமையால் மூவுலகங்களையும் ஆண்ட இரணியனென்னும் அசுரன் தானே பரப்பிரமமென்றும் எக்கருமத்தையும் ஆரம்பிக்குங்கால், 'ஹரி ஓம்நம' எனக் கூறுவதை யொழித்து, 'இரணியாய' என உலகினர் கூறல்வேண்டு மென்றும் பணித்தான். அங்ஙனம் நிகழ்ந்துவருங் காலத்தில் அவ்வசுரனது புதல்வனாகிய பிரகலாதனன் வித்தியாரம்பத்தில் ஆசிரியன் சொற்படி 'இரணிய நம' வென்னாது, 'ஹரி ஓம் நம' எனக் கூற, அதனை யுணர்ந்த அவன் றந்தை அடங்காச் சினமுற்றுத் தன் புதல்வனுக்குச் சித்திரவதை இழைக்கவும் அவன் அதனைப் பொருட்படுத்தாது ஹரி நாமத்தையே கூறினன். இரணியன் தன் புதல்வனை நோக்கி "ஏடா, நீ இடைவிடாது உச்சரிக்கும் ஹரி யாண்டுளன்" என வினவலும், "அவர் தூணிலுமிருப்பர் துரும்பிலுமிருப்பர்" என மகன் விடையிறுக்க, தந்தை தன் முன்னிலையிலுள்ள ஒரு தூணைக் காட்டி "இத்தூணிலு மிருப்பனோ" வென்ன, மகன் "ஓம்" என்ன, உடனே அசுரன் அத்தூணின்மீது ஓர் தண்டுகொண்டு புடைக்க, அத்தூணினின்றும் நரசிங்கமூர்த்தி தோன்றி இரணியனைக் கொன்றன ரென்பது சரித்திரம். இதன் விரிவைக் கம்பராமாயணம் இரணியன் வதைப்படலத்திற் காண்க,

கயேந்திராழ்வான் என்னும் யானை தடாகத்தில் நீர் பருகச் சென்றவிடத்து அதனை முதலையொன்று பற்றுதலும் யானை "ஆதி மூலமே" என்றோலமிட்டழைக்கத் திருமால் பிரசன்னராகி யானையின் இடரைத் தீர்த்தனரென்பது சரித்திரம்.

௪௪. குருடனாகிய திருதராட்டிரனாற் பெறப்பட்ட துச்சாதனன் என்னைத் திரளாகிய கூந்தலிற் பிடித்து வேத்தவையிற் கொண்டுபோய் விட்டு வஸ்திரத்தைப் பற்றி உரியப் பாண்டவர்களும் பார்த்துக்கொண்டிருந்தார்கள்; வெற்றியாகிய ஒப்பில்லாத சக்கரப் படையையுடைய கோவிந்தரே! நீரல்லாமல் அன்றைக்கும் என்னுடைய மானத்தை வேறு யாவர் காத்தார்? எ-ம்.

நீரே காத்தீராதலின் இன்னும் நீரே காப்பதன்றிப் பிறராற் காத்தல் இயலாது என்பது குறிப்பெச்சம். உம்மைகள் முறையே சிறம்பும் எச்சமுமாம்.

௪௫. வலிமையையுடைய வீரர்களாகிய இப்பாண்டவர்கள், அன்றைக்கு நம்மையெல்லாம் அழைப்பித்து வேத்தவையிலே எனக்கும் அவமானமாகிய குற்றத்தைத் தந்த துரியோதனனிடத்திலே



சென்று தமக்கு ஐந்தூர்களைப்பெற்று இருந்தால், எம்பெருமானே! வலிய தீவினையை யுடையேன் விரித்த கருமையாகிய கூந்தலை இனி எப்பொழுது முடிப்பது? என்று சொல்லி அழுதாள் எ-ம்.

௪௬. பின்பு சாத்தகி அவர்களை நோக்கிச் சொல்வான்;—இந்த வீமனுடைய கையிலே தண்டாயுதம் இருந்தது; அந்த அருச்சுனனுடைய கையிலே வில் இருந்தது; இத்திரௌபதி தன்னுடைய வண்டுகள் தங்கிய பூவை அணிதற்குரிய கூந்தலின் மேலே குற்றம் இருந்தது என்று சொல்லி இருந்தாள்; இவ்வாறுதலைப் பார்த்திருந்த நீவிரெல்லீரும் பகைவரிடத்தே ஊரை யாசித்து ஆண்டு இருந்து புசித்துச் சீவித்தற்கே புத்தி கூறுகின்றீர்; அற்றன்றி அவர்களைக் கொன்று வஞ்சினமுடித்து வாழ்தற்குப் புத்திகூறுகின்றிலீர்களே!

ஏகாரங்கள் முறையே பிரிநிலையும் இரக்கமுமாம். ஊர்வேண்டி யுண்டிருந்து வாழ்வதற்கே என ஏகாரத்தாற் பிரிக்கப்பட்டது. அவரைக் கொன்று வஞ்சின முடித்தலேயாகலின் உரையீரே என்பதற்கு இவ்வாறு வருவித்துப் பொருளுரைக்கப் பட்டது.

௪௭. உக்கிரமாகிய முகிலின் இடியேற்றைப் போன்ற சராசந்த ராசனுக்குப் பயந்து வண்மையாகிய துவாரகையே அரணாக(க் கொண்டு) வடமதுரையைக்கைவிட்ட திண்மையாகிய வலிமையையுடைய கிருஷ்ணரது புத்தியோ? முன்னரே அப்பகைவருடைய கருத்தை அறிந்திருந்தும் அவரிடத்துச் சென்று பூமியை யாசிப்பது யாது புத்தி? எ-ம்.

ஓகாரங்கள் வினா. திண்டிறல் என்பது குறிப்பினாலே திறலற்ற என்னும் பொருளைத் தந்தது.

௪௮. சாத்தகி என்பான் நின்று இவற்றைச் சொல்ல, சடையாகிய கூந்தலையுடைய திரௌபதியானவள் அழுது புலம்ப, அருளைப் பொழியுந் தாமரைமலர்போலுங் கண்களையுடைய நெடிய கிருஷ்ணரும் தருமர் முதலாகிய குலராசர்கள் ஐவரையும் நோக்கியருளி, தம்மைத் துதிக்கின்ற அரிய பெரிய கற்பினையுடைய இளையவளுக்கு இவற்றைச் சொல்லுவார் எ-ம்.

௪௯. பெண்ணே, பழைய ஆண்மையையுடைய பாண்டவர் பொருட்டுத் தூதுசென்று மீண்டபின் உன் பசிய கூந்தலை நானே முடிக்கின்றேன்; இனி எல்லாருங் காண விரிப்பது எண்ணுதற்கரிய பகைவர்களுடைய அந்தப்புரத்துப் பெண்களின் பூவை முடித்த கூந்தலே எ-ம்.

பஞ்சபாண்டவர் பகைவருடன் சமர்புரிந்து அவர்களைக் கொன்று நின் சபதத்தையும் கூந்தலையும் முடிக்காதொழியின், பகைவருடைய தேவிமார் அமங்கலைகளாய் விரித்த கூந்தலுடன் நின்று புலம்பும்படி யானே அப்பகைவரைக் கொல்வேனென்பார், 'எல்லாருங் காண இனி விரிப்பது.........அந்தப்புரமாதர் பூங்குழலே' என்றார். அந்தப்புரம் - பெண்கள் வசிக்குமிடம்,

௫௦. கரிய கூந்தலையுடைய திரௌபதியே கேள், பகைவர்களுடைய உடம்புகளாகிய வயல்களிலே புகுந்து உழுதற்கு ஆகின்ற போரில் வலிய கொழுவாகிய வாட்படையையுடைய அபிமன்னனுனவன், எமையெல்லாம் ஒருசேர உழலச் செய்கின்ற கொடுங்கோன்மையையுடைய பழைய அரசர் குலத்தையும் உன்னுடைய இக்கூந்தலையும் ஒருங்கே முடியாது விடமாட்டான் என்றார் எ - ம்.

அபிமன்னன் அர்ச்சுனனுக்குச் சுபத்திரையிடத்தே பிறந்த புதல்வன். முடித்தல் - அழித்தலுங் கட்டுவித்தலுமாம். உழலும் என்பதில் பிறவினை விகுதி தொக்கது.

௫௧. நூல்களிற் சொல்லப்படுகின்ற பிருதுவி அப்புத் தேயு வாயு ஆகாயம் என்னும் பஞ்சபூதவடிவமாகிய பெரிய கிருஷ்ணர், பெண்ணியல்பிற் குறையாத பெரிய திரௌபதியினது செந்தாமரை மலர்போலுங் கண்களினின்று சொரியும் நீரைத் துடைத்து, தம்முடைய இரண்டு கண்களினும் உள்ள அருளென்னுந் தெளிவாகிய நீரினாலே மகிழ்ச்சிபொருந்தத் தேற்றினார் எ-ம்.

திருவருளாலேக்கால் அவள் துயர் தீர்த்தார் என்பதாம். பெண்ணீர்மை என்றது, நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்னுமிவற்றை.

௫௨. தருமர் அவரை நோக்கிச் சொல்லுகின்றார்: தீராத வியாதியுடையவர்கள், துறந்தவர்கள், அடக்கம் இல்லாதவர்கள், மிகுந்த கோபம் பொருந்திய மனமுடையவர்கள், படியாதவர்கள், சிறுவர்கள் நீதியைச் சிறிதும் அறியாதவர்கள், பெண்கள் என்னும் இவர்கள் எப்போதும் மந்திரசபையில் எய்துதற்குத் தகுதியைப் பெறுதவர்கள் எ-ம்.

௫௩. இவ்வாறே தருமர் சொல்லி, அங்கு இருந்தவர்களாகிய வீமன் முதலியவர்களுடைய மொழிகளை விலக்கி, கிருஷ்ணரை நோக்கி, நும்மோடு ஒப்பவர் யாருமில்லாதீர், நீர் சென்றருளும் என்று சொல்ல, கிருஷ்ணரும் துரியோதனனிடத்திலே தூதாகி மேருமலைபோன்ற குதிரைகள் பூட்டிய தேரின்மேல் ஏறினார் எ-ம்.



மேலைச் செய்யுளிற் கூறியவாற்றால் அவருரை கொள்ளலாகாதென்று விலக்கப்பட்டமையின், 'இருந்தோருரை தவிர்த்து' என்றார். பொன்னுற்ற நேமிப் பொருதேர் என முடிக்க.

௫௪. சங்குகளும், அழகிய முரசுகளும் திமிலைகளும், காளங்களும் எவ்விடத்தும் முழங்க, அழகினையுடைய வெண்மையாகிய குடைகள் நிழல்செய்ய, விளருகின்ற சாமரங்கள் பக்கங்களிலே அசைய, அளவில்லாத சதுரங்கசேனைகளும் அரசர்களும் தம்மைச் சூழ எ-ம்.

இவ்வெச்சங்கள் வருஞ் செய்யுளிற் 'சென்றருளி' என்பதனோடு இயையும்.

௫௫. கற்களைக்கொள்ளும் கடிய பாலைவனங்களினும், முல்லை நிலத்து யாறுகளினும், நல்ல மலைகளினும், நீர் சூழ்ந்த மருதநாடுகளினும், இரண்டு தினங்களிற் சென்றருளி, பழைய மலைபோலுங் கோபுரங்களும், நீண்ட மதில்களுஞ் சூழ்ந்து விளங்குகின்ற மல்லில் வலிய மலைபோலும் புயங்களையுடைய துரியோதனனது மாட்சிமை பொருந்தியபெரிய நகரத்தைக் கண்டார் எ - ம்.

மல்வரையதோளான் என்பதனை முன்னர்க் கொண்டு கூட்டிக் கிருஷ்ணர் எனப் பொருளுரைத்தலும் ஒன்று. இவ்விரண்டு செய்யுளும் குளகம்.

௫௬. தாவுகின்ற வேகமான குதிரை பூட்டிய தேரையுடைய கிருஷ்ணருக்கு எதிரேநின்றபசிய இளைய கமுகுகளானவை, பொருந்திய செம்மையாகிய பவளக்கூட்டங்களையும், பெரிய மரகதவகைகளையும் கோவையாகிய வெள்ளிய கிரணங்களையுடைய முத்துக்களையும் நிரைநிரையாகக் குயிற்றி அவரை உபசரித்தற்பொருட்டுச் செய்யப்பட்ட பந்தர்கள்போலத் தோன்றின எ-ம்.

பழுத்த குலைகள் பவளம்போலவும், பச்சைக்குலைகள் மரகதம்போலவும், பாளைகள் முத்துப்போலவும், மரங்கள் கால்போலவும், இலைச்செறிவு விதானம்போலவும் விளங்கின வென்பதாம்.

௫௭. தேவர்களுக்கு நாயகராகிய கிருஷ்ணர் வருதலைக்கண்டு, சோலைகளிலே நறுமணம் பொருந்திய அகில்களுஞ் சந்தனங்களும் பலாக்களும் மாதுரங்களுஞ் சண்பகங்களும் பச்சிலைமரங்களும் ஆகிய

இவைகள் பல திசைகடோறும் விளங்க, வண்டுகள் மனமகிழ்ச்சி மிகுந்து பாடின; மயில்கள் நின்று விளையாடின எ-ம்.

"ஐயுங்கண் ணு மல்லாப் பொருள்வயின் மெய்யுருபு தொகாவிறுதியான" என்பது சூத்திரமாகலின் "சோலை" என்பதில் ஏழாமுருபு தொக்கது. மாகந்தம் - மாமரம்:

௫௮. நறுமணம் மிகுந்த செந்தாமரைப் பூக்களோடு சிறந்த சமுத்திரம் போலும் பெரிய ஜலத்தையும் கொள்வனவாகிய பொய்கைகள், அழகைக்கொண்ட அத்தினபுரி யென்னும் பெண் இலக்குமிக்கு நாயகராகிய கிருஷ்ணருக்கு எதிரே காட்டுகின்ற ஆலாத்தியைப் போல்வன எ-ம்

நீர்ப்பரப்புத் தட்டையும் மலர் தீபத்தையும் ஒத்தன என்பது தாற்பரியம். மிகுத்த வலித்தல் விகாரம்.

௫௯. அங்ஙனந் தூதுசென்ற கிருஷ்ணர் முன்னே பன்றி வடிவினராகிக் கடல் சூழ்ந்த பூமியைக் கிழித்த நாளிலே அத் துவாரத்தின் வழியாக எழுந்துவந்து பாந்த பாதாளகங்கை, அந்த விரிந்த மதிலைச் சூழ்ந்து கிடந்ததாம் என்று கண்டோர் சொல்லும் வண்ணம் தாழ்ந்த நீரையுடைய அகழியானது விளங்கியது எ-ம்.

கோலம் - பன்றி. கோலமாய் ………… ஞாலமிடந்த நாள் என்றது திருமால் பன்றிவடிவுகொண்டு சிவபிரானுடைய திருவடியைத் தேடிச் சென்றகாலம்.

௬௦. ஆண்டுள்ள மதிலின் கீழ்நிலத்திலே இடியேறு பொருந்திய முகில்களெல்லாம் படிவன; அதின் முடிநிலத்துக்கு நக்ஷத்திர பதத்தினும் முடிவில்லை; நெடிய சக்கரவாளகிரியும் ஒப்பில்லாத இதற்குச் செய்யப்பட்ட ஒருபடியளவினதேயாகும் என்று கண்டோர் கூறும்படி அம்மதில் உயர்ந்துள்ளது எ-ம்.

௬௧. ஆண்டுக் கட்டிய நெடிய கொடிப் புடைவைகளானவை, கடுமையாகிய சூரியன் பகற்காலத்தினுந் தன் கிரணங்களைப் பரப்பா வண்ணம் மாறுகொண்டு எவ்விடத்தினுங் காற்றை வீசிப் பொருதலினாலே, புண்ணிய தீர்த்தமென்று புகழ்ந்து கூறப்படுகின்ற ஆகாய கங்கையின் திரைபோல அகன்ற ஆகாயத்தின்கண்ணே நெருங்குவன.

வெண்ணிற முடையனவாகிய அக்கொடிகள் வெய்யிலை மறைத்து விளங்குவன என்பது தாற்பரியம்.



௬௨. நாகலோகமோ, இந்திரனுக்காக அமைக்கப்பட்ட பொன்னுலகமோ, விளங்காநின்ற செல்வம் மிகுந்த அழகாபுரியோ இவைகளுக்கு நிகராகும் என்று கூறப்படுந் தரத்தினை யுடையனவாகிய ஆண்டுள்ள மாடங்கள், மலையினின்றும் எழுந்து இயங்குகின்ற கருமையாகிய முகில்களைப்போல விளங்காநின்ற நறுமணம் பொருந்திய கருமையாகிய அகிற்புகையைக் காலுவன எ-ம்.

எழுவன என்னும் வினைமுற்று வினையெச்சமாக்கிப் பொருளுரைக்கப்பட்டது. மாடங்கள், மலையினின்றெழும் முகிலைப்போலப் புகையைக் காலுவன என்பதாம்.

௬௩. ஆண்டுள்ள வீதிகளெல்லாவற்றினும் அரசர்களுடைய யானைகளுஞ் சேனைகளும் எதிரெதிராக மயங்குதலினாலே பின்னும் முன்னும் எப்பக்கத்தினும் விலகிச் செல்லுமிடத்தைப் பெறாமல் நெருங்கி நின்றவர்கள் செல்மின் செல்மின் என்று கூறும் ஒலிகளே உள்ளன எ-ம்.

வேழம் முன்னர் வியந்து கூறப்பட்டமையின் சேனை என்றது இரத துரக பதாதிகளையே என்க. உம்மைகள் எண். ஏகாரம் பிரிநிலை. "இசைநிறை யசைநிலை பொருளொடு புணர்த லென்றவை மூன்றென்ப வொருசொல்லடுக்கே" என்பது சூத்திரமாகலின், ஈண்டு ஒருதொழில் பலகாலனிகழ்தலாகிய பொருளோடு புணர்தலில் அடுக்காயின. பிறவுமன்ன.

௬௪. மலைகளெல்லாவற்றினும் பல காடுகளெல்லாவற்றினுங் கடல்களெல்லாவற்றினும் அவை சூழ்ந்த நிலங்களெல்லாவற்றினும் உண்டாகின்ற முறையே மாணிக்கம் முதலியனவும் சந்தனம் முதலியனவும் சங்கு முதலியனவும் செந்நெல் முதலியனவுமாகிய திரவியங்களெல்லாவற்றையுந் தனித்தனியே குவித்த குப்பை நிரைகளையெல்லாங் கொள்ளுகின்ற கடைவீதிகளின் இயல்பை, புலவர்கள் மிக அரிய சொற்களையெல்லாந் தொடுத்துக் கூறினும், அவை தம்மையே ஒன்றுக்கொன்று உவமானமாகச் சொல்லுவதன்றி வேறு சொல்லத்தக்க உவமானம் உள்ளதோ? (இல்லை) எ-ம்.

எல்லாம் எனற்பாலனவற்றை எலாம் என்றது தொகுத்தல். ஓகாரம் எதிர்மறை. உம்மை சிறப்பு.

௬௫. ஆண்டுள்ள வீரர்களுடைய விதங்கள், காடுகளிற் பொருந்திய புட்பங்களினும் பலவாயுள்ளன; குதிரைகளின் பந்திகள் கடற்கரையிலுள்ள வெண்மையாகிய மணல்களினும் பலவாயுள்ளன;

யானைகளின் கூட்டங்கள் இராத்திரியில் ஆகாயத்திலே தோன்றுகின்ற நட்சத்திரங்களினும் பலவாயுள்ளன; தேர் நிரைகளின் நிலைகள் ஒழுங்கு பொருந்திய மழைத்துளிகளினும் பலவாயுள்ளன எ-ம்.

௬௬. ஒரு பக்கத்திலே குற்றமில்லாத வேதங்களை யறிந்த வேதியர்களுடைய கோயில்கள்; ஒரு பக்கத்திலே குற்றமற்ற முடிகளை யணிந்த அரசர்களுடைய மாளிகைகள்; ஒரு பக்கத்திலே குற்றம் பொருந்தாத புத்தியையுடைய அமைச்சர்களுடைய காவல் பொருந்திய வீடுகள்; ஒரு பக்கத்திலே சொல்லமுடியாத செல்வத்தையுடைய வைசியர்களுடைய பெரிய இடங்கள் எ-ம்.

ஒவ்வொரு வாக்கியத்தினும் **உள்ளன என்னும்** பயனிலையை வருவித்துக் கொள்க.

௬௭. மங்கல கருமங்கள் விளங்காநின்ற வீடுகளெல்லாவற்றினும் வலம்புரிச் சங்குகளின் ஓசைகள், சந்திரனை அளாவிய நெடிய மேல்வீட்டு நிலங்களெல்லாவற்றினும் பெண்களணிந்த செழுமையாகிய சிலம்புகளின் ஓசைகள், பெரிய நகரத்தின் அழகிய இடங்களெல்லாவற்றினும் மூவகை முரசுகளும் முழங்குகின்ற ஓசைகள், எங்குமுள்ள தேவர்களின் கோயில்கடோறும் நாநாவித வாத்தியங்களின் ஓசைகள் எ-ம்.

**ஈண்டும்** பயனிலை முன்போலக் கொள்க. மங்கலம் ஆகுபெயர். **மும்முரசுகளாவன: மங்கலமுரசு,** வெற்றிமுரசு, கொடைமுரசு என்பன.

௬௮. குருகுலராசனாகிய துரியோதனனுடைய கோயிலானது, முற்றங்களிலே நிற்க இடம்பெறாத அளவிறந்த அரசர்களுடைய பெரிய கிரீடங்கள் ஒன்றோடொன்று எற்றுண்டு விளங்குகின்ற பொறிகளை மேலே எறிய, அவைகள் சிதறித் திசைகடோறுஞ் சென்று சென்று பொருந்துதலால், செம்மையாகிய பொன்மலையென்று சொல்லும்படி விளங்கியது எ-ம்.

நிற்க என்பது நின்று எனவும், எற்ற என்பது எற்றி எனவும் திரிந்து நின்றன. பொறி பொற்றுகள். உறு என்பது முதனிலைத் தொழிற்பெயர். மூன்றனுருபு தொக நின்றது.

௬௯. சூரியனை ஒத்த நல்ல ஒளி பொருந்திய அழகிய இரத்தினங்களாலாகிய முடிகளையுடைய மலைகள்போலும் வண்மையாகிய கோபுரங்களையுடைய நீண்ட அந்த அத்தினபுரி என்னும் நகரத்தை நெடிய கிருஷ்ணர் சமீபித்து, அதற்குத் தென்றிசையிலே குளிர்ந்த



செண்பகப் பூக்கடோறுஞ் சிறைகளையுடைய வண்டுகள் நின்று பாடுகின்ற வண்மையாகிய சோலையின்கண்ணே இருந்தார் எ-ம்.

**என்று - சூரியன். "என்றைத் தொடவிண்ணி லெழுந்துறலால்" என்பது கந்தபுராணம். இசைக்கும், உவமஉருபு.**

௭0. அக்கிருஷ்ணரால் அனுப்பப்பட்ட தூதுவர்கள் போய், வண்டுக்கூட்டங்கள் ஒலிக்கின்ற மாலையையுடைய துரியோதனனது செம்மையாகிய பாதங்களை வணங்கி, அந்நாளிலே அனுமனைத் தூதாகக்கொண்டு இலங்கையில் அக்கினியை மூட்டுவித்த கிருஷ்ணர் இன்றைக்குப் பஞ்சபாண்டவருக்காகத் தூதாகிவந்து மதிற்புறத்திலே இருந்தார் என்று நெருங்கிய தூது வார்த்தையை அவனுக்குச் சொன்னார்கள் எ-ம்.

**அன்று - இராமாவதாரத்தில். தூதுவண்டு - தூதாகச் செல்கின்ற வண்டு எனினுமாம்.**

௭௧. பழைய தலைவராகிய கிருஷ்ணர் வந்தாரென்று தூதர்கள் சொல்லலும், வண்டுகள் ஆர்ந்த மாட்சிமையாகிய மாலையையுடைய துரியோதனனது ஏவலினாலே பெரிய நகரத்திலுள்ள மாந்தர்கள், எல்லையாகிய நீண்ட மதிற் சுற்றினுள்ளே எழுநூறு யோசனை அளவினை உடைய செல்வம் பொருந்திய பெரிய நகரத்திலுள்ள வீதிகளை அலங்கரித்தனர் எ-ம்.

நாலு கூப்பிடுதூரம், ஒரு காதம்; பத்துக் காதம், ஒரு யோசனை.

௭௨. அரசர்கட்கரசனாகிய துரியோதனன் மின்னலையுடைய பெரிய முகில்போல வாத்தியங்கள் முன்னே முழங்கக் கிருஷ்ணரை எதிர்கொள்ளும் பொருட்டு எழுந்தான். அப்போது கொடுமை மிகுந்த சகுனி, நீ அவனுக்கு எதிர்செல்வது என்னை என்று சொல்லித் தன்னுடைய மருமகனாகிய அவனை வலிமையோடு தடுத்தான் எ-ம்.

௭௩. நந்தியாவர்த்தப் பூமாலையை யணிந்த துரியோதனன், சிறந்த வலம்புரிச்சங்குஞ் சங்கராயுதமுஞ் சேர்ந்த செம்மையாகிய கைகளையுடைய கிருஷ்ணருக்காக மேகங்கள் வலஞ்செய்கின்ற கோபிலையும் காட்சிகளையும் அமைப்பித்து, போரில் வெற்றியைச் செய்கின்ற அரசர்களுந் தம்பிமாருந் துதிக்கப் பொன்னாசனத்தில் இருந்தான் எ-ம்.

௭௪. பழைய வீட்டுமனும் துரோணனும் மகனாகிய அசுவத் தாமனும், வில்லில் வலிய விதுரனும், கிருபனும் முதலாகிய அரசர் களும், நிறைந்த அறுபதிலக்கம் அரசர்களும் இரண்டுயோசனை தூர அளவில், செல்வத்தைக் கொடுப்பவராகிய கண்ணபிரானுக்கு எதிர் சென்றார்கள் எ - ம்.

௭௫ பசிய துளசிமாலையை அணிந்த முடியினையுடைய கிருஷ் ணரும், அரசர்கள் இரண்டுபக்கங்களிலும் வந்து உவந்து வணங்க அவர்கண்மீது மலர்போலுங் கண்களைப் பரப்பி அந்தப் பெரிய நகரத் திற் பிரவேசித்த பின்பு, துரியோதனனுடைய மாளிகையிற் செல் லாது, புத்திமிகுந்த அருளினையுடைய விதுரன் வாழுகின்ற மாட் சிமையாகிய வீட்டிற் புகுந்தார். எ - ம் வந்து வந்து எனினுமாம்.

௭௬. சுத்தராகிய கிருஷ்ணர் அரசர்கள் எல்லாருக்கும் அனு மதி கொடுத்து அவர்கள் நீங்கியபின்பு, சிறந்த அவ்விதுரனுடைய மாளிகையின் நடுவே ஒரு மண்டபத்தைச் சேர்ந்து, சிற்பநூல்களை ஆராய்ந்து வல்லவராயினோர் நவரத்தினங்களை அழுத்தி இயற்றிய ஆண்சிங்கங்களினாலே தாங்கப்படுகிற ஆசனத்தைத் தமக்கு இட, அதன்மேற் சிறந்திருந்தார் எ - ம்.

அரியேறேந்துமாசனம் - சிங்காசனம்.

௭௭. தம்மை வழிபடுதலையுடைய தேவர்களுக்கு அமிர்தத் தைக் கொடுத்த கிருஷ்ணர் என் வீட்டுக்கு விருந்தினராகி வந்தார் என்று மனமுருகிய விதுரனானவன், சிங்காசனத்திலே மகிழ்ந்து இருந்தருளிய கிருஷ்ணரை வணங்கினான்; வணங்கிப் பெரிய அலைவா கிய சனனத்தையும் மரணத்தையும் நீக்கினான் எ - ம். துவந்தனை- அலைவு.

௭௮. இதழைக்கொண்ட மாலையை யணிந்த விதுரன், பாஞ்ச சன்னியமென்னுஞ் சங்கைக் கையிற் கொண்ட கிருஷ்ணரை அலர்ந்த தாமரை மலர்க்காட்டைக் கண்டாற்போலக் கண்டு, தன்னுடைய இரண்டு கண்களும் களிகூர்ந்து, இப்பிறவியையும் நீக்கினான். அவரை அன்போடு தரிசித்தவர்களுக்கு முத்தி சித்தியாகும். இது அளவைகளான் இனிது துணியப்பட்டதொன்றாகலின், யாம் இதனை விரித்துக் கூறவும் வேண்டுமோ; வேண்டா எ - ம். கண்டவர்க்கு வீடு இயம்பவும்வேண்டுமோ என்க.



கிருஷ்ணருடைய முகமும் உந்தியுங் கைகளும் அடிகளுந் தாமரை மலரை நிகர்த்தலின், "கோகனகக்காடுகண்டென" என்றார்.

௭௯. அன்பினையுடைய விதுரன் அவருடைய சுவரூபமாகிய அமிர்தத்தை மலர்போலும் பெரிய கைகளால் அள்ளி அருந்தினவன் போலக் கண்களினாலே அருந்தினான்; அவரை உள்ளபடி அறிந்து தியானித்தான்; மனமும் உருகினான்; ஆனந்தத்தினாலே எழுந்து துள்ளினான்; விழுந்து உபயபாதங்களையுஞ் சிரமேற்கொண்டான்; துக்கங்களை ஒழித்தான். எ - ம்.

௮௦. முன்னரே நீர் நித்திரை செய்தருளிய பழைய பாற் கடலோ; ஆதிசேடனாகிய சயனமோ, ஆலின் பச்சையாகிய இலையோ; சொல்லிய நான்குவகையாகிய வேதமோ; நீர் ஒரு பொரு ளாக நினைந்து வந்து சேருதற்கு இச்சிறு குடில் என்ன பெரிய தவத் தைச் செய்தது என்று விதுரன் சொன்னான் எ - ம்.

௮௧. பின்பு விதுரன் தன்பாலே நின்ற ஆறுலக்ஷம் மடையர் களை நோக்கி, கேளுங்கள், மூன்றாகிய உலகங்கண் முழுதையுமுண்ட எங்களை ஆளுதலையுடைய தலைவர் இன்றைக்கு இங்கே விருந்து கொள்ளுதற்கு இசைந்தார் என்று கூறினான். அவர்களும் விரைவி னோடு பாகஞ்செய்தார்கள் எ - ம்.

மடையர் - சுயம்பாகிகள். அம்ம - கேண்மின்; "அம்மவுரையசை கேண் மினென்றாகும்".

௮௨. வந்த வெற்றியையுடைய வேல்வீரருக்கும், வில்வீரருக் கும், வாள்வீரருக்கும், தறிகளை முறிப்பனவாகிய யானைகளுக்கும், மிக்க வேகத்தோடு தாவுகின்ற குதிரைகளுக்கும், ஐம்பத்திலக்ஷம் அரசர்களுக்கும் மற்றை யாவருக்கும் உண்பித்தற்பொருட்டு, இது இந்திரனாலும் பெறப்படாத அமிழ்தம் என்று சொல்லும் வண்ணம் பாகஞ்செய்ய எ - ம்.

௮௩. அக்கண்ணபிரானும் பிறரும் நறுமணம் அமைத்த நீரி னாலே ஸ்நானஞ்செய்து, உமாபதியினுடைய இரத்தலை ஒழித்தரு ளிய விட்டுணு கொடுக்கத் தேவர்கள் அமிர்தத்தை அயின்றவாறு சமைத்த பல கறிகளையும் அன்னாதிகளையுந் தம் பிரியப்படி உண்டு இருந்தார்கள் எ - ம்.

உமைக்கு நாயகனிரவொழித் தென்றது: திருமால் தருக்குற்றகாலத்தில் வைரவக்கடவுள் அத்திருமாலின் நெற்றியிற் சூலத்தாற் குற்றி இரத்தத்தைக் கபாலத்திலேற்றுக் கர்வபங்கஞ்செய்த வரலாற்றையென்க.

௮௪. வாசமாகிய நீரையும், வண்மையாகிய சுண்ணத்தையுங் கிரமமாகக் கொடுக்க, அவைகொண்டு கை கால்களையும் வாயையுங் கழுவியவழி, சந்தன முதலியவற்றைப் பூசினார்கள்; மலர் முதலியவற்றைச் சூடினார்கள்; முடி முதலியவற்றை அணிந்தார்கள்; அவ்வாறு முடித்த கண்ணபிரான் வீசுகின்ற சாமரங்கள் இரட்ட வெள்ளிய சந்திரன்போலுங் குடைகள் நிழற்ற, இரத்தின சிங்காசனத்தின்கண்ணே இருந்து விளங்கினார் எ-ம். பூசறுத்தல் - சுத்தி செய்தல்.

சூர்ணம் என்னும் ஆரியபதம் சுண்ணம் எனத் தற்பவமாயிற்று. சூர்ணம்-பொடி. "பொடிகொண்டு தன்கை மலர்கீவி மிக்க புனல்கொண்டு மண்ணல் புரிய" என்றார் பிறரும்.

௮௫. ஞானமாகிய சட்டையை யணிந்த விதுரன் வாழும் வீட்டிலே கண்ணபிரானும் அன்போடு போசனத்தை அயின்று முடித்து இருந்த அச்சமையத்தில், சூரியன், மேருமலைக்கு அப்பாலிலுள்ள அந்த அமிர்தத்தைத் தானும் அயிலுதற்கு நினைந்து போலும் பெரிய மேற்றிசைக்கடலிலே படிந்தான் எ-ம்.

சூரியன் அஸ்தமித்தான் என்பது கருத்து.

௮௬. வேதியர்களெல்லாரும் மாலைக்காலத்திற் செயற்பாலதாகிய தங்கள் கடனைக் கழிக்க நினைந்து, வேதமென்னுங் கொடிய வில்லின்மேலே ஜலம் என்னும் அம்பைக் கைகளினாலே தொடுத்துச் சூரியனுடைய பெரிய பகைவர்களாகிய மந்தேகர்களின் மேலே செலுத்துதலினாலே, உயர்ந்து எழுந்து பரந்த இரத்தமாம் என்று கண்டோர் கருதும் வண்ணம் மேற்குப்பக்கமானது சிவந்தது எ-ம்.

௮௭. திரைகளையுடைய கடலின் புறத்திலே கரைகடோறும் வளருகின்ற பவளக் காடுகளானவை, எழு குதிரையையுடைய சூரியனைப் பகைத்த மந்தேகர்கள், தாம் அவனோடு எதிர்ந்து பொருத கொடிய போரிலே வலிமையைக் கொண்ட கூரிய நெடிய படைகளினாலே நிரை நிரையாக அறுத்துவிட்ட அச்சூரியனுடைய கிரணங்களைப் போன்றன எ-ம்.

௮௮. (ஆண்டுப் பகன்முழுதும் அலர்ந்திருந்து மாலையிற் கூம்பிய) தாமரைமலர்க் காடுகளானவை, நீரின் வாழும் அரமகளிர்கள் தம்மேலே உறைந்து எழுகின்ற வெண்மையாகிய வெய்யில் படாவண்



ணம் கூறப்படுகின்ற பகற்பொழுதெல்லாம் முறைமையினால் விரித்திருந்து பின்பு மாலைக்காலம் வந்ததென்று இனமாகச் சுருக்கி வைத்த பொலிவாகிய பட்டுக்குடைகளை ஒத்தன எ-ம்.

௮௯. வட்டமாகிய அந்நகரமானது பிரதோஷ காலத்திலே மங்கல வாத்தியங்கள் வெண்மையாகிய சங்குகளோடு கலந்து முழங்கலானும், பூவைமிலைந்த கூந்தலையுடைய பெண்கள் மெய்ம்மையாகிய தீபங்களை ஏற்றலானும், தடாகங்களிற் கலந்த தாமரைகளெல்லாங் குவிந்தமையைக் கண்டு தாம் வண்டொலியோடு மலர்ந்தனவாகிய தாமரைகளையுடைய ஒரு வாவியைப் போன்றது எ-ம்.

காரணப் பொருளனவாகிய செயவெனெச்சங்கள் இரண்டும் போன்றது என்னும் வினையைக்கொண்டு முடிந்தன. அவற்றின் எண்ணும்மைகள் விகாரத்தாற் றொக்குநின்றன. ஒலியுடைமையும் பிரகாசமுமே பொதுத்தன்மையாம் எனக்கொள்க. நகர்வட்டம் என்பது முன்பின்னாக மாறிநின்றதோர் பண்புத்தொகை.

௯௦. ஆதிசேடனுடைய மணிமுடிகளை ஒப்பனவாகிய பல்லாயிரந் தீபங்கள் இரண்டு பக்கங்களினுந் தம்பங்களினாலே தாங்கப்பட்டிருப்ப, சிங்கங்கள்சுமந்த பெரிய ஆசனத்திலே அழகினோடு இருந்த கிருஷ்ணரை, புண்ணியத்தையுடைய விதுரன் துதித்து எ-ம்.

இவ்வினையெச்சம் வருஞ் செய்யுளில் "என்றான்" என்பதனோடு இயையும். ஏந்த என்பது செயப்படுபொருள் விகுதி தொக்குநின்றது. அழகுடன் என்புழி உடனே என்பது அடைமொழிப்பொருட்டாகிய ஒடு உருபின் இடத்ததாய் வந்த சொல்லுருபு.

௯௧. மேன்மையாகிய கங்கையாற்றைப் பாதங்களிற் பெருகுவித்த கிருபாசமுத்திரமே! ஒப்பில்லாத நீர், பொலிந்த சருப்பசயனம் அழகை ஒழிய, அதனை நீங்கி இப்பூமியிற் போந்தபின்பு, இடையர்களுடைய சேரியிலே வளர்ந்து, பெரிய மருதுகளினிடையே தவழ்ந்து, இப்பொழுது இங்கே வந்தருளியபடியைச் சொல்லியருளும் என்று கூறினான் எ-ம்.

திருமால் மூவுலகளந்த காலத்தில் விண்ணுலகளந்த திருவடிவழியே ஆகாயகங்கை வழிந்து பூமியிற் சிந்தியதென்னுங் கொள்கைபற்றி 'கங்கை மாநதி கால்வழி கருணையங்கடலே' என்றார்.

௯௨. கிருஷ்ணர் அவனை நோக்கி, பூவிதழ்களிலே வந்து செந்தேனை நுகருகின்ற வண்டுகள் சூழ்ந்த மாலையையுடைய விதுரனே, முன்னரே காட்டின்கண் சென்று திரிந்து தமக்குக் கடனுவனவாகிய நாட்களைக் கழித்து நாட்டின்கண் வந்த புகழையுடைய பஞ்சபாண்டவர்கள்பொருட்டு நல்ல குருநாட்டைக் கேட்கும்வண்ணம் நாம் வந்தேம் என்று கூறினர்; விதுரனும் அவர் கூறியதனைக் கேட்டான்.

விதுரன் முன்னரே அவர் வந்த நியாயத்தை அறிந்துளனுயினும் மரபு பற்றி இவ்வாறு வினவி அவர் கூறியதனை ஆதரவு மிகுதியாற் கேட்டான் என்பார் சிறப்பும்மை கொடுத்து 'விதுரனுங் கேட்டான்' என்றார். கேட்க என்பது கேட்டு எனத் திரிந்துநின்றது.

௯௩. அவ்விதுரன் அவரை நோக்கி. வலிமை பொருந்திய பாம்புக்கொடியையுடைய துரியோதனன் உலகவழக்கத்தை அறிந்து, முழக்கத்தினு லுயர்ந்த முரசக்கொடியை யுடைய தருமருக்குத் தாயபாகத்தைக் கொடுக்கமாட்டான். வெற்றி முரசின் இனிமையாகிய ஓசை எட்டுத் திசைகளினுங் கிளரும் வண்ணம் போரிலே உழக்கினுலன்றி அவன் யாதானுமொன்றை அறிவானே என்று கூறினன் எ-ம்.

முழக்கினுலுயர் என்றது முழக்கத்தினுல் உயர்ந்த என்றவாறு; இது முரசின் விசேடணம். வழக்கினுல் என்பது உருபுமயக்கம். முரசு இன் தழக்கு என்க. தழக்கு – வலித்தல்விகாரம். ஓகாரம் எதிர்மறை.

௯௪. கிருஷ்ணர் அவனை நோக்கி, வாளைமீன்கள் வாவிகளினின்று எழுந்துபாய, வளராநின்ற இளைய கமுகுகளின் பாளைகளிலே இருந்த வண்டுகள் அவைகளுக்கஞ்சி எழுந்து ஒலிக்கின்ற வயல் சூழ்ந்த நாட்டையுடைய துரியோதனன், நாளைக்கு அவர்களுக்குத் தாயபாகத்தைக் கொடானுயின், அவர்கள் எதிர்த்துவந்து கொடிய போரிலே வாயின்மூளை சொரியும்வண்ணம் பகைவர்களைச் சங்கரிப்பார்கள் என்று கூறினர் எ-ம்.

௯௫. [பின்னுங் கிருஷ்ணர் கூறுகின்றார்] வேகமாகப் பாயுங் குதிரைகளையுடைய அரசர்கள் தம்முடைய சுற்றத்தார்களுக்கு, அவர் தாம் விரும்பி இனிமை பொருந்த மெலிந்து இரப்பினும் ஒரு பொருளையுங் கொடார்கள்; அச்சுற்றத்தார் பரந்த யுத்தத்திலே எதிர்த்து மேன்மேற் படும்படி அம்புகளைச் செலுத்தும் பொழுதில் சொன்ன பொருளையெல்லாம் அவர்களுக்குக் கொடுப்பார்கள் எ-ம். அடுக்கு - மிகுதிபற்றி வந்தது.



௯௬. போரில் வென்று விளங்கும் சக்கரத்தையுடைய கிருஷ்ணர் இவ்வாறே பூமியில் உள்ளாரது இயல்பையும் விதுரனுக்குச் சொல்லி உறங்குமாறு அனுமதி கொடுத்து, மலைபோலும் புயங்களையுடைய காவலாளர்கள் கொடிய துடிகளை முழக்க, நறுமணமாகிய நாண்மலர்ச் சயனத்தின்மேலே தாமும் உறங்கியருளினர் எ-ம்.

௯௭. அந்த இராத்திரியானது குளிருகின்ற பெரிய சந்திரனுகிய முகத்தோடு விளங்குகின்ற ஆம்பன்மலராகிய வாயை மலர்த்தி, முல்லைமுகையாகிய ஒளிபொருந்திய நகையை விரித்து, அழகிய தாமரைமலர்களாகிய கைகளை அளியோடுங் குவித்துக் குறித்த கால அளவிலே அகலாதிருத்தலினுலே, களிப்பைக்கொண்ட தோள்களை யுடைய விலைமகளை ஒத்தது எ-ம்.

தவளம் - ஆகுபெயர். அளி - வண்டும் அன்புமாம். உம்மை எதிர்மறை. கற்புடைமகள்போலக் காலவரையறையின்றியிராது, விலைமகள்போல அளவுபட்ட காலத்திற்றனே அகலாதிருப்பது என்பார் "அளவிலே ........... அகன்றிலாமையினுல்" என்றார்.

௯௮. எங்கும் நிறைந்து கலந்த இருளாகிய கடலைப் பொறுக்கலாற்றுது அண்டம் ஒருபக்கத்துப் பிளந்தது எனவும், இருளாகிய கரிய வஸ்திரங் கிழிந்தது எனவும், சூழ்ந்த எழு சமுத்திரங்களும் வற்ற வடவையின் முகத்துள்ள அக்கினி மேலே கிளர்ந்தது எனவும் கண்டோர் கருத, சூரியனுடைய கிரணங்கள் எழுந்தன எ-ம்.

௯௯. ஒப்பில்லாத பூமியின் நாயகராகிய கிருஷ்ணர் பகைக்கின்ற துரியோதனன் இருந்த பழைய நகரத்திலே சென்றவாற்றையறிந்து, மகர மீனையுடைய கடலை நீங்கி அவருடைய பக்கத்திலே பொருந்தும் பொருட்டு வந்துசேர்ந்த சக்கராயுதம்போல, சூரியன் கிழக்குத் திசையிலே வந்து உதித்தான் எ-ம்.

௧00. ஒளியினையுடைய கங்காசுதனுகிய வீடுமனும் பழைய வேதத்தால் உயர்ந்த துரோணனும் முதலாக அத்துரியோதனனுக்கு உயிரினும் வியப்புப்பொருந்தச் சேர்ந்த அநேக அரசர்களும், நீதியினையுடைய முந்நூற்றறுபத்தோராயிரம் அரசர்களும், தீமையில்லாத வலிமையினையுடைய பதினொரு அக்குரோணி என்னும் அளவைப்பெற்ற மிகுந்த சேனைகளும் எ-ம்.

இது முதலாக "பட்டவர்த்தனரும்" என்றற் றொடக்கத்து ஈரடியு மொழிய, நான்கு செய்யுளு மொருதொடர். இவ்வெழுவாய்கள் வருஞ் செய்யுளில் வந்துசூழ என்பதனோடு இயையும். அக்ஷௌஹிணி என்னும் ஆரியபதம் அக்குரோணி எனத் தற்பவமாயது போலும். அக்ஷௌஹிணி 2,187 யானைகளும், அவ்வளவு தேர்களும், 6,561 குதிரைகளும் 10,935: பதாதிகளுங் கூடியது.

௧௦௧. நெருங்கிய வெண்சாமரங்கள், ஆலவட்ட நிரைகள், வளைதடிகள், வாள்கள், பரிசைகள், வஸ்திரங்கள், காளாஞ்சிகள் என்னும் இவைகளைக் கைகளிற்கொண்டு உலாவி வருகின்ற கன்னிப் பெண்கள் எல்லாரும், மிகுந்த பிராமணர்களும், பல கலை வகைகளில் வல்ல வித்துவான்கள் எல்லாரும், தகுந்த தம்பிமாரும் வந்து சூழ, உயர்ந்த, பூமியின்மேல் உள்ள அரசர்க்கு அரசனாகிய துரியோதனன் எ-ம்.

உள்ளவர்கள் என்பது சத்துகள் என்பதின் பரியாயமாதலின் வித்துவான்கள் என்னும் பொருட்டாய் நின்றது.

௧௦௨. வரிசையாகிய கிரணங்களையுடைய பொன்னாலியன்ற நீண்ட சுவரிலே இட்ட பவளத்தாலியன்ற உத்தரத்தின்கண்ணே நிரைத்த, ஒண்மையாகிய கிரணங்களையுடைய பரிய பதுமராகமணிகளாலும் வயிரமணிகளாலும் அமைத்த துலாமரங்களின்மேலே வெண்மையாகிய முத்துவர்க்கங்களைப் பரப்பி, புதிய மென்மையாகிய வைடூரியப் பலகைகளைத் தைத்து, பெரிய மரகதமணிகளால் ஒரு கோடி தூண்களை நிரையாக அமைத்த மண்டபத்தின்மாட்டே எ-ப்.

௧௦௩. முழுதும் முத்துக்களை நிரைப்படுத்திய பந்தரிலே நகைத்த சிறப்பாகிய சிங்கமுகங்களையுடைய கால்களினாலே அமைத்த பீடத்தின்மேலே வட்டமாகிய மெத்தையிலே இந்திரன்போலும் எனக் கண்டோர் கருத இருந்தான். பட்டவர்த்தனர்களும் மகுடவர்த்தனர்களும் வந்து தன்னுடைய சேவடிகளை வணங்கிய பின்பு, அவர்களை, இடப்பட்ட பொன்னாசனங்களிலே முறைமையோடு இனிமையாக இருக்கக்கடவீர்கள் என்று ஏவி எ-ம்.

பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர், அரசர்களின் பகுப்புக்கள். சூழ பிரான் முண்டப மருங்கு பந்தரின் பீடமிசை வட்டமெத்தை வைகினன் என



முடிக்க. ஈண்டு ஏவி என்னுமெச்சம் வருஞ்செய்யுளில் என்று என்பதனோடு இயையும். முட்ட என்பது முழுமையாக என்னும் பொருள்படுவதோர் உரிச்சொல்.

௧௦௪. நீதி மாறினவனாகிய துரியோதனன் காவல்பொருந்திய அரசர்களுடைய முகங்கடோறும் தன்னுடைய இரண்டு கண்களையும் பரப்பி [எல்லாரையும் பார்த்து என்றபடி], போரைக் கருதும் பஞ்சபாண்டவருடைய ஏவலினாலே வருகின்ற தூதனாகிய இடையன் இன்றைக்கு நம்முடைய சபையின்கண்ணே வந்தால், நீங்கள் ஒழிதலின்றி அவனுக்கு எதிர்சென்று கண்டு வணங்கி உறவுஞ் சொல்வீராயின், இனி உங்களுரை அக்கினி வலஞ்செய்யும்படி அழிப்பேன் என்று சொல்லி மிகச் சீறினான் எ-ம்.

௧௦௫. இந்தப்பிரகாரமே சொல்லி, அரசர்க்கரசனாகிய துரியோதனனும் அரசர்களும் இருக்க, ஒளி தங்கிய பலதேவனுடனே பிறந்த தலைவராகிய இசையைக் கொண்ட வேய்ங்குழலினையுடைய கிருஷ்ணர், நித்திரையின் எழுந்தபின்பு காலையிற் செயற்பாலனவாகிய பல கடன்களையும் முடித்து மணமார்ந்த அழகிய மலர்களினாலே பரம்பொருளைப் பூசித்து வணங்கி, முன்னர்க்கூறிய இந்தப் பிரகாரமே இருந்த பெரிய சபையின்கண்ணே சென்றனர் எ-ம்.

தந்தவண்ணன் - தந்தத்தினது வண்ணம்போலும் வண்ணத்தையுடையவன்; தந்தம் - யானைக் கொம்பு; வண்ணம் - நிறம்.

௧௦௬. வீட்டுமனும், துரோணனும், மகன் அசுவத்தாமனும், நீதியிற் சிறந்த விதுரனும், துரியோதனனை யொழிந்த அரசர்களும் வந்து கிருஷ்ணருடைய சேவடிகளை வணங்கினார்கள்; கன்னனுந் தலைகுனிந்திருந்தான்; சகுனி மனமெரிந்து கருகினான்; வண்டுகள் மொய்த்த துளசிமாலையை யணிந்த கிருஷ்ணரும், எதிரே நின்றவர்கள் இட்ட பீடத்தின்மேலே இருந்தார் எ-ம்.

௧௦௭. முன்னாளிலே கோவர்த்தன கிரியைக் குடையாகக் கவித்த கரிய கிருஷ்ணர் எதிரேயிருந்த பின்பு, துரியோதனனும் அவருக்கு முகங்கொடாமல் அவரை நோக்கி, நீர் நேற்று இந்தப் பெரிய நகரத்திலே வந்தும், என் வீட்டை விடுத்துப் பொன்மலை போலும் புயங்களையுடைய விதுரனது வீட்டின்கண்ணே புகுந்தது யாது காரணமோ இதற்கு உத்தரங் கூறும் என்று சொல்லக் கிருஷ்ணரும் எதிரே சொல்லுவார் எ-ம்.

ஆயர்பாடியில் இடையர்களெல்லோரும் மழையின் பொருட்டு இந்திரனைப் பூசிக்க நினைந்து அவனுக்குச் சமைத்த அமுதைக் கண்ணபிரான் தடுத்துத் தாமே அருந்த, அதனை யுணர்ந்த விண்ணவர்கோன் சினமுற்று, இடையர்க்கும் ஆனிரைகட்கும் இடுக்கண் செய்யும்படி புட்கலாவர்த்தம் முதலிய முகில்களைக் கன்மழை பெய்யும்படி பணிக்க, கண்ணபிரான் இடையர்களையும் பசுக்களையும் காத்தற்பொருட்டுக் கோவர்த்தனகிரியைக் குடையாகக்கவித்தாரென்பார் 'முன்னகங் குடைகவித்த காளமுகி' லென்றார்.

௧௦௮. [பதவுரை]:—என் இல் நின் இல் ஒருபேதம் இல்லை- என்வீடு உன்வீடு என ஒருவேறுபாடு எனக்கில்லை; இது என் இல்- உனது இந்த வீடு என் வீடாகும்; அது நின் இல் - (துவாரகையிலுள்ள)எனது அந்த வீடு உன் வீடாகும், என்னிலும் - என்றாலும், மின்னின் மின் இலகு விறல் நெடும்படை விதுரன் வந்து எதிர் விளம்பினான் - மின்னலைக் காட்டிலும் மிக ஒளி விளங்கப்பெற்ற ஆயுதங்களையுடைய விதுரன் வந்து எதிர்கொண்டு உபசாரவார்த்தை கூறினான்; [ஆதலால் யான் அங்குச் சென்றேன்.] உன்னில் - ஆராயுமிடத்து, இன்னமும் ஒன்று உளது - இன்னுமொரு காரணமுண்டு, பஞ்சவர் உரைக்க வந்த ஒரு தூதன் யான் - பஞ்சபாண்டவர்கள் ஏவி அனுப்ப வந்த தூதனாகிய யான், நின் இல் இன் அடிசில் உண்டு - உனது வீட்டில் இனிய உணவைஅருந்தி, நின்னுடன் வெறுக்க எண்ணுவது நீதியோ - உன்னோடு பகைக்க நினைப்பது நீதியாகுமோ?

உண்டவீட்டிற்கு இரண்டகஞ் செய்யவொண்ணா தென்றபடி. "மின்னின் முன்னிலகு" என்றும் பாடம்.

௧௦௯. நிறைந்த நாகக்கொடியை யுடையாய்! புத்தி தெரித்தலையுடைய மந்திரிமாராயிருந்து அரசரைக் கெடுப்பினும், நல்ல குரவர்களுடைய சொற்களை மறுப்பினும், பிறர் செய்த நன்றியைச் சிதைப்பினும், ஒருவர் வாழும் வீட்டிலே புசித்துவிட்டுப் பின்பு அவரோடு கோபித்துப் பொர நினைப்பினும் இவ்வாறு செய்தவர்களை சூரியன் உள்ள அளவுஞ் சந்திரன் உள்ள ளவும் நரகங்களிலே சேர்ந்து வருந்துவார்கள் எ-ம்.

இத்தீய குணங்களுட் பல உன்னிடத்துள்ளன என்பது குறிப்பு.

௧௧௦. ஒப்பில்லாத தலைவர்க்குந் தலைவராகிய குளிர்மையுடைய நாண் மலரில் வசிக்குஞ் சிதேவியின் நாயகர் இவற்றை விளங்கச் சொல்லவும், துரியோதனன் அவருடைய முகத்தினிடத்தே வைத்த



இரண்டு கண்களையும் உடையவனாகி மிகச் சிரித்து, நீர் தூதராகி வந்த தன்மையைக் கூறுக என்று இம்மொழியைக் கூறியபின்பு, வேதங்கள் நாறுகின்ற உந்திமலரையும், வண்மையாகிய மணத்தைச் செய்கின்ற துளசிமாலையையும் உடைய அக்கிருஷ்ணருஞ் சொல்லுவார் எ-ம்.

முன்னர்க் கிருஷ்ணர் தன் வீட்டிற்கு வாராமை குறித்து முகங் கொடாத துரியோதனன், தன் வினவுக்கு அவர் கூறிய விடையான் வசீகரிக்கப்பட்டு அவரை மகிழ்ச்சியோடு பார்த்துப் பேசினானேயன்றி, அவர் உபாயத்தினாலே தன்னையும் தன்னைச் சார்ந்த பிறரையும் "அரவமல்கிய பதாகையாய்" என்புழிக் கண்டித்துக் கூறிய குறிப்பை உணர்ந்திலன்; உணரின், முன்னையின் மும்மடி வெறுத்துச் சீறுவனன்றே; இதனை யுணராத பேதை "அவன்" என்பார் "இவை தெரியச் செப்பவும் முகத்தில் வைத்த விருநயனனாகி நகைசெயா" எனச் சிறப்பும்மை கொடுத்துக் கூறினார்.

௧௧௧. உலகத்திலே குற்றமில்லாததாகிய குருகுலத்தையுடைய அரசனே, உன்னுடைய சகோதரர்கள் சூதினாலே இராச்சியத்தை இழந்து சொன்ன வாக்கிற் சிறிதேனும் தவறாமல், அந்நியர்கள் போலச் சென்று வருந்திக் குளிர்ந்த நிழலில்லாக் காடுகளிற் சேர்ந்தும் தீமை இல்லாதபடி குறித்த பல நாட்களையும் கழித்து வந்தார்கள்; ஆதலின் அவர்களுடைய தாயபாகத்தைச் சிநேகத்தோடு கொடுக்கக்கடவாய் எ-ம்.

உம்மை அஞ்ஞாதவாசஞ் செய்தமையைத் தழீஇய தென்க. இதுமுதல் ஐந்து கவிகள் ஒரு தொடர். "எய்தியே" எனவும் பாடம்.

௧௧௨. நாகக்கொடியையுடைய துரியோதனனே! சொல்லக்கேள், நீ உனக்கு உரிய சகோதரர்களை அழைத்து இயன்றபடி சில நாடுகளைக் கொடுத்து அவர்களுடனே கலந்து வாழுவாயாயின், நல்ல சத்திய நிலையை உடையாயென்று பூமியிலுள்ள அரசர்கள் சிநேகங்கொண்டு உன்னை நாடோறும் புகழுவார்கள்; அல்லவென்று மறுப்பாயாயின், தருமமும் ஆண்மையும் புகழும் உன்பாலன அல்லவே எ-ம்.

வா - கேள். "வாராய் சசியே" என்றார் பிறரும்.

௧௧௩. என்றிவ்வாறு கிருஷ்ணர் கூற, அங்கே எதிராகத் துரியோதனனும் மிகக் கோபித்துச் சொல்லுவான்:—முன்னாளில், பஞ்சபாண்டவர்களுஞ் சூதுபோர் செய்து உரிமைகளெல்லாவற்றையும் இழந்துபோயினார்கள்; இன்றைக்கு நீர் உபாயத்தினாலே மீண்டும்

அபகரிக்க நினைத்தால் நான் அவர்களில் எளியேனோ? அவர்கள் இன்னும் எப்பொழுதும் காடுகளிற் சென்று திரிவதே உறுதியாகும்.

எளியனோ என்பதன் ஓகாரம், எளியேனல்லேன் ஆகலின் அதற்கு உடன்படேன் என ஒழிபிசை நோக்கி நின்றது. எண்ணின் என்னுமெச்சம், ஓகாரத்தாற் போந்த உடன்படேன் என்னும் வினையைக் கொண்டு முடியும்.

கக௪. நீர் வெறுத்தாலென்? இங்கே இருந்த அரசர்கள் திகைத்தாலென்? பலவற்றையும் நினைத்தாலென்? போய்ச் சிரித்தாலென்? இவன் முன்பு கூறிய சத்தியவாக்குப் பொய்யாயிற்று என்று தேவர்கள் சொன்னாலென்? பூமாலையை வேய்ந்த பஞ்சபாண்டவர்களும் மீறி என்னோடு கொடிய போரைச் செய்தாலென்? இனி நான் இப்பூமியிலே ஈ இருக்கும் அவ்வளவு சிறிய இடமாயினும் அவர்களுக்கு இராச்சியமாகக் கொடேன் என்றான் எ-ம்.

எவன் என்னும் வினாப்பெயர் என்னென்றாய் ஈண்டுப் பொருட்படுத்தாமை குறித்து நின்றது. யாது யாது நிகழினும் அதனை அதனை ஒரு பொருட்படுத்தேன் என்பது கருத்து. தன் சமுகத்தில் அரசர் நகைக்கத் துணியாரென்பதை அறிந்துள்ளானாதலின் "போய் நகைக்கிலென்" என்றான்.

கக௫. கண்ணில்லாத திருதராட்டிரனுடைய புத்திரன் முகில் வழங்கிய இடியேறு போலக் கோபத்தினோடு இவ்வாறு சொல்லவும், இவ்வுலகங்களையெல்லாம்பெற்ற உந்தியையுடைய கிருஷ்ணர் அவனை நோக்கி மாலை வழங்கும் பெரிய மார்பினையுடையாய், அவர்களுக்குரிய பூமியைக் கொடுக்க உனக்குக் கருத்து இல்லையாயின், அதின் பாதிப் பூமியையாயினுங் கொடுக்கக்கடவாய் என்று கூற, துரியோதனன் அதுதானுங் கொடுக்க உடன்படாது மறுக்க, மீண்டும் அவர் ஐந்து ஊர்களையாயினுங் கொடுக்கக்கடவாய் என்று அவனை மிக வேண்டினார் எ-ம்.

ஐந்தூர் என்புழிச் சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. [மூலபாடத்திற் களறவும் என்றிருப்பதைக் கழறவும் எனத் திருத்திக்கொள்க.]

கக௬. [துரியோதனன் அவரை நோக்கி] பக்கங்களிலே வண்டுக் கூட்டங்கள் நெருங்குகின்ற பசிய துளசிமாலையை உடையீர், அவர்களுக்கு, சுறாமீனையுடைய கடலாற் சூழப்பட்ட பூமியைக் கொடுக்கவும் பெருமையையுடைய ஐந்து நகர்களைக் கொடுக்கவும் வேண்டுமோ, முன்பு நான் காட்டைக்கொடுக்க அதன்கண்ணே



போய் இருந்து மீண்டுவந்து நாட்டிலே மறைந்திருந்து திரிந்தவர்களாகிய அவர்கள், இப்பொழுது யாருங் காண ஒரு வீட்டைக் கொடுத்தாலும் வெறுப்பார்களோ, மகிழ்ந்துகொள்வார்களன்றோ, ஆதலால் நீர் இவ்வாறு வேண்டுதலை விடக்கடவீர் என்று எதிர் கூறினான் எ-ம்.

கக௭. [அதற்குக் கிருஷ்ணர் கூறுகின்றார்:-] தம்முடைய தந்தையார் காதல்கொண்ட தன்மையைக்கண்டு, சிறிய தாயாற் பெறப்பட்ட தம்பிமாரிருவருக்கும் இந்த வாழ்க்கையையும் இராச்சியத்தையுங் கொடுத்த வீட்டுமரும், உன்னுடைய வமிசத்தில் ஒருவராய் இங்கே இருக்கின்றார்; அஃதங்ஙனமாக, முன்னரே உயர்ந்த முறைமையினாற் பெரிய பூமி முழுதுக்கும் உரியர்களாகிய பஞ்சபாண்டவர்களுக்கு நீ பெரிய ஐந்து நகர்களையாயினுங் கொடாதொழிந்தால் உன்னுடைய இராச்சியம் எப்படிப்பட்டதாகும் எ-ம்.

தந்தை - சந்தனு, இளையதாய் - பரிமளகந்தி. இருதம்பியர் - சித்திராங்கதன் விசித்திரவீரியனென்போர். சந்தனுவின் முதன் மனைவியாகிய கங்கையென்பாள் வீடுமனைப் பெற்றபின் தன்னாயகனை விட்டு நீங்கச் சந்தனு செம்படவன் மகளாகிய பரிமளகந்திமீது காதலுற்று அவளைத் தனக்கு மணஞ்செய்து தரும்படி அவளின் தந்தையை வேண்ட, அவன் தன் மகள்வயிற்றிற் பிறக்கும் பிள்ளைக்கே இராச்சியவுரிமை கிடைக்குமாயின் அங்ஙனம் மணஞ்செய்து தருவேனெனக் கூற, தன் மூத்த மகனாகிய வீடுமனை பட்டத்துக்குரியோனாதலால் "இதற்கென்செய்வே" னென்று சந்தனு சஞ்சலமுற, இதனையுணர்ந்த வீடுமன் தனக்கு இராச்சியம் வேண்டாமென்றும், தான் விவாகஞ் செய்வதில்லையென்றும், பரிமளகந்தியின் வயிற்றிற்பிறக்கும் புதல்வனுக்கே அரசு உதவப்படுமென்றுஞ் சபதஞ்செய்து செம்படவனை உடன்படுத்தித் தன்றந்தைக்குப் பரிமளகந்தியை மணம்முடித்து வைத்தானென்பது சரித்திரம். இதன்விரிவைச் சந்தனுச் சருக்கத்துட் காண்க.

நின் மரபினராகிய இவ்வீட்டுமர் தம்முடைய சுகானுபவத்தையும் இழந்து தம்பிமாருக்கே முழுதையுங் கொடுத்தாராக, நீ ஐந்து நகராயினுங் கொடாதொழிவது பெரியதோர் அநீதியாகலின், அவ்வளவாயினுங் கொடுக்கக்கடவாய் என்பது இதன் தாற்பரியம்.

கக௮. ஒரு வமிசத்திலே இரண்டு அரசர்கள் கூடிப் பிறந்து உரிமையை அடைந்தால், அந்த இருதிறத்தார்களும் ஒத்து வாழுதலே எந்த வமிசத்தினுமுள்ள இயல்பு. பொருகின்ற சிறந்த அட்டயானைகள் நிற்கின்ற திசைகளிலே இருந்த கீர்த்தியைப் பாப்பிப் பூமியைப் பெற்ற குருகுலத்தவர்களுடைய இயல்பு நன்றாயிருந்தது என்று கரிய கிருஷ்ணர் கூறினார் எ-ம்.

ஒத்து என்பது ஒக்க எனத் திரிந்து நின்றது. உம்மைகள் முற்று. பிரிநிலை யேகாரம் வாழ்வுறுதலோடு கூட்டப்பட்டது. எழுபுவி என்றது ஏழு தீவுகளாகிய விபாகங்களையுடைய பூமி என்றவாறு. நன்று என்பது குறிப்பினாலே இழித்துரைத்தற்கண் வந்தது.

௧௧௯. பெரிய சருப்ப சயனத்தை ஒழித்த கிருஷ்ணர் இவைகளைச் சொல்ல, துரியோதனனும் கண்கள் அக்கினியேயென்று சொல்லும்படி சிவப்ப உள்ளே கோபித்து, வன்கண்மையோடு பின்னரும் அவரை நோக்கி, போரினையுடைய சருப்பராசனாகிய சேடனது இரத்தினங்களையுடைய நெடிய ஆயிரஞ் சுடிகைகளினாற் சுமந்த பூமியானது வீரராயினவர்க்கு உரியதன்றோ, இங்ஙனமாகலின் இதனை அடைதற்கு வீரமேயன்றித் தாயத்தொடர்பும் வேண்டுமோ என்று கூறினான் எ-ம்.

யான்கொடேன், வலியராயிற் போர்செய்து பெறுக என்பது கருத்து.

௧௨௰. பொய் மிகுந்த மொழிகளையுடைய அரசன் இவைகளைச் சொன்னபின்பு, கிருஷ்ணர் புயவலிமையினாலே ஐவருடைய இராச்சியத்தைபுங் கொடாமற் போரிலே ஆண்மையைக்கொண்டு எதிர்ந்து பொருவாயா? அங்ஙனமாயின் விளங்குகின்ற குருநிலத்தின்கண்ணே அவர்கள் வந்து கொடிய போரைச் செய்யும் பொருட்டு உண்மையாகவே கைதருவாயாக என்று கூற, அரசன் எதிரே நின்ற தூணிலே அறைந்து இவைகளைச் சொல்லுவான் எ-ம்.

முன்னர்ச் சூதாடிய காலத்துக் கூறிய வார்த்தையினின்றும் திறம்பியவனாதலிற் "பொய்வளர்ந்த மன்னன்" என்றார். பின்னரும் இவன் திறம்புதல் கூடுமென்னுஞ் சந்தேகம்பற்றி அவனைக் கைவழங்கு எனக் கண்ணபிரான் கேட்டனரென்க.

௧௨௧. நீ இழிந்த பிறப்பையுடைய இடையர்களோடு முல்லைநிலத்திலே பசுநிரைகளைக் காத்த உன் பிறப்பையும், இடைச்சிகள் உன்னை உரலோடு கட்டியதனையும் மறந்து, இராசகுலங்களுள் உயர்ந்த குருகுலத்தாருடைய மெய்மையையும் ஒரு குற்றமுமில்லாத என் பிறப்பையும் அறியாமற் சபையிலே இந்த வசனத்தையும் சொன்னாயோ எ-ம்.

இதுமுதல் நான்கு கவிகள் ஒருதொடர். குலாசாரங்களிற் குறைவுடைய நீ அவற்றிற் சிறந்த என்மாட்டு இவ்வாறு வினாவியது அடாது என்பதுகருத்து.



௧௨௨. விளங்குகின்ற அம்பையும் வில்லையுமுடைய ஐவரும் பொருதற்கு வந்து சமீபித்தால், நான் எளிமையாகச் சோர்ந்திருப்பேனோ, மதயானைகள் பகைகொண்டவழிச் சிங்கம் போர்செய்ய அஞ்சுமோ? அவர்கள் வந்தாற் பொருதலைக் குறித்து முன்பு கையறைந்து தருதல்வேண்டும் என்று சொல்லியது உன்னுடைய மேன்மையினாலோ? அன்றி என்னுடைய நாக்குத் தவறுமென்று நினைந்தோ? அரசர்களுடைய நியாயம் மிகவும் நல்லது நல்லது எ-ம்.

ஏ-அம்பு. ஓகாரங்களுள் முன்னையிரண்டும் ஒழியிசை. ஏனையிரண்டும் வினா. அந்து-அசை. விலங்குக்கோ என்பது கோவிலங்கு என இலக்கணப் போலியாயிற்று; மிருகராசன் என்பது பொருள். நியாயம் ஞாயமென மரீஇயிற்று. மேன்மை, நன்று என்பன இழித்துரைத்தற்கண்வந்த குறிப்புமொழிகளாம்.

௧௨௩. நான் அன்றைக்கு இராசசபையிலே ஐவர்களுக்கும் உரியவளாகிய திரௌபதியை வண்டுகள் வருகின்ற கூந்தலிற்பிடித்து மானபங்கத்தை வருவிக்க வஸ்திரத்தை உரிந்தபோது, அவர்கள் பக்கத்திலே இருந்து கண்டவர்களன்றோ! துளியாகி வருகின்ற நீரைவிரும்பிப் பருகி, இடுசோற்றை உண்டு, உயிர்தாங்கிப் புயங்களுக்கு எளிமைவரும்படி இருந்த பாவிகளும், இன்றைக்கு மானத்தின் நிலைமையை அறிவார்களோ எ-ம்.

துகிலுரிந்து எளிமையை வருவித்தபோது என்க.

முன்னர், "வண்டாருங் குழல்பிடித்துத் துகிலுரிந்தோ னுடற்குருதி வாரியள்ளி, யுண்டாகங் குளிர்வதன் முன்னிக் கரத்தாற் புனலுண்ணே னொருகா லென்கைத், தண்டால்வெம் புனலெற்றி மீதெழுந்து விழுந்திவலை தண்ணீராகக், கொண்டாவி புரந்திடுவ னிதுவிரத மெனக்கு" என்று கூறியவன் வீமனேயாகவும், ஈண்டுத் "துளி வரும்புனல் பரிந்தருந்தி" எனப் பொதுப்படக் கூறியது தலைமைபற்றியென்க. ஓகாரம் - எதிர்மறை.

௧௨௪. இவர்களுக்குத் தாயானவர்களும் இருவராம்! முன்னர்ப் பெற்ற தந்தைமார்களும் ஐவராம்! பின்னர் விருப்பங்கொண்டு குருகுலத்தில் உரிமையையும் பெறுவார்களாம்! இவர்கள் ஐவரும் இந்த ஒரு சென்மத்திலே ஒரு பெண்ணை அன்போடு தனித்தனி விரும்புவார்களாம்! என்னையும் அவர்களோடு ஒன்றாகிய குலத்தில் அரசனென்று சொல்லுவதாம், அம்மம்ம! இம்மொழிகள் எத்தன்மையவாயின!! எ-ம்.

அன்னையரிருவர் - குந்தியும் மாத்தரியும். தந்தையர் ஐவர் - முறையே தருமதேவதை, வாயு, இந்திரன், இரு மருத்துவர். தந்தையர்கள் என்புழியும், உரிமை என்புழியும் என்னை என்புழியும் சிறப்பும்மைகள் தொக்குநின்றன. ஆம் ஆம் என்பன இகழ்ச்சிப்பொருளில் வந்த இடைச்சொற்கள். அம்ம வியப்புப் பொருளில் வந்த இடைச்சொல். எவன் என்னும் வினு வினைக் குறிப்பு முற்று; என் என்றுமிற்று. சொல், ஆம் - அசைநிலைகள். இப்படிப்பட்ட இவர்கட்கும் எனக்கும் யாதும் தொடர்பில்லை என்றானென்க.

௧௨௫. பூமி முழுதையும் உடைய அரசன் இவ்வாறு சொல்ல, வண்மையையுடைய துவாரகைக்குத் தலைவராகிய கிருஷ்ணரும் சிரித்து இனி அப்பாண்டவர்களுடைய கருத்து நன்கு சித்திக்கும் என்று நினைந்து, பெரிய சபையை நீங்கி அழகுபொருந்திய வில்லையுடைய விதுரன் வாழுகின்ற கோயிலின்கட் சென்று சேர்ந்தார். நல்லொழுக்கம் இல்லாதவர் மிகக் கோபித்தபோதும் ஒரு குற்றமுமில்லாதவர்கள் கோபிப்பார்களோ கோபியார் எ-ம்.

௧௨௬. தான் அணிந்த மாலை கருகிச் சருகாகவும், புதிய தாமரைமலர்போலும் ஒளிபொருந்திய முகம் வேர்க்கவும், திருந்திய கண்களிரண்டும் சிவக்கவும், கொடிய செம்மையாகிய வாயிலுள்ள அதரங்கள் துடிக்கவும், இருந்த பெரியசபையிலே பெருமூச்செறிந்த துரியோதனனானவன் அரசர்களுக்கெதிரே விதுரனைச் சுட்டி இவன் அக்கிருஷ்ணனுக்கு விருந்துசெய்த சிநேகம் என்னையோ என்று பின்னுஞ் சொல்லுவான் எ-ம்.

இச்செய்யுளிற் கூறிய செயல்கள் கோபத்தின் காரியமாம்.

௧௨௭. வலிமையினாலே பூமியைப் பகைவர்கள் கவர்ந்து கொள்க என்று நினைந்துபோலும்! என் வீட்டிலே போசனத்தை மறுத்தவனாகிய கிருஷ்ணன் தன்னுடைய சேனைகளோடு இனிமையாக உண்ணும்வண்ணம் இவ்விதுரன், தன் வீட்டிலே இனிய போசனத்தைச் செய்வித்தான்; என்னுடைய தந்தையாரோடு பிறந்தும், இன்றுவரையும் என்னுடைய கையில் அன்னத்தை உண்டும், தான் என்மேல் அன்பினை உடையனல்லன்; என் பகைவருள்ளும் இவன் உட்பகைவனாயுள்ளவனன்றோ எ-ம்.

புறத்தே நண்பர்போன்று அகத்தே பகைமை பாராட்டுவார் பகைமை நச்சுப்பகைமையாதலின் உற்றபகையல்லவோ என்றான். "புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப்பகைமை, வெளியிட்டு வேறுதல் வேண்டு" மென்றார் பிறரும். என்பகை தனக்கும் உற்றபகை யல்லவோ என அந்நுவயஞ்செய்து, என்பகைவர் இவ்விதுரன்றனக்கும் உண்மையான பகைவரல்லரோ எனப் பொருள் கோடலும் பொருந்தும். "என்றெனது மனையில்" எனவும் பாடம்.



௧௨௮. பூமியிலே பொதுப்பெண்கள் முன்பு தமக்கு இணங்கிய பொருளைப் பெற்றுக்கொண்டு ஒருவனோடு விரும்பி இன்பம் பொருந்தக் கூடினும், மற்றொருவன் அதிகமாகியபொருளைக் கொடுத்தால் அவனையேயன்றி முன்னையவனை அறிவார்களோ? அறியார்; அவர்களுக்கு இவ்வாறு செய்வது புதுமையன்று; அப்பொதுமகளுடைய புத்திரனாகிய விதுரன் இன்றைக்கு அவனோடு உறவு கொண்டமையாகிய ஒரு அதிசயத்தை என்ன சொல்லி வெறுப்பது! என்று கூறினான் எ-ம்.

அன்னையின் குணம் இவனிடத்திருத்தல் புதுமையன்றென்றபடி.

௧௨௯. இவ்வாறு இவன் கூறியபோது அவ்விதுரன் எழுந்து அரசனே, நீ என்னை வசைகூறின வாயினின்று இரத்தஞ் சொரிய வாளினாலே துளைத்து உன்னுடைய சிரசையும் யான் அறுப்பேன்; இங்ஙனமன்றி என்னை வசைகூறிய நாக்கினோடு இருப்பாயா? ஆயினும், குருகுலத்திலே ஒருவன் தன் புத்திரனுடைய அரிய உயிரைக் கவர்ந்தான் என்று தேவர்கள் சிரிப்பார்களே என்பதுபற்றி உன்னைத் தண்டியாது விடுகின்றேன் எ-ம்.

௧௩௦. உலகமெங்கும் உள்ளாரால் புகழப்படுபவராகிய கிருஷ்ணருக்கு, அவர் தாம் இங்கே அப்பாண்டவர்கட்கு உதவியான தூதர் என்பதனால் நான் உதவியானேன் என்று நினைத்து, நீ என்னை நெருக்கினையே, மாட்சிமை பொருந்திய தவத்தினையுடையார்க்கு உதவியாகிய பெரிய தருமத்தையும் புகழையும் ஆண்மையையும் வளர்க்கின்ற பாண்டவர்களுக்கே நான் உதவியானால், முடிகளையுடைய அரசர்கள் என்னைப் பழிப்பார்களா? எ-ம்.

கிருஷ்ணரைப் பாண்டவருடைய தூதரென்பது குறியாது அவருடைய பெருந்தகைமையையே குறித்து நான் உபசரித்தேன்; அங்ஙனமாக நீ விபரீதமாகக்கொண்டு என்னை வைதாய்! இனி எனக்குப் புத்திரரேயாகிய இருமைத்தீருள்ளும், தருமம் முதலியவற்றால் மிகச் சிறந்த அப்பாண்டவர்கட்கே நான் உதவிசெய்தேனாயின், அதனாற் படும் இழுக்கு என்னையோ என விதுரன் கூறினான் என்பது இதன்றாற்பரியம்.

௧௩௧. முன்னரே இருவராகி இரண்டு மல்லர்களையும் பொருத கரிய கிருஷ்ணர் தன்னுடைய வீட்டிலே வந்து இரண்டு நாள் இருந்ததற்கு எண்ணில்லாத தவத்தை அடைந்தவனாகிய விதுரன், இரண்டு வாக்குக் கூறேன்; இனிப் போரிலே நின்று கொடிய அம்பைச் செலுத்தேன் என்று சொல்லி, இரண்டு விற்களும்போல உயர்ந்த தன் வில்லை வேறாகிய இரண்டு துண்டுபடும் வண்ணம் வெட்டினான்.

முன்னர், குருகுலத்திலே யொருவன் மைந்த ருயிரை வௌவினு னென்ன வானவர் நகைப்பரே என்று கூறிய யான் இனிப் பாண்டவருக்கு உதவி செய்யினும், அச்சொற் பிறழ்ந்து நின்னைக் கொல்லுமாறு வில்லெடேன் என்பான் 'சொல்லிரண்டு புகலேனினிச் சமரினின்று வெங்கணை தொடேன்.' என்று கூறி, அது செய்யாமைக்கு இலச்சினையாகத் தன் வில்லையும் முறித் தானென்க. இரண்டு வில்லாவன திருமாலின் சார்ங்கமும் சிவபிரானது பினாகமுமாம். இரண்டினும் என்புழி இன்னுருபு ஒப்புப்பொருளில் வந்தது. உம்மை முற்று. இக்கருத்தறியாதார் இன்னுருபை எல்லைப்பொருட்டாக்கிப் பொருள் கூறுப. வருஞ் செய்யுளில் "அச்சுதன் சந்தவில்லு மரன்வில்லு மொப்பதொரு தாமவில்லினை" எனக் கூறுதலினாலும், "கண்ணுதலான் றன் சிலைக்குங் காகுத்தன் றன்சிலைக்கும், எண்ணுங்கா லேரா மெழிற்சிலை" எனப் பாரதவெண்பாவிற் கூறப்பட்டிருத்தலினாலும் அங்ஙனங் கூறுதல் பொருந்தா தென்க. கஞ்சன் சபையிற் கண்ணபிரானும் பலராமனுஞ் சென்ற சமையத்தில் அக்கஞ்சனால் மற்போர் புரிந்து கொல்லும்படி தம்மீது ஏவப்பட்ட சாணூரன் முஷ்டிகள் என்னுமிருவரையும் கண்ணபிரானும் பலராமனும் மற்போர் புரிந்து கொன்றனரென்பது சரித்திரமாதலின் "மல்லிரண்டினையும் இருவராகி முன் மலைந்த காளமுகில்" என்றார்.

௧௬௨. அந்த வில்லை முறித்த வில்வீரனாகிய விதுரன் தன்னுடைய மாளிகைக்குச் செல்ல, ஆங்கு நின்ற அரசர்கள் விட்டுணுவினுடைய அழகிய வில்லையுஞ் சிவபெருமானுடைய வில்லையும் ஒப்பதாகிய ஒளிபொருந்திய ஒரு வில்லை முறிப்பதோ, இனி வில் வீரர்களுள் முன்னாக எண்ணப்படும் வில்லினையுடைய அருச்சுனன் வந்து போரிலே நெருங்கினால் எந்த வில்வீரன் எதிரே நிற்கும் வீரன் என்று சொல்லிப் பரிதபித்தனர் எ-ம்.

௧௬௩. அப்போது உயர்ந்த பாட்டனாராகிய வீட்டுமர் மனமழிந்து, முகில்களெல்லாஞ் சொரிகின்ற மழை யொழுக்குப் போன்ற பல அம்புகளைச் செலுத்திப் போரிலே மதிக்கப்படுகின்ற வில்லையுடைய வீரனாகிய விதுரனைக் குற்றங்கூறிய நீ, தனியே பகைவர்களை எவ்வாறு வெல்லுவாயோ? இனிப் பஞ்சபாண்டவர்களே பூமி முழுதையும் ஆளும்படி செய்வித்தாய், உன்னுடைய புகழெல்லாம் அழிந்தன என்று சில மொழிகளைக் கூறினார் எ-ம்.

நிச்சயம்பற்றி, அழியும் என்பதை அழிந்தது என இறந்தகாலத்திற்கூறினர்.

௧௬௪. பாட்டனார் அன்பினோடு கோபித்து இவ்வாறு சிலவற்றைக் கூற, அழிவை யடையும் பௌத்திரனாகிய போர்வலிமையையுடைய துரியோதனனும் அவரை நோக்கி விதுரனேயன்றி வேறு



வில்லில் வலிய வீரர்கள் இல்லையோ? போரிலே மிகுந்து எழுகின்ற சேனைகளோடு பஞ்சபாண்டவர்களும் இறக்குமாறு பொரவும், பரணியைப் பாடுவிக்கவும், கொடைக்குணமுள்ளவனும் அங்கநாட்டினுக் கரசனுமாகிய உயர்ந்த கன்னனுடைய நீண்ட வில்லொன்றுமே அமையும் எ-ம்.

பரணியென்பது வெற்றிபெற்ற அரசர்மேல் விதிப்படி வித்துவான்களாற் பாடப்படுவதோர் பிரபந்த விசேஷம்.

௧௬௫. நீரும் இருக்க. நெடிய வில்லைக்கொண்ட கையினையுடைய அத்துரோணாசாரியரும் இருக்க, ஒப்பில்லாத அவருடைய புத்திரனும் இருக்க, வலிமையையுடைய அரசர்கள் இவ்வாறு திரண்டிருக்க, நீண்ட வேய்ங்குழலிருக்கும் உதடுகளையுடைய இடையனுக்கு எதிரே சென்று நல்ல விருந்தைச் செய்த விதுரன் நம்மை வெறுத்தானென் வில்லை முறித்தாலென் சமர்செய்யாது போயிருந்தாலென் நம்மோடு எதிர்ந்து போர் செய்வார் யாவர்? [ஒருவருமில்லை யென்றபடி] எ-ம்.

சிறப்பும்மைகள் விகாரத்தாற் றொக்கன. என் என வருவனவற்றிற்கு முன்னர் "நீ வெறுக்கிலென்" என்புழி உரைத்தவாறுரைக்க.

௧௬௬. என்று துரியோதனன் சொல்ல, வலிமை பொருந்திய கன்னனுஞ் சொல்லுவான்:—பகைத்த அருச்சுனனை எதிர்ந்துசென்று கோபித்து உயிர்கொள்ளும் பொருட்டு நானே இருக்க, அது செய்தலில் மிக வல்லவர்கள் யார் என்று சொல்லுவீர்! கன்றினாலே விளாம்பழத்தை எறிந்த கள்வனாகிய இக்கிருஷ்ணனே போரிலே நின்று தேரை நன்றாகச் செலுத்தினாலும், என்னுடைய போரில் வலியகொடிய வில்லினது ஆண்மையை அந்நாளிற் காணலாம் எ-ம்.

இச்செய்யுளில் "அங்கர் பூபதி" என்றது அடுத்த செய்யுளில் "என்றிவையுரைசெய்தான்" என்பதனோடு முடியும். கஞ்சன் ஏவிய கபித்தாசுரனென்பான் விளாமரத்தின் வடிவுகொண்டு கண்ணபிரான்மீது வீழ்ந்து அவரைக் கொல்ல நினைத்து அவர் வரும் மார்க்கத்தில் நிற்றலும், ஆங்கு வந்த கண்ணபிரான் அவ்வஞ்சனையை யுணர்ந்து, தம்மை முட்டிக் கொல்லும் வண்ணம் அச்சமையத்திற் பசுக்கன்றின் வடிவமாய் வந்துநின்ற வற்காசுரனைக் கால்களிற் பிடித்து விளாமரத்தில் எற்றி இருவரையுங் கொன்றனரென்பது சரித்திரம்.

௧௬௭. தேவர்களே பகைத்துக் கோபித்தாலும் என்னுடைய ஓரம்பினாலே அழிவர்; இது சத்தியம். நான் போரிலே கொடிய நாகாஸ்திரத்தைச் செலுத்தினால், அருச்சுனன் உயிரோடு திரும்

பிச்செல்வானே? இவ்வுலகத்திலே இரண்டுதிறத்தாருள்ளும் எனக்கு நிகர்சொல்ல ஒருவரும் இல்லை என்று இந்த வசனங்களை, தேவர்களுடைய கற்பகவிருட்சமும் நாணும்படி கொடையினால் உயர்ந்த கன்னன் சொன்னான் எ-ம்.

கற்பகம் வடசொல்; வேட்டன வேட்டன வெல்லாம் வரைவின்றி யுதவும் ஒரு தேவதரு.

கஙஅ. ஒரு கலக்கமும் இல்லாத வீட்டுமர், அக்கன்னனை நோக்கி, எல்லாத் திக்குகளிலும் வந்து சூழ்ந்த அசுரர்களை, சூரியன் வந்த ஒரு திக்கின்கண்ணே இருள்போல ஓட்டெடுக்கும் வண்ணம் பொருது, தேவர்களுக்கு இராச்சியத்தைக் கொடுத்துவந்த வெற்றித் தன்மையையுடைய அருச்சுனனுக்கு நீ நிகரோ, வெண்மையாகிய சந்திரனுக்குச் சுக்கிரன் நிகராமோ, நீ அசைவில்லாத விற்றொழி லிலும் வல்லாயோ, என்று கூறினார் எ-ம்.

இங்கே தானவரென்றது நிவாத கவசர் காலகேயரை; அருச்சுனன் இந்திரன் பொருட்டுத் தானவரை வென்ற வரலாற்றை நிவாத கவசர் காலகேயர் வதைச் சருக்கத் திட் காண்க. ஒளியில், சந்திரனுக்கும் சுக்கிரனுக்குமிடையே எத்துணைப் பேதமுண்டோ அத்துணைப் பேதம் அருச்சுனனுக்கும் கன்னனுக்குமிடையே யுண்டென்பதாம். இது எடுத்துக்காட்டுவமையணி.

கஙகூ. அவ்வீட்டுமர் கூறிய வசனந் தன்னுடைய செவிகளிற் சேரவும், கன்னனானவன் மிகச் சீறி, அவரை நோக்கி, இவனுடைய பக்கத்திலே இருந்து போசனத்தை உண்ணுகின்ற நீ இவனோடு சிலர் பகைத்தால் அவர்களுடைய புகழையும், ஆண்மையையுஞ் சொல்லுவாய், உலகத்தாரெல்லாம் ஒன்றுபட்டு வந்தாலும் என்னோடு பொருவாராயின், எதிர்ந்து பொருமாறு விடக்கடவாய்; சிவபெருமானும் என்னுடைய அம்பை அஞ்சுவார் என்று கூறினன் எ-ம்.

"அச்சக் கிளவிக் கைந்து மிரண்டும்" என்பது சூத்திரமாகவின், "கணையை அஞ்சும்" என்றார்.

கசO. பின்பு வீட்டுமர் கன்னனோடு ஒரு எதிர் மொழியையும் பேசாதவராகி, யுத்தம் நடக்கும் அக்காலத்துக் கேடிய போர்முனையிலே பொருதலைக் காண்டோம் என்று சொல்லி, எழுந்து தனியே சென்றார். துரியோதனனும் வலிமை பொருந்திய அரசர்களுக்கு அனுமதி கொடுத்தான். இனி, பசிய துளசிமாலையையுடைய கிருஷ்ணர் தம்மோடு கலந்த விதுரனுடைய வீட்டிலே சென்றமையைக் கூறுவாம் எ-ம்.



கசக. பொருகின்ற வில்லை முறித்த வீரனாகிய விதுரன் தன்னுடைய கோயிலின்கட் சென்று, சக்கரபாணியாகிய கிருஷ்ணரை வணங்கி அங்கே இருக்க, அக்கிருஷ்ணர் அவனை நோக்கி இந்தப் பெரிய பூமியிலே இரண்டு உண்டு என்று வியந்து கூறப்படும் விற்களுள், ஒரு வில்லை நீ முறித்த கோபம் என்னையோ கூறுதி என்றார்.

இருசிலை என்றது அவ்விதுரன் வில்லையும் அருச்சுனன் வில்லையும் என்க. விதுரன் வில்லிற்கு அருச்சுனன் வில்லே சமானமாகுமென்பது "முந்த வில்லியரிலெண்ணும் வில்லுடைய விசயன்வசு தமரில் முடுகினால், எந்த வில்லியெதிர் நிற்கும் வில்லி இனி" என அரசர்கள், விதுரன் தனது வில்லை முறித்த சமையத்திற் கூறியவாற்றானும் விளங்கும்.

கசஉ. [விதுரன் அவரை நோக்கிக் கூறுகின்றான்:—] ஒருவன் ஆகவேண்டியவைகளை நினையானாயின், அமைச்சர்களுடைய சொல்லையுங் கேளானாயின், கெடுவதனையுங் கருதானாயின், சம்பவிப்பதனையும் உணரானாயின், நாக்கினைக் காக்கானாயின், அவனுக்காகப் போரிலே சென்று இறப்பது குற்றமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்களென்றான் எ-ம்.

உலகமென்பது உயர்ந்தோர்மாட் டாதலின் சகத்துளோரென்பதற்குப் பெரியோர் எனப் பொருள்கொண்டாம். கொண்டது விடாமை என்னுந் துர்க்குணம் பூண்டவனும் பெரியோர்சொற் கேளாதவனும் துஷ்டனுமாகிய துரியோதனன் பொருட்டு யுத்தகளத்திற்சென்று பொருது மாள்வதால் வரும் பயன் யாதுமில்லையென விதுரன் கூறினனென்க.

கசங. பூமியின்மேல் வாழுகின்ற மனிதர்கள் தமக்குச் செல்வம் வந்து மிகுந்த காலத்திலே கடவுளையுஞ் சிறிதும் விரும்பார்கள்; சொல்லற்பாலனவற்றை அறிந்து சொல்லார்கள்; சுற்றத்தாரையும் மித்திரரையும் பாரார்கள்; வெல்வதனையே நினைப்பதன்றி, வெம்மையாகிய பகைவர் வலிமையுடையவர் என்று எண்ணார்கள்; வலிய தீவினை விளைதலையும் அறியார்கள் எ-ம்.

"மண்ணின்மேல் வாழுமாந்தர்" எனப் பொதுப்படக் கூறினாரேனும் இங்கே மாந்தர் என்றது அற்பர்களையேயாம். "அற்பரானவர்க்குச் செல்வமல்லது பகை வேறுண்டோ" என்றார் பரஞ்சோதியாரும். அற்பர்களிடத்துச் செல்வம் வந்துற்ற காலை இத்தீக்குணங்களுண்டாகின்றன வென்பது "சிறியரே மதிக்குமிந்தச் செல்வம் வந்துற்ற ஞான்றே, வறியபுன் செருக்கு மூடிவாயுளார் மூகராவார், பறியணி செவியுளாரும் பயிறரு செவிடராவார், குறிபெறு கண்ணுளாருங் குருடராய் முடிவரன்றே" எனப் பிறர் கூறியவாற்றானும் பெறப்படும்.

கசச. நியானிக்கவும் வணங்கவும் எட்டாத நீர் இங்கே எழுந் தருளப் பெற்றும் நும்முடைய வசனமாகிய இதுவே தனக்குத் தகுதி என்று சுற்றத்தாரோடு கூடிவாழக்கருதாதவனுகிய கடியகோப மென்னும் அக்கினி பொருந்திய மனத்தையுடைய துரியோதனன், தன் செருக்கினுற் கூறிய இழிவாகிய சொல்லு எனக்கு இசையாமை யினுல் நானும் பெரிய வில்லை முறித்தேன் என்று விதுரன் கூறினுன்.

கனல் - கோபாக்கினி; "சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி" என் ருர் நாயனுரும். "மனத்தினுல்" எனவும் பாடம்.

கசரு. கிருஷ்ணரும் மகிழ்ந்து அவனைப் பார்த்து, துரியோத னன் அரிய சேனைகளோடு சென்று சமர்க்களத்திற் சாரும்பொழுது நீ அவனுக்குப் பக்கத்திலே நில்லாதொழிந்தால், உன்னுடைய அன் பான புத்திரராகிய பாண்டவர் தாயபாகத்தையுஞ் செல்வத்தையும் பூமி முழுவதையும் பெற்றுக்கொள்ளுவார்களன்றே எ-ம்.

கண்ணபிரான் தமது கருத்து முற்றுப்பெறுமென்பதை யுணர்ந்தன ராதலின் மகிழ்ந்து நோக்கினர். இச்செய்யுளில் நோக்கி யென்றது மேல் 147-ம் செய்யுளில் என்றருளி என்பதனேடு குளகமாகத் தொடரும்.

கசசு. நறிய நெய்யைச் சொரிந்து மிகுந்த விறகுகளை யடுக்கினு லும், காற்று வந்து சேராதபொழுது கடிய அக்கினி பற்ற வலியதோ, மூளாதன்றே, அதுபோல விபூதியையணிந்த சிவபெருமான்போன்ற உன்னுடைய கையின்வில்லு முறிந்ததாயின், கோபம் பொருந்திய வேற்படையை யுடைய துரியோதனனுஞ் சேனைகளும் யமலோகத் திற் சேருதல் சத்தியம் எ-ம். இந்தனம்-விறகு. [வடசொல்.]

கசஎ. சொல்லப்பட்ட உவமையில்லாத கேள்வியின் பயனை அனுபவிக்கின்ற மனத்தினை யுடையாய், துரியோதனன் உன்னை இழித்துக் கூறியவற்றையெல்லாம் பொறுத்துக்கொள்; என்று கிருஷ் ணர் சொல்லியருளி, அந்நகரத்திலே கொடை, அருள், அழகு, ஆண்மை என்னும் இவைகளிற் சிறப்பித்துப் பேசப்படுங் கன்னனைப் பெற்ற அன்பினையுடைய குந்தியினது கோயிலின்கட் புகுந்தார் எ-ம்.

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ"மாதலின், "புரையில் கேள்வி" யென்ருர். கேள்வி யறிவிற் சிறந்தனை யாதலின், இத்துரியோதனன் தன் அறியாமை காரணமாக நின்னை வைதமையைப் பொருட்படுத்தாதொழிக வென்ருரென்க. பஞ்சபாண்டவர் வனவாசஞ் செய்யச் சென்றகாலைத் தமது தாயை அத்தினபுரியில் விடுத்துச் சென்றனரென்பது "அன்னையைச் சுபலன்



பாவை யருகுற விருத்தி" என முன்னர்க் கூறப்பட்டமையான் விளங்கும். கன்னியாயிருக்கும்போது கன்னனைப் பயந்தாளென்பதைக் குறிப்பார் குந்தி யை ஈண்டுக் கன்னி யென்ருர்.

கசஅ. வட்டமாகிய பூரண சந்திரன்போன்ற குற்றமில்லாத முகத்தையுடைய குந்தியும், திண்ணிய வலிமையையுடைய மருகராகிய கிருஷ்ணரை எதிர்கொண்டு போய்க்கண்டு, வெள்ளிய திரைகளையும் மகரங்களையுமுடைய சமுத்திரத்திலேவிரிந்த நீரைமொண்டுதோன்று கின்ற முகிலைக்கண்டு மகிழுகின்ற குளிர்ந்த பசிய மயிலை நிகர்த்தாள்.

முகிலைக் கண்ட மயில்போலப் பெருமகிழ்ச்சி யடைந்தாள் என்பது கருத்து. கொண்டல் - கண்ணபிரான்; பசுந்தோகை - குந்தி; கிருஷ்ண ரது தந்தையாகிய வசுதேவருக்குக் குந்தி சகோதரிமுறை பூண்டுள்ளவளாத லின், இவர் அவளுக்கு மருகரானுர்.

கசகூ. அக்குந்தியானவள் நான் இருக்கும் வீட்டிலே நீர் வந் தது என்னுடைய பெரிய தவத்தினுலேயே என்று துதித்து, காட்டி லிருக்கின்ற தன் புத்திரர்களைக் கண்டவள் போன்றவளாகி, தேன் தங்கிய துளசிமாலையையுடைய அவரது செம்மையாகிய பெரிய முகத் தைப் பார்த்து முகில்களுறையும் மதில்களையுடைய இந்தப் பழைய ஊரிலே நீர் வந்தது என்னை சொல்லியருளும் என்ருள் எ-ம்.

"மாதவமென்றெண்ணி" என்பது பாடபேதம்.

கரு0. கிருஷ்ணர் அவளை நோக்கி, உன்னுடைய பெரிய புத் திரர்கள் நெடிய நீர்வளம் பொருந்திய நாட்டைப் பெற விரும்பி என்னைத் தூதுசெல்லுமாறு சொல்ல, வலிமையையுடைய துரியோ தனனது உள்ளக்கருத்தை அறியும்படி வந்தேன்; அவனும் யமன் விரும்புமாறு போர்த்தொழிலைச் செய்வேன் என்றுன்; இனிப் பல வற்றைக் கூறியென்னை இரு திறத்தாரும் நாளைக்கு எதிர்க்கவே நேர்ந்தது என்று கூறினுர் எ—ம்.

கருக. என்று சொல்ல, அது கேட்ட குந்தியானவள் மிக இரங்கி, எதிர்ந்த யுத்தகளத்திலே போரில் வெல்லுவார் யாரோ ஊழினுலே இறப்பார் யாரோ என்று மனம் வாடி வருந்தினள்; அன்றைக்குக் கிருஷ்ணர் அவளைத் தேற்றிச் சொல்லுவார் எ-ம்.

ஆழியான் - சக்கரப்படையை யுடையவன்; பாற்கடலிற் பள்ளிகொள் பவனெனினுமாம்.

௧௫௨. நான் அதன் இயல்பைச் சொல்லக்கேள், நீயும் உன்னுடைய தந்தையார்வீட்டிலே கன்னியாகி இருந்து வாழுங்காலத்திலே, ஒரு முனிவன் வந்து உபதேசித்த ஐந்து மந்திரகளுள் ஒன்றினாலே சூரியனை நினைத்தாய்; அப்பொழுதே அவனும் வந்து உன்னெதிரே நின்றான் எ-ம்.

சூரன்-சூரியன். ஒரு முனிவன் என்றது துருவாசரை. துருவாசமுனிவர் குந்திபோஜனது மாளிகைக்கு வர, அவ்வரசன் அம்முனிவருக்குக் குற்றேவல் செய்யும்படி தன் புதல்வியாகிய குந்தியைப் பணிக்க, குந்தி முனிவர் மகிழும்படி வேண்டிய குற்றேவலனைத்தும் குறைவறச் செய்துவந்தாள். துருவாசர் உவகையுற்றுக் கன்னிகையான குந்திக்குச் சில மந்திரங்களை உபதேசித்து அம்மந்திரங்களை வேண்டிய சமையத்தில் உச்சரித்தால் மனத்தில் நினைத்த தேவர்கள் வருவார்களென்றும், அவரருளாற் புத்திர பாக்கியத்தைப் பெறலாமென்றும் அவளுக்குக் கூறிச்சென்றார். பெண்கட்கு இயல்பாகவுள்ள பேதைமையின்பாற்பட்ட குந்தி கன்னிமாடத்திலிருந்துகொண்டு சூரியனை நினைத்து ஒரு மந்திரத்தை உச்சரிக்க ஆதவன் வந்து அவளைக் கூடினன். அங்ஙனம் பிறந்தவனே கன்னன்.

௧௫௩. அங்கே சூரியனுடைய அருளினாலே ஒரு கணப்பொழுதினுள்ளே காதல் உண்டாக அவனுடன் கூடி ஒரு புத்திரனைப்பெற்ற பின்பு, அங்ஙனம் பெற்றமையை உலகறியில் வசையாகுமென்று பயந்து நீ, நீரிலே மிதத்தலையுடைய ஒரு பேழையின்கண்ணே இட்டு ஆற்றிலே விட, அப்போது அந்த ஆறும் அப்பிள்ளையைக் கங்காநதியின்கட் சேர்த்தது எ-ம். பேழை-பெட்டகம்.

௧௫௪. உன்னுடைய அன்பார்ந்த அப்புத்திரனை, திருதராட்டிரனுடைய அழகிய தேர்ப்பாகனாகிய அதிரதன் வந்து கண்டு எடுத்துக்கொண்டு தன் புத்திரனென்று வளர்த்த காலத்திலே, சூரியன் இவனை எல்லாரும் கன்னன் என்று அழைக்குக என்று சொன்னான்; அவனை வளர்த்த பிதாவும் ஆகாயத்திற் சொன்ன பெயரே தக்கது என்றான் எ-ம்.

௧௫௫. வண்மையாகிய பாம்புக்கொடியை உயர்த்திய துரியோதனன், குணத்தினையுடைய அப்புத்திரன் பரசுராமரிடத்திற் பயின்ற படைத்தொழில்கள் பலவற்றையுங் கண்டு, நண்பினோடு தன்னுடைய உரிமையெல்லாங் கொடுத்துப் பெரிய முடியையுஞ் சூட்டி அவனுக்குந் தன்னோடு வாழும் வாழ்க்கையைக் கொடுத்தான். திண்மையாகிய குதிரை பூட்டிய தேரையுடைய மற்றுள்ள வலியவர்களுள் அவனை வெல்ல வல்லவர் யார்? எ-ம்.



௧௫௬. அந்த உன்னுடைய புத்திரன்றானே அரிய வில்லையுடைய அருச்சுனனோடு எதிர்ந்து வந்து போர்செய்யநின்றான்; உடற்பிறப்பாகிய உறவையும் அறியமாட்டான்; ஆதலால் நீ முற்சம்பவமாகிய இதனை மனத்தில் ஐயந்தீர்ந்து தெளியுமாறு சொல்லிக், கொத்தவிழ்ந்த மலர்மாலையையுடைய அக்கன்னனை உன்புத்திரரோடு விரைவிற் கூட்டுவாயாக எ-ம்.

கொந்து-மெலித்தல்விகாரம். அந்த என்பது பண்டறிசுட்டு.

௧௫௭. [நீ அவனை நோக்கி] நறுமணம் விரிந்த மாலையினோடு பெரிய இரத்தின முடியைக் கவித்துக்கொண்டு, உன்னுடைய தம்பிமார் ஐவரும் தனித்தனியே ஏவல்செய்ய, பூமிமுழுதையும் நீயே ஆளலாம், துரியோதனன் முதலியோரை விட்டுவருக என்று கூறும்போது தேவர்களுடைய கற்பகச் சோலைபோன்ற கொடைக் கையையுடைய கன்னன் உன்மொழியை அங்கீகரியாது மறுத்தானானால்.

ஆகில் என்னும் வினையெச்சம் வருஞ் செய்யுளில் வேண்டுக என்னும் வியங்கோண்முற்றோடு முடியும்.

௧௫௮. அக்கினிதேவன் போசனத்தை உண்ணும்பொருட்டுக் காண்டவமென்னும் காட்டை எரித்த நாளிலே, அவ்விடத்தினின்று நீங்கித் தன்பாற் சென்ற சருப்பத்தைக் கன்னன் அம்பாகக் கொண்டான்; ஆதலால், அக்கன்னன், நீண்ட வில்லையுடைய அருச்சுனன் மேல் மறுகணையைத் தொடுக்காதபடி ஒரு வரத்தை அவன்பால் வேண்டிக்கொள்ளுக என்று சார்ந்தவர்களுக்கு நன்மையை எண்ணுபவராகிய கிருஷ்ணர் சொன்னார் எ-ம்.

முன்னர் அக்கினிதேவன் தமக்கும் (கிருஷ்ணருக்கும்) அருச்சுனனுக்கும் எதிரே வேதியர் வடிவத்தோடு சென்று "உண்டு வெம்பசி பெரிது வல்லேயெனக்கோதன மிடுக" என்று வினவி, தாம் உடன்பட்டமை கண்டு, சுவரூபத்தோடு வெளிப்பட்டுக், காண்டவத்தை யெரித்தற்கு இந்திரனாலே தீங்கு வாராமல் உதவி செய்யும்வண்ணம் வேண்டிக்கொண்டானாதலின், "எரியமுதருந்தக் கானமெரித்த நாள்" என்றும், அக்காட்டிலிருந்த சருப்பமொன்று தப்பியோடி அதனை எரித்தற்கு உதவிசெய்த அருச்சுனன்மேல் வைரங்கொண்டு, அவனைக் கொல்ல நினைந்து கன்னன்பாற் சென்று கணையாயிருந்ததாகலின், "அகன்றுபோனவரவினை யங்கர்கோமானாசுகமாகக் கொண்டான்" என்றும், இனிப் போரிலே கன்னன் அக்கணையைச் செலுத்தின் முதற் செலுத்துகையினாலே அருச்சுனன் இறவாவண்ணங் காத்தல் தம்முடைய உபாயத்தால் அமையுமாதலின், மறித்துஞ் செலுத்தாதபடி வரம் வேண்டுக என்பார் "வரி

சிலை விசயன் றன்மேல் மறுகணை தொடுக்காவண்ணம் ஒரு வரம் வேண்டுக' என்றுங் கூறினர். மறுகணை என்றது முன்னொருநாற் றொடுக்கப்பட்டு இலக்கை ஊறுசெய்யாது விலகித் தெய்வத்தன்மையினாலே தொடுத்தோன் கையிற்றானே புகுந்து மறுத்துந் தொடுக்கப்படுவதாகிய கணை என்றவாறு.

௧௫௯. [குந்தி அவனை நோக்கிக் கூறுவாள்:-] நறுமணமார்ந்த மாலையையுடைய கன்னன் என்னுடைய புத்திரனே என்பதை அக் காலத்தில் எனக்குச் சொன்னீராயின், இக்கன்னனை அவனோடு சேர விடேன்; நீர் சென்று உயிரை ஒழிக்கும்படி போரை உண்டாக்கி விட்டுப், பின்பு இன்றைக்கு எனக்குச் சொன்னீர்; ஐயா! யாது நினைந்து யாது செய்தீர்!! எ-ம்.

௧௬௦. காண்டவமென்னுங் காட்டில் உண்டாகிய அக்கினியி னின்றும் அஞ்சியோடிய சருப்பமாகிய கடிய கணையை நீர் கூறியபடி வரம் வேண்டுதலினாலே விலக்கினேனாயின், சூரியனுடைய புத்திரன் இறப்பான்; இனி அவ்வாறு சென்று நடாதிருப்பேனாயின், இந்திர னுடைய புத்திரன் இறந்துபடுவான்; இங்ஙனமாதலின் நான் அடைந்த கொடுமை நல்லதாயிற்று! என்று சொல்லி இரங்கி விழுந் தாள்; எத்துணைப் பாடுபட்டாள். எ-ம்.

வான்பட்ட புரவித் தேரோன்-ஆகாயத்திற் பொருந்திய குதிரைபூட்டிய தேரையுடைய சூரியன். நன்று-இங்கே தீது என்னும் கருத்தில் வந்தது. எவ்வாற்றானும் என் புதல்வர்களுள் ஒருவர் படுதல் நிச்சயம்; இருதலைக் கொள்ளியெறும்பு போலானேனே, இதற் கென்செய்வேனென இரங்கினா ளென்றபடி.

௧௬௧. தேக்குக்களையும் அகில்களையும் சந்தனங்களையுந் தள்ளிச் சிந்துகின்ற நீர் பொருந்திய நதிசூழ்ந்த செல்வத்தினையுடைய மேன் மை தங்கிய குந்திதேசத்து அரசனுடைய மகளாகிய குந்தி பதறி அழுகின்ற கொடுமையைக் கண்டு, மேலே குந்தி உறிகடோறும் வெண்ணெயையும் தயிரையும் உட்கொண்ட வாயையும் நாபிக்கமலத் தையுமுடைய கிருஷ்ணர் பின்னும் அவளுடைய மனத் தளர்ச்சியை நீக்கினார் எ-ம்.

தேக்கு + உந்தி, கோ + குந்தி, மீ + குந்தி, வாக்கு + உந்தி எனப் பிரித்துப் பொருள் கொள்க. வாக்கு-ஆகுபெயர். குந்திபோசன் தத்தபுத்திரியாதலின் இவள் குந்தியெனப்படுவள். இவளது இயற்பெயர் பிரதை. "—சேயாறு, தேக்குந்திச் சந்திடறிச் சேயணைக்குந் தண்பணைசூழ், மாக்குந்திக் கோமான் மகள்" என்பது பாரதவெண்பா.



௧௬௨. படம் பொருந்திய ஐந்து தலைகளைக்கொண்ட நாகம் போல ஐக்கியத்திற் சிறந்த ஐவரும் இறத்தல் நல்லதோ? கன்னன் ஒருவனே இறத்தல் நல்லதோ? உய்தலரிய யுத்தத்திலே ஒருவர் உயிர் நீங்கினாலும் மற்றைய நால்வருள் ஒருவரும் உய்யார். இங்ஙனமாத லின் வருந்துகின்ற துன்பம் நீங்கி, யான் கூறியவாறு செய்யும் பொருட்டுச் செல்வதே கருமம் என்று கூறினர் எ-ம்.

ஐவரும் ஐந்தலைநாகத்தின் றலைகளைப்போல மிகுந்த ஐக்கியமுடையராத லின் ஒருவர் இறந்தவழி மற்றையோர் உய்யார்; ஆகவே நீ சென்று கணை விலக்கியவழி இறப்பான் கன்னனொருவனே; விலக்காதவழி ஐவரும் இறந்து படுதல் ஒருதலை; ஆதலின் நீ, ஒருவன் இறப்பானே என்று வருந்துதலைவிடுத்து, ஐவரையுங் காப்பதே தகுதியெனத் துணிந்து கணைவிலக்குதல் வேண்டும் என்பது இதன்றாற்பரியம். போயின் என்பது போய் எனத் திரிந்து நின் றது; உம்மை தொக்கது. துயரம் ஆறியென்றேனும் மாறியென்றேனும் பிரித்துப் பொருள்கொள்க. "ஐவர்க்கு மோருயிரே யைந்துருப்பு மாதலால், ஐவருஞ் சாகை யழகியதோ—வைவேல், ஒருவனுமே சாகையழகன்றோ வென்றான், திருமகள்சேர் மார்பன் சிறந்து." என்றார் பெருந்தேவனாரும். "நடப்பதே நன்மையென்றான்" என்றும் பாடம்.

௧௬௩. நஞ்சினும் பெரிய முகிலினும் கரிய மேனியையுடைய கிருஷ்ணரும் இவ்வாறு அவளைத் தேற்றி, மீண்டும் பெரிய தவத்தின் மிகுந்த விதுரன் வாழும் வீட்டிலே சேர, சூரியனானவன் சக்கரவாள மலையிற் சேர்ந்து, மேற்குத் திசையிலுள்ள அஞ்சன மென்னும் பெரிய யானையினுடைய நெற்றியிலிட்ட செந்நிறமான திலகத்தை நிகர்த்தான் எ-ம்.

சூரியன் அஸ்தமித்தான் என்றபடி. குறுகினன்போன்று என்பதில் விகுதி பிரித்துக் கூட்டப்பட்டது. நீலம் என்பது எதுகை நோக்கி நீளம் என நின்று அஞ்சனம் என்னும் யானையை உணர்த்திற்று.

௧௬௪. அச் சக்கரவாளகிரியிற் சேர்ந்த சூரியனானவன், உலகத் திலே நான்கு திசைகளிலுமுள்ள சதுர்வேதஞானிகளுந் துதிக்கும் புகழ்பொருந்திய மாலைக்காலமென்னும் அழகினையுடைய மங்கையான வள் இருக்கும்பொருட்டு, வருணதேவன், ஒப்புப் பொருந்துத லில்லாத செம்பொன்னாற் செய்த மண்டபத்தின் மேலே இட்ட ஒளி யை வீசுகின்ற இரத்தினாசனத்தை நிகர்த்தான் எ-ம். ஆதி-சூரியன்.

௧௬௫. மாட்சிமை பொருந்திய துறைகளிலே தாமரைகளாகிய குலமகளிர்கள், தம்மைக்கொண்ட மெல்லிய சிறகுகளையுடைய வண்டு களாகிய நாயகர்களுக்கு இடங்கொடாமல் முகம் கூம்பிப் பிரிந்து

நிற்ப, அதனைக் கண்டு எதிரே நின்ற ஆசையையுடைய செவ்வாம்பல்களாகிய கணிகைப் பெண்கள் தங்கள் வாய்திறந்து நின்று அழைத்தார்கள் எ-ம்.

மாலைக்காலமாதலும் தாமரைமலர்கள் குவியச் செவ்வாம்பன்மலர்கள் விரிந்தன என்றபடி. வண் + துறை எனப் பிரிக்குக.

௧௬௬. காடுகளெல்லாவற்றினும் மலர்ந்த முல்லைமலர்கள் ஆகாயத்தின்மேல் எழுந்தமைபோல விளங்குகின்ற நட்சத்திரங்களெல்லாம் ஆகாயத்திலே நிரை நிரையாக மலர்ந்து தோன்ற, மன்மதனுடைய உற்சவத்தில் வைத்த வெண்மையான வெள்ளிக்குடம்போலச் சுத்தமாகிய நிலவையுடைய சந்திரன் கிழக்குந் திசையிலே வந்து தோன்றியது எ-ம்.

இக்கவியின் முன்னைய இரண்டடியும் நட்சத்திரங்களின் தோற்றத்தையும், பின்னையவிரண்டுஞ் சந்திரோதயத்தையுங் குறிக்கின்றன. கானெலாம் அலர்ந்தவென்றேனும், மலர்ந்தவென்றேனும் பிரித்துப் பொருள்கொள்க.

௧௬௭. சுத்தமாகிய இயல்பினையுடைய சந்திரன் உதிக்க, நாயகரைப் பிரிந்தவருடைய கண்களானவை காவிமலரையும் ஆம்பன்மலரையும் அழகிய கருவிளமலரையும் நிகர்த்தன. சேர்ந்த பெண்களினுடைய கண்கள் மீன்களை யெறிக்கின்ற ஏழு கடல்களையும் தாவுமியல்பினையுடைய மான்களையும், ஆசைபொருந்திய சகோரப்பறவைகளையும் நிகர்த்தன எ-ம்.

இனி, தூவியனிலவு எனப் பாடங்கொண்டு தூ + இயல் + நிலவு எனப் பிரித்து பரிசுத்தமான இயல்பையுடைய நிலவு எனப் பொருள்கொள்ளலும் ஒன்று.

௧௬௮. அவ்விராத்திரியிலே பாம்பின்படம்போலும் கடிதடத்தையுடைய மங்கையர்களும் நாயகர்களும் அன்புபெருகச் சயனங்களையடைந்து கலந்த வீதிகளையுடைய பெரிய பட்டினமெங்கும், கடல்போல உயர்ந்த ஓசையடங்கிய பின்பு, துரியோதனன் ஆலோசித்த இயல்பை இன்னதென்று இனிச் சொல்லுகின்றாம் எ-ம். கூர எய்தி விரவிய வீதி எனக் கூட்டுக.

௧௬௯. முற்பட்ட துரியோதனனது ஏவலினாலே அவனுடைய பிதாவும், தம்பிமாரும், கன்னனும், சகுனியும், மனத்திலே தெளிந்த கல்வியையுஞ் செழுமையாகிய புத்தியையும் உடைய மந்திரிமாரும் இருந்து ஆலோசனைகளை முழுதும் எண்ணும் பொருட்டு ஒரு மண்டபத்தின் கண் வந்து சேர்ந்தார்கள் எ-ம்,

இருப்பான் பானீற்று எதிர்காலவினையெச்சம்.



௧௭௦. செழுமையாகிய சந்திரன் போலுங் குடையினையுடைய துரியோதனன் தீமையில்லாத புத்தியில் வலியவர்களைப் பார்த்து மரங்களையுடைய காட்டிற் சென்ற பாண்டவர்களை மீட்டும் மேன்மைபொருந்த அழைத்து நாட்டை வேண்டுங்கள் என்று மூட்டிய கிருஷ்ணன் இங்கே தனித்து வந்தான்; நாம் செய்யத்தக்கது யாது சொல்லுங்கள் என்று கூறினான் எ-ம்.

௧௭௧. பொருகின்ற படைகளையுடைய புத்திரன் இவ்வாறு சொல்லத் திருதராட்டிரனும் அவனுக்கு இயையக் கூறுவான். பெரிய புலியானது வலையிலே அகப்பட்டால் வேடர்கள் விடுவார்களோ, உடனே கொன்றுவிடுவார்களன்றோ; அவ்வாறே நாமும் இனி இராக்காலம் நீங்கு முன்னரே அளவில்லாத கொடிய சேனைகளோடு சூழ்ந்து கிருஷ்ணனைக் கொல்லுவதே செயற்பாலது என்றான் எ-ம்.

௧௭௨. குருடன் இவ்வாறு சொல்லிய வசனத்தைக் கேட்டு விகர்ணன் என்பவனும் வெள்ளிய ஒளியாகிய சிரிப்பைச் செய்து, இதற்குமுன்னே பூமியிலே அரசர்களுள்ளே தூதர்களைச் சூழ்ந்து கொன்றவர்கள் யாவர்? யோசனையில்லாத இந்தக் கருத்து எவ்விடத்தே கற்றது என்று கூறினான் எ-ம்,

ஆர் என்னும் வினா எதிர்மறைப்பொருட்டு. விகர்ணன் - திருதராட்டிரனது இளையபுத்திரன்; இவனொருவனே இவர்களுள் நீதியுடையவன்.

௧௭௩. பின்னும் விகர்ணன் அவனை நோக்கி, தெரியப்பட்ட பூக்களானியன்ற மாலையையுடையாய், மூத்தோர், சிறுவர், வேதங்களை அறிந்த முனிவரர், நோயின் மிகுந்தவர், தோத்திரங்கூறுவோர், மகளிர், தூதர் என்னும் இவர்களைக் கொன்றால் அரசர்களுக்கு இதனினும் கொடிய வேறு பாவம் இல்லை; அங்ஙனங் கொன்றவர்கள் இம்மையிலே பழியையும், ஒழியாத துன்பத்தையும் பெறுதலே யன்றிப் பின்னரும் நரகங்களிலும் புகுவார்கள் என்று கூறினான் எ-ம்.

சூரபன்மனுடன் சமர்செய்து தோல்வியுற்ற வீரவாகுதேவரைத் தூதுவனென்று அவ்வசுரன் கொல்லாதொழிந்து, “வாகை யம்புயத்துச் சிங்கம் வீழ்ந்தயர்வுற்றிடத் தூதனைச் செகுத்தல், இங்கெனக்கடாதென்றெடுத்தும்பரினெறிந்தான்” எனக் கந்தபுராணத்தில் வருதலானும், இராம தூதராகிய மாருதியை இராவணன் கொல்ல முயன்றபோது அவன் றம்பியாகிய விபீஷணன், “மாதரைக் கொலைசெய்தார்களுளரென வரினும் வந்த, தூதரைக் கொன்றுளார்கள் யாவரே தொல்லை நல்லோர்” எனத் தடுத்தானென்று இராமாயணத்தில் வருதலானும் தூதரைக் கோறல் பாவமென்பது பெறப்படும்.

௧௭௪. பழியுடைய பகைவரேயாயினும் தன்னுடைய பெரிய நகரத்தில் வந்தால், அவரை அழியும்படி கொல்லுதல் பாவமாம்; அல்லதூஉம் ஆண்மையுமன்று என்று நீதிநூலார் கூறுவர்; இனி எங்ஙனமாயினும் கொல்ல வேண்டுமென்பதே கருத்தாயினும், நாம் இரவிலே மிகுந்த கடல் போலுஞ் சேனை சூழ வளைந்துகொண்டாலும், அழகினையுடைய கிருஷ்ணன் எவர்களுக்கும் அகப்படான் என்று கூறினான் எ-ம்.

"சேனையோடு" என்பது பாடபேதம்.

௧௭௫. கொடிய புய வலிமையினாலே திரௌபதியினுடைய விரிந்த புடைவையை உரிந்த துச்சாதனனாகிய வீரன் தம்பியாகிய விகர்ணனைக் கோபித்து வெறுத்துத், தமயனைப் பார்த்து நறுமணம் விரிந்த மாலையை அணிந்த மார்பினையுடையாய், மந்திரம் பேசத் தொடங்கினால், இவ்விடத்திலே இளையவர்களை யாது சொல்லும் பொருட்டு அழைத்தது என்று கூறினான் எ-ம்.

இங்கே வீரனென்றது இகழ்ச்சி. "இளையோர் ........ மந்தணத்தினெய்தப்பெறாரே" என இவ்வாசிரியர் இச்சருக்கத்தில் ௫௨-ம் செய்யுளிற் கூறியிருத்தலையுங் காண்க.

௧௭௬. பின்னுந் துச்சாதனன், தேர் வீரர், முதலாக உள்ள அரசர்கள் சூழ்ந்து நிற்க, எதிரே முகில்கள் தவழுகின்ற விதுரனது மாளிகையிலே எங்கும் நெருப்பை மூட்டி, விதுரனும் அக்கிருஷ்ணனும் ஒருங்கே வேகும்படி அழிப்பதல்லாமல் வேறு புத்தியில்லை; இப்பொழுதே மிக விரைந்து எழுங்கள் என்று கூறினான் எ-ம்.

கங்குலிற் கொல்லல் வேண்டுமென்பான் வல் விரைந்தெழுமினென்றான், வல் - விரைவை யுணர்த்தும் இடைச்சொல். "விளிந்திட வென்றி கொள்வேன்" என்றும் பாடம்.

௧௭௭. கன்னனுங் கோபித்து, சூரியன் எழுந்து சீறினால் செறிந்த இருள் அகலாது நிற்றல் உண்டோ, இவன் இருந்த வீட்டிலே நெருப்பை மூட்டவும் வேண்டுமோ, கொடிய ஓரம்பினாலே இவன் இறக்கும்படி வென்று திரும்புவேன்; இராத்திரியிற்றானே செல்லுதும் எழுக என்று கூறினான் எ-ம்.

௧௭௮. அப்பொழுது சகுனி யென்பான், நாளைக்கு இவன் நம்முடைய நகரத்தினின்று திரும்பிச் சென்று பகைவர்களைக் கூடுவானாயின், ஊழின் பயன்போலக் கொடிய போரிலே நம்மை வெல்லவிடான்; வேறு கருதுவது என்னை, வஞ்சம்பொருந்திய கிருஷ்ணனை



விதுரனது கோயிலின்கண்ணே சென்று சூழ்ந்து கொல்லுதலே செயற்பாலது என்று கூறிப் பின்னருங் கூறுவான் எ-ம்.

சௌபலன் - காந்தாரதேசத்தரசனாகிய சுபலன் புதல்வன்.

௧௭௯. தூதரைக் கொல்லுவது முறைமையன்று, ஆதலால் ஒரு குழியை அகழ்ந்து, அரக்கர்களையும் மல்லர்களையும் அதனுள் இருத்தி, மேலே ஓர் ஆசனத்தை அமைத்து நாளைப்பகலிலே, அவனை அழைப்பித்து, அவ்வாசனத்திலிருத்தி வீழச்செய்து, வலிமையினோடு விலங்கைப் பூட்டுவித்துப் பழைய அருஞ்சிறையில் வைப்பித்தலே முறைமை என்று கூறினான் எ-ம்.

"சொல்லருஞ் சிறையில்" எனவும் பாடம்:

௧௮௦ மாமன் கூறிய வசனத்துக்கு மருகனாகிய துரியோதனனும் உடன்பட்டு, அந்த இராப் பொழுதிற்றானே பல மல்லர்களை வருக என்று கூறி, அவர்களோடு தானும் இருந்து, ஆழமாக நிலவறையை முறைமையாக அமைத்த பின்பு முன்னர் அதனுள்ளே போரில் வலிய நூறாயிரம் அரக்கர்களை வைத்தான் எ-று.

௧௮௧. ஞானியாகிய கண்ணபிரானை வருத்தவென்று அவ்விராக்காலத்தில் ஒருநாழிகைப்பொழுதில் மல்லர்களையும் பப்பரர்களையும் அவ்விராக்கதத் தொகையினும் இருமடங்காக அந்த நிலவறையில் இருக்கச்செய்தான்; வில்லை ஏந்திய வீரர்களை அத்தொகையினும் இருமடங்காக வைத்தான்; பல ஆபுதங்களிலும் வல்ல வீரர்களை அத்தொகையினும் பதின்மடங்காக அங்கு இருத்தினான் எ-ம்.

பப்பரர் - பப்பர நாட்டிலுள்ளவர்கள். கடிகை - நாழிகை; ௨௪ நிமிஷங் கொண்ட நேரம். "அறிவனை யழிக்க வென்றே" என்றும் பாடம்.

௧௮௨. எல்லையில்லாத வெற்றிபொருந்திய வேலையுடைய துரியோதனன், பெரிய பள்ளமான நிலவறையை மூங்கிற் பிளப்புக்களினால் நிரையே மூடி, அதன்மீது அரிதிற் பெற்ற இரத்தினங்கள் பதித்த ஒரு ஆசனத்தை அமைத்து, வண்டுகள் ஒலிக்கும் மாலைகளைத் தொங்கச்செய்து சித்திரவேலை செய்யப்பட்ட மேற்கட்டியை மேலே அமைத்து, மாறுபாடில்லாதபடி செய்தான் எ-ம்.

யாதுஞ் சந்தேகந் தோன்றாவண்ணம் நிலவறையின் மேல் அமைத்தானென்பார் "மாறிலாவண்ணஞ் செய்தான்" என்றார்.

௧௮௩. தொண்டருடைய உள்ளத்தேயுள்ள நிறைந்த அறியாமையாகிய இருளை நீக்குங் கிருஷ்ணர் இருந்தற்கென்று உபாயத்தி

னாலை நிலவறையைச் செய்த கொடியோனுடைய குணத்துக்குப் பயந்துபோலும் இராக்காலமும் விரைந்துபோக, பூமியிலுள்ளாரது நித்திரையும் போகச் சூரியனும் உதித்தான் எ-ம்.

௧௮௪. நாகங்களினுடைய தலையி னுச்சியிலிருந்து வருகின்ற திரண்ட இரத்தினங்கள் பலவற்றையும் இடையீடின்றிச் சிதறி அருவி வீழாநின்ற நிறம் விளங்குகின்ற உதயகிரியிலே பரந்து எழுந்த சூரியனானவன், இந்திரன் எங்கும் பரந்து சூழ்ந்த இருளிரவைக் கண்டு தன் கோயிலில் ஏற்றிய ஒளிபொலிந்த விளக்கை நிகர்த்தான் எ-ம்.

இருட்கங்குல்-நிலவில்லாத இரவு. புரந்தரன் அட்டதிக்குப் பாலகருட் கீழ்த்திசைக் குரியோனாதலால் "புரந்தரன் கோயிலிட்ட பொங்கொளித்தீபம் போன்றான்" என்றார்.

௧௮௫. வண்டுகள் தொடர்ந்து நெருங்கி மேன்மேலும் அடர்ந்து பரந்து விளங்குகின்ற உதயகாலத்துக்குரிய பண்ணினோடு பொருந்த மன்மதனுடைய ஆகமவேதத்தைப் பாடப் பெரிய கயன் மீன்கள் பொருது உலாவத் தாமரைமலர் முகங்களும், பெரிய கண்கள் தொடர்ந்து விளங்குகின்ற செந்நிறமுடைய தோடுகளிற் பொருந்த நெருங்கி மேன்மேலும் அடர்ந்து இரேகைகள் பரந்து ஆசையினது தோற்றத்துக்குக் காரணமாகிய மன்மதனுடைய அம்பு போல அசைந்து பொருது உலாவக் காதன்மகளிருடைய முகங்களும் மணம்பெறுமாறு ஒருங்கே மலர்ந்தன எ-ம்.

பாடி என்பது பாட எனத் திரிந்து நின்றது, இச் செய்யுள் தாமரை மலர்தற்கும் மாதர் துயிலுணர்தற்குஞ் சிலேடை. கயல்-உவமவாகுபெயராய்க் கண்ணை உணர்த்தியது.

௧௮௬. அரசர்களெல்லாரும் பெரிய நித்திரைவிட்டெழுந்து, இரவிலே வரும் நித்திரை சிறிதுமில்லாக் கண்களையுடைய துரியோதனன் வாழும் பெரிய கோயிலின்கட் புகுந்தார்கள். சேடனுடைய உடம்பாகிய பெரிய சயனத்திலே செய்த அறிதுயிலை யொழித்த கிருஷ்ணரும் அரிய நித்திரைவிட்டெழுந்து, அருமையாகிய காலைக் கடன்களைக் கிரமமாகச் செய்தார் எ-ம்.

கண்ணனை வஞ்சிக்கக் கருதி அவ்விரவிற் றுயின்றிலனாதலின் துரியோதனனை "அருந் துயிலிலாத கண்ணான்" என்றார்.

௧௮௭. துரியோதனனுடைய தூதர்கள் கிருஷ்ணர் இருந்த கோயிலின்கண் வந்து பாதங்களை வணங்கி, சக்கராயுதத்தைக்



கொண்ட கையினையுடைய தலைவரே! துளசிமாலையை அணிந்த திருமாலே! யாதவகுலத்தவருள் ஆண்சிங்கமே! எங்கள் மேன்மை பொருந்திய அரசன் இன்றைக்கு நம்மைத் தம்மிடத்திற்கு எழுந்தருளுவிக்க என்று கற்பித்தான் எனக் கூறினார்கள். அதுகேட்ட கிருஷ்ணரும் விரைந்து போயினர் எ-ம்.

௧௮௮. தறியை அடர்க்கும் யானைகளையுடைய துரியோதனன், திருதராட்டிரனும் வீட்டுமனும் முதலாயுள்ள அரசர்களும், அமைச்சர்களும், சேனைகளும், மற்றைத் தம்பிமாரும் தன்னைச் சூழ, இந்திரனுடைய கோயில்போலுங் கோயிலின்கண்ணே மகிழ்ச்சியுடன் இருந்தான் எ-ம்.

இந்திரனிருக்கை சுதன்மை யெனப்படும். "அடுத்தது காட்டும் பளிங்கன்ன நெஞ்சங், கடுத்தது காட்டு முக" மாயினும், இவன் தான் செய்த சூழ்ச்சியைத் தன் முகங் காட்டாதொழியுமாறு தன் நடிப்பு மாத்திரையான் மகிழ்ச்சி காட்டியிருந்தானென்பார் "இனிதிருந்தான்" என்றார்.

௧௮௯. ஆண்டுக் கிருஷ்ணர் வருதலைக் கண்ட வாயிற்காவலாளர்கள் துரியோதனனிடத்திலே சென்று, பெரிய கிருஷ்ணர், அச்சத்தை விளைக்கும் வேற்படையையுடைய அரசர்களோடும், நால்வகைச் சேனைகளோடும் வந்தார் என்று கூறினார்கள். அது கேட்ட வண்டுகள் மொய்க்கும் மாலையை யணிந்த துரியோதனனும் அந்த வாயிலாளரைப் பார்த்து, தாமரை மலர்போலும் பெரிய கண்களையுடைய கிருஷ்ணனையே உள்ளே வரவிடுங்கள் என்றுகூறினான் எ-ம்.

ஏகாரம் பிரிநிலை. அரசன் தன் வஞ்சனையை முற்றுவித்தற்கு, நாமவேலராசராதியோர் இடையூறாவ ராதலினாற் கண்ணபிரானை மாத்திரம் உள்ளே வரவிடுங்கள் என்றான். வேத்திரம்-பிரம்பு.

௧௯௦. குளிர்ந்த துளசிமாலையை அணிந்த கிருஷ்ணரும், தம்முடைய பெரிய சேனைகள் அரசர்களோடு புறத்தே நிற்க, இன்பம் மிகச் சிரித்துக்கொண்டு, அரசர்கள் இருந்த பெரிய சபையிலே சேர, ஒளிபொருந்திய சருப்பக்கொடியையும் நஞ்சுபோலும் மனத்தையும் உடைய துரியோதனனும் அன்போடு கிருஷ்ணரை நோக்கி, தான் அமைத்துவைத்த ஆசனத்தைக் காட்டி அதன்மேலே இருக்க என்று கூறினான் எ-ம்.

வணங்காமுடியோன் வஞ்சிக்க நினைந்தே, தம்மை மாத்திரம் உட்பிரவேசிக்கும்படி தெரிவித்தானென்பதைத் துவாரபாலகர் வாயிலாகக் கேட்டு மாய

ஞர் "இவனறியாமை யிருந்தபடி யென்னே" யெனத் தம்முள்ளத்துக்கொண்டு சிரித்தாரென்க. அன்பு-போலிபன்பு. அது-நிலவறை மீதமைத்த பீடத்தைக் குறித்தலின் பண்டறிசுட்டு.

௧௱௧. கிருஷ்ணர் அழகிய கிரணங்களையுடைய இரத்தினங்கள் பதித்த அந்த ஆசனத்திலே இருக்க, அது நெறு நெறு என்று நிலவறையிலே கொண்டு புக, யமன் என்று சொல்லத்தக்க துரியோதனன் செய்த உபாயத்தை அப்பொழுதே மனத்தில் அறிந்து கிருஷ்ணர் முதிருகின்ற கோபத்தோடு அடிகள் பாதலத்திற் பொருந்தவும், முடிகள் ஆகாயத்திலே பொருந்தவும் எ-ம்.

நெறு நெறென என்பது அனுகரணவோசை. இவ்வெச்சம் வருஞ் செய்யுளில் "நிமிர்ந்தனன்" என்பதனோடு முடியும்.

௧௱௨. உயர்ந்த தேவர்கள் அஞ்சினோம் அஞ்சினோம் என்று கூறி விரைந்து வணங்கவும், வலிய நாகர்கூட்டங்கள் இன்றைக்கே இறந்தோம் என்று துன்பத்தோடு வருந்தவும், இந்த வஞ்சகன் மனத்திலே வஞ்சங்கொண்டு இன்றைக்கு அமைத்த இந்த வஞ்சனை நன்றாயிற்று என மனத்திலே எண்ணிக் கோபித்து, உலகம் ஒன்று படும்படி உயர்ந்து நின்றார் எ-ம்.

அஞ்சின மென்னு மடுக்கு மிகுதியை யுணர்த்திற்று. நின்று நிமிர்ந்தனன் என்பதில் விகுதி பிரித்துக் கூட்டப்பட்டது. இது முதல் ௨௨ செய்யுட்களால் ஆசிரியர், கண்ணபிரான் கொண்ட பாரிய ரூபத்தைக் கூறுகின்றார்.

௧௱௩. நிலத்தறையின்கண்ணே நெருங்கிய மல்லர்களும், அரக்கர் குலத்தோடு பப்பரர்களும், வாள்வீரர்களும், வேல்வீரர்களும், போரினையுடைய வில்வீரர்களும் என்று நெருங்கிய வீரர்களெல்லாரும், கிருஷ்ணர், தங்கள் தங்கள் சரீரங்களைக் கல்லென்னும் ஒலியோடு பல கால்களினால் உதைக்க, பழைய இடியேற்றினாலே தளர்ந்து உயிரழிந்த சுடிகையையுடைய நாகங்கள்போல அஞ்சி உயிரழிந்தனர் எ-ம்.

௧௱௪. அக்குழியின்கண்ணே யிருந்த வில்வீரர்கள், அற்புதமாகிய நல்ல கிருஷ்ணருடைய பாதாரவிந்தங்கள் உதைத்தலினாலே தங்கள் தங்கள் நெடிய தலைகள் அறுந்து விழுந்து நாகலோகங்கடோறும் போக, முற்காலத்திலே வாயுதேவன் பொர, மூன்று சிகரங்களும் முறிபட்டு மடங்கிய மேருமலைபோல வெறுஞ் சரீரங்கொண்டு நின்றார்கள் எ-ம்.



விழுந்தன என்னும் வினைமுற்று எச்சமாக்கப்பட்டது. போக என்பது போய் எனத் திரிந்து நின்றது. முன்தொருஞான்று வாயுதேவனும் ஆதிசேடனும் தத்தம் வலிமையைக் காட்ட நினைந்து வாயுதேவன் மேருமலை மீது கடிதுவீசி அதனைப் பிடுங்கியெறிய முயன்றானென்றும், ஆதிசேடன் தன் படத்தினால் அம்மலையைக் காக்க முயன்றானென்றும், ஈற்றில் வாயுதேவனே அக்கிரியின் மூக்குவடுகளைப் பறித்துச் சமுத்திரத்தெறிந்து ஜெயம் அடைந்தானென்றும் புராணங்கள் கூறும்.

௧௱௫. வெற்றியைப் பெறும்பொருட்டு ஒளிபொருந்திய வாட்படைகளை எடுத்த வீரர்கள் அழகிய முகில்போலுங் கருநிறமுடைய கிருஷ்ணர் மேலாகிய வலிமைபொருந்திக் கால்களை எதிரேவீசி விசையினோடு படும் வண்ணம் உதைத்தலினாலே பொருகின்ற அழகிய இரு புயங்கள் முறிந்துபோகக் கிய அழகிய இந்திரன் நெடியவச்சிராயுதத்தினாலே சிறகுகளை அறுத்த பெரிய மலைகளை ஒத்தார்கள் எ-ம்.

பூர்வத்தில் மலைகளெல்லாம் சிறகுடையவைகளாகச் சஞ்சரிக்க, அதனாற் பலவுயிர்கள் சேதமுற்றமை கண்டு தேவர்கோன் தனது வச்சிராயுதத்தினாலே அவற்றின் சிறகுகளை யரிந்தானென்பது சரித்திரம்.

௧௱௬. வேற்படைகளை எடுத்த வீரர்கள், ஒளியை விரிக்கின்ற படம்பொருந்திய தலையையுடைய சருப்பசயனத்தின்மேலே துயின்ற தேவர்களுக்கும் அரியவராகிய கிருஷ்ணர் பயின்று உதைத்தலினாலே தங்கள் மார்புகளிலே பாதாரவிந்தங்கள் பட்டுப் பிற, மயில்வாகனத்தைச் செலுத்தித் தேவர்களுக்குப் பகைவர்களாகிய அசுரர்களின் ஒள்ளிய தலைகளை அழித்த சுப்பிரமணியப்பெருமான் வேலாயுதத்தாற் குற்றிய நெடிய கிரௌஞ்சமலையை ஒத்தார்கள் எ-ம்.

உருவ என்பது உருவா எனத் திரிந்து நின்றது. மலைவடிவங்கொண்டு தேவர்களையும் முனிவர்களையும் தன்னிடத்தகப்படுத்தி அவர்கட்கு இடர் விளைத்த கிரௌஞ்சனென்னு மசுரன், ஒரு சமையம் அகத்திய முனிவர் ஆங்குச் சேறலும் அவரையும் அங்ஙனம் வஞ்சிக்க முயன்றான். அவனது மாயையை ஞானத்தினாலுணர்ந்த முனிவர் "நீ சுப்பிரமணியக்கடவுளின் வேற்படையாலழியக்கடவை" யெனச் சபித்து அப்புற மகன்றார். சுப்பிரமணியப்பெருமான் தாரகனை வதைத்தகாலத்து அக்கிரௌஞ்ச மலையையும் வேற்படையைப் பிரயோகித்து அழித்தாரென்பது சரித்திரம். இதன் விரிவைக் கந்தபுராணத்துக் கிரௌஞ்சப் படலத்திலும் தாரகன் வதைப் படலத்திலும் காண்க.

௧௱௭. எஞ்சிநின்ற பப்பரர்கள், விளங்காநின்ற உச்சிகளையுடைய நாகங்களை அஞ்சச்செய்யுங் கொடிய கருடனாகிய கொடியை

யுடைய கிருஷ்ணர், வலிய பாதாரவிந்தங்களின் நகங்களினால் எடுத்து உயர்ந்த வண்மையாகிய ஆகாயத்தில் வீசுதலால், முற்காலத்திலே காட்டில் வந்து குரங்குத் தலைவனாகிய சுக்கிரீவன், இராமசுவாமியினுடைய வலிமையை அறியவிரும்பிச் சொன்னபோது, அவர் காற்பெருவிரலால் எறிந்துவிட்ட துந்துபியினுடைய எலும்பாகிய மலைக்குச்சம்பவித்த இயல்பை அடைந்தார்கள் எ-ம்.

பத்மம் என்னும் ஆரியபதம் பற்பம் எனத் தற்பவமாயிற்று. கவிக்கிறை-குரக்கரசனான சுக்கிரீவன். இராமபிரான் வாலியைக் கொல்லும் வன்மையுடையரோ வென்னுஞ் சந்தேகம் வாலியின் றம்பியாகிய சுக்கிரீவனுள்ளத்திற் பிறக்க, அதையுணர்ந்த இராமர், முன்பு வாலியாற் கொல்லப்பட்ட துந்துபி என்னுமசுரனது என்புமலையைத் தமது காலாற் சிதறுண்ணச்செய்து தமது பராக்கிரமத்தைக் காட்டிச் சுக்கிரீவனது சந்தேகத்தைத் தீர்த்தனரென்பது இராமாயணம்.

௧௯௮. வலிய குழியின்கண்ணே விளங்கிய தறுகண்மையையுடைய அரக்கர்களும், வலிமைபடைத்து உயர்ந்த பாண்டவர்களுடைய சொல்லின்படி நடந்தருளிய மலர்போலும் பாதங்களினாலே கிருஷ்ணர் தள்ளி உதைக்க, தங்கள் உடம்புகள் பாதாளத்திற் பொருந்திப் புதைந்து மறைதலினாலே, முற்காலத்தில் அகத்திய மகாமுனிவர் வந்து அடிக்கப் பயந்து நிலத்துட் புகுந்த விந்தமலையை ஒத்தார்கள் எ-ம்.

கிருஷ்ணருடைய வருகை பாதங்களின்மேல் எற்றப்பட்டது. உந்தி வயிறெனினுமாம். உதைக்க என்பது உதைத்து எனவும், புதைந்து என்பது புதைய எனவுந் திரிந்து நின்றன. முன்னொருகாலத்தில் விந்தமலையானது மேரு முதலிய மலைகளெல்லாவற்றிலும் உயர்ந்து, சந்திராதித்தரின் செலவைத் தடுத்துநிற்குஞ் சமையத்தில், அகத்தியமுனிவர் ஆங்கு வந்து அக்குன்றத்தினுச்சியிற் புடைத்துப் பாதலம் புகச்செய்தனரென்று கந்தபுராணங் கூறும்.

௧௯௯. அவ்விடத்திலே சிறு சவளங்களை எடுத்துக்கொண்டு எதிர்ந்து வந்து போர்செய்தவர்கள், இடைச்சேரியில் மேலே குந்தியிருந்து உறித்தயிரை உண்ட கிருஷ்ணர், அழகிய பாதங்களினாலே, தங்கள் சரீரங்களை எறியப்படும் பம்பரம்போன்று மேன்மேற் சுழலும்வண்ணம் சுழற்றுதலினாலே, முன்னாளிலே தாம் தேவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுக்கும்பொருட்டுக் கரிய கடலிலே சுழற்றச் சுழன்ற மந்தரகிரியை ஒத்தார்கள் எ-ம்.



முன் எழனுருபு. மைக்கடலென்பதில், மை இனவடை. தேவர்களும் அவுணர்களும் மந்தரகிரியை மத்தாகவும், வாசுகியை நாணாகவுங் கொண்டு பாற்கடலைக் கடைந்தார்களென்பது புராணசரித்திரம்.

௨௦௦. வெல்லுதற்கு அடையாளமான கழல்களையுடைய எவ்வெக் குலவீரர்களும், அந்நிலவறையிலே முட்டிய பழைய இரத்தக் கடல் நிறைந்திருத்தலினால், கிருஷ்ணர், கைகளிற் பொருந்திய பல விரல்களினாலும் தங்கள் நெடிய உடம்புகள் பிளவுபட்டு அதனுள்ளே விழும்படி செய்கின்ற கொலைத்தொழிலினால், முன்னாளிலே அளவில்லாத வலிய வீரத்தைக்கொண்டு எதிர்சென்ற குரக்குச்சேனைகள் கரிய கடலினெல்லையிலே இட்ட கன்மலைகளை ஒத்தார்கள் எ-ம்.

முட்டி ஈண்டுக் கை என்னுந் துணையாய் நின்றது. கண்ணபிரான் பிடித்தெறிந்த மல்லர் இரத்தவெள்ளப்பெருக்கில் வீழ்ந்தமை, அநுமன் முதலாகிய வானரவீரர், சேதுபந்தனஞ் செய்யும்பொருட்டு எடுத்தெறிந்த கற்கள் கடலுள் வீழ்ந்தமையை நிகர்த்ததென்றபடி.

௨௦௧. கரிய முகில்போன்று விளங்குகின்ற பச்சை நிறத்தையுடைய கிருஷ்ணர், கூட்டமாகிய மலரடிகளினாலே ஒப்பின்றி நிலவறையில் இருந்தவர்களை இறக்கும்வண்ணம் ஒத்தி உழக்கலும், இப்பூமியிலுள்ள உயிர்களெல்லாம், இனி எந்த உலகங்கள் நிற்பன, எந்த மலைகள் நிற்பன, எந்தக் கடல்கள் நிற்பன என்று மயங்க, தேவர்களும் வருந்தி அஞ்சினார்கள் எ-ம்.

௨௦௨. வண்டுக்கூட்டங்கள் மொய்த்து எழுகின்ற அழகிய துளசிமாலையை அணிந்த வண்மையாகிய துவாரகையையுடைய கிருஷ்ணர், அவ்விடத்திலே அண்டமுகட்டை முடி பொருந்த நின்று, முகிலின் முழக்கம்போலவும், பிரளயகாலத்திலே பூமியைக் கொள்ளுதற்கு எதிருகின்ற சமுத்திரத்தினுடைய உக்கிரமாகிய முழக்கம் போலவும், வலிமைபொருந்திய வாயுக்களின் கூட்டஞ் செய்த முழக்கம்போலவும் நெருப்பெழுமாறு சிரித்தார் எ-ம்.

௨௦௩. அந்நாளிலே தனித்தனியே நின்று பொருதருளிய அழகிய பலபல கைகள் சமுத்திரத்தின் நீரை ஒருங்காக மொள்ளுவன; மேலே சென்று கூட்டமாகிய தேவ விருக்ஷங்களையும் முறிப்பன; எட்டுத்திசைகளினுள்ள குலயானைகளையும் அறைவன; எட்டுக் குலகிரிகளையும் உடைப்பன; வலிமைபொருந்திய அழகிய மேருமலையையுங் கொண்டு சுழற்றுவன எ-ம்.

௨௦௪. நீண்ட சில கைகள், பவளம்போலும் இதழ்களிலே நல்ல சங்குகளை வைத்து முழக்கின; சில கைகள் உலகம் அஞ்சும்படி கூரிய மழுப்படைகளை எறிந்தன; பொருகின்ற சில கைகள் சொல்லப்படுகின்ற கூர்மையாகிய அம்புகளையும், மொட்டம்புகளையும் எடுத்தன; சில சில கைகள் விளங்குகின்ற வெற்றியினோடு விற்களை வளைத்தன எ-ம்.

௨௦௫. குளிர்மையாகிய பல கைகளானவை, வெம்மையாகிய வளைதடிக்கூட்டமும், ஒளி பொருந்திய சிறு சவளப்படைகளும், கோபிக்கின்ற உலக்கைகளும், போரிலுயர்ந்த வச்சிரங்களும், செலுத்தப்படுகின்ற கலப்பைகளும், எதிர்ந்தோர்க்குப் புண்ணை விளைவிக்குஞ் சூலக்கூட்டங்களும், வேல்களும், எங்கும் பொருது எழுகின்ற செம்மையாகிய உடைவாட்கூட்டங்களும், தண்டாயுதங்களும் ஆகிய இவைகளோடு தங்கிய சக்கராயுத நிரைகளையுந் தாங்கின எ-ம்.

வினைமுதலின் இயல்புகள் கருவிகளின்மேல் ஏற்றப்பட்டன.

௨௦௬. சூழ்ந்த சில அழகிய கைகள் மேலே எழுகின்ற கிரணங்களையுடைய வாட்படைகளை உறைகளினின்று உருவி ஆகாயத்தின் பக்கத்திலே செல்லும்படி வீசின; பரிசைக்கூட்டங்களை ஏந்தின; நீண்ட கவண்களை ஏந்தின; இரத்தஞ் சொரிய உலகத்தாரோடெல்லாம் பொர வல்ல தோமரங்களை எடுத்தன; மூன்று நாக்களையுடையனவாகிய சூலங்களோடு உயர்ந்தன; பாசங்களோடு உயர்ந்தன.

“பூங்கதிர்” எனவும் பாடம்.

௨௦௭. சிலசில கைகள் கொல்லுகின்ற பாதங்களிலே நெருங்கிய பல வீரக்கழல்களைக் கட்டின; சில சில கைகள் சுழலுகின்ற புயங்களிலே மிகுந்த மாலைகளை இட்டன; சில சில கைகள் அழகினைக் கொண்ட மார்பிலே ஆபரணங்களைத் திருத்தின; சில சில கைகள் பகைவர்கள் திகைக்கும்படி அச்சுறுத்தற் குறிப்புக்களை விரல்களினாலே காட்டின எ-ம்.

“இறுகுபுயத்திடை” எனவும் பாடம்.

௨௦௮. மிகப்பெரிய பூமி முழுவதினும் வெளிப்படையாய் விளங்குகின்ற மரகத காந்திபொருந்த, இரண்டு பக்கங்களினுஞ் சென்று வளைந்து வளைந்து எதிரே பொருகின்ற நுனிபொருந்திய பெரிய படைக்கலங்களோடு ஆயிரம் ஆயிரம் கைகள் வெளிப்பட,



தேவர்களும் முனிவர்களும் அவருடைய வரலாற்றை வியந்து வணங்கி, நான்கு வேதங்களையும் பாடிப் புகழ்ந்தார்கள் எ-ம்.

“வெயில் போயொரு மரகத” எனவும் பாடம்.

௨௦௯. அப்பொழுது தேவர்கள், வேதங்களையுடையவரே, அரன் என்னுந் திருநாமத்தையுடையவரே, அந்நாளில் உலகங்களையெல்லாம் படைத்த காரணரே, கருணாநிதியே, இலக்குமிக்கு நாயகரே, முதலையினாற் பிடிபட்ட யானையானது பொதுவாகிய ஆதிமூலமே யென்னும் ஒரு பெயரினால் அழைக்க வந்து அந்த யானைக்கு அருளிய முகிலே, நாராயணரே, கோபியாதொழிக! கோபியாதொழிக!! என்று சொல்லி வணங்கினார்கள் எ-ம்.

௨௧௦. இலக்குமிக்குக் கணவரே முனியற்க, எங்களை ஆளுதலுடையவரே முனியற்க, யதுகுலத்தவரே முனியற்க, எங்கள் மனங்களில் இருப்பவரே முனியற்க, சூரியன் ஆயினவரே முனியற்க, சந்திரனும் வெவ்விய அக்கினியும் ஆனவரே முனியற்க, நீதியையுடையவரே முனியற்க, முனியற்க என்று கூறி நின்று முனிவர்களும் வணங்கினார்கள் எ-ம்.

௨௧௧. வீட்டுமரும், கன்னனும், திருதராட்டிரனும், அவனுடைய (துரியோதனன் ஒழிந்த) புத்திரர்களும், அங்கே சபையிலிருந்த எல்லா அரசர்களும் எழுந்து முறையானே உச்சியிற் கூப்பிய கையினராகி, அறிவு பொருந்திய மனமுடையராகி, இன்றைக்கு எங்களுடைய பிழைத்தலைப் பொறுத்தருளுக என்று கூறி வணங்கினார்கள் எ-ம்.

பிழை என்னும் பெயரடிவினை தொழிற்பெயர்விகுதி பெற்றுப் பிழைப்பு என நின்றது. பிழை செய்தல் என்பது பொருள்.

௨௧௨. அன்றைக்கு அவர்கள் கிருஷ்ணருடைய மலரடிகளைச் சிரமேற்கொண்டு வணங்கி எதிரே நின்று கண்ணரே பொறுத்தருளுக, வெண்ணெய் உண்ட கள்வரே பொறுத்தருள்க, முகில்வண்ணரே பொறுத்தருளுக, அழகியவரே பொறுத்தருள்க, வரங்களைக் கொடுக்கிறவரே உண்மையாகவே மனத்திற் சிறிதும் அறிவில்லாதவர்கள் செய்த பெரிய பிழைகளை நீர் பொறுத்தருள்க, என்று துதித்தார்கள் எ-ம்.

௨௧௩. தேவர்களும் இந்திரனும் முனிவர்களும் பிரமனும் அரசர்களும் ஆகிய அனைவரும் அன்போடு ஆயிரம் நாமங்களையும் நினைந்து மீளவும் வணங்குதலினாலே, மும்மூர்த்திகளும் ஒருவ

றெனும்படி நின்றருளிய கிருஷ்ணருங் கோபம் ஒழிந்தருளி, மேலாகி வருகின்ற அண்டத்தையளாவிய திருமேனி அடங்கினர் எ-ம்.

௨௧௪. தம்மின் உயர்ந்தவர்கள் யாவரும் இல்லாத கிருஷ்ணர், நான்கு வேதங்களில் விதித்த முறைமையினாலே திருவடிகளினால் எந்த நிலமும் மறையும்படி இவ்வாறு நிற்கவும், துரியோதனன் பயந்து மனம் வருந்தினானுமல்லன், கைகளைச் சிரமேல் வைத்தானுமல்லன், அவருடைய வண்மையாகிய புகழைச் சிறிதுங் கூறினானுமல்லன், அன்றியும் ஆசனத்திலிருந்து அசைந்தானுமல்லன் எ-ம்.

௨௧௫. எங்கள் தலைவராகிய கிருஷ்ணர், துரியோதனனை நோக்கி, பழைய சபையிலிருந்த அரசனே, நீ துர்ப்புத்தியினாலே என்னைக் கொல்லுமாறு நினைந்தது நன்றாயிற்று! என்று மிக்க வலிமையைக் கூறி, மேலுங் கூறுவார்: விரைவாகக் கொடிய போரைப் பொருந்திப் பொருது உன் குலம் முழுதுங் கெடும்படி ஒரு கணப் பொழுதளவிற் கொல்லுவேன், எல்லாருஞ் சுவர்க்கலோகத்தில் ஏறுவார்கள் எ-ம். நன்று-தீதென்றபடி.

௨௧௬. அங்ஙனமாயினும் யாம், பெரிய யுத்தத்திலே கொடிய ஒளிபொருந்திய படைக்கலமொன்றையும் எடேம் என்று அன்றைக்கு உன்னோடு சொல்லிய வாக்கும், பஞ்சபாண்டவரும் நாம் எதிரே வந்து வலி குன்றப் பொருது உயிர்கொள்ளுவோம் என்று தனித்தனியே கூறிய சபதவாக்கும் பழுதாகும் என்பதுபற்றி, இப்பொழுதே உன்னைக் கொல்ல அஞ்சி விடுத்தனம் எ-ம்.

பாண்டவர் கூறிய சபதமும் யான் அளித்த வாக்கும் பழுதுறுமென்பது பற்றிக் கொல்லாதொழிந்தேனன்றி ஆற்றலின்மையா லன்றென்றபடி. பாண்டவர் கூறிய சபதத்தைச் சூதுபோர்ச் சருக்கத்துட் காண்க. கண்ணபிரான் துரியோதனனுக்கு மாறாகப் படையெடே னென்றதை வாசுதேவனைப் படைத்துணை யழைத்த சருக்கத்து "நடையுடைப் புரவித் திண்டேர் நாணிவற்கூர்வதன்றி, மிடைபடை யேவி நும்மோ டமர் செயேன் வேந்த வென்றான்" என வருதலா லுணர்க.

௨௧௭. என்று சொல்லி நெடிய கிருஷ்ணர் எழுந்தருள, துரியோதனனொழிந்த எந்த முடிமன்னர்களும் பின்னே சென்றார்கள்; கண்ணபிரான் நின்று உபசாரவார்த்தைகளைச் சொல்லி அவர்களை நிறுத்தி, அதன்பின்பு மிக்க வலிமைபொருந்திய கன்னனோடு ஒரு வசனத்தைச் சொன்னார் எ-ம்.



அனந்தரம் - பின்பு. உபசாரமுரைத்தவர் தம்மை என்பதற்கு - தமக்கு உபசார வார்த்தைகளைக் கூறியவர்களை யெனப் பொருள்கொள்ளினுமாம்.

௨௧௮. [கிருஷ்ணர் சொல்லுவார்-] கொடையினாலுயர்ந்த அங்கர்குலத்தரசனே, சந்திரகுலம் வாழுமாறு வந்து, சத்தியத்தினாலுயர்ந்த அரசர்கள் ஐவரும், ஆராயுங்கால் உனக்கு இளையவர்கள்; எங்ஙனமெனில், சூரியனானவன், பெண்மையினாலுயர்ந்த குந்தியினுடைய வயிற்றிலே, பெருமையினாலும் மனத்திண்மையினாலும் உயர்ந்த உன்னையும் அன்போடு பெற்றான் எ-ம்.

௨௧௯. அழகினையுடைய தருமன், நெடிய முரசக்கொடியினனாகிய தருமனைப் பெற, வாயு வீமனைப் பெற்றான்; இந்திரனும் அருச்சுனனைப் பெற்றான்; ஆயுர்வேதத்தினால் விளங்குகின்ற தேவ மருத்துவர்கள் செம்மையாகிய அக்கினிபோலும் வலிமையையுடைய நகுலனையும் சகாதேவனையும் பெரிதும் அன்போடு பெற்றார்கள் எ-ம்.

௨௨௦. முன்னே துருவாசமுனிவர் உபதேசித்த ஐந்து மந்திரங்களினாலும் தேவசம்பந்தமுள்ள குந்தி உங்கள் அறுவரையும் பெற்றாள்; இனி யான் உங்களுக்குப் பலவற்றையுங் கூறுவது என்னை; நீங்களே இந்த நிலத்தைப் பெறுவீர்கள்; ஒழிந்தால், இனி உங்களிலும்பார்க்க வேறு யார் பெற உரியார், ஆதலால், இனி நீ வந்து உன் தம்பிமாரோடு சேருக என்று கிருஷ்ணர் கூறினர் எ-ம்.

"ஒருமறை" யெனச் சம்பவச் சருக்கத்திற் கூறி, இங்கே மந்திர மைந்தென்றது ஐவரைக் குறித்து ஐவகையாகச் செபித்தமைபற்றியென்க. பஞ்சபாண்டவருள் நகுல சகாதேவர் மாத்திரியினிடத்துப் பிறந்தாராகவும், குந்தி பயந்தனளெனக் கூறியமை, அக்குந்தி உபதேசித்தபடி மாத்திரி அவ்விருவரையும் பெற்றமைபற்றியும், அபேதம்பற்றியுமாம். கோசலை வயிற்றிலுதித்த ஸ்ரீராமரை "இராமனைப் பயந்த வெற்கிடருண்டோ" வெனக் கைகேயி பேதம் பாராட்டாது கூறியதை இராமாயணத்திற் காண்க.

௨௨௧. [கன்னன் அவரை நோக்கிக் கூறுவான்:-] பசுக்கன்றினால் விளாம்பழத்தை உதிர்த்தும், வேய்ங்குழலினாற் பசுக்கூட்டங்களை அழைத்தும், கோவர்த்தன கிரியினால் மழைக்கூட்டத்தைத் தடுத்தும் விளங்கிய செல்வத்தையுடைய கிருஷ்ணரே, இன்றைக்கே என்னுடைய பிறப்பை அறிந்தேன்; என்றாலும், அன்பினால் உருகி என் றம்பிமாரிடத்தே இனிப் போனால் நீர் அறிய உலகத்தார் என்னை எப்போதும் சிரியார்களோ எ-ம்.

கழை - வேய்ங்குழல். இங்கே ஆகுபெயராய் அதன் ஓசையைக் குறித்தது. சிரித்தல் நன்றிகொன்றமைபற்றியாம். கன்றால் விளவின் கனியுகுத்தல் முதலிய சரித்திரக் குறிப்புக்கள் மேலே விளக்கப்பட்டன. இன்றால் என்பதில் ஆல் அசை.

௨௨௨. யார் என்று எவர்களாலும் உணரத்தகாத என்னைத் துரியோதனன், அரசனுமாக்கி முடிசூட்டிச், சிறப்பையும் மேன்மையையும் தன்னுடைய பெரிய செல்வத்தையும் எனக்கே தெரிந்து தந்தான்; இங்ஙனமாக, நூற்றுவர்களுக்கும், பழிதீர்ந்த வெற்றியையுடைய பாண்டவர்களுக்கும் யுத்தம் நிகழும் என்று அறிந்தும், இன்றைக்கு உலகறியச் செய்ந்நன்றியைக் காவாது அவரிடத்துச் செல்வேனோ, [செல்லேனென்றபடி] எ-ம்.

போற்றாதவரில் - போற்றாதவர்களைப் போல எனினுமாம்.

௨௨௩. இவ்வாறு அழகிய சூரியபுத்திரன் கூற, இசையினையுடைய வண்டுகள் கலந்து பயிலுந் துளசியைக்கொண்ட முடியினையுடைய கிருஷ்ணர் வேறொரு வசனமுங் கூறாமல், வலிய வில்லும் பொருந்திய பெரிய புயங்களையுடைய அவ்வலியவனைப் போ என்று சொல்லியருளி, ஒருபக்கத்தே நின்ற அசுவத்தாமாவை வருகவென்றழைத்துக் கூறுகின்றார் எ-ம்.

கன்னன் கூறியதற்குக் கண்ணபிரான் பிரதி உத்தரங்கூற முடியாமையால் "வேறோர் மொழியும் விளம்பாமல் ........ஏகென்றருளி"னார்.

௨௨௪. முருகக்கடவுளையே போன்ற வில்லையுடைய துரோணமுனி புத்திரனே! பல காடுகளிலுஞ் சென்று திரிந்து கூறிய நியமத்திற் பொய்யாதவர்களேயாகி வந்த பாண்டவர்களுக்கு, ஐந்து ஊர்களையேனும் கொடுக்கும்படி யான் வேண்ட, அவன் மறுத்தமைக்கு நாளைக்குப் போர்க்களத்தில் நீயே சாக்ஷியாகுக என்று துளசி மாலையை யணிந்த முடியையுடைய கிருஷ்ணர் கூறினார் எ-ம்.

௨௨௫. [பின்னுங் கிருஷ்ணர் கூறுவார்:-] ஞானத்தையுடைய தலைவனே, பூமியிலே கெடாத உன்னுடைய ஆண்மைக்கு வேறு உவமை உண்டோ, இல்லை; போர்க்களத்திலே துரியோதனன் உன்னை வணங்கிச் சேனாபதியாகுக என்று வேண்டினாலும் நீ சேனையைச் செலுத்தேன் என்று மறுத்தாயாயின் ஐவரும் உய்வார்கள்; அவர்களிடத்தே உனக்கும் அன்பு உள்ளதாகும் எ-ம்.



௨௨௬. கண்ணபிரான், போரில் வலிமையையுடைய ஆண் சிங்கம்போன்ற அசுவத்தாமாவை நோக்கி இவ்வாறு கூறி, தமது கைவிரலிலுள்ள இரத்தினமோதிரத்தை நிலத்திலே நழுவிவிழச் செய்தார்; அசுவத்தாமா அம்மோதிரத்தை யெடுத்துக் கிருஷ்ணரது சிவந்த கையிற் கொடுக்க, அவர் அதனை வாங்காமல், பரிசுத்தமுடையவனே, பரந்த ஆகாயத்தின்மீது சூரியனைப் பரிவேடஞ்சூழ்ந்தது என்று சொல்லி எ-ம்.

ஆயோதனம் - போர். இது வடசொல். இக்கவி குளகம்.

௨௨௭. செவ்வரிபரந்த கமலக் கண்களையுடைய அழகிய பெரிய கண்ணபிரான் ஆகாயத்தைப் பார்க்க, கட்டமைந்த வில்வில் வல்லமையையுடைய அசுவத்தாமாவும் தனது கையிலேந்திய மோதிரத்துடன் பரிவேடத்தைப் பார்த்தான்; (இங்ஙனமாக) அப்பெரியசபையிலே யிருந்தவர்கள், கோவர்த்தனகிரியாகிய கவிந்த குடையை யேந்திய கரிய மாயவன் விளங்குகின்ற உபவீதத்தையுடைய துரோணாச்சாரியரின் புதல்வனாகிய அசுவத்தாமனையும் துரியோதனனினின்றும் பேதித்தான்; அவ்வசுவத்தாமனும் சபதஞ்செய்து கொடுத்தான் என்று தங்களுட் கூறினார்கள் எ-ம்.

அசுவத்தாமா மோதிரத்தை வாங்கிப் பூமியைத் தொட்டுச் சூரியனைப் பார்த்துக் கண்ணபிரானுக்குச் சத்தியஞ்செய்து கொடுத்தானெனச் சபையிலிருந்தோர் சந்தேகங்கொண்டன ரென்றபடி.

௨௨௮. இடியேறுபோன்ற துரியோதனன் அதனை அறிந்து கோபங்கொண்டு, அரசர்களுடைய முகங்களைப்பார்த்து, பெரிய வில்லையுடைய துரோணமுனியின் புத்திரன் இங்கே வந்து அகன்று போகின்ற தூதனைத் தனியே சென்று கிட்டி, எதிரே மோதிரத்தைத் தொட்டு, அரிய சத்தியத்தைச் சொல்லுகின்றானே, இனி நம்மோடு உறவாய்வந்து நின்றாலும் இவனைத் தெளிவதெவ்வாறோ என்று கூறினான் எ-ம்.

௨௨௯. துளிபார்ந்த தேனையுடைய நந்தியாவர்த்தம்பூமாலையைக் கொண்ட துரியோதனன் கூறியதும். ஒளிபொருந்திய சபையில் இருந்த வாட்படைகளையுடைய அரசர்கள் ஒருவருக்கொருவர் கூறியனவும் களிப்பையுடைய யானைபோல்வானாகிய அசுவத்தாமனுடைய செவிகளில் எறியவளவில் அவன் மனங்கலங்கி, கிருஷ்ணரானவர், இவர்கள் என்னை நம்பாதபடி வேறுபடுத்தினாரே என்று நினைத்தான் எ-ம்,

௨௯௦. குளிர்ந்த துளசிமாலைபொருந்திய முடியினராகிய கிருஷ்ணரும் தம்முடைய மன எண்ணம் வாய்த்ததென்று மகிழ்ந்து, அசுவத்தாமனுக்கு அனுமதிகொடுத்து, தேவர்கள் ஆகாயத்திலே நின்று மிகத்துதிக்கத், தனித்து அவ்விடத்தினின்றும் நீங்கி, விதுரனது கோயிலிற் சேர்ந்த பின்பு, திண்ணிய தேவர்குலத்துக்கு அரசனாகிய இந்திரன் ஆங்கு வரும்படி அறிந்து நினைத்தார். எ-ம்.

இருந்து என்பது ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபு. தனித்து அங்கிருந்து சிந்தித்தார் என்றலுமாம்.

௨௯௧. அக்கணத்திற்றானே வந்து வணங்கிய இந்திரனைப் பார்த்து, கிருஷ்ணரும், தம்முடைய கண்களும் மனமுங் களிகூர யானைத் தந்தத்தானியன்ற தொழிற்பாட்டினையுடைய சிங்கஞ்சுமந்த ஆசனத்திலே கூட இருத்தி, முந்தத் தாம் நினைக்கின்ற தொழிலை முடிக்கும்பொருட்டு உபாயத்தைக் கூறுகின்றார் எ-ம்.

அரிசுமந்த ஆசனம் - சிம்மாசனம்.

௨௯௨. மலைகளின் இறகுகளை அரிந்த வச்சிரப் படையையுடையாய் கேள், போர்க் களத்திலே நீண்ட கொடிய வில்லைக் கொண்ட கையையுடைய அருச்சுனனுக்கு மாறாய்ச் சீறிவருகின்ற எரியும் அக்கினிபோன்ற நஞ்சையுடைய சர்ப்பமொன்று, இவனுக்கு மிக்க பகைவனாகிய கன்னனுக்கு ஒரு பெரிய அம்பாயினமையை அறியாதார் யாவர் எ-ம்.

ஆண்மை - ஆகுபெயர். மோ - முன்னிலையசை. அரி - சூரியன்.

௨௯௩. கன்னன் அருச்சுனனைக் கொல்லில், கடல் சூழ்ந்த பூமி முழுதுந் துரியோதனனுக்கே ஆகும்; எஞ்சியவர்களும் இறப்பார்கள்; முன்னே சூது போரிலே சொன்ன சபதங்களைப் பாண்டவர்கள் முடியாதிருப்பின், அதனாலே வரும் வசையும் அவர்களுக்கன்று, நின்மனமறிய நானறிய உனக்கே நிலையாகும் எ-ம்.

பகை-ஆகுபெயர். அருச்சுனன ற தக்கைபாதலின் நினக்கே வசைஎன்றார்.

௨௯௪ சன்னனனவன் கவசங் கனககுண்டலம் என்னும் இரண்டையும் அணிந்தால், கற்ப முடிவுநாள் வரையிற் பொருதாலும் அவனுடைய உயிரைக் கொல்லுவார் சிலரும் பூமியிலுண்டோ, (இல்லை;) இங்ஙனமாகவே, குரங்காகிய கொடியையுடைய அருச்சுனன், சுற்றத்தார் அவசமடையவும், சகோதரர்கள் அழவும், பொருகளத்திலே இறப்பான்; அவனைப் பெற்ற துணைவனே, இப்பொழுதே சொன்னேன் எ-ம்.



௨௯௫. கன்னனனவன், கல்வியின் வலிமையில்லாதவர்களுக்கும், வலிய வித்துவான்களுக்கும், வேதியர்களுக்கும், தேவர்களுக்கும், பொருள் இல்லாதவர்களுக்கும் உள்ளவர்களுக்கும், யாசித்தவர்களுக்கும், துறவிகளுக்கும், தன்னைப் புகழ்ந்து சொல்லாதவர்களுக்கும் சொல்பவர்களுக்கும், சூழ்ந்த பல சமயங்களினும் உள்ள தலைவர்களுக்கும் அல்லாதவர்களுக்கும் அரிய தானங்களைக் கொடுக்கின்றான் எ-ம்.

வல்ளார் - வலிமையில்லாதார். (சூடாமணி நிகண்டு ௨ வது ௪௬.)

௨௯௬. நீ உன்னுடைய புத்திரனுக்கு உறுதியை விரும்பின், ஒருபாயங் கூறுகின்றேன் கேள், விரைந்து முனிவர் வடிவமாகி, வித்துவான்களாற் பாடப்படுகின்ற அழகாகிய இசை பொருந்திய செய்யுண்மாலைகளையுடைய தானகரனாகிய கன்னனை அடைந்து, அக்கவசகுண்டலங்களைத் தா என்று கேட்டால், இப்பூமியிலே உயிரை என்னினுஞ் சிறிதும் மறுத்தறியானாகிய அவன் விரைவிலே தந்து விடுவான் எ-ம்.

தான + ஆகரன்; தானத்திற்கு இருப்பிடமாயுள்ளவன்.

௨௯௭. நீ அவனிடத்திலே அவ்விரண்டையுங் கவரின், இப்பூமியிலுள்ள அரசர்கள் எல்லாருந் திரண்டு தேர்களில் ஊர்ந்து வந்தாலும், கொடிய போரிலே திண்ணிய தேரையுடைய அருச்சுனனுக்கெதிரே நிற்கமாட்டார்கள்; பகைத்துப் பொருகின்ற வில்லையுடைய கன்னனும் அவன் முன்னே சேர்ந்து முடிசிந்திப் புரண்டு இறப்பான் என்று கிருஷ்ணர் சொல்ல, இந்திரன் அதற்கு உடன்பட்டு வணங்கிப் போகின்றான் எ-ம்.

"மறியு" மெனவும் பாடம்.

௨௯௮. ஊன்றுகோல் சரீரபாகத்தைத் தாங்குதலினாலே ஒரு கால் என்று சொல்லப்பட, அதனைக் கையிற் கொண்டு, சரீரம் வளைந்து வருந்த, கால்களிரண்டுஞ் சோர்ந்து தள்ளாட, எவர்களுங் கண்டு கைகுவிப்ப, கையிற் கொண்ட கவித்த குடையினோடும், கங்கா ஜலத்தின் நுரையை அள்ளி மேலாகச் சொரிந்தது போல விளங்குகின்ற நரையினோடும், திரையினோடும் முதுமைப் பருவமே ஓர் உருவத்தைக் கொண்டது போல ஒரு கிழப்பிராமணனாகி அரசனுடைய வாயிலிற் சென்று சேர்ந்தான் எ-ம்.

"ஆகியிக்கொற்றவன்" எனவும் பாடம்.

௨௩௯. இராஜாவானவர் சற்பாத்திராயினர்க்கு அடுத்த தானங்களையும், யாசகர்களுக்கு அடுத்த கொடைகளையும் அருளினோடு முற்பகல் முடிவுவரையுங் கொடுத்து உள்ளே புகுந்தார்; இப்பொழுது அகாலமாதலின், நீர் நாளைக்கு வாரும் என்று சொல்லித் தடுத்த அவ்வரசனுடைய கோயிலின் வாயிற்காவலாளர்கள், மீட்டும் அம்முனிவன் வேண்டிக்கொள்ள உள்ளே சென்று அவனுடைய வரவை அறிவித்தலினாலே அரசனும் அவனை இங்கே வருவிக்க என்று கூற, அதுகேட்ட அவ்வாயிலோரால் விரைவில் உள்ளே விடுக்கப்பட்ட, நான்கு வேதங்களினும் வல்ல முனிவனைக் கண்டு, அரசனும் அவனுடைய பாதங்களை எதிரே விழுந்து வணங்கினான் எ-ம்.

தருகென விடுத்த முனியைக் காண்டலும் அடி வீழ்ந்து தொழுதான் எனக்கூட்டி முடிக்க.

௨௪௦. (பின்பு கன்னன் அம்முனிவனை நோக்கி) நீர் அன்புகூர்ந்து இங்ஙனம் எழுந்தருளுதற்கு அடியேன் என்ன பெரிய தவத்தைச் செய்தேன் என்று சொல்லிப் பொன்னானியன்ற ஆசனத்தின்கண்ணே இருத்தி, மெய்மையாகிய அருளினோடு பூசையை முறை முறையாகச் செய்ய, அந்த முனிவன் என்னுடைய தளர்ந்த நடையினாலே அகாலமாகிய பிற்பகலாயிற்றே என்று பரிதாபமுடையான் போன்று சொன்னபொழுதில், அதுகேட்ட கன்னன் சிரித்து நீர் சொன்னவற்றையெல்லாம் உமக்குத் தருவேன் என்று கூறினான்.

௨௪௧. அக் கிழமுனிவனானவன், கன்னனை நோக்கி, அழகிய தேவதருக்களுக்கும் வேண்டியவற்றைக் கொடுத்தல் அரிது, நீ கொடுப்பாயோ என்று சொல்லக், கன்னனானவன் சிரித்து, நீ என் சரீரத்திலுள்ள உயிரையே விரும்பி இரந்தாலும், நான் அதனை மனப்பூர்வமாக உனக்குத் தாரேனாயின், எதிர்ந்த பகைவர்களுடைய கண்களிரண்டுஞ் சிவக்கக் கோபித்த போரிலே புறங்கொடுக்கின்ற அரசர்கள் போய் அடையும் பதத்தை அடைவேன் என்று கூறினான் எ-ம்.

அருத்தி - ஆகுபெயர்.

௨௪௨. வந்த முனிவனானவன், அவனை நோக்கி, நீ உன்னுடைய கவசகுண்டலங்களை எடுத்து எனக்குத்தருக என்று கேட்க, அவன், தந்தேன் பெற்றுக்கொள்ளுக என்று சொல்லலும், அப்பொழுதே ஆகாயத்திலே ஒப்பில்லாத ஓர் அசரீரியானது, கிருஷ்ணன் உபாயத்தினாலே இந்திரனை அனுப்பினான், நீ கொடாதே என்று கூறவும், செம்மையாகிய கிரணங்களையுடைய சூரியனுக்குப் புத்திரனாகிய அக்கன்னன், அதுபற்றி மனத்தின்கண் ஒரு கலக்கமுமில்லாமல் அவைகளைக் கொடுத்தான் எ-ம்.



ஒரு சிறிதுந் தடையின்றி இப்பொழுதே தருவேன் என்பான், "தந்தனன்" என இறந்தகாலத்தாற் கூறினான். இது "வாராக் காலத்து" என்னுஞ் சூத்திர விதியாற் பெறப்பட்ட வழுவமைதி.

௨௪௩. அங்ஙனங் கொடுத்தபொழுது தேவர்களனைவரும், ஆகாயத்திலுள்ள தேவதுந்துபி வாத்தியம் முழங்க, பூமாரி பொழிந்தார்கள்; மேகவாகனனாகிய இந்திரன் தான் எடுத்துக்கொண்டுவந்த விருத்த வேதிய வடிவை நீக்கி, தனது அழகிய உண்மையான வடிவத்தைக்கொண்டு வெளிப்பட்டு நின்றான்; தன்னைக் கண்டு பெருமை பொருந்திய தனது மனங் கசிந்து மகிழுகின்ற கன்னனுக்கு அந்தச் சிறந்த இந்திரன், பின்பு நெருங்கிய போரிலே வெற்றியைக் கொடுக்கும் இந்தப் படைக்கலம் என்று கூறி, வெற்றிபொருந்திய ஒரு வேற்படையைக் கையிலெடுத்து எ-ம்.

இச்செய்யுள் அடுத்த செய்யுளிலுள்ள "கொடுப்ப" என்பதனோடு தொடரும்.

௨௪௪. நீ வெல்லுதற்கரிய வலிமையையுடைய அருச்சுனன் மீது இதனைப் பிரயோகித்தலை விடுத்து, கொடிய கோபத்தையுடைய சிங்கம்போல் மனத்திலே சிறிதுங் கலக்கமின்றிப் போர் செய்யும் வலிமைபூண்ட கடோற்கசனாகிய இளம் வீரன் எதிர்வந்து சமர்செய்யும்போது, அவனுடைய உயிரே இதற்கு இலக்காமென அவன்மேற் செலுத்துக எனக் கூறி, அப்படைக்குரிய மந்திரத்தையும் உபதேசித்து, சொல்லுதற்கரிய புகழையுடைய இந்திரன் கொடுக்க, அக்கன்னனும் தொழுது வாங்கினான் எ-ம்.

கடோற்கசன், இடும்பை வயிற்றில் வீமனுக்குப் பிறந்தவன். இவன் இவ்வேலினால் இறந்தவரலாற்றைப் பதினான்காம்போர்ச் சருக்கத்துட் காண்க.

௨௪௫. இந்திரனானவன், எப்போதும் நிலைபெறுங் கீர்த்தியையுடைய கன்னனை மிக மனமகிழ்ந்து அவ்விடத்தே நிறுத்தி, பசுமையாகிய குளிர்ந்த துளசியை அணிந்த கிருஷ்ணர் இருந்த இடத்திற் சென்று, தான் சென்று இரந்து கூறியதனையும்; அவ்வளவிலே அவன் கொடுத்ததனையும் அக்கிருஷ்ணருக்குக் கூறினான்; வரங்களைக் கொடுக்கும் ஸ்ரீ கிருஷ்ணர் அதனைக் கேட்டு, அவ்விந்திரனுக்கு ஒரு வசனத்தைச் சொல்லுவார் எ-ம்.

௨௪௬. இக்கன்னன், உண்மையாகவே கொடிய போர்முகத்திலே மாற்றாரால் எறியப்படும் படைகளுள் ஒன்றும் வந்து சரீரத்

திலே பொருந்தவொட்டாத வலிமையினால் உயர்ந்த கவசகுண்டலங்களையும் போய் இரந்தவனுக்குக் கொடுத்துவிட்டான்; ஈயுங் குணமில்லாத இழிந்த செல்வர்கள் இரக்கப்படும் பொருள் எளியதாயினும், அதனையுஞ் சுற்றத்தாரே இரப்பினும் ஈயமாட்டார்கள்; கொடைக்குணமுடையவர்கள் தம்முடைய அரிய உயிரையும் பகைவர்கள் கேட்டாலும் மறுக்கமாட்டார்கள் என்று கூறி எ-ம்.

"ஈவிலா" என்றும் பாடம். என்று என்னும் எச்சம் வருஞ் செய்யுளிற் கொடுத்து என்பதனோடு இயையும்.

உசஎ. இந்திரனுக்கு அநுமதி கொடுத்து, அதன்பின்பு அக்கிருஷ்ணர் தாம்வந்த காரியத்தை முடிக்கும்பொருட்டுத் தம்முடைய தந்தையோடு பிறந்த உறவுமிகுந்த குந்தியையடைந்து, சூரியன் பெற்ற புத்திரனிடத்தே முன்னர்க் கூறியபடி பேசும் பொருட்டு நீ விரைவிற் செல்லுக என்று கூற; அவனைப் பெற்ற பெண்ணாகிய அக்குந்தியும் அன்பு முற்படக் கிருஷ்ணருடைய ஏவலினாலே தன்னுடைய பாதாரவிந்தங்களைச் சிவப்பித்தாள் எ-ம்.

பாதஞ் சிவப்ப நடந்தாள் என்றபடி.

உசஅ. வாயிற்காவலாளர்கள், குந்தி வந்து உன் கோயிலைச் சேர்ந்தாள் என்று கூறக்கேட்ட புத்திரனாகிய கன்னன், முந்திய அன்பினோடு எதிர்கொண்டு வணங்கி, நல்ல முறைமையினால் ஆசனத்திலே இருத்தி, சந்திரனுடைய கிரணங்களைக் கண்டு, மேன்மேன் மிகுந்தொலித்துப் பெரிய கரையைக் கடந்து ஏறுகின்ற, வெண்மையான திரைகளைச் சிந்துஞ் சமுத்திரம் போன்று உருகுகின்ற குந்தியோடு சில மொழிகளைக் கூறுவான் எ-ம்.

உசகூ. தாயே, நீ வந்தது என்னுடைய அரிய தவத்தின் பயனாகும் என்று அன்பினோடு இன்பம்பொருந்த வணங்கி, நீ வந்த காரணம் என்னை என்று கூற, அவளும், அவனை நோக்கி, யான் உனக்குப் பெற்றதாய் என்று கூறி, முன்னே தவத்தினையுடைய துருவாச முனிவர் வந்து ஒரு மந்திரம் உபதேசித்தமையையும், பின்பு சூரியனுடைய அருளினால் அவன் பிறந்தமையையும், பேழையிலே விடுத்தமையையும் வழுவில்லாமற் கூற, அதனைக் கேட்டு எ-ம்.

அன்னை - விளி. கேட்டு என்னுமெச்சம் வருஞ் செய்யுளின் மதித்து என்பதனோடு இயையும்.

உரு௦. மகிழ்ந்து கொடுக்கும் வள்ளலாகிய கன்னன், இது கிருஷ்ணருடைய உபாயம் என்று மனத்தில் நினைத்து, அவளை நோக்கி, நீ அந்நாளிலே என்னைப் பெற்றவள் என்றாலும் நான் உன்



வசனத்தை உளங்கொளத் தெளியேன்; பேய்போல்வார் சிலர் பெரிய அறிவின்மையினாலே தனித்தனி எனக்குப் பெற்றதாய் என்று வந்து, சுத்தமாகிய தேவர்களாற் கொடுக்கப்பட்ட ஒரு புடைவையினாலே துன்பம் பொருந்தி என்புவடிவானார்கள் எ-ம்.

உருக. தகாத தொழிலைச் செய்தவர் படாத துன்பத்தைப் பட்டார் என்னுங் கன்னனுடைய அருள் பொருந்திய வசனத்தைக் கேட்டு, தடைபடாத அன்பினையுடைய கெடாத சுத்தமாகிய வசனங்களைப் பேசுகின்ற குந்தியும், அப்புடைவையை என் கையிலே தந்து சந்தேகத்தை நீங்குக என்று கூறி, அப்புடைவை தன் கையில் வருதலும், நான் பெற்றேனல்லேனாயின் என்னை முனிக என்று கூறி அதனை எடுத்து விரித்து உதறிச் சரீரத்திற் பொருந்தப் போர்த்து, யாமே பெற்ற தாய் என்று எதிரே இருந்தாள் எ-ம்.

தந்து தவிர்க என மாற்றிக் கூட்டுக.

"அடாது செய்தோர் படாது படுவர்" என்பது பழமொழி. "அறந்துறந் தென்று மடாதன செய்தா லார்கொலோ படாதன படாதார்" என இப் பழமொழியை இவ்வாசிரியர் சடாசுரன் வதைச் சருக்கத்திலும் உபயோகித்தமை காண்க. படாம் - வஸ்திரம்.

உருஉ. அவ்வாறு இருந்த தாயானவள் பெற்ற அந்நாளிற் போல மனங் கசிந்து, இரண்டு பெரிய தனங்களாலும் பால் சொரிந்தாள்; கன்னன் அதனை விரும்பி யுண்ணுவான்போல் ஆதரத்தோடு மயிர்ச்சிலிர்ப்புடையவனாயினான்; விரும்பிய தாயானவள் அன்போடு அவனை இறுகத் தழுவி, அழகிய உச்சியை மோந்து, உயிர்த்து வருந்தி, நான் அந்நாளிற்றானே உன்னை எடுத்து வளர்க்கும்படியான பாக்கியத்தைச் செய்திலேனே என்றாள் எ-ம்.

தான் பெற்ற பிள்ளையென உணர்ந்த மாத்திரத்தே அன்புமேலீட்டினாற் பால் சொரிந்தாள்—"அன்றன்போ டெடுத்தணைத்து முலைக்கணூறலமுதூட்டி" யெனக் கன்னபருவத்தில் வருதலுங் காண்க. சற்புத்திரனாகிய நின்னைப் பெற்றவள் யானாகவும், வளர்த்தெடுக்கப் பாக்கியம் பெற்றிலேனே யெனக் குந்தி வருந்தினை னென்பாள், "பரிந்துநான் அன்றுனை வளர்த்தெடுக்கப் பாக்கியம் செய்திலே" னென்றாள். "துதி பெற்ற வாசவனுக் குயிர் நேரான தொடுகவசம் மகிழ்ந் தளித்தோய் தொன்மை நின்னை, விதிபெற்றேன் வளர்த்தெடுக்கத் தவம் பெறாத வெறுவிலியேன்" என நல்லாப்பிள்ளை பாரதத்தும், "பொங்கு முலைப் பாலூட்டிப் பூந்தடங்கண் மையெழுதி, மங்கையர் பாராட்ட வளராதே-எங்குநின், பானறு மின்சொற் பவளவன்ன வாய்முத்தை, யானாரப் பெற்றிலேனிங்கு" எனப் பெருந்தேவனார் பாரதத்தும் வருதல் காண்க.

௨௫௩. [பின்னும் அவள் அவனை நோக்கி] என் புத்திரனே கேட்குதி, தம்பிமார் ஐவரும் உன்னுடைய பாதாரவிந்தங்களை அன்பினோடு வணங்கி, உரிமையோடு மனமிசைந்து ஏவல்களைச் செய்ய, அரசர்களெல்லாரும் வந்து உன் வாயலின் கண்ணே நின்று வணங்க, ஆண்மையும் செல்வமும் பிரகாசிக்க ஓர் ஒப்பில்லாத செங்கோலைச் செலுத்தி, குருகுலத்தில் அரசர்களுக்கும் அரசனாகி, வாழ்வு கூருதலை உனக்கு முறைமையாம் என்று கூறினாள் எ-ம். வருக-கேட்குதி.

௨௫௪. [கன்னன் அவளை நோக்கிக் கூறுவான்:-] என்னைப் பெற்ற நீர் புத்திர நேயமில்லாமலோ அன்றிப் பெரிய பழிக்கு நாணியோ விட்டுவிட்டீர்; துரியோதனன் அன்றைய தினந்தொடங்கி இன்று வரையும் அரிய உயிர்த்துணை யென்று நினைந்து, வெற்றியாகிய பெரிய முடியைச் சூட்டி, இராச்சியத்தைத் தந்து, சகபோசனஞ் செய்து, தனக்கு உரிய தம்பிமாருஞ் சுற்றத்தவர்களும் என் பாதங்களை வணங்குமாறு புகழ்ச்சியையும் உயர்ச்சியையுந் தந்தான் எ-ம்.

௨௫௫. நான் ஒருநாட் குற்றமில்லாமல் விளங்குகின்ற தனியிடத்திலே அவனுடைய மனைவியாகிய பானுமதியினுடைய பொன்னாலியன்ற அழகிய மேகலையினுள்ள மணிகள் உதிருமாறு செய்து, தளர்ந்து இருப்ப, ஆங்கு வந்த துரியோதனன், என்னுடைய தளர்ச்சியை நீக்கித் திடத்தை உண்டாக்கும் பொருட்டு, என்னை நோக்கி, இம் மணிகளை நீயே கோக்குமாறு நான் எடுத்துத் தருகவோ, அல்லது நானே கோக்கவோ என்று கூறினான்; இத்துணை அரிய நட்பினனாகிய வேற்படையை யுடைய துரியோதனன் பொருட்டுப் போர் முகத்திலே சென்று செம்மையாகிய சோற்றுக் கடனைக் கழிப்பதே இனி எனக்கு நன்கு மதிக்கப்படுந் தொழிலும் அறமுமாம் என்று கன்னன் கூறினான் எ-ம்.

ஒரு தினம் துரியோதனன் றேவியாகிய பானுமதியும் கன்னனும் தனிமையாகிய ஓர் இடத்திலே சதுரங்கமாடிக்கொண்டிருக்குஞ் சமையத்தில் தனது நாயகன் எதிரே வரக் கண்ட பானுமதி இருக்கைவிட்டெழுதலும், அவன் வரவை உணராத கன்னன், இவள் தோல்வியுற்றமையினால் இடையேயெழுந்து செல்ல முயன்றாளெனவெண்ணி, அவளை வஸ்திரத்திற் பிடித்திழுத்தலும், அவளணிந்திருந்த மேகலாபரணம் அறுந்து மணிகள் சிந்துண்டன. இதற்கிடையில் துரியோதனனைக் கண்ட கன்னன், அவன் தன்னை விபரீதமாக வெண்ணுவானேயென மனந் தளர்ந்து செயலற்று நிற்றலும், கன்னனது மனநிலையை யுணர்ந்த துரியோதனன் அவனது மனத்தைத் திடப்படுத்த வேண்டி "இம்மணிகளை யான் எடுக்கவோ இன்றேல் நீ எடுத்துத்தா யான் கோக்கவோ" என்று கன்னனைக் கேட்டானென்பது சரித்திரம். இதனை "பன்மணிகள் சிந்திப் பரந்து கிடந்தனகண், டின்மணிக்கென் புகுந்த தென்னாமல்-நன்மணியைக், கோக்கோ பொறுக்குகோ வென்றானுக் கென்னுயிரைப் போக்கா தொழிவேனோ புக்கு" எனவும், "மைத்தடங்கண் மாதேவி வார்துகிலை யான்பிடிக்க, அற்றுவிழுந்த வருமணியை-மற்றவற்றைக், கோக்கேனோ வென்றுரைத்த கொற்றவற்கென் னாருயிரைப், போக்கேனோ வெஞ்சமத்துப் புக்கு" எனவும் பெருந்தேவனாரும், "இன்னவ னினியானென்று யாவருமறியா முன்னம், மன்னவ னிவனேயென்று மாமணி மகுடஞ்சூட்டித், தன்னுடன் கூடவுண்டு தார்மணி பொறுக்கிக் கோத்த, மன்னவன் செய்த நன்றி மறப்பனோ பிறப்புக்கெல்லாம்" எனப் பிறருங் கூறியிருத்தலா னுணர்க. கன்னன் செஞ்சோற்றுக்கடன் கழிக்கவேண்டுமென்னும் விரதம் பூண்டிருந்தானென்பதை "வெஞ்சோற்றை யினிதருந்தி யமுதருந்தும் விண்ணவர்போலிந்நெடுநாள் வாழ்ந்திருந்தேன், செஞ்சோற்றுக் கடனின்றே கழியேனாகில் திண்டோள்கள் வளர்த்ததனாற் செயல்வே றுண்டோ" வெனவும், "செருவிலென துயிரனைய தோழற்காகச் செஞ்சோற்றுக் கடன்கழித்தேன்" எனவும் கன்ன பருவத்திற் கூறியமை காண்க.



௨௫௬. பின்னரும் பர்பலவற்றைக் கூறியபின்பு, பலவற்றையும் பேசியென்னை, யுத்தமோ விளைந்தது, நீர் யாது நினைந்து இங்கே வந்தது மறையாமல் உண்மையால் உள்ளபடி கூறும் என்று இவ்வாற்றாற் புத்திரனுங் கூற, தாயானவள் பெற்று முற்றாப் விடுத்த அந்நாளினும் மனமழிந்து, இரண்டு கண்களினும் நீர் சொரியக் கதறி, வாய் குழறி, வருந்தி அழுதாள் எ-ம்.

௨௫௭. அவ்விடத்திலே மூத்த புத்திரனும் இரண்டு கண்களினுஞ் சொரியும் நீரைத் துடைத்து, அம்மாதாவைப் பலமுறையானுந் தேற்றி, எவர்களுக்கும் மூண்ட தீவினையின் பயனே வருவது அன்றி, முயற்சியினால் வருவதொன்று உள்ளதோ (அது கிடக்க) யான் எவரும் விரும்பிக் கேட்பவற்றைக் கொடுக்கு மியல்புடையேன்; நீரும் விரும்பியவற்றைக் கேட்க என்று சொல்ல, அழகிய பெரிய பாண்டுவின் மனைவியும் அதற்கு உத்தரமாகத் தகுதியோடு இம் மொழிகளைக் கூறுவாள் எ-ம்.

௨௫௮. கொடிய போர்முனையிலே அருச்சுனன் உன்னோடு பொருதால்; பகையினையுடைய பெரிய பாம்பாகிய அம்பை முன்னர் நீ தொடுப்ப அதனால் அவன் இறவாது தவறினால், மீண்டு நீ அதனை விடுத்துக் கொல்லாதொழிக என்று ஒரு வரத்தைக் குறித்தாள்; சிறந்த மற்றைப் பாண்டவர்களும் இளையவர்களென்று அவர்களைப் பொராதொழிக என்று ஒரு வரத்தைக் குறித்தாள்; மூத்தவனாகிய

கன்னன், இளையோர் மீது கொண்ட அன்பின் பொருட்டு அவள் கூறியமையைக் கேட்டு, இவற்றைக் கூறுவான் எ-ம்,

பாந்தளம்பகழி—நாகாஸ்திரம்.

௨௫௯. கொல்லும் அம்பொன்றைத் தொடுக்கவும், எதிர்ந்து போர் செய்பவன் அதிற் பிழைத்துத் தலையோடும் நின்றால், மறு கணை தொடுப்பது அரசர்களுக்கு ஆண்மையோ, வலிமையோ, மானமோ, தருமமோ, ஒன்றுமாகாதே; ஆகையாலும் அருச்சுனன் மேலே குறித்த அம்பை ஒருகாலே தொடுப்பேன்; மற்றைய பாண்டவர்களும் உய்வார்கள்; என்று வன்கண்ணர் அல்லார்க்கும் வன் கண்ணராயினார்க்கும் அன்பு நிறைந்த செம்மையாகிய கண்ணோட்டத்தை யுடைய கன்னன் கூறினான் எ-ம்.

௨௬௦. அவ்வாறு குந்தி பெரிய இரண்டு வரங்களையும் பெற்ற பின்பு, கன்னன் தன்னைப் பெற்ற தாயாகிய குந்தியை நோக்கி, கை கூப்பி, உலகத்திலுள்ள சராசரங்களுக்கெல்லாந் தாயானவரே, நீர் எனக்குந் தரவேண்டிய வரங்கள் இரண்டு உள்ளன: அஞ்சுகின்ற போரிலே அருச்சுனனால் அடியேன் விழுந்தபோது, அரசர்களெல் லாம் அறிய கிடைத்தற்கரிய முலைப்பாலை எனக்குத் தந்து, உம் முடைய புத்திரன் என்னும் உண்மையையுஞ் சொல்லக்கடவீர் எ-ம்.

தாயைத் தெய்வமெனக் கொள்ளுதல் மரபாதலின் உலகிற் சராசரங்களுக் கெல்லாந் தாயீர் என விளித்தான். "காப்பொலியுந் தோளான் தடஞ்சிலைக் கைப் பார்த்தனால், போர்க்களத்து யான்மாண்ட போதகத்து-தாக்கமருள், தேர்வேந்தர் காணச் செருக்களத்தே நீர் வந்து, ஆராமுலை தருவீ ராங்கு" என்றார் பெருந்தேவனாரும்.

௨௬௧. உய்தற்கரிய வலிமையாகிய கொடிய யுத்தம் முடியும் வரையும் நான் உமக்குப் புத்திரன் என்னும் இயல்பைப் பஞ்சபாண்டவர்களும் அறியாதபடி நீர் காக்கக்கடவீர்; அன்றி அவர்கள் சிறிதே அறியின், கருமை பொருந்திய கடலாற் சூழப்பட்ட பூமி முழுவதை யும் எனக்கே தருவார்கள்; தந்தால், நான் எனக்குக் கைவந்த துணை வனாகிய துரியோதனனுக்கன்றிக் கொடேன்; இது மறவாது கொள் ளற் பாலதாகிய கருமம் என்று கூறினான் எ-ம்.

கடைப்பிடி கருமம் வினைத்தொகை. முன்னைவழக்கிற் கேற்பப் பன்மை யீற்றான் முடியாமையின், அதனை ஏவல்வினைமுற்றென்னல் அமையாதென்க. யான் உமது புதல்வனென்பதைப் பாண்டவரறியில் அரசெலாம் எனக்களிப் பர்; யான் என்னரிய நண்பனாகிய துரியோதனனுக்கே உதவுவேன்; அங்ஙன மாயின், யுத்தஞ் செய்தலாற் பாண்டவருக்கு வரும் பயன் யாதுமில்லையாகும். ஆதலால் அவர்களிடத்து இவ்விரகசியத்தை இப்பொழுது சொல்லாதொழிக



எனத் தன் அன்னையை இரந்தானென்றபடி "உன்னுடைய மைந்தர்க்கிவ்வுண் மைதனை யுரைக்கில், அன்னவர்கள் பாகம் எனக்களிப்பர்-பின்னதனை, ஈங் கெனது தோழற்கே யான்கொடுப்பனாதலால், ஆங்கவர்கட் கில்லை யரசு," என்றார் பாரதவெண்பாவிலும்.

௨௬௨. என்று கூற, பெற்ற தாயானவள் அதனைக் கேட்டு, ஒக்கும் என்று சொல்லிக்கொண்டு, இவ் வரங்களைக் கொடுத்து, வலிய துன்பம் மேன் மேல் வளர, இனி யான் உனக்கு முன்னே தளராத படி உயிர் நீங்குவது எப்பொழுது என்று தன் கண்களினின்று நீர் சொரிய வருந்தி வருந்தி, அழுது அழுது, இரங்கி, சூரியன் பெற்ற புத்திரனைத் தழுவி, ஆண்டு நிறுத்தி விட்டு, கிருஷ்ணர் இருந்தவிடத் துச் சென்றாள் எ-ம்.

௨௬௩. கிருஷ்ணரும், குந்தி கன்னனோடு பேசிய கருத்துக் களை யெல்லாந் திருத்தமாகக் கேட்டு, தம்முடைய எண்ணமுஞ் சித் தித்தது என்று மகிழ்ந்து, அந்தக் குந்தியையும் வீட்டிலே இருத்தி, அன்பினோடு தமக்குப் பின்னே வருகின்ற அரசர்களையும் முறை முறையாக நிறுத்தி, தகுதியமைந்த பெரிய தேரின் மேல் இவர்ந்து, அன்றைக்கே பாண்டவர்களிருக்கின்ற நகரை அடைந்தார் எ-ம்.

௨௬௪. [அக்கிருஷ்ணர் அங்கே சேர்ந்து] தூது சென்று துரி யோதனனோடு உறுதிமொழிகள் கூறினமையையும், அவன்மறுத்துக் கோபித்து மோதுகின்ற போரைச் செய்தற்கே துணிந்தமையையும், விதுரன் வலிமை பொருந்திய வில்லை முறித்தமையையும், இராப் பொழுதிலே நிலவறை வகுத்தமையாகிய வஞ்சத்தினாலே மற்றை நாட் காலையிலே தாம் பெரிய ரூபங்கொண்டு, ஆண்டெதிர்ந்த மல் லர் முதலியோரோடு போர் செய்தமையையும், கன்னன் இந்திரனுக் குக் கவசகுண்டலங்களைக் கொடுத்தமையையும், பெற்ற குந்தியான வள் அவனிடத்தே சென்று பெற்ற வரங்கள் தவிர, மற்றைச் சம்ப வங்கள் எல்லாவற்றையும் மைத்துனர்களாகிய பாண்டவர்களுக்குக் கூறினார் எ-ம். "போதுபோய்" என்பது பாடபேதம்.

இங்ஙனமே துரியோதனன், தங்கள் நாட்டைக் கொடுக்க உடன்படாது போர் செய்யச் சொன்னமையை அப்பாண்டவர்கள் அறிந்து, பல அரசர்களை யும் படைத் துணையாகச் சேர்த்து, பதினெட்டுநாள் யுத்தஞ்செய்து துரியோ தனன் முதலியோர் எல்லாரையுங் கொன்றார்கள்; பின்பு நாரதர் கிருஷ்ணர் முதலியோருடைய வேண்டுகோளின்படி தருமர் முடிசூட்டித் தம்பிமாரோடு அரசாண்டார் என்னும் பிற்கதைத் தொடரையும் உணர்ந்துகொள்க.

கிருட்டிணன்றூது சருக்கவுரை
முற்றுப்பெற்றது.

உ

## உதிஷ்டிரன் யாருடைய புதல்வனென்பது.

பஞ்சபாண்டவருள் மூத்தோனாகிய உதிஷ்டிரன் யமனுடைய புதல்வனென்பதே பலருடைய கொள்கையாக விருக்கின்றது. அங்ஙனங் கொண்டமைக்குக் காரணம் யமனுக்குத் "தருமன்" என ஒரு பெயர் இருத்தல்பற்றிப் போலும். அந்தகன், கூற்றுவன், மறலி, தென்றிசைக்கோன், எருமையூர்தி, காலன், நடுவன் என யமனுக்குப் பல பரியாயநாமங்க ளிருத்தலினாலும், இராமாயணம் கந்தபுராணம் திருவிளையாடற்புராணம் முதலிய நூல்களில் யமனைக் குறித்துக் கூறுமிடத்தெல்லாம் அந்தகன் முதலிய நாமங்களையே அத்தொல்லாசிரியர்கள் எடுத்தாண்டு வந்தமையானும், பெருந்தேவனார், வில்லிபுத்தூரார், நல்லாப்பிள்ளை யென்னும் மூவரும் தமிழிற் செய்த பாரதங்களில், தருமன்றந்தை யென்னும் சம்பந்தம் பற்றிக் கூறுமிடத்தன்றி ஏனையவிடங்களில் யமனைக் குறித்துக் கூறுங்கால் அந்தகன் முதலிய பரியாய நாமங்களையே பெரிதும் எடுத்தாண்டுவந்தமையானும், உதிஷ்டிரன் றந்தை யென்னும் விஷயமாகக் கூறுமிடத்தெல்லாம் தருமன்மைந்தன், அறன்மகன் எனக்கூறுமாற்றானும், யமனுக்குரிய ஏனைய நாமங்களை யாண்டும் உபயோகியாதொழிந்தமையானும், யமனுக்குரிய வன்கண்மை முதலாங் குணங்கள் உதிஷ்டிரனிடத்துக் காணப்படாமையானும், துருவாசர் உபதேசித்த மந்திரவலியான் தான் விரும்பிய தெய்வத்தை யழைத்துப் புத்திரப்பேற்றை யடையும் பாக்கியம்பெற்ற குந்தி, தேவர்களில் பேரெழில் தண்ணளி வலிமை முதலிய மேன்மைகள் வாய்ந்தோர் பலரிருப்பவும் அச்சந் தரத்தக்க கோரரூபம் வன்கண்மை முதலிய குணங்களையுடைய கூற்றுவனைத் தனக்கு நாயகனாக வரித்தல் உலகவியல்புக்கடாததானும், இன்னோரன்ன பிற ஏதுக்களானும் உதிஷ்டிரன் யமனது புதல்வனல்லனென்றே கொள்ளல்வேண்டும். இனி, அவன் யார் புதல்வனெனின், கூறுதும்: அவன் தருமபுத்திரனென்றழைக்கப் படுதலினாலும், சூடாமணிநிகண்டில் "அறத்தின் சேய்" எனச் சொல்லப்பட்டிருத்தலினாலும், நச்சுப்பொய்கையிலுள்ள நீரையுண்டு தருமபுத்திரனை யொழிந்த ஏனையோர் நால்வரும் மாண்டுகிடந்த சமையத்தில் அத்தருமபுத்திரனிடத்து நீதிவிசாரித்து, இறந்த தம்பியர் நால்வரையும் உயிர்பெறச் செய்தது தருமதேவதையென வியாசபாரதத்தும் தமிழில் உள்ள மூவர் பாரதத்தும் கூறப்பட்டிருத்தலினாலும், அத்தருமதேவதையே உதிஷ்டிரன்றந்தை யென்பதை "தனைப்பயந்த நற்றருமதேவதை திருவருளால்" எனவும், "பெருநலம் பெறு மகனை யப்பேரறக்கடவுள், இருவிசும்பினி லருவமா யியம்பிய மாற்றந், திருவுளந்தனிற் கொண்டு தன் செங்கைநீர் வீழ்த்திப், பொருவிலாமகன் புகலுவ புகறிநீ யென்றான்" எனவும், வில்லிபுத்தூராரும், "அறப்பெருங் கடவுளோன் றறிந்து தாதையைச் சிறப்புடன் சேவடி சென்னி சேர்த்திய, மறப்பெரும் புதல்வனை மகிழ்ந்து தம்பியர், இறப்பினை யொழிப்பதற் கேதுவுண்டென" என நல்லாப்பிள்ளையும் வெளிப்படையாகக் கூறியிருத்தலினாலும் உதிஷ்டிரன் தருமதேவதையின் புதல்வனென்பது இனிது புலப்படுகின்றது.

## அநுபந்தம்.

உ

பாரதம்—உத்தியோகபருவம்

# கிருட்டிணன்றூது சருக்கம்

# விசேடக் குறிப்புரை

பாரதம் - பாரதர்களது சரித்திரத்தைக் கூறும் இதிகாசம்.

பாரதர் - பரதனது வம்சத்திற் பிறந்தவர்; ஈண்டுப் பாண்டவரும் துரியோதனாதியரும் பாரதர் எனப்படுவர்; அவர்களின் சரிதமே இதன்கண் விரிவாகப் பிரதான விஷயமாகச் சொல்லப்படுதலின் என்றறிக. வடமொழிப் பாரதமானது ஆதிபருவம் முதல் சுவர்க்காரோகண பருவம் ஈறாகப் பதினெட்டுப் பருவங்களை உடையது. அவற்றுள் வில்லிபுத்தூராரால் முதற் பத்துப் பருவங்களே மொழிபெயர்த்து இயற்றப்பட்டன. அவற்றுள் உத்தியோக பருவம் ஐந்தாவது பருவமாகும். இதற்கு முன்னுள்ளவை: ஆதிபருவம், சபா பருவம், ஆரணிய பருவம், விராடபருவம் என்னும் நான்குமாம். பருவம் என்பது இவ்விதிகாசத்தின் பெரும் பிரிவாகிய நூலுறுப்பின் பெயராம். அவை பிரதானமாகிய முதலிய பொருளால் 'ஆதி பருவம்' முதலான பெயர்களைப்பெற்று வழங்குகின்றன.

உத்தியோக பருவம் என்பது உத்தியோகத்தைக் கூறும் பருவம் என 2-ம் வேற்றுமை யுருபும் பயனும் உடன்தொக்க தொகை யாக விரியும். உத்தியோகம் - முயற்சி; என்றது பாண்டவர்கள் தமது இராச்சியத்தை மீளப் பெறுவதற்குச் செய்த முயற்சியாம். பருவம் - (மூங்கில் கரும்பு முதலியவற்றின்) கணு; அஃது ஈண்டு உவமை யாதுபெயராய் நூலின் பெரும் பிரிவாகிய உறுப்பிற்கு ஆயிற்று. இனி, இத்தொடரை உத்தியோகத்தினது விஷயமாகிய பருவம் என ஆறம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு விரித்துரைப்பினும் பொருந்தும்.

கிருட்டிணன்றூது சருக்கம் என்னுந் தொடர் கிருட்டிணனது தூதுச் செய்தியைக் கூறும் சருக்கம் என விரியும். கிருட்டிணன் - திருமாலினது அவதார மூர்த்திகளுள் ஒருவர்; வசுதேவருக்கும் தேவகிக்கும் மகனாகப் பிறந்து, கம்சனுக்குப் பயந்த அவர்களால் கோகுலத்திற் கொண்டு போய் விடப்பட்டு, நந்தகோபன் என்ற இடையர் தலைவனாலும் அவன் மனைவி யசோதையாலும் வளர்க்கப்பட்டவர். சருக்கம் என்பது இந்நூலில்

பருவத்தின் உட்பட்ட சிற்றுறுப்பிற்குப் பெயராய்வந்தது. கிருஷ்ணன் என்னும் வடசொல் திரிந்தது; கருநிறமுடையவன், (எல்லார் மனத்தையும்) ஆகருஷிப்பவன் [தன்பால் இழுப்பவன்], (அசுரர்களுயிரைக்) கவர்பவன் எனப் பல காரணப்பொருளேயும் தரும் இப்பெயர் என்றறிக.

## காப்பு.

"நீடாழி யுலகத்து"...... .......................

விசேடக் குறிப்புரை: இச்செய்யுள் இந்நூலாசிரியர் குமாரர் வருந்தருவார் இயற்றிய சிறப்புப்பாயிரத்தின் முதற்கண் உள்ளது. 'வாடாத தவ வாய்மை முனிராசன் + நீடாழி யுலகத்து மறை நாலொடு ஐந்து என்று நிலே நிற்க + மாபாரதம் சொன்ன நாள் + மாமேரு வெற்பு + எடு ஆக + ஆகவம் கூர் + தன் கோடு எழுத்தாணி + ஆக எழுதும்' என மொழிமாற்றி உரைக்கப்பட்டது. ஆழி-சமுத்திரம்; ஆழமாயுள்ளது [ஆழ் + இ] எனவும், வட்டவடிவாயுள்ளது எனவும் காரணப்பொருள் விரிப்பர். மறை-வேதம். தவவாய்மை: தவமும் வாய்மையுமாகிய இவற்றையுடைய என விரியும். தவம் - உணவைச் சுருக்கலும் வெயிலில் நிற்றலும் நீர்நிலேயில் நிற்றலும் முதலிய செயல்களால் மனம் பொறிவழி போகாமல் உடம்பை ஒறுத்தலும், கடவுளேத் தியானித்தலும், பிற வுயிர்க்குத் துன்பஞ் செய்யாமையும் முதலாயின. வாய்மை - மெய்ம்மொழி. ஆகவம் - போர். கோடு - தந்தம். பிரான்-தலேவன், ஈண்டு விநாயகக்கடவுள். இச்சொல்லினதடியிலிருந்து பிறந்த பெண்பாற்பெயர் பிராட்டி என்பது. கூர்வாம்: [=மிகுவாம்] மிகுதிப் பொருளேயுணர்த்தும் 'கூர்' என்னும் உரிச்சொல்லி னடியாகப் பிறந்த தன்மைப்பன்மை எதிர்காலத் தெரிநிலேவினேமுற்று; புலவர் தம்மை [தனித்தன்மை] ப் பன்மையாற் கூறல் மரபு. ஆக என்பன இரண்டும் உவமையுருபுகள்; போல என்னும் பொருட்டு; இவற்றை, 'கொண்டு' என்னுஞ் சொல் வருவித்து முடிக்க. இனி, இங்ஙனமன்றி 'ஆக — ஆகியிருப்ப' என ஆக்க வினேயாகிய செயவெனெச்சமாகக் கொண்டுரைத்து, (வெற்பு, கோடு என்னு மிரண்டையும் அவ்வினேகளுக்குக் கருத்தாவாக்கி) அவ்வினேயெச்சங்களே 'எழுதும்' என்னும் வினேயோடு முடிப்பினும் அமையும். இச் செய்யுள் ஐஞ்சீரடியான் வருதலின், கலிநிலேத்துறை.

[46-ம் பக்கம் 13-ம் வரியில், 'காரணப் பொருளதாய் வருவித்த கொண்டு என்னும் ... ... வினே' என்றது: எழுதுதற்குக் காரணமாகிய வினேயாக வருவித்தசொல்லாகிய 'கொண்டு' என்னும் வினேயை, 'ஆக' என்ற செயவெனெச்ச மிரண்டும் தமக்கு முடிக்குஞ் சொல்லாகக் கொண்டன என்றபடி. 47-ம் பக்கம் 2-ம் வரியில் 'பாரதம்' என்றிருப்பதைப் 'பாரம்' எனத் திருத்துக.]



1. "பேர்படைத்த"...............

வி—ரை: விசயன் - அருச்சுனன்; விஜயன் என்னும் வடசொல் திரிந்தது: வி - விசேஷமான, ஜயன் - வெற்றியை யுடையவன், பிறர்க்கில்லாத மேலான வெற்றியைப் படைத்தவனென்றவாறு; இனி, பிறரால் தான் வெல்லப்படாதவன் எனவும் பொருள்படும்; இப்பொருட்கு வி: இன்மைப்பொருளேத்தரும் இடைச்சொல்லாம். இவ்விருகாரணத்தாலும் அருச்சுனனுக்கு விஜயன் என்னும் பெயருளதாயிற்றென்றறிக. மும்மை - ஈண்டு மூன்று என்னும் பொருளேத் தருதலால் மை: பகுதிப்பொருள் விகுதியாம்; "தெரிமாண்டமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்" என்புழிப்போல. பிறவியினும் - பிறவியின்கண்ணும்; 7-ம் வேற்றுமைக் 'கண்' உருபு தொக்கவிடத்து இன்சாரியை நின்றதென்றறிக. இனி, 'இன்' உருபு 7-ம் வேற்றுமைக்குப் புறனடையால் வந்ததெனினுமாம். சுயோதனன் - துரியோதனன். படை - ஆயுதம். பணித்தல் - சொல்லல். கார் படைத்த நிறத்தோன் - மேகம்பெற்ற கரிய நிறத்தை யுடையவன், கிருஷ்ணன். மாலே, கோவை, நிறத்தோனே என்னும் மூன்று பெயரும் ஒரு பொருண்மேல் வந்தனவாகலின், முன்னேய இரண்டு பெயரும் பின்னேயதற்கு அடையாய் நிற்ப, மாலும் கோவுமாகிய நிறத்தோனே எனப் பொருள் படும்; இவ்வாறு அடைமொழியாகிய விசேடணபதமும் விசேடிய பதத்தினது வேற்றுமையேற்று வருதல் வடமொழி வழக்கிலும் காணப்படும். பிறவாழி என்புழிப் (பிற + ஆழி) பிற என்பதனே முதனிலேத்தொழிற்பெயரெனக் கொள்வாருமுளர். கைதொழுவார் ... ... ... கரைகாண்பார் என எதிர்காலத்தாற் சொல்லற்பாலதனே கண்டார் என இறந்தகாலத்தாற் கூறியது தெளிவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாகிய தொரு கால வழுவமைதி; "விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும், பிறழவும் பெறூஉ முக்காலமு மேற்புழி" [நன். 384 - சூ ] என்பதனுனறிக. ஆழி - கடல். பிறவியைக் கடலாக உருவகஞ் செய்தமைக்கு இயைய அவ்னருளாகிய புணேயைப்பெற்று என்றும், முத்தியாகிய கரை என்றும் கூருதது ஏகதேச வுருவக அணியாம். காரணகாரியத் தொடர்ச்சியாய்ப் பிறவி மேன்மேல் எல்லேயின்றி வருதலின், அதனேக் கடலாக உருவகித்தார். கண்டாரே - கண்டாரே யாவர் என ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. இனி இவ்வேகாரத்தை தொழுவாரென்புழி மாற்றிக் கூட்டி, தொழுவாரே கரை காண்பர் (ஏனேயோர் கரைகாணுர்) என வுரைத்துப் பிரிநிலேப்பொருளது எனினுமாம். 'ஆதலால் யாமும் அவனேத் தொழுது பிறவித்துன்பம் நீங்கப்பெறுதலுடன் இந்நூலும் இடையூறின்றி இனிது முடியப் பெறுவாம்' என்பது குறிப்பெச்சத்தாற் ருெக்கதாகக் கொண்டுரைக்க. எனவே இச்செய்யுளாற் கடவுள் வாழ்த்தும் பயனும் கூறியவாரும். இந்நூலாசிரியர் வைஷ்ணவ சமயத்தா

ராதலானும், பாரதப்போர் முடித்துப் பூபாரந் தீர்த்த கண்ணனுக்கு இந்நூல் நுதலிய பொருளோடு இயைபுண்மையானும் இச்செய்யுள் வழிபடு கடவுள் வாழ்த்தும் ஏற்புடைக் கடவுள் வாழ்த்துமாய் நின்றதென்றறிக. நூலின் முதற்கண் மாத்திரமேயன்றி இடையிலும் கடையிலுந்தானும் கடவுள் வாழ்த்துக் கூறல் மரபென்பதும், அங்ஙனமாகிய நூல் பிரசித்தியடையும் என்பதும், அதனைக் கற்போர் நீண்ட ஆயுள் வீரம் முதலாய பேற்றைப் பெறுவரென்பதும் பதஞ்சலிமாபாடியத்துக் கூறப்பட்டன. அதனால் இவ்வாசிரியரும் நூலின் முதலின்மாத்திரமன்றி நூலினிடையாகிய இச்சருக்க முதற்கண்ணும் கடவுள் வாழ்த்துக் கூறினாரென்றறிக.

2 - 3 அடிகளிற் குறித்த வரலாறு: பாண்டவர் அஞ்ஞாத வாசம் முடித்த பின் உலூகமுனிவரைத் துரியோதனனிடம் தூதாக அனுப்பி நாடு வேண்டினர். அவன் நாடு கொடுக்க மறுத்தான். மறுத்த துரியோதனன் பல அரசர்க்கும் படைத்துணை வேண்டித் தூதனுப்பிவிட்டுத் தான் கண்ணபிரானைத் துணைவேண்டத் துவாரகைக்குச் சென்றான். கண்ணபிரானிடம் அருச்சுனனும் துணைவேண்டச் சென்றான். துரியோதனன் வரவை அறிந்த கண்ணபிரான் தமது வாயிற் காவலாளருக்குத் துரியோதனனும் அருச்சுனனும் வரின் தடைசெய்யாது உள்ளே விடும்படி கட்டளை செய்து அறிதுயிலமர்ந்தார். முன்னதாக வந்த துரியோதனன் உட்சென்று கண்ணன் உறங்குவதைக் கண்டு எழுப்பாமல் அவரது தலைப் பக்கமாக ஓராசனத்தில் அமர்ந்திருந்தான். பின்னர் வந்த அருச்சுனன் கண்ணனது காற்பக்கத்தே சென்று வணங்கி நிற்ப, யோகநித்திரையிலிருந்த கண்ணபிரான் கண்விழித்துக் கால் மாட்டில் எதிருற நின்ற அருச்சுனனைக் கண்டு மகிழ்வுடன் அவனுக்கு நல்வரவு கூறி அருள்செய்தார். பின் அருச்சுனன் மொழியால் துரியோதனன் தலைமாட்டில் வந்தமர்ந்திருப்பதை முன்னறியார்போலுணர்ந்து படுக்கையினின்று எழுந்து சென்று துரியோதனனைத் தழுவி 'வந்தநீ மௌனமாயிருப்பானேன்?' என்று இன்சொற் கூறி யுபசரித்தனர். மேல், 'நீவிர் இருவீரும் வந்த காரணம் என்னை?' என்று வினவ, அவ்விருவரும் அவரைப் போர்த் துணையாகப் பெறுதற் பொருட்டு வந்ததாக அறிவித்தனர். அப்போது கண்ணபிரான் 'யான் முன்பே தருமபுத்திரனுக்குப் போரில் துணை செய்வதாக வாக்குத் தத்தஞ் செய்துவிட்டேன்; அன்றியும், இப்பொழுதும் அருச்சுனனையே முதலிற் கண்டேன். ஆகையால் துரியோதன மகாராசனே, உனக்குப் போர்க்கு உதவியாக யான் வர இடமில்லை. இனி உனக்கு என்னால் வேறு யாது செய்யத் தக்கது? வேண்டுக' என்றார். அதற்குத் துரியோதனன் கண்ணனை ஆயுதம் எடுத்துப் போர்செய்யா தொழியும்படி வேண்டிக் கொண்டான். கண்ணபிரான் அதற்கு உடன்பட்டு, அருச்சுனனை நோக்கி 'ஆயுதமெடாமல் உனக்கு உதவி செய்வதெங்ஙனம்?' என்று வினவ, அருச்சுனன் 'நீர் எனது தேரிற் சாரத்தியஞ் செய்வதே போதும்' என்று வேண்டினன். கண்ணபிரான் அது செய்தற்கும் உடன்பட்டனர் என்பதாம்.



இக்கவிமுதல் 33 - ம் செய்யுளிறுதியாக உள்ளவை அறுசீர் ஆசிரிய விருத்தங்கள். இச்செய்யுளின் நான்கடியினும் முதலாஞ் சீர்கள் முதலாமெழுத்தொழிந்த ஏனை யெழுத்துக்கள் ஒன்றிவந்தமையால், திரிபெதுகை பெற்றவாறறிக.

2. வி—ரை: 'அன்பொடு + ஞானம் + இனிது உரைத்து ஞானமுனி அகன்றதன் பின் + ஏனல் அம் தண் கிரி பெருந்தேன் + சுனைகள்தோறும் + இறைக்கும் எழில் குருநாடன் + சாம........எண்ணி + இயம்புவான்' என அந்நுவயங் கொள்க.

ஞானம் - தத்துவஞானம், அஃது ஈண்டு அதனையுண்டுபண்ணும் கருவியாகிய உபதேச மொழியை யுணர்த்தலின், காரிய ஆகுபெயர். தருமம் - கடமை, நீதி; ஈண்டு அதனை யுணர்தற்குக் கருவியாகிய நூல்களுக்குக் காரிய ஆகு பெயர். 'தகுதிப்பொருள்' என்றது மேற்கூறிய நால்வகை யுபாயங்களை. 'புகலும்' என்ற பெயரெச்சம் 'தகுதி' என்னும் செயப்படுபொருட் பெயரைக் கொண்டது. 'சுனை நிறையும்படி அவைகளில் பூவிலிருந்தும் தேன்கூடுகளிலிருந்தும் தேனைச் சொரிகின்ற குருநாடு' என அந்நாட்டிலுள்ள மலைவளங் கூறியபடி. இனி, 'தேன் + நிறைக்கும்' எனப் பதம்பிரித்து 'சுனைகளில் தேனை நிறைவிக்கும் நாடு' என்றும், 'ஏனல் அந்தண் கிரிப்பெருந்தேன் சுனைகடோறும் இறைக்கும் குருநாடு - தினைப்பயிருக்கு மலைத்தேனைச் சுனைகளெல்லாவற்றிலிருந்தும் நீராக இறைக்கின்ற நாடு' என்றும் உரைப்பினும் அமையும். இவ்வெல்லாப் பொருளுக்கும் இறைக்கும் அல்லது நிறைக்கும் என்ற வினைக்குக் கருத்தா நாடேயாகக் கொள்க. இங்ஙனமன்றி, கிரியைக் கருத்தாவாக்கி யுரைப்பாருமுளர். அஃதுரையாகாமைக்குக் 'கிரிப்பெருந்தேன்' என்னும் வலிமிக்க புணர்ச்சியே சான்றாதலறிக; எழுவாய்த் தொடரில் இகரவீற்றின்முன் (கிரி + பெருந்தேன்) வலியியல்பாகுமென்பது விதி [ நன். சூ. 176].

சஞ்சயன் - திருதராட்டிரனோடு அதிக நட்புப்பூண்ட அந்தண முனிவன்; சில சமயங்களில் அவனுக்குத் தேர் செலுத்தலுஞ் செய்பவன்; பாரத யுத்தம் நிகழும்போது நாடோறும் நிகழ்வனவற்றை அறிந்து வந்து உள்ளவாறு திருதராட்டிரனுக்கு உரைத்தவன்; உபாயத்தினாற் பாண்டவரின் மனத்தை மாற்றுதற்பொருட்டுத் திருதராட்டிரனால் பாண்டவரிடத்துத் தூதாக அனுப்பப்பட்டவன். அவனுரைத்த ஞான மொழிகளாவன: "நீவிர் ஐவிரும் தபோதனர்போலக் காட்டில் வசிக்க வல்லராயினீர். துரியோதனன் உமது நாட்டை யீந்து உறவுடன்வாழச் சம்மதியான். ஆதலால் உமது தாயபாகத்தையும் அரசுரிமையையும் கைவிட்டுப்

பேரின்பத்தை அடைதற்பொருட்டுத் தவஞ் செய்தலே கடன். தாவர முதலாகிய கீழாகிய பிறவியின் நீங்கி ஞானிகளாதல் அரிது; முத்தியைப் பயக்கும் ஞானத்தை யடைதற்கேதுவாகிய தவநெறி உமக்கு வலிய வாய்த்துளது. ஆதலின், நாட்டினைப்பற்றிய ஆசையினையும், அரசபதவியிலுள்ள மோகத்தினையும், கொடிய போரிலாசையினையும், மங்கையர்போகத்திலாசையினையும் விட்டு, வீட்டுநெறியை அடைய முயலுதிர்'' என்றின்னோரன்னவை.

நால்வகையுபாயங்களுள் சாமமே உத்தமமானதென்றும் அது பலியாதவிடத்துப் பேதமும் தானமும் முறையே கொள்ளற்குரியன என்றும் அம்மூன்றும் ஆகாதவிடத்தே கடைத்தரமான தண்டம் கொள்ளற்பாலதென்றும் நீதிநூல் கூறலின் "சாம பேத தான தண்டமென முறைமையிற் புகலும் தகுதி நோக்கி'' என்றார். அதனால் தருமபுத்திரன் உத்தமமான சாமோபாயத்தையே மேற்கொண்டு முன்பு உலூக முனிவனைத் தூதாக அனுப்பியதோடு அமையாது, மீட்டும் கண்ணபிரானைத் தூதாக அனுப்ப எண்ணினன் என்றறிக. நயபயங்களாற் பகைவர் மனத்தை வேறுபடுத்துதலும் பேதமாகிய உபாயமேயாமென்க. இனி, 'தருமம் - ராஜ தர்மங்களை நடாத்துதற்குக் கருவியாகிய உபாயங்கள்' எனவும், 'தகுதி - அவ்வுபாயங்களின் வெவ்வேறு தரமான நிலைமை' எனவும் கொண்டு, 'திருபர் தருமம் சாம பேத தான தண்டம் என முறைமையின் புகலும் தகுதி நோக்கி - இராசதருமங்களை நடத்துதற்குக் கருவியான நால்வகையுபாயங்களை சாமம் முதலாக வரிசைப்படுத்திக் கூறுதற்கு ஏதுவாகிய அவற்றின் தாரதம்மியத் தன்மைகளை எண்ணி' என்றுரைத்தலுமாம். சுனை- மலைமேலுள்ள நீரூற்றமைந்த தடாகம். எழில் - அழகு; நாட்டிற்கு அழகாவது நீர்வளமும் நிலவளமும் உடைமை. சந்திரகுலத்திலுதித்த குரு என்னும் அரசனால் சீர்திருத்தி யாளப்பட்டமையின், குருநாடு எனப் பெயர் பெற்றது. ஏ: அசை.

3. வி—ரை: விளிப்பெயர் முதலில் மாற்றிக் கூட்டி யுரைக்கப்பட்டது. சிறந்த குணஞ் செயல்களாலும் புகழாலும் எல்லார் மனத்திலும் நினைக்கப்படும் பெருமதிப்பு உடையவாற்றால் "யார் மனத்து மிருக்குஞ் சோதி'' என விளித்தார். இனி, திருமாலின் அவதாரமாதல்பற்றி 'அந்தர்யாமியாக உயிர்கள் யாவற்றினும் வியாபித்த ஞான சொரூபி' என உரைத்து 'எல்லார் கருத்தையும் நீ நன்குணருவை, உனக்கு அறியப்படாத விஷயம் ஒன்றுமில்லை' என்ற கருத்துக் கொள்ளலுமாம். சோதி - (முன்னதற்கு) 'ஒளி, மதிப்பு' என்றும், (பின்னதற்கு) 'அறிவு' என்றும் பொருள்படும். முன் - முதலில், சஞ்சயமுனி வருமுன்னர். பாண்டவர் உலூகனைத் தூதனுப்பிய பின்பே திருதராட்டிரன் சஞ்சயனைப் பாண்டவரிடம் சென்று ஞானோபதேசஞ் செய்து உபாயத்தினால், அவர்கள் மீளக் காட்டுக்கே சென்று வசிக்கும்படி ஏவுமாறு தூதாக அனுப்பினான் என்றறிக. செஞ்சொல்முனி-இத வார்த்தையை உபதேசித்த முனி என விரித்துரைக்க. யாம் - ஈண்டு உளப்பாட்டுத் தன்மைப் பன்மைச் சொல்லாக நின்று, 'யானும் வீமனும் நீயும்' என்னும் பொருளைத் தந்தது. சஞ்சயமுனி தூதாக வந்த காலையில், அவனுக்குத் தருமபுத்திரன் 'அரசராயுள்ளார் இராஜதர்மத்தை நிறைவேற்றாமற் கைவிட்டுத் தவத்தை மேற்கொள்ளார்; யானும் என் கடமையில் நின்று பகைவரை விண்ணுலகேற்றியதன்பின்பே என் மனம் தவத்தில் விரும்பிச் செல்லும்' என்றும், வீமன், 'நீ கூறும் தவம் எமக்கு உகந்த தவம் அல்ல; போரில் தலையற்ற கவந்தக் காட்டு மத்தியில் நின்று பகைவரை வென்று மனத்திலுள்ள செற்றத்தை மாற்றுவதே எமக்குச் சாலுந்தவமாகும்; இராசசூயமாகிய அறக்களவேள்வி வேட்ட என் தமையன் போர்க்களமாகிய யாகசாலையில் நூற்றுவராகிய பசுக்களைக் கொன்று மறக்களவேள்வியையும் புரியச் செய்வேன்' என்றும், கண்ணன் 'இப் பாண்டவர்க்குப் பூமியை யாளுதலும், நூற்றுவர்க்கு வீரசொர்க்க மேறுதலும் விரும்பி மேற்கொள்ளுந் தவமாகும்' என்றும் கூறியவற்றையே "யாமுரைத்த கருமம்'' என்ற சொல்லாற் குறித்தனர். அன்றே: தேற்றப்பொருளில் வந்தது. பின்னிரண்டடியில் வெளிப்படக் கூறிய உவமானச் செய்தியால், அதனில் தொகுத்து அமைக்கப்பட்ட உவமேயச் செய்தியாகிய 'ஆபத்திற்குக் காரணமாகிய பகையை மிக வளர்த்து அதனைப் பரிகரித்தற்கு ஏற்ற உபாயங்களைத் தேடிச் செய்யாதிருத்தல் தக்கதன்று' என்னும் பொருள் குறிப்பால் தோன்றி நிற்றலின், அத்தொடர் ஒட்டணி பொருந்தியதாகும். 'ஆதலால், அதற்கேற்ற ஆலோசனையைச் செய்து கருமமியற்றத் துணிவதே தக்கது' என்பது குறிப்பெச்சப் பொருளாகக் கொண்டுரைக்க. அறிதி: (=அறிகின்றாய்) முன்னிலையொருமை வினைமுற்று; இகரவிகுதி ஈண்டு நிகழ்கால முணர்த்திற்று; இருக்கும் அதோ - இருக்கும் அச்செயலோ (தக்கது).



4. வி—ரை: அறம் ஒன்று இன்றி - தருமஞ் சிறிதும்இன்றாக; இழிவு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. போரில் இருதிறப் படையிலும் பலவுயிரை மாய்த்தல் நிகழுமாதலின், அச்செயல் தனது அருட்குணத்திற்கு மாறாதல்பற்றி "அறமொன்றின்றிப் பெருஞ் சமரம் விளைக்குமது கடனன்று'' என்றான். இனி, இவ்வடையினை தாப்பிசைப் பொருள்கோளாக "அறமொன்றின்றி அருஞ்சமரம்புரியும்வகை.. ..'' என முன்னும் கூட்டி, துரியோதனன் முன் சூதாடிய சபையில், வனவாசமும் அஞ்ஞாதவாசமும் முடித்துவரிற் பாண்டவர்க்கு நாடு தருவதாகச் சொல்லிய வாக்குத் தவறுதல்பற்றி "வாய்மையாகிய அறஞ் சிறிதுமின்றாக அருஞ் சமரம் விளைக்கும்வகை யவருரைத்தாராலும்'' என்றதாகக் கருத்துக் கொள்க. இனி, 'ஒன்று' என்பதனை முதனிலைத் தொழிற்பெயராகக் கொண்டு 'தருமம் ஒன்றுதல் (=பொருந்துதல்) இன்றாக' என்றுரைப்பினுமாம். அருள் வெள்ளம் பெருகும்படி கூறலாவது தன் சொல்லைக்

கேட்போர்க்கும் அருள்மிகப் பெருகும்படியான மெய்ப்பாடு பொருந்தக் கூறலாம். இப்பொருட்கு பெருகஎன்னும் செயவெனெச்சம் காரியப்பொருட்டாய் எதிர்காலத்தை உணர்த்தும்; இனி, 'தன் மனத்தில் அருள்வெள்ளம் பெருகுதலாற் கூறும்' என உரைப்பினுமாம். இதற்குக் காரணப் பொருட்டாய் இறந்தகால முணர்த்திவந்த செயவென் வாய்பாட்டு வினையெச்சமாம். பொரும் சமரம் - தாக்கும் போர், மோதும் போர். புயப் போர் வாணன் இருஞ் சமரம் தொலைத்த - தனது ஆயிரம் புயங்களாற் போரைச் செய்ய வல்ல வாணாசுரனது பெரிய போரை ஒழித்த எனத் தொடர்ப்பொருள் விரிக்க; அவனது தோள்களை வெட்டிப் போர்வலியைக் கெடுத்த என்றபடி. 'ஆயிரத்திரெருபாதியு மடக்குசிலையான் - ஆயிரத்திரெருபாதியி னடற்பகழியான் - ......அழன்று" பொருவான் வாணன் என்றறிக. விளைக்கும்அது:-பெயரெச்சத் தொடர்; விளைவிக்கும் அச்செயல் எனப் பொருள்படும். இளைஞர் - தம்பியர்; வீமன் முதலிய நால்வர். ஈண்டு உம்மை எதிரது தழீஇய எச்சவும்மை; என்னை? சாத்தகியையும் திரௌபதியையும் உடனிருத்திக் கூறியதாக 42—48 செய்யுட்களால் உணரக்கிடத்தலின் என்க. இச்செய்யுளில் நான்கடிக்கண்ணும் முதலாஞ் சீர்கள் முதலெழுத்தொழிந்தவை ஒன்றிவந்தமையால் திரிபெதுகையும், 'சமரம்' என்னுஞ் சொல் ஒரே பொருளில் மீட்டுங் கூறப்பட்டமையால் சொற்பொருட்பின் வருநிலையணியும் அமைந்து தோன்றுதல் காண்க. ஏ: அசைநிலை.

**கண்ணன் வாணன் போரை அழித்தவரலாறு:** மகாபலிச் சக்கரவர்த்தியின் சந்ததியிற் பிறந்த வாணாசுரனுடைய மகளாகிய உஷை என்பவள் ஒருநாள் அழகுமிக்க ஓராடவனோடு கூடியதாகக் கனாக்கண்டு அவனிடத்தில் மிகுந்த காதல்கொண்டு தனது உயிர்த்தோழியாகிய சித்திரலேகையிடம் அறிவித்து அவனை அடையும் உபாயத்தை உசாவினாள். சித்திரலேகை அவ்வாடவன் கிருஷ்ணரது பேரனும் பிரத்தியும்நனது மகனுமாகிய அநிருத்தனே என்றறிந்து, தனது யோகவித்தையின் வல்லமையினால் துவாரகைக்குச் சென்று அங்கிருந்த அவனைத் தூக்கிவந்து அந்தப்புரத்தில் விட, உஷை அவனுடன் காந்தருவ மணமுறையால் நட்புற்றிருந்தாள். அதனைக் காவலாளரால் அறிந்த வாணாசுரன் மாறுபட்டுப் பொருது அநிருத்தனை நாகாஸ்திரத்தாற் கட்டிவிட, துவாரகையில் அநிருத்தனைக் காணாமல் யாதவர்கள் தேடினார்கள். நாரத முனிவரால் நடந்த செய்தியை யறிந்த கண்ணபிரான் தேரிலேறிச் சேனை புடைசூழ வாணனது சோணிதபுரத்துக்குச் சென்று சிவபெருமான் அருள்பெற்றுப் பெரும் போர்செய்து வாணனது சேனைமுற்றுமழித்துத் தமது சக்கராயுதத்தைவிட்டு அவனது தோள்களாயிரத்துள் சிவபூசைசெய்த நான்கு தோளொழிய மற்றைத் தோள்கள் அனைத்தையுமறுத்து வென்றனர். பின்னர் வாணன் சிவபெருமானருளால் நான்கு தோளோடும் உய்தி



பெற்றுச் செருக்கொழிந்து தன் மகளை அநிருத்தனுக்கு மணஞ்செய்வித்து வாழ்ந்தான் என்பதாம்.

[48-ம் பக்கம் 26-ம் வரியில், 'இரண்டாயிரம் வலிய' என்றிருப்பதைத் 'திரண்ட வாயிரம் வலிய' எனத் திருத்திக்கொள்க.]

5. வி—ரை: செய்வரால் இனம் உகளும் திரு நாடு பெற நினைவோ + பகைத்த போரில் உய்வர் ஆர் என விரைவின் உருத்து எழுந்து பொர நினைவோ + மீள சென்று பை அரா அருங்கானில் பயின்று திரிதர நினைவோ + ஐவராம் அவநிபர்க்கும் நினைவு ஏது + உண்மையாக (கூறுமின்) + என்று + அமரர்கோமான் அருள் புரிந்தான் என அந்நுவயப்படுத்திப் பொருள்காண்க.

செய் - வயலில். வரால் இனம் - வரால்மீன்களின் கூட்டம். திரு - அழகு; செல்வமுமாம். நினைவு என்னும் மூன்று பெயரையும் 'உளது' என்னும் பயனிலையாகிய வினைகள் வருவித்து அவற்றி னீற்றில் ஓகாரத்தைக் கூட்டி 'நினைவு உள்ளதோ' எனத் தனித்தனி முடிக்க. பெற, திரிதர, பொர என்னும் செயவென் வாய்பாட்டு வினையெச்சங்களும் அவ்வினைகளோடு முறையே தனித்தனி முடியும். 2-ம் அடி முதற்கண் "பைவராய்" எனப் பாடங்கொள்ளலும் உண்டு; அப்பாடத்திற்குத் 'துன்பத்தை அனுபவிப்பவராய்' எனப் பொருள் கொள்க; பைவு, பையுள், பைதல் என்பன துன்பமெனப் பொருள் தருகின்ற ஒரேபகுதியிற் றோன்றிய சொற்களாகும். "பைவரா" என்பது பாடமாயின், (வசித்தற்கு) அழகிதல்லாத எனப் பொருளுரைக்க; பை - அழகு. 'யாவர்' என்னும் வினாப்பெயர் ஆர் என மருவியது. 'யாருய்வர்' என்னும் வினாச்சொல் 'நம்மோடெதிர்ப்பவர் ஒருவரும் உய்யார்' என்னும் எதிர்மறைப்பொருளைக் குறிப்பாலுணர்த்தும். 'உண்மையாக' என்னும் வினையெச்சம் வருவிக்கப்பட்ட சொல்லாகிய 'கூறுமின்' என்னும் வினைகொண்டது. 'ஐவராம் அவநிபர்க்கும்' என்ற முற்றும்மையினீற்று மகரமெய் புணர்ச்சி விகாரத்தாற் கெட்டது. 'பொர நினைவோ' எனப் பின்வருதலின், முன்னர்த் 'திருநாடு பெற' என்றது போரின்றிச் சமாதானத்தால் நாட்டைப் பெறுதலைக் கூறியதாகக் கொள்க. 'மீளக் கானிற் பயின்று திரிதர' என்றதனை நாடாளுதலிலும் சபதமுடித்தற்குப் பொருது பகையழித்தலிலும் ஆசையற்றவராய் சஞ்சயமுனி கூறியவாறு வீடுபேறுகருதித் தவஞ் செய்தற்பொருட்டுக் கானகமேகலைக் குறித்து வினாவியதாகக் கொள்க. அன்றிப் போருக்குப் பயந்து காட்டிற் சென்று வறுமைத் துன்பங்களுற்று வாழ்தலைக் கொள்ளினுமாம். இனி, 'உண்மை ஆக' என இரு சொல்லாக்கி, 'பகைத்தபோரில்' என்பதன்முன்னே மாற்றி இயைத்து, 'சபதம் ஆகும்படி (=முற்றும்படி)' என உரைப்பினும்

அமையும். ஐவர்: தொகைக்குறிப்பு மொழி. முன்னிலையிலுள்ள பாண்டவரை 'ஐவிராம்' என்னாது 'ஐவராம் அவநிபர்' எனப் படர்க்கைச்சொல்லாற் கூறியது இடவழுவமைதி. அவநிபர் - அரசர்; பூமியைக் காப்பவர் எனக்காரணப் பொருள்படும். அமரர் - தேவர்; (அமிர்தமுண்டமையால்) மரணமில்லாதவர் எனக் காரணப்பெயர்.

6. வி—ரை: அறத்தின் உருவம் போல்வான் - அறத்தினது வடிவத்தை யொப்பவன் என்று தொடர்ப்பொருள் விரித்து, அறமே காசராஜுதிவடிவங்கொண்டு தோன்றினற் போன்றவனென்பது கருத்தாகக் கொள்க; கருணை வாய்மை பொறுமை முதலிய அறங்களெல்லாம் நிறைந்தவனென்பது தாற்பரியம். இத்தொடர் எழுவாய் ஆதலின் முதலிற் கொண்டு உரைக்கப்பட்டது. வயிரம் எனும் கடு நெருப்பு — கடும்பகையாகிய தீ; இஃது உருவக அணியாயினும் விளங்குதற்பொருட்டு நெருப்புப்போலும் விரோதம் எனத் தாற்பரியப் பொருளாக உரைக்கப்பட்டது. இது பின்வரும் 'வரைக்காடு என்ன ... மாள்வேம்' என்னும் உவமையணிக்கு அங்கமாக நின்று சிறப்புத்தந்தது. வரை - மூங்கில்; கணுவின் பெயர் கணுக்களையுடைய மூங்கிலுக்குச் சினையாகு பெயராய் வந்தது. சந்துபட - சமாதானம் உண்டாக என்றுரைத்தலுமாம். உடலின் வாழ்வுக்கு உயிர் இன்றியமையாததுபோலத் தங்கள் வாழ்வுக்கு இன்றியமையாத நண்பர் ஆதலின் கண்ணபிரானை 'உயிரனையாய்' என்றான் தருமபுத்திரன். சந்திரனைக் கண்டால் (இரவில்) மலருந்தன்மைவாய்ந்த வெள்ளாம்பலும், சூரியனைக் கண்டால் மலரும் தன்மைவாய்ந்த தாமரையும் ஆகிய நம்நாட்டுக் கருப்பொருளாகிய இழிதிணைப் பொருள்கள் தம்முள் மாறுபட்ட இயல்பினவாயினும் ஓரிடத்துக் கலந்து வாழ்தல்போல, உயர்திணைப் பொருளாகி மாறுபாடுகொண்ட யாமிருதிறத்தேமும் சேர்ந்து வாழ்தலே தக்கது என உள்ளுறை யுவமம் கொள்ளக்கிடத்தல் காண்க. இன்னும் உயர்குணமுடைய பாண்டவர்க்கு உயர்ந்த தாமரையினையும் இழிகுணமுடைய துரியோதனாதியர்க்கு அதனின் இழிந்த ஆம்பலையும் ஒப்பாகக் கொள்க. வைரம், கைரவம் என்பன முறையே வயிரம், கயிரவம் எனப் போலி எழுத்துப் பெற்றன எதுகைத்தொடை நோக்கியென்க.

7. இதனால், சமாதானத்தில் நாடு கொடாத துரியோதனாதியரைக் கொன்று நாடாள்வதே தக்கது என்று கண்ணபிரான் கூறுகின்றார்.

வி—ரை: அரவு: அரவை எழுதிய கொடிக்கு ஆகுபெயர். மறுசூது - இரண்டாம் முறைச் சூதாட்டம். தருமபுத்திரன் தனது புண்ணியத்தைப் பந்தயப் பொருளாக வைத்து மறுசூதாடியதில் ஐவரும் அடிமைத் தன்மையினின்று நீங்கினர் என்க. குருநிலம் - குருநாடு. இனி - (முற்



சொல்) இப்பொழுது, (பின்னது) இனிமேல். கடன் - அவசியஞ் செய்ய வேண்டுங் காரியம்; கடமை என்றும் வழங்கப்படும். தான்: அசைநிலை; தேற்றப்பொருட்டு எனினுமாம். இருநிலமென்புழி நிலைமொழி இருமை; அது பெரிய என்னும் பொருளைத் தந்த உரிச்சொல்லாம்; இனி, இரண்டு என்னும் எண்ணுப் பெயரின் விகார மொழியாகக் கொண்டு 'இரு திறத்தாரது இராச்சியத்தையும்' என்றுரைப்பது மொன்று. விரதமொழி - உறுதி வார்த்தை. தவிராமல்: காரியப் பொருட்டாகிய 'தவிர' என்னும் வினையெச்சத்தினது எதிர்மறையாதலின், 'ஒழியாமற் பொருட்டு' எனப் பொருள்படும்; 'மீண்டீர்' என்னும் வினையோ டியைதலுமன்றி, 'கொடாதிருந்தால்' என்னு மெதிர்மறை வினையுள் 'கொடுத்தல்' என்னும் பகுதியோடும் இயைந்து அதற்கும் அடைமொழியாக நின்றது; அஃதாவது தன் வாக்குத் தவறாமல் கொடுத்தல் வேண்டும், அதனைச் செய்யாதொழியின் என்றபடி. கானம்போய் என்றதில் அஞ்ஞாதவாசமும் உபலக்ஷண விதியால் அடக்கிக் கூறப்பட்டதென்றறிக. தன் கொடியாயுள்ள அரவானது நன்றியறிவின்மை, வக்கிரகதியாகச் செல்லுதல், நாவிரண்டு (பிளப்பு நா) ஆகியவற்றை உடைத்தாதல் போலவே, துரியோதனனும் வனவாச காலத்தில் தன்னைத் துணைவர்களோடு சித்திராங்கதன் என்னுங் கந்தருவன் போரில் வென்று கட்டிக்கொண்டுபோக வீமனையும் அருச்சுனனையுமனுப்பித் தருமர் மீட்டமை முதலிய நன்றியை மறத்தல், நேர்வழியைவிட்டு அநீதிவழியிற் செல்லல், முன் சொன்ன வாக்குத் தவறியதால் நாவிரண்டுடையவனாதல் ஆகிய இக்குணங்களை உடையன் என்பது 'அரவுயர்த்தோன்' என்னும் பெயரால் குறிப்புப்பொருளாகத் தோன்றுதல் காண்க. ஆங்கு - அப்பொழுதே, உடனே. துணிவதே என்புழி ஏகாரம் தேற்றம். ஏனையது அசை. மேல் 4-ம் கவியில் "பெருஞ்சமரம் விளைக்குமது கடனன்று" என்ற தருமன் கூற்றை மறுத்து, இக்கவியால் "தனது வாய்மை தவறி நாடு கொடாதவனைக் கொல்லல் பாவமாகாது, க்ஷத்திரிய தருமமே" என்று கண்ணன் கூறியபடியாம்.

8. வி—ரை: குரவர் - பெரியோர் எனவுரைத்து துரியோதனனுக்குப் போரில் துணை செய்யத்தக்க வீடுமன், விதுரன், குருவாகிய துரோணரது மகன் அசுவத்தாமா முதலாயினாரையும் குருமாருடன் கொள்வதும் ஒன்று; இது 'குரு' என்னும் ஒருமைச் சொற்கு எதிராகிய பன்மைச் சொல்; 'ஐம்பெருங் குரவர்' என்ற வழக்கையும் நோக்குக. கிளைஞர் - மைத்துனனாகிய சயத்திரதன், மாமனாகிய சகுனி முதலிய சுற்றத்தவர்; நட்பினரும் இச்சொல்லின் பொருளா யடங்குவர். எலாம்: எல்லாம் என்பதன் இடைக்குறை விகாரம். ஈண்டுப் 'பல' என்னும் பொருள் குறியாது எஞ்சாமை (முழுதும்) ப் பொருட்டாய் வந்தது. தனி - தனிப்பட, இனசனத்தை யிழந்து; இனி, 'பூமி பிற அரசர்க்கும் பொதுவாகாமல்

தன்னொருவனுக்கே உரித்தாகத் தானே ஆளுதல்' எனினுமாம். அரவம் - (அலையின்) ஒலி. அவனி - பூமி; (அரசரால்) பாதுகாக்கப்படுவது என்னுங் காரணம் பற்றிய பெயர். கரவு - வஞ்சகம். முனிக்கு: முனி வழியால் என 3-ம் வேற்றுமைப் பொருளில் வந்த வேற்றுமை மயக்கம். இரவு பகல்: உம்மைத்தொகை; நுகர்ந்து என்னு முடிக்குஞ்சொல்லோடு தொடர் தற்கண் ஈற்றில் 7-ம் வேற்றுமைதொகப்பெற்றது. பலமூலசாகம்: உம்மைத் தொகையாகிய வடமொழித் தொடர். 'இனிது வாழ்தல்' என மொழி மாற்றி உரைக்கப்பட்டது; பொருது இனசனங்களை யிழந்து துன்பத்தால் மனக் கலக்கமுற்று வாழ்தலினும் காட்டில் மன அமைதியுற்று வாழ்தலே இன்பமாமாதலின். இனி, 'இனிது - இம்மைக்கின்பந் தருவதாம், நன்று - மறுமைக்கு அறமுமாம்' என்றும், ஒருபொருட் பன்மொழியாகக்கொண்டு 'மிகவும் நல்லது' என்றும், நன்று இனிதே என மொழிமாற்றிப் 'பெரிதும் இனிதாம்' என்றும் பொருள் கூறுதலும் தகும். நன்று என்பது 'பெரிதும்' என்ற பொருட்கு உரிச்சொல்லாம்.

9. வி—ரை: கோது - குற்றம்: தீயசிந்தை தீயமொழி தீயசெயல்கள். மாயன் - மாயைகளையுடையவன், (மேனி) கரியவன் எனினுமாம். மாயை - செயற்கரிய செயல்களைச் செய்யும் வல்லமை. கூறலுற்றன் - கூறலுற்று என வினையெச்சப் பொருட்டாகிய முற்று. முடுகி - விரைந்து. வஞ்சினம் - சபதம். நீதி - (இராஜ) தருமம். நிகழ் - (புகழ் பொறுமை முதலாயினவற்றால்) விளக்கமுற்ற. சபதம்: பாண்டவர் சூதாடித் தோற்று அடிமையாய் விட்டபின் அச்சபையில் துரியோதனன் திரௌபதியைத் தன் தம்பியாகிய துச்சாதனனால் இழுப்பித்து அவளது துகிலை உரிவித்து மான பங்கப்படுத்தியதுடன், தன் மடியின்மேல் இருக்க என்றும் சொல்ல, அவள் சினந்து 'அத் தொடை வழியாகத் துரியோதனனுக்கு உயிர் நீங்குக' என்று சபித்து, நூற்றுவரைக் கொன்று வெற்றிபெறுங் காலத்திற்றான் தனது விரித்த கூந்தலை முடிப்பதாகச் சபதங்கூறினாள். வீமன் அப்போது நூற்றுவரைத் தானே கொல்வதாகவும், துச்சாதனனைக் கொன்று அவனது இரத்தத்தைக் கையால் அள்ளிப் பருகிய பின்பே தன் கையால் சலபானஞ் செய்வதாகவும், அதுவரையில் தன் தண்டாயுதத்தால் நீரை எற்றி மேலெழும் நீர்த் துளிகளையே பருகுவதாகவும், அருச்சுனன் கர்ணனையும், நகுலன் சகுனியின் தந்தையையும், சகதேவன் சகுனியையும் கொல்வதாகவும் செய்த சபதம். போர் செய்யாது கானேகில் அச்சபதங்கள் நிறைவேற்றப்படா வாகையால் "புகன்ற பெருவஞ்சினமும் பொய்த்திடாதோ" என்றார். கொடும்பகைவரைக் கொல்லப் பின்னிடலும், இராச்சியத்தைப் பெற முயலாமையும், சபதந் தவறுதலும் க்ஷத்திரிய தருமமல்லவாதலின், "நீதியோ" என்றார்.



10. வி—ரை: தாது ஊதி - மகரந்தத்தை உண்டு. அளி - வண்டு. 'பதி - இடம் = நாடு' என்றலும், 'தாயம் - உரிமைப் பொருள்கள்' என்றலுமாம். மீது - தராத அதன்மேல். வளை - சங்கு; பின்னர் வலம்புரிவிதந்து கூறப்படுதலின், இது இடம்புரி என்க. இனி, 'வளைக்குலம் - இரட்டைச் சங்கு, வலம்புரி - ஒற்றைச் சங்கு' என்றுரைத்தலும் பொருந்தும்; பிறண்டும் இவ்வாசிரியர் 'ஒற்றையோ டிரட்டை வலம்புரி முழங்க" என்றார். முன் சமாதானத்தால் நாடு பெற முயன்று முடியாவிட்டால் பின்னர்த் தண்ட உபாயமாகிய போர் செய்தல் இராஜ தரும மாதலால், அப்படி முயல்வது 'குரவர் முதலாய கிளைஞரை இரக்கமின்றிக் கொன்றான்' என்ற பழிப்பிற்கு இடமாகாதென்பான் "இது வசையுமன்றே" என்றான். "மற்றுப் புகழேயாகும்" என்றெழுந்த சொற்பொருளைத் தருதலால், வசையும் என்ற உம்மை ஒழியிசை. உடம்பில் சுகமாக வாழுமுயிரைப் பிரித்துக் கவர்ந்து போதற்கு ஏதுவான உபாயங்களை எண்ணிச் செய்தே அவற்றின் மூலமாக உயிர் கவர்தல் வேண்டுமாதலின் அது தமக்குச் சிரமமும், அவ்வாறு தம் முயற்சியின்றியே போரில் உயிர் கவர்தல் எளிதுமாகுதலின் "மாதுதர் மனங்களிக்கப் பொருது" என்றார். இதனைத் திருவிளையாடற் புராணத்துப் பழியஞ்சிய படலத்தானு முணர்க.

11. வி—ரை: "சிந்தூர ... ... ... மாலே" என்னும் விளியை முதலில் மாற்றிக் கூட்டி யுரைக்க. செங்கண் - செந்தாமரை மலர்போற் செய்யவாகிய கண். சிந்தூரம் - ஒருவகைச் செந்நிறத்தூள். சிந்தூரம் - யானை. ஒசித்த - முரித்த. மால் - பெருமையுடையவன் = கண்ணன். முந்து - முற்பட, விரைவாக. முதுமை + ஊர் = மூதூர். இல் + முன் = முன்றில் - முற்றம்; இலக்கணப் போலிமொழியாய் முன்பின்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத்தொகை. நந்து - சங்கு. திறம் - (குரு நாட்டின்) கூறுபாடு, பாகம் என்றுரைத்தலுஞ்சிறக்கும். நாடோன்று - எங்கட்குரிய நாடாகிய ஒருபாகம் என விரித்துரைக்க. போர் வேண்டு - போர் செய்தற்கு உறுதிமொழியைக் கேட்டுப் பெற்றுக்கொள்க; இவ்வார்த்தை கூறிய தன் காரணம்: துரியோதனன் முன்பு வனவாச முடித்தபின் பாண்டவர்க்குத் தாயபாகத்தை மீளத் தருவதாகச் சொன்ன வாக்குத் தவறி இப்போது நடப்பதனால், இதுபோல் பின்னும் பேச்சு மாறாமற் பொருட்டு என்றறிக.

12. வி—ரை: தோம் - குற்றம். இல் - இல்லாத. இதற்குமுன்னெல்லாம் தமையனோடு குற்றமற்ற (மாறில்லாத) வார்த்தையுடையனாயிருந்த வீமனுக்கு இப்போது கோபத்தால் சொல் தடுமாறியது (மாறுபட்ட உரையுண்டாயது) என்றபடி. இனி, 'தோமில்' என்புழி 'இல்' வினை எழனுருபாகக் கொண்டு 'குற்றத்துட்பட்ட வார்த்தைகளால் நாத்தடுமாற' எனினுமாம். ஈண்டுக் குற்றவுரை என்றது மானத்தால் உந்தப்பட்ட வெகுளி

யால் தமையன் கருத்துக்கு மாறுபட்டுக் கூறுவனவாய 'மானமிலாதுரைக்கின்றான், தீராத வசையே கண்டான்' என்றாற்போல்வன; அவற்றைப் பின்வரும் (12 - 16 பா) வீமன் கூற்றாலறிக. கதுமென: விரைவுக் குறிப்புணர்த்துவதோரிடைச்சொல். எழுந்து உற்று - (ஆசனத்திலிருந்து) எழுந்து (நிலத்தில்) நின்று. தனது உந்திக்கமலத்தினின்றும் பிரமனையும் உலகத்தையும் தோற்றுவித்த விஷ்ணுவினது அவதாரமாதலின், "ஞாலமெல்லாம் பூத்தோனே" என்றான். பூவை - நாகணவாய்ப்பட்சி, மகளிர் மொழிக்கு அதன்மொழியை ஒப்பிட்டுக்கூறல் புலவர்மரபாதலின் உவமையாகு பெயராய், ஈண்டு இலக்குமியை யுணர்த்திற்று. புன்மை - சிறுமை, அவமானம், கேடு. ஆற்றில் நீர்விளையாடற்கண் வீமனைக் கழுவில் வீழ்த்தச் சூழ்ச்சிசெய்தமை, திரௌபதியைத் துகிலுரிந்தமை, வனவாசத்தில் துருவாசமுனிவரது சாபத்துக்கு இலக்காக்க எண்ணினமை முதலாகத் துரியோதனன் செய்த துன்பங்களிலிருந்து கண்ணனே ஐவரைக் காத்தமையால், "புன்மை யாவும் தீர்த்தோனே" என்றான். மேற்செய்யுளில், க்ஷத்திரியதருமமாகிய மானத்தை எண்ணிப் பகைவரைப் பொருது வென்று நாடுபெறுவதை விட்டு, தூதால் இரந்து பெறவேண்டினை அதனை "மானமிலாதுரைப்பது" என்று குறித்தான். செய்வது - செய்யத்தக்க பரிகாரம்; எதிர்காலவினையாலணையும் பெயர், எழுவாயேற்று 'என்' என்னும் வினைப்பெயரைக் கொண்டது. என்: 'எவன்' என்பதன் மரூஉ. முதலாமடியில் 'மூத்தோன்' 'இளையோன்' என எதிராய சொற்கள் தொடுத்தமையால் முரண்டொடையும், 4-ம் அடியில் 'ஊனமிலான்' 'மானமிலாது' என வழியெதுகையாகிய பிரசாலங்காரமும் அமைந்தமை காண்க.

13. வி—ரை: விரிகுழல் - (துச்சாதனன் தன் கையிலுள்ள செண்டாயுதத்தாற் பற்றி யிழுத்தலினால் அவிழ்ந்து) விரிந்த கூந்தல். பசுமை + தொடி = பைந்தொடி - பசும்பொன்னாற் செய்யப்பட்ட கைவளை. விரிகுழல் + பைந்தொடி: உம்மைத்தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை; விரிகுழலும் பைந்தொடியுமாகிய இவற்றை யுடையாள் என விரியும். இனி, பசுமை + தொடி என்பன பண்புத்தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகையாக முன்னர்த் தம்முள்ளே தொக்கு ஒரு சொன்னீர்மையாய் திரௌபதியை யுணர்த்தி நிற்ப, அதனோடு 'விரிகுழல்' என்பது 2-ம் வேற்றுமைத் தொகைப் பொருளிற் பின்னர்த் தொக்கது எனக் கொள்ளினும் அமையும்; அதற்கு இத்தொடரை 'விரிகுழலையுடைய பைந்தொடி' என விரிக்க. வேந்து + அவை = வேத்தவை என வேற்றுமைப் புணர்ச்சிக்கண் மென்றொடர்க்குற்றுகரம் வன்றொடர்க் குற்றுகரமாகத் திரிந்தது. வேந்து: சொல்லால் அஃறிணையும் பொருளால் உயர்திணையுமாகியதொரு சொல். துச்சாதனனால் விழுக்கப்பட்டு அரச



சபையில் அழுது சோர்ந்து நின்ற திரௌபதியை அவன் நிந்தித்துப் பேச, அவள் "மல்லார் திண்டோள் மாமாவோ மந்தாகினியாள் மதலாயோ, எல்லா நெறியும் உணர்ந்தவருக்கிதுவோ மண்ணிவியல்பென்றாள்" என்று முறையிட்டாள் என்றறிக. வெகுளேல்: எதிர்மறை யேவலொருமை வினைமுற்று; தருமபுத்திரன் தனித்தனியே ஒவ்வொரு தம்பியையும் நோக்கி வெகுளாமல் அடக்கினன் என்க. நால்வரும் வெகுண்டதைச் சூதுபோர்ச் சருக்கத்து "வீமன் கதைமேற் கைவைக்க விசயன் சிலைமேல் விழிவைக்கத், தாமம் புனைதோளிளையோரும் தத்தங் கருத்திற் சினமூட்ட" [229 - பா] என்றதனாலும், தருமன் அடக்கியதை "தேம்போ தனைத்து...... முன்னம் பொறுத்தீ ரின்னம் பொறுமென்றான்" [230 - பா] என்ற செய்யுளாலும் அறிக. 'உள்ள' என்னும் பெயரெச்சக் குறிப்பினது ஈற்றகரம் தொகுத்தல் விகாரம்பெற்றது. கண்டாய் - செய்தாய், உண்டாக்கினாய். 'கானகம் அகன்று' என்பதில் அஞ்ஞாதவாசமுடித்தமை உபலட்சணத்தால் அடங்கும். இன்னமும் - உலூக முனிவன் தூதுசென்று வந்ததனால் துரியோதனன் கருத்தை அறிந்தபின்பும்; நாடு கொடுக்க மறுத்தமையாற் பகைவரைப் பொருது வெல்ல வேண்டுவதாகிய இச்சமயத்தும் என்றபடி. இளையா நின்றாய்: ஒரு சொல்: 'ஆநின்று' நிகழ்கால இடைநிலை; இனி, தொடர்மொழி (வினையெச்சத் தொடர்) யாகக் கொண்டு 'இளைத்து நின்றனை' என்றுரைப்பினுமமையும்; இதற்கு இளையா: 'செய்யா' என்னும் வாய்பாட்டெச்சம். பகை: குணவாகு பெயராய்ப் பகைவரை உணர்த்திற்று. அரவுயர்த்தோன்: பாம்பின் வடிவை எழுதிய கொடிக்குத் தானியாகு பெயர். அஞ்சினேன்; அஞ்சுகின்றேன் என நிகழ்காலப் பொருளில் இறந்தகாலச் சொல் வந்த, கால வழுவமைதி; இது விரைவு முதலிய காரணம் பற்றாது உலகியற்கையினால் ஆயதென்க. கொடுமையினும் என்புழி இன்னுருபு 5-ம் வேற்றுமை உறழ்ச்சிப் பொருளில் வந்தது; கொடுமையைப்பார்க்கிலும் என்பது பொருள். 'அருளுக்கு' என்புழி குவ்வுருபு 2-ம் வேற்றுமைப் பொருளில் வந்த வேற்றுமை மயக்கம். துரியோதனனது கொடுமையைத் தன்வலியாற் பொருது அழித்து அதனால் விளையுந் துன்பத்தின் நீங்குதல் எளிதாதலினாலும், தருமனது அருளால் போரின்றாகப் பகையழித்தல் தடையுற்றுச் சபதம்முடிக்கமாட்டாமல் எய்தும் துன்பம் நீக்குதற்கு அரிதாதலினாலும் "முரசுயர்த்தோ னருள் அஞ்சப்படுவதாக, அரவுயர்த்தோன் கொடுமை அத்துணை யஞ்சப்படாததாயிற்று" என்க.

14. வி—ரை: கான் - காடு. கண் இலா - கண் இல்லாத = கண் குருடாகிய. அருள் இலி - அருளில்லாதவன் = திருதராட்டிரன்; இச்சொல் இருதிணைப் பொதுப் பெயருள் ஒருமைப் பொதுப்பெயராதலின், உயர்திணையாணொருமை பெண்ணொருமை அஃறிணையொருமையாகிய மூவகையொருமைக்கும் பொதுச் சொல்லாய், ஈண்டு ஆண்பாலினை யுணர்த்திநின்

றது. இனி 'கண்ணிலா' என்னும் அடையினை மைந்தனுக்கு ஏற்றி தாக்ஷிணியமில்லாத என்று பொருள் கூறினும் அமையும். தாக்ஷிணியமாவது பழகினவரிடத்தே அவரது சொல்லை மறுத்து நடக்கமாட்டாமை. தரணியெல்லாம் என்றது துரியோதனனுக்குத் தாயபாகத்தால் முன்னமே உரித்தாய பாகமும், பாண்டவரிடம் சூதில் வென்று பெற்ற அவரதுபாகமும் ஆகிய இருபகுதி நாட்டையுமென்க. ஒருகுடைக்கீழரசாளல் - ஏகபோகமாய்த் தனியே ஆளல். அற - முழுதும், மிகவும்; (உரிச்சொல்); 'அறக்கொடியான்' என்னும் வழக்கானு முணர்க; இனி, 'அற' என்பதனைச் செயவென் வாய்பாட்டு வினையெச்சமாகக் கொண்டு 'உரிமையானது நீங்கும்படி' என்று உரைப்பினும் அமையும். வீமன் தனக்குத் துரியோதனன் மூத்த சகோதரனாதலின், அவனைப் 'பெருந்துணைவன்' என்றான். இனி, கவர்ந்த என்னும் அடையினுக்கியைய, வஞ்சனையிற் பெரிய (மிக்க)சகோதரன் எனவுரைப்பினுமாம். "வானாள ... ... ... ... வழங்குவேனே" என்றது பிறிதினவிற்சியணி; கொல்லுவேன் எனச் சொல்ல வேண்டும் பொருளை மற்றொரு பிரகாரமாகச் சொல்லி யறிவித்தலின் என்க. அவன் றனக்கே என்புழி ஏ: பிரிநிலை; ஈற்றேகாரம் அசைநிலை.

15. வி-ரை: அமர் - போர். பொருது: போர்செய்து என்னும் பொருளைத் தருஞ் சிறப்பு வினையாயினும் ஈண்டு செய்து என்னும் பொதுவினைப் பொருளைத் தந்தது; "கறை மிடறு அணியலும் அணிந்தன்று" என்னும் புறநானூற்றில் 'அணிந்தன்று' என்னுஞ் சிறப்புவினை பொதுவினைப் பொருளைப் பயந்தவாறு போல. பாஞ்சாலி - திரௌபதி; பாஞ்சால தேசத்தரசனது மகள் என்னும் பொருள்பற்றி யுளதாகிய தத்திதாந்தப்பெயர். கூந்தற் கார் - கார் போலுங் கூந்தல் என முன்பின்னாக மாறித்தொக்க உவமத் தொகை; கார் - மேகம்; கருமை நிறத்தின் இயற்பெயர் மேகத்திற்காயது குணவாகு பெயர். கழறிய - சொல்லிய. வஞ்சினம் - சபதம். கடவுள் - தெய்வத்தன்மை. பேர் - புகழ். பிறப்பதே - பிறக்க நேர்ந்ததே; ஈண்டு ஏகாரம் பச்சாத்தாபப்படுதற் பொருளை யுணர்த்திற்று. ஏனையேகாரங்கள்: அசை. இனி, பிறப்பதே - பிறப்பது தகுமோ (தகாது) என வுரைப்பினுமாம்; அப்பொருட்கு ஏகாரம்: எதிர்மறை. (நீர்) முடித்தான்: உயர்திணை யாண்பாற் படர்க்கை யொருமை இறந்தகாலத் தெரிநிலைவினையாலணையும் பெயர், அவன் என்னும் பெயரை விசேடித்து நின்றது.

பரமசிவன் கங்கையைச் சடையில் தரித்த வரலாறு:—சூரிய குலத்திற் பிறந்த பகீரதன் என்னும் அரசன் தன் முன்னோர்களாகிய சகரர் அறுபதினாயிரவரும் கபிலமுனிவரது கோபாக்கினியால் எரிந்திறந்ததையும், அவர்களது எலும்பு சாம்பர்களிற் கங்கைநீர் பாயச் செய்தால் அவர்களை நற்கதி யடைவிக்கலாம் என்பதையும் அறிந்து, அதன்பொருட்டுக் கங்கை



யைப் பெறுதற்குப் பல வருடங்கள் தவஞ் செய்ய, அதனால் கங்கைநதி மேலுலகத்தினின்றும் உலகந் தாங்கலாற்றாத பெருக்குடன் பூமியை நோக்கி வந்தது. அதன் பெருக்கைப் பகீரதனது வேண்டுகோளால் சிவபெருமான் தமது சடையில் தாங்கியடக்கிச் சிறிதுபாகத்தைப் பகீரதன்பொருட்டுப் பிரவாகிக்கவிட்டனர் என்பது.

3-ம் அடி முதலில் "நீர்முடித்தா னிரவொழித்த நீயறிய" எனவும் பாடபேதமுண்டு. அதற்குப் பரமசிவனது இரத்தற் றொழிலை (தமது இரத்தத்தைப் பிச்சையாக ஈந்து) முற்றுவித்த நீ அறிய" எனப் பொருளுரைக்க; ஈண்டு விஷ்ணுமூர்த்தியின் றொழிலை அவரது அவதாரமாகிய கண்ணபிரான் மேலும், சிவபெருமானது அம்சமாயுதித்த வைரவக் கடவுள் ஏற்ற இரத்தப்பிச்சையைச் சிவன் மேலும் ஏற்றிக் கூறினர் என்றறிக. மேலும் இங்ஙனம் வருவனவற்றை அறிந்துகொள்க.

ஈண்டுக் குறித்த வரலாறு: முன்னொருகாலத்து மேருவின் ஒரு சிகரத்தில் பிரமனும் விஷ்ணுவும் சேர்ந்திருப்ப, தேவர் முனிவர் யாவரும் அவர்களை வணங்கி மும்மூர்த்திகளுள் முதல்வராய பரம்பொருள் யாவர் என்று வினவ, பிரமன் 'நானே தலைமையான பிரமம்' என்று கூறினன். விஷ்ணு அதனை மறுத்து 'உன்னைத் தோற்றுவித்தமையால் யானே முதல்வனாவேன்' என்றனர். இவ்வாறு அவ்விருவரும் நெடுங்காலம் வாதம் புரிய, தேவர் முனிவர் யாவரும் தம்மால் இது நேர்ந்ததென்றெண்ணித் தத்தம் இருப்பிடஞ் சென்றனர். அப்போது அவர்களது மாறுபாட்டை நீக்க எண்ணிப் பரமசிவன் அவ்விருவர்க்கும் நடுவே விண்ணில் சோதியாகி அதன் மத்தியில் உமாதேவியாரோடுந் தமது திருவுருவுடன் தோற்றுதலும் அதுகண்ட விஷ்ணு எழுந்து வணங்கினார். பிரமன் மாயை வயப்பட்டுப் பரமசிவனை மதியாது இகழ, பரமசிவன் வைரவக்கடவுளைத் தோற்றுவித்து "பிரமாவின்சிரமைந்தனுள் நம்மையிகழ்ந்த உச்சித் தலையைக் கிள்ளி அவன் செருக்கை நீக்குக. செருக்குக் கொண்ட ஏனைத் தேவர்களிடத்துஞ் சென்று அவர்களது இரத்தத்தையே பிச்சையாக ஏற்கக் கடவாய்; ஏற்றகாலை யிறந்தவர்களை உயிருதவிச் செருக்கை மாற்றுக" என்றேவினர். அவ்வண்ணமே வைரவக் கடவுள் பிரமாவின் உச்சித்தலையை நகத்தாற் கிள்ளித் தம் கையிற் கொண்டனர். அதனால் இரத்தம் பெருகிப் பிரமன் மாண்டான். பின் பிரமனை உயிர்ப்பித்து அருள்செய்து, விஷ்ணுவிடம் சென்று அவரது இரத்தத்தைப் பிச்சையாக ஏற்ப, அவர் தமது நெற்றியிலுள்ள நாடியொன்றைத் தமது நகத்தாலெடுத்து அதனால் வைரவர் கையிலுள்ள பிரமகபாலமாகிய பாத்திரத்தில் பதினாயிர வருடகாலம் சொரிந்தும் பிக்ஷாபாத்திரம் நிறையவில்லை; விஷ்ணு மயங்கி வீழ்ந்தார்; அதுகண்டு அவரது தேவிமார் வைரவக் கடவுளைச் சரணமடைந்து வேண்டினர்; வைரவக்கடவுள் விஷ்ணுவின்

மயக்கத்தை நீக்கி அறிவு பெற்றெழும்படி செய்து நீங்கினர் என்பது. வைணவர் பிறவாறு கூறுவர்.

16. வி—ரை: "அரவு உயர்த்தோனுடன் அரசர் + அணிந்துவரும் சமரில் எதிர்ந்து + பொருது + உடலம் எல்லாம் + இரண்டுபட துணிந்து + தொல்லையுலகரசாள ... ... .. துணிகின்றான் + பாடு + பட்டவே" என அந்நுவயங்கொள்க. சமர் - போர். துணிந்து - (துணித்து என்னுஞ் சொல் எதுகைத்தொடை நோக்கி மெலித்தல் விகாரம் பெற்றது) வெட்டி. தொல்லையுலகு - முன்பு யாம்ஆண்ட பூமியை. தணிந்து - கோபம் மாறி. தனி - ஒப்பற்ற, சிறந்த. பாடு - பெருமை. பட்ட: 'இனி அழிந்தேவிடும்' என்னும் பொருளில் வந்தமையால் காலவழுவமைதிச் சொல்; ['அன்' சாரியை பெறாத அஃறிணைப்பன்மைவினைமுற்று]. 'பட்ட பாடே' என்பதற்கு 'யாம் இவனால் பட்டவை துன்பங்களே (சுகமடைவதற்கில்லை) என்றுரைப்பினும் பொருந்தும்; இப்பொருளுக்கு ஏகாரம் பிரிநிலை; பட்ட: அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை யிறந்தகாலத் தெரிநிலைவினையாலணையும் பெயராகக் கொள்க. இனி, முதலீரடிக்கும் யாற்றுநீர்ப் பொருள்கோளால் சொற்களை மாற்றாது, 'அரவுயர்த்தோனுடன் அரசர் உடலமெல்லாம் துணிந்து இரண்டுபட பொருது - துரியோதனனோடு மாற்றரசர் தமது உடலெல்லாம் வெட்டுண்டு இரண்டுதுண்டாம்படி (தலைவேறு உடல்வேறும்படி) போர்செய்து' என்றுரைப்பினும் பொருந்தும். இப்பொருட்கு 'துணிந்து': இயல்பாகிய சொல்லென்றறிக.

17. வி—ரை: 'பவனகுமாரனை + நோக்கி + மலர்க்கை பணித்து' எனவும், 'இருநிலம் காரணமாக எதிர்ப்பது + இருவருக்கும் வசையன்றோ + என்றான்' எனவும் மொழிமாற்றி யுரைக்கப்பட்டது. பரிவு - துன்பம், வேதனை. மற்று: அசை. இனி 'மற்று இவை - வேறும் இத்தன்மையவற்றை' என்றுரைப்பினுமாம். பவனன் + குமாரன் + பவனகுமாரன் - வாயுபுத்திரன், வீமன். மலர்க்கை-செந்தாமரை மலர்போன்ற கை; வெண்மைகலந்த செந்நிறம், அழகு, தண்மை முதலாயின பொதுத்தன்மைபற்றி உவமையாம். உரையில், 'கையையமைத்து' என்றது: வீமனைக் கோபந் தணியும்படியும் பேச்சொழியும்படியும் குறிப்பிடத் தருமர் தமது அமைத்த கரத்தாற் செய்த சைகையை என்றறிக. இனி, 'கை + பணித்து - கையால் பணிவித்து' என விரித்துரைப்பினுமாம். ஏறு - ஆண் சிங்கம்; ஏறனை யானை ஏறென்றது உபசாரவழக்கு; ஏறு வலிமை, ஆண்மை, நடை, அஞ்சாமை முதலிய குணங்களால் வீரர்க்கு உவமையாமென்க; குருகுலத்தரசருட் சிறந்த வீரன் என்றவாறு. இனி, 'குருகுலத்தோர் - கௌரவர் என வழங்கப்படும் துரியோதனாதியராகிய மதயானைகளுக்கு, ஏறே - சிங்கம்போன்றவனே' என்ற கருத்துத் தோன்ற நிற்பதும் அறிக; இதற்கு 4-ம் வேற்றுமைத் தொகையாம். ஈண்டு ஏகாரம் விளியுருபு. குற்றமது: குற்றம் என்னும் பதம் 'து' என்னும் பகுதிப்பொருள் விகுதியும் 'அ' என்னும் சாரியையும் பெற்று நின்றது. 2-ம் அடியில், "குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை" [கொன்றைவேந்தன்] என்னும் ஔவைமூதாட்டியாரின் வாக்கு அநுவதிக்கப்பட்டமை யறிக. குற்றம் பார்க்கின் சுற்றம்இல்லை - குற்றம் செய்தவரை ஆராய்ந்து விலக்கிடக்கத் தொடங்கின் சுற்றமாய் (இதம் மாத்திரஞ் செய்பவராய்) எஞ்சியிருப்பார் ஒருவருமிலர். ஆகையால், உறவினரிடத்துள்ள பிழையைப் பொறுப்பதே கடனென்பது கருத்து. உறுதி - நன்மை, வலிமையுமாம்.



18. வி—ரை: 'புகழே பூண்பான் + (பின்னும் அவனை நோக்கி) + அன்று + அவைக்கண் + தம்பியர் + உரிமையுடன் + உணர்வுஅறியாமையின் + உரைத்த மாற்றம் + கேட்டோர்க்கு + பரிபவமோ + பிறரால் பட்டால் அன்றோ + பரிபவம் என்பது + கருதில் இது எவர்க்கும் ஒவ்வாதோ...... மொழிந்தான்' என மாற்றி யுரைக்கப்பட்டது. கேட்டோர் - கேட்டுக் கொண்டிருந்த நாம்: இடவழுவமைதி. இனி அவமானப்பேச்சைப் பட்ட எவரும் எனக் கொண்டு, பின்வாக்கியத்தோடு இயைத்து உரைப்பினும் அமையும். மற்று: அசை; பிறிதென்னும் பொருட்டாக வந்ததெனினும் அமையும்; (மற்று எவர்க்கும் - பிறர் யாவருக்கும்). அவை - சபை. மாற்றம் - சொல். பரிபவம் - அவமானம். கருதில் - ஆராய்ந்து பார்க்கில். ஒவ்வாதோ - ஒத்த நியாயமாகாதோ. கண்மலர் - தாமரை மலர்போன்ற கண். இவ்வுவமை கைவிரலின்குத்துதலைத் தாங்கலாற்றாத மென்மைத் தன்மையுடைத்து கண் என்பதை விளக்கி நின்றது "களைபவோ - கண் குத்திற் றென்றுதங் கை" என்னும் நாலடியாரிற் கூறிய பழமொழிக் கருத்து மூன்றாமடி யிறுதியில் அமைந்துளது. 'கைவிரல் கண்ணிற் குத்தினால் அதனை வெட்டிக் களைவாருண்டோ? இல்லை' என்ற பழமொழியாகிய உவமையினால், ஒருடம்பிற்றோன்றிய அவ்வுறுப்புக்கள்போல, ஒருகுடும்பத்திற்றோன்றிய ஒருவர் மற்றொருவர்க்குத் தீங்குசெய்தால், தீங்குசெய்தவரை மற்றவர் அழிப்பது தகுதியன்று' என்னும் உவமேயப் பொருள் தொனிக்க வைத்தமையின், இத்தொடர் ஒட்டணி பொருந்தியதாம். கடைநிலம் - கடைத்தானம், என்றது நால்வகை யுபாயங்களுள் கடையாக வைத்தெண்ணப்பட்ட சிறப்பினத்தையும், சமாதானத்தாற் பெற முடியாவிட்டால் கடைசியாக மேற்கொள்ளவேண்டுமிடத்தையும் குறித்தது. பூண்பான் - ஆபரணங்களைப்போல மதித்து மேற்கொள்பவன், அல்லது விரதம் போலத் தவறாது கைக்கொள்பவன் என்னும் பொருள் சொல்லாற்றலாற் பெறப்படும்.

19. வி—ரை: 'கொற்றவேந்தே' என்றும் விளியை 3-ம் அடியின் முன்னே மாற்றிக் கூட்டியும், 'இனி' என்பதனை 'எனைத் தூதுவிடுக' என்பதன் முன்னே மாற்றியும் உரைக்கப்பட்டது. துழாய் - துளசி(மாலை).

சுரர் - தேவர். சுருதி - வேதம். திருநாடு - செல்வத்தையுடைய நாடு. வேண்டா: வேண்டும் என்பதன் எதிர்மறைச்சொல். மடம் - கொளுத்தக் கொண்டு கொண்டதுவிடாமை; மகளிர் நாற்குணங்களுள் ஒன்று. உபலட்சணத்தால் நாணம், அச்சம், பயிர்ப்பு என்னும் ஏனைக் குணங்களையும் உடையாள் என்பது கொள்க. பாவை; சித்திரப்பாவைபோல் மிக்க அழகுவாய்ந்தவள்; [உவமையாகுபெயர்]. வரம் - மேன்மை. ஈண்டு இலக்கணையால் நெடுமொழி கூறலாகிய சபதத்துக்காயிற்று. விருப்பமெனினுமமையும். கோடுதல் - நீதியிற்றவறுதல். கொற்றம்; வெற்றி. தான் தூதுசென்றால் சமாதானமில்லாமல் போரையே செய்யும்படி முடிவுபண்ணி வாலாமென்று கருதி இவ்வாறு கூறினன் வீமன் எனலுமாம். விஷ்ணு தேவராலும் முனிவராலும் வேதத்தாலும் இன்ன தன்மையர் என அறியவும் வருணிக்கவும் முடியாத பெருமையுடையார் ஆதலின், அவரது அவதாரமாகிய கண்ணனை "சுரருடனே........ தேடுகின்ற பதம் சிவப்ப" என்றான்.

20. வி—ரை: என: உவமையுருபாகிய இடைச்சொல். மறத்தண்டு – (பகைவரைக்) கொல்லுதலிற்றப்பாத தண்டாயுதம்; மயனால் கொடுக்கப்பட்டது, அது சத்ருகாதிநி என்னும் பெயருடையது. மறம் - வீரமுமாம். மகவான் - இந்திரன்; யாகங்களை யுடையவன் என்பது காரணப் பொருள். மகம் - யாகம். காண்டீவம்: காண்டவதகன காலத்தில் அக்கினிபகவானால் அருச்சுனனுக்குக் கொடுக்கப்பட்டவில். இருவர் - இரட்டையர், நகுல சகதேவர்கள்; [தொகைக்குறிப்புமொழி]. திறல் - வலி. நிலை - நிலைமை, தன்மை. நேரார்தம்மை - பகைவரை. (கொலை) கண்டு - செய்து. அவன் குடைக்கீழ் உயிர்வாழ்தல்: துரியோதனன் தனது தயையால் ஈயும் நாடு அல்லது ஊர் அல்லது இல்லங்களைப்பெற்று, அவனெண்ணத்துக்கு இணங்கி வாழ்தலைக் குறித்தது. ஏகாரம்: அங்ஙனமெண்ணுதலின் இழிவை விளக்கிற்று. பகைவரை வெல்லுதற்கு ஏற்ற வலிமையுடைய நீ பணிந்தும் மானத்தை யிழந்தும் உயிர்வாழ்தல் அடாதென்னும் கருத்துத் தோன்ற முறையே எங்கள் நால்வரின் வலியும் கண்ணனின் துணைவலியும் கண்டும்' எனவும், 'இவள் விரித்த குழல் கண்டும்' எனவும், கூறினான்.

21. வி—ரை: வெம்புயம் - பகைவர்க்குக் கொடியவாகிய தோள்கள் - உம்மை மூன்றனுள் முன்னைய இரண்டும் இறந்தது தழீஇய எச்சவும்மை. பின்னையது சிறப்பும்மை. மேகமேனி - மேகம்போற் கரியதேகம். தனி - ஒப்பில்லாத. திகிரி - சக்கராயுதம். பரந்தாமன் - கண்ணன்; மேலான ஒளியை அல்லது தானத்தை (உலகத்தை) யுடையவன் எனக் காரணப் பொருள் பயக்கும். கருணை - பிறர் துன்பஞ்சகியாத தன்மை. பரிந்து - அன்புவைத்து; அன்பாவது தொடர்புடையாரிடத்தே உண்டாகும்



உள்ள நெகிழ்ச்சி. புவி - பூமி. ஓ: எதிர்மறை. தலைவ: வீரருட் சிறந்தவனே; தன்வயப்படுத்துதற்குத் துதியாகக்கூறிய விளிப்பெயர்.

22. வி—ரை: மைக்காலம்: ஒருபொருட் பன்மொழியாகக் கொண்டு, மிக்க கருநிறமுடைய எனப் பொருளுரைக்கப்பட்டது. இனி, 'மை - கரிய; கால முகில் - கார்காலத்து மேகம்' எனவும், 'மை - மை போன்ற; காலம் - கருமையாகிய' எனவும் உரைப்பினுமாம். ஊர்தி - வாகனம். மதலை - குமாரன். முகுந்தன் - கண்ணன். மன், ஓ - அசைகள். அக்காலம்: சூதாடித் திரௌபதியை மானபங்கப்படுத்திய அக்காலத்தில். முடித்து: பிறவினை விகுதி தொக்க வினையெச்சமாகக் கொண்டு, 'முடிப்பித்து' என்றுரைக்கப்பட்டது; 'முடிக்க, என்னும் தன்கருத்தா வினையோடு முடிந்தது. இனி, 'முடித்து' என்பதனை 'முடிக்க' என்னுஞ் செயவெனெச்சத் திரிபாகிய தன்வினையாகக்கொண்டு, 'முடிக்க' என்னும் பிறகருத்தாவின் றொழிலைக் கொண்டு முடிந்ததென்றுரைப்பினும் அமையும். முடித்தல் என்பது சொல்லளவால் ஒருவினையாதலின், யாம் பகைமுடித்தலே யன்றித் திரௌபதியுங் குழல் முடிக்க என இறந்தது தழீஇய எச்சவும்மையுமாம்.

23. வி—ரை: 'உயிர் உண என்று + ஏ + என்கை வாளி + இருப்பது' எனவும், 'குருநாடு + இவன் அவன்பால் வேண்டுமாறு + என்' எனவும் மொழிமாற்றுக. தைத்தியர் என்பதன் போலி தயித்தியர் (=அசுரர்); காசிப முனிவரது மனைவியருள் திதி என்பவளது புத்திரர் என்னுங் காரணத்தால் வந்த தத்திதாந்தப் பெயர். உயிர் உண - உயிரைக் கவர; "உண்டற் குரிய வல்லாப் பொருளை, உண்டன போலக் கூறலு மரபே" என்னுந் தொல்காப்பிய விதியால், உண்ணலைச் செய்யாத பாணத்தை உண்பதாகவும், உண்ணப்படுதற் குரியதல்லாத உயிரை உண்ணப்படுவதாகவும் கூறிய இலக்கணை வழக்கு. உண: காரியப்பொருட்டாகிய செயவென் வாய்பாட்டு வினையெச்சம்; (=உண்ணும்பொருட்டு) இனி, 'உயிர் உணவு + என்று - உயிரைத் தனக்கு இரையாகக் கருதி' எனப் பதம் பிரித்துரைப்பினுமாம். வாளி - அம்பு. பூகம் - கமுகு. மீ - மேல். உகளல் - துள்ளிப் பாய்தல். பாற்கடலில் எழுந்தருளிய திருமாலின் வியூகமூர்த்திகளான வாசுதேவன் (=கிருஷ்ணர்), சங்கர்ஷணன் (=பலராமர்), பிரத்யும்நன் (=கிருஷ்ணர் மகன்), அநிருத்தன் (=கிருஷ்ணரது பேரன்) என்னும் நால்வருள் வாசுதேவன் ஏனை மூவரினும் பிரதான மூர்த்தியாதலின் 'மூவரா யவர்களுக்கு முதல்வனாகிய மூர்த்தி' என்றான். மூர்த்தி - வடிவத்தை யுடையவன். மூர்த்தம் - வடிவம் இனி, 'மூவராய் + அவர்களுக்கு முதல்வன் ஆகிய மூர்த்தி' எனப் பதச்சேதஞ்செய்து, 'சங்கர்ஷணன் முதலிய மூவராகி, அவர்களுக்கு முதன்மையான கிருஷ்ணராய் அவதரித்த மூல வடிவினராகிய திருமாலே' என்றுரைப்பினுமாம். நீர்வள நிலவளங்களது

மிகுதியால் கமுகின் உயர்ச்சி மிகுதியும், வராலினது கொழுப்பு வலி மிகுதியும் தோன்ற ‘முகில் தோய் பூகம்’ என்றும், ‘பூகத்தின்மேல் வரால் உகளும்’ என்றும் புனைந்துரைத்தது தொடர்புயர்வுநவிற்சியணியாம்.

24. வி—ரை: “வேந்தர் வேந்தே + தீண்டாத கற்பு உடைய செழுந் திருவை + மன் அவையில் + துகில் உரிய செயல் ஒன்று இன்றி நீண்டானே ... ... ... சோர + யாம் + அது கண்டும் + மாண்டார் போல் + இருந்த மாசு தீர வேண்டாவோ வேண்டுவது ... ... ... அறமேயோ” என அந்வயங் கொள்க.

தம்பெயர் கூறியவர்களின் பெரும் பாவத்தைத் தீர்க்கத்தக்க பஞ்ச கன்னிகைகளுள் ஒருத்தியாய்ச் சிறந்த தூய கற்பினளாதலின் “தீண்டாத கற்புடைய” என்றார். கற்பு: கணவனையே தெய்வமாகக்கொண்டு வழிபட்டு அவன் சொற்படி ஒழுகும் ஒழுக்கம். அழகினாலும் செல்வ மிகுதியாலும் திரௌபதி இலக்குமிக்கு ஒப்பானவள் ஆதலின், அவளை உவமையாகுபெயரால் “திரு” என்றார். நீண்டான் - மகாபலிச் சக்கரவர்த்தியிடத்தே மூன்றடி மண் பெற்றவுடன் பூவுலகை ஓரடியாக அளத்தற்கு நெடிய வடிவங் கொண்டவன், திருமால். நி + மலம் = நிமலம் - மாசின்மை. நி: இன்மைப் பொருளை யுணர்த்தும் வடமொழி யிடைச்சொல். அரற்றுதல் - வாய்விட்டுப் புலம்புதல். மாண்டார் - (மாள்: பகுதி) இறந்தார்; [இனி மாட்சிமைப் பட்டார் என்ற பொருளுக்குப் பகுதி: ‘மாண்’ என்னும் உரிச்சொல்.] மன் - மன்னன். அவை - சபை. மாசு தீர வேண்டாவோ - ‘குற்றமானது (பழிப்பு) நீங்க வேண்டுவதில்லையோ’ எனத் தொடருக் கேற்ப விரித்துரைக்க; பொழிப்பில் தாற்பரிய வுரையாக வுரைக்கப்பட்டது. இனி, ‘வேண்டுவது மேம்படு நல் அறமேயோ - யாம் செய்யவேண்டுவது சிறந்த நல்ல தருமமாகிய பொறுமை மாத்திரமேயோ’ என உரைப்பினும் அமையும். உயிர்க்குணமாகிய மானம், வீரம், கோபம், முரண் முதலியன தோன்றி நிகழப்பெறாது அடங்கியிருந்தமையின், “உயிரில்லார் போலிருந்த” என்றான்; உயிருள்ளவர்க்காயின் இவை தோன்றாது விடா என்பதுகருத்து. இனி, ‘தீண்டாத’ என்னு மடையைக் கற்புக் கேற்றாது திரௌபதிக்காக்கி, அக்காலத்து அவள் தீண்டத் தகாதபடி பூப்பெய்தியவளாயிருந்தாள் என்று கொள்வாருமுளர்.

25. வி—ரை: ‘விதி வலியால் கெடுமதி கண் தோன்றாதன்றே’ என்பது அவன் கேளாமைக்கு ஏதுக் கூறியவாறு. இனி, இத்தொடர்க்கு ‘தீய ஊழின் வழியால் (உண்டாய அவனது) கெடுபுத்திக்கு (கண்ணன் கூறும் நீதி) கட்புலப்படாது’ எனவும், ‘தீயூழால் மதி கெடும்; [கெடும்: வினைமுற்று. கண் - அறிவு.] நல்லறிவு தோன்றமாட்டாதல்லவா’ எனவும், ‘தீயூழால் கெடுமதியானது கண்ணுக்குத் தோன்றாதல்லவா’



எனவும் உரைப்பினும் பொருந்தும். “கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது” என்பது உலகப் பழமொழி. “பேதைப்படுக்கும் இழவூழ் அறிவகற்றும், ஆகலூழுற்றக் கடை” என்னுந் திருவள்ளுவர்வாக்கு ஈண்டு ஒப்பிடத் தக்கது. உவர் நிலம் - களர்நிலம். “பயவாக்களரனையர் கல்லாதவர்” என்பது குறள். “நெல் முளைவித்து இடினும்” எனப் பிரித்துரைப்பதுமன்றி “உவர் நிலத்தின் + என் + முளைவித்திடினும்” எனப் பதச்சேதஞ் செய்து ‘உவர் நிலத்திலே எந்தவிதமான முளைக்கத்தக்க (சிறந்த) விதைகளை விதைத்தாலும்’ என்றுரைப்பதுமொன்று. பிராணனைப் போஷிக்கும் உணவுகளுள் அன்னம் பிரதான உணவாகச் சிறந்ததாகலின், அதற்குக் கருவியாகிய நெல் உணவுப்பொருள்களுட் சிறந்தமைபற்றி, கண்ணனது சிறந்த நீதியாகிய தூது வார்த்தைக்கு அதனை ஒப்பிட்டார். “நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே, மன்னனுயிர்த்தே மலர்தலையுலகம்” என்ற ஆன்றோர் வாக்கானும், நெல்லினை ‘ஜீவரத்தினம்’ எனப் புகழ்ந்து நவரத்தினச் செப்பினுள் வைக்கத்தக்க சிறந்த பொருளாகப் போற்றிய அரசனொருவன் கதையாலும் நெல்லே ஏனை விளைபொருள்களுட் சிறந்ததென்பதை அறிக. ‘இத்தொடர், சிறந்த உபதேசத்தை (நீதியை)த் தீயோர்க்கு எவ்வளவு எடுத்துரைத்தாலும் அது பயன்படாது’ என்னும் உவமேய வாக்கியப் பொருளைக் குறிப்பால் தந்து நின்றது. “பாம்புக்குப் பாலை வார்த்தாலும் அது விஷத்தையே கொடுக்கும்” என்னும் உலகப் பழமொழி 4-ம் அடியில் அமைந்துள்ளது. “அதுபோலத் தீயார்க்கு எவ்வளவு நற்புத்தி போதித்தாலும் அவர் தமது தீயகுணம் மாறப்பெறார்; தீங்கே புரிவர்” என்பது 4-ம் அடியில் குறிப்புப் பொருளாய்த் தோன்றி நின்றது. ஆகவே, பின்னீரடியினும் பிறிதுமொழிதல் என்னும் ஒட்டணியோடு, முன்னீரடியினும் காவியலிங்கம் என்னும் தொடர்நிலைச் செய்யுட்குறியணியும் அமைந்தமை காண்க. சாதிக்கத்தக்க பொருளை வாக்கியார்த்தத்தினாலாவது பதார்த்தத்தினாலாவது அவ்விரண்டினாலுமாவது சாதித்தல் காவியலிங்கம் என்னுமணியாம். எந்நாளும் என்புழி உம்மை முற்றும்மை; ஏனைய உயர்வு சிறப்பும்மை.

26. வி—ரை: பார்த்தன் - அருச்சுனன்; பிருதையின் மகன் எனக் காரண விடுகுறிப் பெயர்; பிருதை - குந்திதேவி. இறைவன் - தலைவன், கண்ணபிரான்; இறைமை (= தலைமை) என்பதனடியாகப் பிறந்த பெயர்; இனி, இறு + ஐ = இறை [இறுத்தல் - தங்குதல்] - உலகுயிரெங்கணும் எனக் காரணப் பொருள்படுஞ் சொன் மேல் ஆண்பால் விகுதி சேர்ந்ததெனினுமாம்; ஐ: வினைமுதற்பொருள் விகுதி. பணித்தருள - (இனி அமைக என்று) சொல்லியருள; இனி, ‘பணிவித்தருள = அடக்கியருள’ என்றுரைப்பினுமாம். தீர்த்தன் - கண்ணபிரான்; பரிசுத்தன் என்ற காரணத்தால் வந்த பெயர், நீத்த - தம்மைவிட்டு நீங்கிய, இழந்த; இறந்த

காலப்பெயரெச்சவினை; இது பாரென்னும் பெயரோடு முடிந்தது. இனி, இதனை 'நீத்தம்' எனப் பெயராகக் கொண்டு 'வெள்ளத்தினையுடைய' எனவுரைத்துக் கடலுக்கு அடையாக்கலும், 'எழுபார் - சம்புத்தீவு முதலாகிய எழுபிரிவினையுடைய பூமி' என ஆற்றொழுக்காகக் கொண்டுரைத்தலுஞ் சிறக்கும். அடல் - வலிமை. நிகழ்ச்சி - (உலகத்தாற் கூறப்படுங்) கூற்று. பொய்யோ - பொய்யாமோ. 'போரில் நாங்கள் வெற்றிபெறுவோம் என்னும் நம்பிக்கை எமக்குமாத்திரமன்று, உலகினர்க்குமுண்டு' என்பதை வெளிப்படுத்தவே "எழுபாரடலைவர் பெறுவரெனு நிகழ்ச்சி பொய்யோ" என்றான். ஆண்மை - பராக்கிரமம், வீரம்; (பகைவரை யடக்கி) ஆளுந்தன்மை எனினுமாம். கூறதோ: செயப்பாட்டு வினைப் பொருளில் வந்தது. பாரின் எழு பிரிவுகளாவன: ஜம்பூ, பிலட்சம், குசம், கிரௌஞ்சம், சாகம், சால்மலி, புஷ்கரம் என்பன; இவை எழ் பெருந் தீவங்கள் என வழங்கப்படும்.

27. [56-ம் பக்கம் 7-ம் வரியில் 'பெரிய படை' என்றிருப்பதைப் 'பெரிய புய' எனத் திருத்துக.]

வி—ரை: கேவலம் தீர் - தனிமையின் நீங்கிய, துணைவலியோடு கூடிய. இனி, கேவலம் - சிறுமை, அற்பம் எனினுமாம். கிடக்க - (நம்மிருபகுதியார்க்கும் நெடுங்காலமாக) உண்டாகி யிருத்தலால்; காரணப் பொருட்டாகிய செயவெனெச்சம், 'கொடுக்கமாட்டான்' என்ற வினையோடு முடிந்தது. முதல் - இளமையோடிருந்த முற்காலத்தில். கோ - பசுக்களைக்காத்தலில், வலன் - வல்லவன்; கண்ணன். அரசு - இராச்சியாதிகாரம், அரசுரிமை. நாவல் அம் பூதலம் - அழகிய சம்புத்தீவம்; குருநாட்டைத் தன்னகத்தே கொண்டதாதலின் உள்நாட்டார் கூற்று முற்பட நிகழ்தல்பற்றி அதனை எடுத்தோதினரேனும் இனம்பற்றி (உபலக்ஷண விதியால்) எனை ஆறு தீவிலுள்ளாரையும் கொள்க. காணலே ஆம் - (போர்செய்து எது சிறந்ததென்று) ஒருமுடிவுகாண்டலே தக்கது.

கோவர்த்தனமலை யேந்திய கதை: கோகுலத்தில் ஆயர்கள் வழக்கப்படி கூடி மழையின் பொருட்டு இந்திரனை வழிபடுதற்குப் பொங்கலிட்டுப்படைத்த சோற்றைக் கண்ணன் அவனுக்கு இடாமல் தடுத்துக் கோவர்த்தனமலைக்கு இடச்சொல்லித் தானே தெய்வரூபமாய் அதை அமுதுசெய்தான். அதனால் கோபித்த இந்திரன் கோகுலத்தினை அழித்தற் பொருட்டு மேகங்களை ஏவி எழுநாள் இடைவிடாது கல்மழை பொழியச் செய்தான். அப்போது கண்ணபிரான் கோவர்த்தன மலையைக் குடைபோல் எடுத்துத் தாங்கி அதனால் ஆயர்களையும் பசுக்களையும்



சிறிதும் துன்பமுறாதபடி காத்தனர் என்பது. உரைத்தாலும் என்புழி யும்மை சிறப்பு; ஏனைய எண்ணும்மை.

28. அரம்பை: தேவமாதருள் ஒருத்தி பெயர்; பின் தேவமகளிர் யாவர்க்கும் பொதுப் பெயராகி, ஈண்டு ஊர்வசி என்னும் இந்திரசபையின் நடனமாதைக் குறித்து நின்றது. அவுணர் - அசுரர். இமையோர் அரசு - தேவர்களுக்கு அரசன், இந்திரன். வலியோன்: கேவலம் ஒரு பெண்ணிடத்தே தன் வலிமையைக் காட்டி வலாற்காரத்தால் துன்பிழைத்தமை ஆண்மைக்கு அழகன்று என்னுங் குறிப்பைத் தந்து நின்றதென்றபடி; இனி, கற்போலும் வன்னெஞ்சன் என்றுரைப்பினுமாம். உலகு - உலகினர்; சொல்லால் அஃறிணையும் பொருளால் உயர்திணையுமாகிய சொல்; சொன்னிலைக்கேற்ப அஃறிணை முடிபு கொள்ளும். என் - எவ்விதமான இகழ்ச்சியைத்தான்; (வினையாலணையும் பெயர்).

புரூரவன் ஊர்வசியை மீட்டவரலாறு: பூவுலகத்தில் வந்து ஒரு பூஞ்சோலையில் விளையாடிக் கொண்டிருந்த தேவமாதாகிய ஊர்வசியை அசுரர்கள் வலாற்காரமாகக் கவர்ந்து செல்கையில், அவள் முறையிட்டதைக்கேட்டு, சந்திரன் மைந்தனாகிய புதன் இளை என்பாளிடத்தே பெற்ற புதல்வனாகிய புரூரவன் என்னும் அரசன் இந்திரனுக்கு வரும் மானபங்கத்தை நீக்கும் பொருட்டு உடனே தேரேறிச் சென்று அசுரர்களோடு பொருது வென்று அவளை மீட்டு வந்து, பின்பு இந்திரன் தூது அனுப்பியதனால் அவளை மணஞ்செய்துகொண்டு, அவளிடத்தில் 'ஆயு' என்ற குமாரனையும் பெற்றான் என்பது.

தனக்கு யாதொரு தொடர்புமற்ற ஊர்வசியின் முறையீட்டிற்கிரங்கி ஊர்வசியைச் சிறைமீட்ட புரூரவன் மரபிற் பிறந்த நாம் நமது மனைவியாயுள்ளாளை எதிரிகளாய தாயத்தார் கணவராய எங்கள் கண் காண மானபங்கப்படுத்தப் பார்த்தும், அவர்களைக் கொன்று பழி தீர்க்க எண்ணாமல் மானமின்றி, அவரிடத்தே இரந்து நாடுபெற எண்ணுவது வீரத்துக்குத் தகுதியோ? என்று தருமனது எல்லை கடந்த பொறுமையையும் அருளையும் கண்டித்துக் கூறியபடி.

29. [மூலத்தில், 'கானகம் போய்' என்றிருப்பதைக் 'கானெறி போய்' எனவும், 56-ம் பக்கம் 27-ம் வரியில், 'எழனுருபென' என்பதை 'எழனுருபுத் தொகைச் சொல்லென' எனவும், 'ஓகாரங்கள்' என்பதை 'ஓகாரம்' எனவும் திருத்துக.]

வி—ரை: 'தாணி வேந்தே + நம் துணைவர் + கான் நெறிபோய் + கடவ நாள் கழித்து அதற்பின் கானம் நீங்கி + காந்து உறைந்து + ஈனம் இலாவகை வந்தார் என சிறிதும் இரங்கானகில் + தன் மொழிப்படியே + மாநகரும்

வள நாடும் உரிமையும்+வழங்காஞகில் ... ... ... அறிவனோ" என அந்நு வயங் கொள்க. கான் நெறி - காட்டு வழியின்கண். கரந்து - (விராடனது நகரத்திலே) மறைந்து. கடவ - அஃறிணைப் பன்மைப் படர்க்கைப்பெயர்; (வசிக்கக்) கடமைப் பட்டவை என்பது பொருள். வருடங்களை 'நாள்' என்றான் (தேவமானத்தால்) ஒரு வருடம் தேவர்க்கு ஒரு நாளாதலின். பாரமாகத் தோன்றாதபடி "அடவி யெய்திச் சுரர் தினம் ஈராறுங்கண் துன்னுதிர் மன்னுநாட்டின், ஒருவரும் அறியாவண்ணம் ஒரு தினம் உறைதிர்" "மறைந்துறை நாளினும்மை" என்று கூறி வனம் போக்கியபடியால், ஈண்டு அவர் கூற்றை அநுவதித்துக் கூறினான் என்க. துணைவர் - சகோதரர். உரிமை - அரசுரிமை. மாநகர் - பெருமை பொருந்திய இந்திரப்பிரஸ்த நகரம். தரணி - பூமி. ஊனம் இலாவகை - (நிபந்தனைக்குக்) குறை நேராதபடி; இன்னும், கேடின்றி (=சுகமாக) என்னும் பொருளையும் இரட்டுற மொழிதலால் தந்து நின்றது. 4-ம் அடியிற் கூறிய பொதுநீதியால், 'துரியோதனன் கண்ணபிரான் தூதுசென்று கூறினாலும் அறிந்து நாடுகொடான்' என்னுஞ் சிறப்பு விஷயம் பெறப்படும். அது பிறிதுமொழிதல் அணியாம்.

30. கை அமைத்தருளி - கையால் அமைத்து; கையமைத்தல் - போதும் என்று தடுத்தற்குக் கை கவித்தல். இகல் - வலிமை; பகைவர் மேன்மையைச் சகியாத மாறுபாடுமாம். திறல் - மெய்வலி; சொல்வன்மையுமாம். புகல் (அரிய) - புகலுதற்கு; முதனிலைத் தொழிற்பெயர். புகல்+நீ=புகனீ - சொல்வாயாக நீ; புகல்: ஆய் விகுதி புணர்ந்துகெட்ட முன்னிலையேவலொருமை எதிர்கால வினைமுற்று. சகதேவன் பகைவராலும் மதிக்கப்பட்ட நடுவுநிலைமை வாய்ந்தவனாதலின், "புகலரிய ... ... ... புகழுடையோய்" என்றார். முகுந்தன் - கண்ணன்.

31. வி—ரை: செறிந்த - (உறவாக) நெருங்கிய. இனி, ஒருங்கு திரண்ட (=ஒற்றுமைப்பட்ட) என்பதுமொன்று. மைந்தர் - வீரர் (மைந்து - வலிமை)எனினுமாம்; கோந்து - பூங்கொத்து: 'கொத்தாக (=அடர்த்தியாக)ப் பொருந்திய'எனலும் பொருந்தும். குறித்தல் - கருதுதல். அந்தம் - இறுதி. ஓ: விளிப்பெயரின் முன் அப்பொருளை யுணர்த்திவரும் இடைச் சொல்; இங்ஙனமன்றி, எதிர்மறை ஓகார விடைச் சொல்லாகக் கொண்டு தெரியுமோ? (= தெரியாது) என இயைத்து உரை கூறுவாருமுளர். அது "ஒருவர்க்குந் தெரியாதிங் குன்மாயை யானறிவேனுண்மையாக" என அடுத்த கவியில் வரும் இவன் கூற்றோடு மாறுகொள்ளுதலினாலும், அவையடக்கமாயங்ஙனம் கூறினனெனில்: அது நலிந்துரைக்கும் உரையாகக் கிலிஷ்டார்த்தம் என்னுங் குற்றமாய் முடிதலினாலும் செவ்விதன்மையறிக. ஆதிமூர்த்தி: இயல்புவிளி. என்: (உமக்கு உளதாகும் பயன்) யாது. 'நீர் இவற்று ளொன்றையும் பிரதான பயனாகக்



கொண்டிலீர்' என்பது கருத்து. யார் எதனை எங்ஙனம் செய்ய முயலுகினும், நீர் பாரதப்போரில் உமது சங்கற்பமாகிய பூபாரந் தீர்த்தலான செயலை முடித்தேவிடுவீர் என்பதை யானறிவேன் என்பது கருத்து.

32. வி—ரை: முருகு - வாசனை; தேனுமாம். துளபம் - துளசி. அலகை - பேய். ஈண்டு ஓரரக்கியை இலக்கணையாலுணர்த்திற்று; அவளுயிரை முலைப்பாலுடன் உண்டு என்க. அழகிய பெண்ணுருக்கொண்டு நஞ்சுடன் முலைப்பாலூட்டிக்கொல்லவந்தபூதனை என்னுமரக்கியின் முலைப்பாலுண்ணுங்கால் உயிரையுங்கவர்ந்தனர் என்பது கதை. நளகூபரன், மணிக்கிரீவன் என்ற இருவரும் இரட்டைமருதாய் அணுகி நின்றபொழுது, துடுக்கையடக்குதற்கு யசோதை கயிற்றினால் வயிற்றிற் கட்டி உரலோடு சேர்த்துக் குழந்தையாகிய கிருஷ்ணரைப் பிணித்துவிட, அவர் உரலையுமிழுத்துக்கொண்டு அம்மரங்களுக்கிடையே செல்லுங்கால், உரல் சிக்கித் தடைப்பட, அதனை வலிமையோடுமிழுத்து அம்மரங்களை முறித்துச் சாபம் நீக்கினர் என்றறிக. சகடம் - பண்டி=வண்டி. பொதுவர் - இடையர். முக்கால நிகழ்ச்சியும் அறியவல்ல தத்துவஞானமுடையவாற்றால் சகதேவனை "தெய்வ மன்னான்" என்றார். மாயை - பிறரால் அறிதற்கரிய ஆச்சரியகரமான குணஞ் செயல்கள்.

33. வி—ரை: சாதேவன்: சஹதேவன் என்னும் வடசொல்லது விகாரம்; மஹாதேவன் என்பது மாதேவன் என்றாயதுபோல. இகலோர் - வலியவர், ஈண்டுப் பாண்டவருள் மூத்த நால்வர். விரகு - உபாயம். பை - அழகிய; இனி, பசுமை என்பதன் விகார மொழியாகக் கொண்டு மரகதமணி என்றுரைத்தலுமொன்று. கூடம் - மண்டபம். பாரதப்போர் - பரதவம்சத்தாருள் நிகழ்வதாகிய போர்; (பாரதம்+போர்: இருபெயரொட்டுப் பண்புத்தொகை). போர் பயிலாவண்ணம் - 'போரானது நிகழாதபடி' என எழுவாய்த் தொடராகக் கொண்டுரைப்பினும் அமையும். உய்வண்ணம் - (ஒருவரும் மாளாமல்) உயிர் பிழைக்கும்படி. உரம் - வலிமை.

34. வி—ரை: அமர் - போர். நீறு ஆக்கி - சாம்பராக்கி; அழித்தென்றவாறு. கோபாலன் - பூமியைக் காக்குங் கடவுள், பசுக்களை (இளமையில் மேய்த்துக்) காத்தவன் என்னும் இரு காரணத்தாலும் கண்ணனுக்கு ஆகிய பெயர் (கோ-பூமி, பசு.) கோவிந்தன் - சமுத்திரத்திலே கொண்டுசெல்லப்பட்ட பூமியை(வராகாவதாரங்கொண்டு)அடைந்தவன், பசுக்களை அடைந்து காத்தவன் என இருவகையாகக் காரணப் பொருள்படும்; மற்று: பிறிதென்னும் பொருளில் வந்த இடைச்சொல். ஆர்: யாவரென்னும் வினாப்பெயரின் மரூஉ. இனி, 'அகற்ற+வல்லார்+நீ அன்றி+மற்று ஆர்' என அந்நுவயப்படுத்தியு முரைக்கலாம். யார் என்னும் வினாப்பெயர் ஈண்டு 'ஒருவருமிலர்' என்னும் பொருளைத் தந்தது.

கோல், ஈற்றிலுள்ள ஏ: அசைநிலைகள். அழிக்கவும் காக்கவும் வல்ல உம்மாலன்றிப் பிறரால் முடியாதென்னுங் கருத்து, "யாவரையும் நீருக்கி..............புரிந்தாய்" என்றதனாலும், "கோபாலா பேரேறே கோவிந்தா" என்ற விளியின் பொருளாற்றலாலும் பெறப்படும்.

இச்செய்யுள் முதல் 55-ம் செய்யுள் முடிய உள்ளவை தரவுகொச்சகக்கலிப்பா: துள்ளலிசை சிதையாமல் நாற்சீர் நாலடியால் வருஞ் செய்யுள் தரவுகொச்சகக்கலிப்பாவாம். துள்ளலிசை சிதையாமைக்குக் காரணம் கலித்தளை வெண்டளையன்றிப் பிறதளை விரவாமை யென்க.

35. வி—ரை: இகல் - பகை. அணங்கு - இலக்குமி தேவஸ்திரீ மோகினி என்னும் பெண்தேவதை ஆகிய மூவர்க்கும் பெயர்; மூவரும் அழகில் மிக்கவராதலின் அவ்வழகுபற்றி ஒப்பாகக் கூறத்தக்காராதலின், உவமையாகுபெயராய் ஈண்டுத் திரௌபதியை யுணர்த்திற்று. கார் ஆர் - கருமைபொருந்திய; இனி, 'மேகத்தையொத்த' என்றலுமாம்; (ஆர்: உவமையுருபு). களைந்து - அரிந்து நீக்கி. காக்கல் - நிகழாமல் தடுத்தல்; "செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்" என்புழிப்போலக் கொள்க. உம்மை: இறந்தது தழீஇய எச்சத்தோடு உயர்வு சிறப்பு. நேராக - தகுதியாக. தளை - கால்விலங்கு. இனி, காலில் விலங்குபூட்டலே அமையுமாதலால், 'கைப்பிடித்துக்கட்டுவனேல் - நினது கைகளிற் பிடித்து அவைகளையும் கட்டிவிடுவனேல்' என்றுரைத்தலுஞ் சிறக்கும். 'மஹா' என்னும் வடமொழி 'மா' எனத்திரிந்தது. ஏல்: வினையெச்சவிகுதி. 'ஆகும்' என்னுஞ் செய்யுமென்னும் வாய்பாட்டு முற்று 'ஆம்' என இடையுயிர்மெய் கெட்டு வந்தது; செய்ய இயலும் என்பது பொருள். கன்னன், பாண்டவர் துரியோதனாதியராகிய எல்லாருக்கும் மூத்தவனாதலானும், ஐவர்க்கு முன்பிறந்த சகோதரத்துவமுடைமையாலும், துரியோதனனுக்கு உற்ற நண்பனாகையாலும் இருகட்சியாருக்கும் அவனாளுதல் உடன்பாடும் தகுதியுமாமென்பது. தருமனுக்கு எவ்விதமும் தான் அரசாள வேண்டுமென்பதும், அருச்சுனனுக்குக் கன்னனைக் கொல்லவேண்டுமென்னுஞ் சபதமும் திரௌபதிக்கு விரித்த கூந்தல் முடித்தற்குக் கூறிய சபதமும், கிருஷ்ணரது சங்கற்பமுமே பாரத யுத்தம் நிகழ்வதற்கு மூல காரணமாதல்பற்றி இவ்வாறு கூறினான். ஏனை வீமன் சபதம் முதலியன பிரதானமல்லவாதலின் விடப்பட்டன. இக்காரியங்களெல்லாம் நிறைவேற்ற முடியாதனவாகலின், பாரத யுத்தத்தை நிகழாமல் தடுத்தலும் முடியாதென்பது அவன் கருத்து.

36. வி—ரை: கட்டும் ஆறு - கட்டும் விதம். மாயன் - கிருஷ்ணர். என: (=என்று சொல்ல) சொல்லென்னுஞ் சொல் எஞ்சிய சொல்லெச்சமாகிய செயவென் வாய்பாட்டு வினையெச்சம். வடிவந்தன்னை - கடவுட்டன்மை வாய்ந்த நிஜசொரூபத்தை, மூலவடிவத்தை. காட்ட - காட்டினால். உணராதாய் - உணராம லிருக்கப்பட்ட பெரியோனே; விளிவேற்றுமையேற்ற எதிர்மறைத் தெரிநிலைவினையாலணையும் பெயர்; உணராதான் என்பது ஈறு திரிதலாகிய விளியுருபேற்றது. ஆயினும் தாற்பரியவகையால் தனிவாக்கியமாகப் பிரித்துப் பொழிப்புரையில் உரைக்கப்பட்டது என்றறிக. தனது ஒப்பற்ற மகிமைபற்றிப் பிரபுத்துவத்தையே மேற்கொண்டு அரியனாதலைவிட்டு, அடியார்க்கு எளியனாய் வந்து அருள்செய்யும் கிருஷ்ண பரமாத்மாவினது சௌலப்பிய குணம்பற்றி "உன்னைநீதானு முணராதாய்" என்றான்; "தன்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ" என்றார் கடவுளைத் திருவாசகத்திலும். நீதானும் என்புழி தான்: அசை; உம்மை: [தத்துவ ஞானமில்லாச் சனங்களே யன்றி என] எச்சவும்மையோடு உயர்வுசிறப்பு. முடித்தாலும் என்புழி உயர்வு சிறப்பும்மை; அது அங்ஙன முடித்தற் கருமைதோன்ற நின்றது. இங்ஙனமன்றி, விஷ்ணுவாகுங் கடவுட் டன்மை வாய்ந்த தமது அளவிலா வாற்றல் முதலிய மகிமைக்குணம் அளவுட்படாதவாற்றால் 'உன்னாலும் அளவிட்டு அறியப்படாதோய்' என்றிங்ஙனம் கூறினானென்றும், 'உன் வடிவந்தன்னை நீ காட்ட' என்பதற்கு 'உனது திவ்விய சொரூபத்தை நீ (என்னுடைய) அறிவிற்கு விஷயமாக்கியிருப்பதனால்' என்றும் உரைப்பாருமுளர். "ஞானந் தானுருவாகிய நாயகனியல்பை ... ... ... தானுந் தேர்கில னின்னமுந் தன்பெருந் தலைமை" என்னுங் கந்தபுராணச் சூரனமைச்சியற்படலச் செய்யுளையும் நோக்குக.



37. வி-ரை: அறிவான்-அறியும்படி; (வானீற்று எதிர்கால வினையெச்சம். ஆய -(எது மூலவடிவமென இலகுவில் தோன்றாமல்) ஆராய்ந்தறியும்படியாக; (ஆய்தல் - ஆராய்தல்). தூயவன் - (அறிவின்) தூய்மையைப் பெற்றவன், சகதேவன். தாய - (மூவுலகத்தையும்) தாவியளந்த. பதினாறாயிரங் கோபிகைகளுடன் கூடி அவர்க்கு இன்பமளித்த தமது வடிவம் பதினாறாயிரம் ஆதலின், அத்தொகைஒரேரூபமானவடிவத்தைக் கிருஷ்ணர் கொண்டாரென்று அத்தொகைக்குக் காரணங்கொள்ளலுஞ் சாலும். இனி, 'ஆய - ஆகிய = கோகுலத்திற் கோபிகைகளின் பொருட்டு உண்டாகிய' எனக் கொள்ளினுமாம்.

உலகளந்த கதை: விஷ்ணு மகாபலிச்சக்கரவர்த்தியை அடக்குதற்பொருட்டு வாமனாவதாரஞ்செய்து சென்று, அவனிடம் மூவடிமண் யாசித்துப் பெற்றபின் நெடிய வடிவங்கொண்டு பூமியை ஓரடியளவாகவும் வானுலகை ஓரடியளவாகவும் அளந்து, மற்றோரடிக்கு இடமின்மையால் அதற்கு ஈடாகத் தந்த அவனது சிரத்திற் பாதத்தை யூன்றி அவனைப் பாதாளத்திற் செலுத்தினார் என்பது.

38. வி—ரை: பின்னீரடியினையும் மாற்றி முதலிற்கொண் டுரைக்கப்பட்டது. பூதேவர் - பூசுரர் = அந்தணர் (வேதாந்தப்பொருளை ஆராய்ந்

தறிந்தவர்). "உலகமுழுதும் தெய்வவசப்பட்டு நடக்கின்றது; அத் தெய்வம் மந்திரத்துக்கு வசப்பட்டு நடக்கின்றது; அம்மந்திரமோ பிராமணர்களின் வசத்துள்ளது; ஆகையால் பிராமணரே எனக்குத் தெய்வம்" [நீதி சாஸ்திரம்] எனக் கண்ணபிரான் கூறியதும் காண்க. கா - கற்பகச்சோலை.

40. வி – ரை: என்று என்று=என்று பலமுறை சொல்லி; அடுக்கு ஈண்டுப் பன்மை குறித்து வந்தது; என்று: ஈண்டு இடைச்சொல் லடியாகப் பிறந்த சொல்லெச்சமாகிய வினையெச்சச்சொல்.

41. வி – ரை: இச்செய்யுள் குளகம். ஆண்டு இருந்த அவை - அங்கே பிரத்தியேகமாக விருந்த சபாமண்டபத்தை. எய்தி - எய்தலும்; எய்தலும் என்ற இறந்தகாலவினையெச்சம் 'எய்தி' எனத் திரிந்தது; நோக்கி என்னும் வினையோடு தொடர்ந்தது. 'நீண்ட கருங்குழல் சோர நின்றாள் + பழுது இல் புகழ் பாஞ்சாலியை முகம் நோக்கி' என மொழிமாற்றியும், ஐயுருபு பிரித்துக் கூட்டியும் உரைக்கப்பட்டது. பாஞ்சாலியை முகத்தைப் பார்த்து என இரண்டு செயப்படுபொருள் அணைந்தது; முன்னதனைப் 'பாஞ்சாலியது முகத்தை' என, பொழிப்பில் 6-ம் வேற்றுமையாகத் திரித்துரைக்கப்பட்டது, "முதலை ஐயுறிற் சினையைக் கண்ணுறும், அதுமுதற்காயிற் சினைக்கையாகும்" என்பது பற்றி. சந்து - தூது, சமாதானம் என இரு பொருளும் பயந்து சிலேடைப் பதமாய் நிற்றல் ஈண்டைக்குச் சிறத்தலை யுய்த்துணர்க. 'நோக்கி' என்னும் எச்சவினைக்குக் கருத்தா கண்ணபிரான்; அவ்வெச்சம் அடுத்தகவியில் 'உரைத்தான்' என்னும் அவரது வினையோடு முடிந்தது. "ஈண்டவரில் இளையோனும் 'சந்து மிகவினிது' என்றான்; தருமனுக்கும் கருத்து இதுவே; தமருடன் போர் புரியாமல் இருநிலத்தில் உடன் வாழ்தல் எனக்கும் நினைவு" என்று உரைத்தான் (கண்ணன்) என எல்லாவற்றையும் கண்ணன் கூற்றாகக் கொள்க. இங்ஙனமன்றி, 'ஈண்டவரில் ... ... ... என்றான்' என்ற தொடரைக் கவிக் கூற்றாக்கி யுரைப்பாருமுளர். சகதேவன், சகோதரர் பாஞ்சாலி முதலிய யாவர் முன்னிலையிலும் தன் கருத்தை முன்னமே [32 - ம் கவியில்] "திருவுளத்துக் கருத்தெதுவோ அது வெனக்குங் கருத்தென்றான் தெய்வமன்னான்" என்பதனாற் கூறி முடித்தமையைக் கவி கூறியதனாலும், தமது இரகசியமாகிய உட்கிடையைச் சகதேவனறிந்தமையை யுணர்ந்து, பின்பு தனியிடத்துக்குச் சகதேவனை அழைத்துப் போய் இரகசியமாகப் பேசிவந்த கண்ணபிரானே அவ்விரகசியத்தை மறைத்துப் பேசவேண்டிய உரிமையும் தலைமையும் உடையவராகையாலும், அடுத்த கவியில் "தருமனுக்கும் கருத்திதுவே" "எனக்கும் நினைவு" என்ற (எண்ணும்மையின் மாற்று ரூபமாகிய) இறந்தது தழீஇயவெச்சவும்மைகளுக்குப் பொருத்தமாய் எண்ணப்பட்டுத் தொடர்வுபடுவதற்கு முற்றொடர் கண்ணன் அநுவதித்த கூற்றாகக் கோடலே மிக்க



பொருத்தமாமாதலினாலும் இறுதி யடியைக் கவிக்கூற்றாக்காது கண்ணபிரான் கூற்றாகவே யுரைத்தல் சிறக்குமாறோர்ந்துணர்க. திரௌபதியின் முகத்தைக் கண்ணன் நோக்கி, பின்னைய மூன்று வாக்கியத்தையுங் கூறிய தன் தாற்பரியம் 'திரௌபதியே, இனி, உன் கருத்து யாது?' என்று வினாவுங் குறிப்போடுகூடியதென்க. அதனாலேயே கண்ணனது அபிப்பிராயத்தைத் தொடர்ந்து இடையீடின்றித் திரௌபதி தன் அபிப்பிராயத்தைக் கூறுவதுங் காண்க. இன்னும் திரௌபதியின் முகத்தைச் சகதேவன் நோக்கிக் கூறுவதாற் போதப்பயனின்மையினாலும் அக்கவிக்கூற்றாகக் கொண்டவுரை சிறவாமை காண்க. அவர்கள் 'நோக்கி' என்னும் வினையெச்சத்தை அடுத்தகவியிலுள்ள 'உரைத்தான்' என்ற வினையோடு முடித்தல் தூராந்நுவயமாகப் போய்விட்டது என்று பயந்துபோலும் பொருட்சிறப்பை நோக்கினாரில்லை.

42. வி – ரை: தமர் - சுற்றத்தவர். இரு நிலத்தில் - பெரிய பூமியின்கண்; இனி, அஸ்தினாபுரி இந்திரப்பிரஸ்தம் என்னும் இரண்டு இராச்சியபாகங்களில் எனினுமாம். 'உரைத்தான்' என்னுமுற்றுவினை அதிகாரத்தால் வருவிக்கப்பட்ட 'கண்ணபிரான்' என்னு மெழுவாயைக் கொள்ளும். வரி - (சிவந்த) இரேகை. (புனல்) சோர - ஒழுக. (குழல்) சோர - (நிலத்தில்) வீழ்ந்து படிய. விரை - வாசனை. செஞ்சே - ஒருபொருட் பன்மொழியாய், மிகச்சிவந்த என்னும் பொருளைத் தரும்; இனி 'செம்மை - அழகு, சே - சிவந்த' எனினுமாம். அடிக்கீழ் - பாதத்தின்கண், (கீழ்: 7-ம்வேற்றுமையுருபு)

43. வி-ரை: சால-மிக; இதனை 'முனிந்த' என்னும் வினைக்கு அடையாகக்கூட்டுக. கனகம்என்பது பொன்னின் பெயராதலால், அது அப்பொன்னுக்குரிய மற்றோர் பெயராகிய 'இரணியம்' என்பதைக் குறிப்பாலுணர்த்துமாதலின், இரணியனைக் கனகனென்றார்; (குறிப்புமொழி.) தனிமைந்தன் - ஏகபுத்திரன்: அவன் பிரகலாதன்; சிறந்த விஷ்ணு பக்தன். இடை: ஏழனுருபு. ஆதிமூலம்: ஆதி - உலகிற்கு முதற்காரணமாகிய பிரகிருதி மாயை. மூலம் - அதன் காரியப்பாட்டிற்குக் காரணமானவன் (நிமித்த காரணன்); விஷ்ணுவின் உந்திக்கமலத்திலிருந்து பிரமனும் உலகுயிர்களுந் தோன்றியதென்னும் வரலாறுபற்றி, ஆதிமூலம்-ஆதிகாரணன்' என்றுகொள்ளினுமாம். மூவகை மதங்களாவன; கன்னமதம், கோச மதம், கைம்மதம் என்பன. மால் - பெருமை. கிரி - மலை. நிறம், அழகு, திண்மை, தோற்றப்பெருமை யாதியவற்றால் நீலக்கிரி விஷ்ணுவுக்கு உவமையாயிற்று. விஷ்ணுபக்தனாயிருந்த 'இந்திரத்தியும்நன்' என்னும் அரசன் 'அகத்திய முனிவரது சாபத்தால் 'கஜேந்திரன்' என்ற யானையாகத் தோன்றி, அப்போதும் விஷ்ணு பூசை செய்து வாழ்ந்தான் என்றறிக. ஹூஹூ என்னுங் கந்தருவன் தேவலன் என்னும் முனிவன் நீர் நிலையில் தவஞ்செய்த

பொழுது அவனது காலைப் பிடித்திழுத்ததனால் முதலையாகும்படி அவனாற் சபிக்கப்பட்டான். யானையழைத்தபோது விஷ்ணு சக்காயுதத்தைவிட்டு முதலையைக் கொன்று யானையைக் காத்தனர் என்க. வந்தாய்: முன்னிலை ஒருமைவினைமுற்று. நெடுமாலே! முற்காலத்து உமது பக்தனான பிரகலாதனை இடரின் நீக்கிக் காத்தற்கு நரசிங்கமாகத் தோன்றினாய் என்றதனால் 'இப்போதும் உமது அடியாளாகிய எனது துன்பத்தையும் நீக்கி என் கூந்தலை முடிக்க அருள் செய்வீராக' என்பது குறிப்பெச்சப் பொருளாக வருவித்துரைக்க நின்றது. இனி, 'வந்தாய்' என்பதை விளிப்பெயராகக் கோடலுமொன்று.

44. வி—ரை: கற்றை - தொகுதி. குழல் - கூந்தல். கொற்றம் - வெற்றி. தனி - ஒப்பற்ற. திகிரி - சக்கராயுதம். அன்றைக்கும் என்பது வலித்தல் விகாரம் பெற்றது. மானம் - பெருமை. அன்றி: குறிப்புவினையெச்சம். ஏ -அசை.

45. [61-ம் பக்கம் 2-ம் வரியில் 'சருமை' என்றிருப்பதை 'அருமை' எனத் திருத்துக.]

வி—ரை: "திறல் வீரர் + அன்று + அழைத்து + மன்றில் எனக்கு மாசு... ஐந்தூர் + பெற்று இருந்தால் + எம்பெருமான் + வல்வினையேன் + விரித்த அருங்கூந்தல் + இனி + என்று முடிப்பது + என்று அழுதாள்" என அந்நுவயங் கொள்க. மன்றில் - (இராஜ) சபையிலே. ஐந்தூர்; 'அவிஸ்தலம், விருகஸ்தலம், மாகந்தி, வாரணாவதம், ஐந்தாவதாக ஏதேனுமனுகியதோர் ஊர் என்பன. 'இவைகளையாவது வேண்டுக' என்று 11-ம் கவியில் தருமன் கூறியபடியால், இங்ஙனங் கூறினாள். இனி, பெருந்தேவனார் பாரத வெண்பாவில், 'ஐந்தூர்: குசஸ்தலம், மிருகஸ்தலம், வருணாபதி, வாசந்தி, சயசந்தி' என்று காணப்படுகிறது. 'திறல் வீரர்' என்ற அடையின் குறிப்பால் ஐந்தூர் பெறுவது அடாதென்பது தோன்றும். அருங்கூந்தல் - அரிய (சிறந்த) கூந்தல்; சிறப்பாவது கருமை, நெய்ப்பு, நெறிப்பு, சுருளல், நீட்சி, வாசனை அடர்ச்சி முதலாயின வுடைமை. முடிப்பது: எதிர்காலங்காட்டிய தொழிற்பெயர்; யானென்னுந் தோன்றா எழுவாய்க்குப் பயனிலையாய் நின்றது. எம்பெருமான்: இயல்புவிளி.

46. வி—ரை: மாசு - (சபதமுடியாமையாலாகும்) அவமானமாகிய மாசு. 'அவமானம் நீங்குதற் பொருட்டுப் பகைவரைக் கொல்லாதொழியின் அவ்வாயுதங்களாற்பெற்ற பயனென்னை' என்பது முதலாமடியின் கருத்து. இவளது பரிதாபநிலையைக் கண்டுவைத்தும் ஊர்வேண்டியுண்டு வாழ்வது உங்கள் மானத்திற்கும் வீரத்துக்கும் அடாதென்றபடி. குழல் - கூந்தல்.

இனி ஒருரை: இந்த வீமன்கையில் (சத்ருக்களைக் கொல்லவல்ல) தண்டாயுதம் இருக்கவும், அந்த அருச்சுனன் கையில் (காண்டீவமாகிய) வில் இருக்கவும் பூங்குழலாளானவள் தன்மேற் குற்றமிருந்த தன்மையினால் அவமானப்படுவதுபோல (சூதாடிய காலத்தில் அரச சபையில் துரியோதனனால் மானபங்கப்படுத்தப்பட்டுக் கணவராகிய உம்மால் உதவிபெறாது) ஆற்றியிருந்தாள்; நீவிரெல்லீரும் (கணவராயிருந்தும் நிரபராதியான அவளது துன்பத்தைக்) கண்டுவைத்தும் (வலியில்லாதவர்போல) வாளா இருந்தீர்; (இப்போதும் பகைவரைக் கொன்று சபதமுடித்து இவள் துன்பத்தை நீக்க நினையாமல்) அப்பகைவரிடத்தே ஊர்களை யிரந்து பெற்று வயிறுவளர்ப்பதற்கே (தூதுசெல்லச்) சொல்லுகின்றீர்; (இது) சொல்லமாட்டீரோ [இவ்வளவேயன்றி இதன்மேல் இழிவாயினவுஞ் சொல்லுவீர் என்றபடி] என்றவாறு.

அரசவையில் நிரபராதியான திரௌபதியைத் துரியோதனன் மானபங்கஞ் செய்வித்தகாலையில், ஆயுதபாணிகளாகிய நீவிர் பார்த்துக்கொண்டு வாளா இருந்தது தவறு; அதன்மேலும் இப்போது அவரைப் போரிற்கொன்று சபதத்தையு மிவள்கூந்தலையுமுடித்து நாடுபெறுவதைவிடுத்துச்சமாதானமுறையில் ஐந்தூர்வேண்டல் பெருந்தவறாகும் என்பதுகருத்து. பூங்குழல்: ஈண்டு அன்மொழித் தொகைப்பெயர். இருந்தது என்பன முற்றெச்சம். "மேல் மாசு இருந்தது என இருந்தாள்" என்றது 'குற்றஞ் செய்த மகளிர் மானபங்கப்படுதல் நீதி; இவள் அங்ஙனமன்றியே குற்றஞ் செய்தாள் போல அஃதெய்தியமை அநீதி' என்பதை விளக்கிற்று. "எல்லீரும் கண்டு இருந்தீர்" என்பது அவ்வநீதியைக் கண்ட நீவிர் உமக்கு ஆற்றலிருப்பின் அது செய்தானைத் தண்டித்து நீதியை நிலைநிறுத்தல் க்ஷத்திரிய தருமம்; ஆற்றலின்றேல், மானங் கெடாமைப் பொருட்டு உயிர் துறத்தல் கடனாகும்; அவ்விரண்டுமின்றி வாளா உயிர்தாங்கி நின்றீர்' என்றவாறு. "கருதலர் பால் ... ... ... உரையீரே" என்றது 'அப்படிப்பட்ட நீவிர் இதுவுஞ் சொல்லுவீர், இதன் மேல் இழிவாயினவுஞ் சொல்லுவீர்' என்று கூறி ரோஷத்தை மூட்டியவாறு. ஏகாரம் முன்னது: பிரிநிலை; பின்னது எதிர்மறை. கண்டுமென்னுமிழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

இனி, பூங்குழலாள் தன்மேலே (மானபங்கமாகிய) பழிப்பு நிலைத்து நின்றதென்று (யாவரும்) சொல்லும்படி (அவமானமடைந்து) இருந்தாள்' 'உரையீர் - (இனி அவ்வவமானம் நீங்கும் விதத்தைச்) சொல்லுங்கள்' எனவும், 'முன்னே மலர் முடித்தமையால் வண்டுகள் வாசஞ்செய்திருந்த அழகிய கூந்தலின் மேல் (இப்போது அவ்வலங்காராதிகளின்மையால் தகுதியற்ற) தூசு படிந்திருப்பதாயிற்றே என்று கண்டோர் சொல்லத்தக்கதாக இருந்தாள், இதனைக் கண்டுகொண்டிருந்த எல்லீரும் (இவள் கூந்தலை அலங்கரித்து முடித்தற்கேற்ற வழியை எண்ணாமல்) 'கருதலர்பால் ... ... ... உரைக்கின்றீர்' 'உரையீர் - (இது முறையோ) சொல்லுங்கள்' எனவும் உரைப்பினும் அமையும்.

47. [இப்பாட்டின் பொழிப்புரையில் 4 - ம் வரியில், 'கிருஷ்ணரது புத்தியோ' என்பதன் பின்னே '(மிக்க பொறுமையால்) விளங்குகின்ற தருமபுத்திரனது ஆலோசனையோ' என்பதைச் சேர்த்துக்கொள்க.]

வி—ரை: பார் வேண்டுவது மாதவன் மதியோ? தருமன்றன் மதியோ? என்றான் (சாத்தகி) என வினைமுடிவுகொள்க. சண்டம் - வேகம், கொடுமை. உரும் - இடியேறு; எதிர்த்த பகைவரைத் தப்பா தழிக்கும் பெருவலிபற்றி இடியேற்றை உவமித்தார். அனைய- ஒத்த; (உவமையுருபு). சராசந்தன் - ஜராஸந்தன் என்னும் வடசொல்லது திரிபு; மகததேயத்தரசனாகிய பிருகத்திரதனது மனைவியரிருவர் வயிற்றிலும் ஒரு முனிவர் வரத்தாலுதித்த உடற் பாதிகளை அவன் நகர்ப்புறத்தே எறிந்துவிட, அந்நகர்த் தேவதையாகிய 'ஜரா' என்பவள் அப்பாதிகளை எடுத்துப் பொருத்த உயிர் பெற்றெழுந்தது. அக்குழந்தையை அவள் அரசனிடங் கொடுக்க, அதை வாங்கி 'ஜரா' என்பவளால் பொருத்தப்பட்ட உடலுடைமையால் 'ஜராஸந்தன்' எனப் பெயரிட்டு வளர்த்தான் என்பது கதை. வண்மை + துவரை =வளப்பத்தையுடைய துவாரகை; மரூஉமொழி. அரண் ஆக - பாதுகாப்பான நகராக; துவாரகையானது நீரரண், மதிலரண், மலையரண், காட்டரண் என்ற நால்வகை யரணுள் கடலாகிய நீரரண் இயற்கையில் அமைந்த சிறப்புடைமையின், அதனை அரணாகக் கொண்டாரென்க. திண்மை + திறல் - கலங்காத வலிமை. மாதவன் - கிருஷ்ணர்; மா + இலக்குமி; தவன்-நாயகன் (வடமொழி). மதி - அறிவு, ஆலோசனை; ஈண்டு அதனாற் செய்யப்படுஞ் செயலை உணர்த்திற்று, காரணகாரிய உபசாரத்தால் என்க. பண்டும் என்புழி உம்மை 'அறிந்து' என்பதனிறுதியில் மாற்றிக் கூட்டப்பட்டது. 'பண்டு ... ... அறிந்தும்' என்றது உலூகன்றூது, சஞ்சயன்றூதுகளால் துரியோதனாதியர் நாடு கொடாத கருத்தை அறிந்தமையை. வேண்டுவது - வேண்டி (பிரார்த்தித்து) ப் பெறுவது; (எதிர்காலங் காட்டிய தொழிற் பெயர்; எழுவா யேற்று இருவினைக்களையும் பயனிலையாகக் கொண்டது.) கிருஷ்ணரது கடவுட்டன்மை பொருந்திய வலியையும், பிறரால் கண்டறிய முடியாத சூழ்ச்சித் திறங்களையும் சாத்தகி அறிவானாயினும், இங்ஙனம் இழித்துக் கூறியது கிருஷ்ணருக்கும் பாண்டவர்க்கும் ரோஷம் பிறப்பித்துப் போரை விரும்புவிக்கும்பொருட்டென்றுணர்க. சாத்தகி - கிருஷ்ணருக்குத் தம்பிமுறை யானவன்; பெரும் போர்வீரன்.

கிருஷ்ணர் சராசந்தனுக்கு அஞ்சி வடமதுரையைக் கைவிட்ட கதை: சராசந்தனது மருகனாகிய கஞ்சனைக் கிருஷ்ணர் கொன்றதும் கஞ்சனது பத்தினிகளாகிய சராசந்தனின் புதல்வியர் தம் பிதாவிடம் சென்று முறையிட்டுத் துக்கப்பட, அவன் அதனைச் சகியாதவனாய் 17 முறை சேனைகளோடு மதுரையை வளைந்து கிருஷ்ணரோடு பொருது தோற்று 18 - ம் முறை போருக்கு முயற்சிக்கையில் காலயவனன் தன் சேனைகளோடு மதுரையை வளைந்துகொண்டான். அப்போது கிருஷ்ணர் 'காலயவனனோடு போர்க்குத் தாம் சென்றால் தாமில்லாத சமயத்திற் சராசந்தன் மதுரையிற் புகுந்து தம் இனத்தவராகிய யாதவர்களைக் கொல்லவுங் கூடும், சிறைப்படுத்திச் செல்லவுங் கூடும்' என்றெண்ணி மேல்கடலில் புதிதாகத் துவாரகா புரியை நிருமித்து அதில் யாதவர்களைத் தமது யோக சக்தியால் குடியேற்றிப் பின் காலயவனனோடு பொருது உபாயத்தால் அவனை ஒரு மலைக் குகையுள் இழுத்துச் சென்றார். அங்கே நித்திரை செய்துகொண்டிருந்த முசுகுந்தச்சக்கரவர்த்தியைக் கிருஷ்ணர் என்றெண்ணிக் காலயவனன் உதைக்க, முசுகுந்தன் விழித்துப் பார்த்த மாத்திரத்தில் காலயவனன் சாம்பராயினன். பின்பு காலயவனனது சேனையை வென்று அவ்வீரரது அணிகளாதி பொருள்களைத் துவாரகைக்குக் கொண்டுபோம்போது சராசந்தன் சேனையோடு சென்றெதிர்க்கப் பலராமரும் கிருஷ்ணரும் பொருள்களைக் கைவிட்டுப் பயந்தவர்போல ஓடி ஒரு மலையிலேறி யொளிக்க, சராசந்தன் அம்மலையைச் சூழக் காவல்செய்து நெருப்பு மூட்டினான். பலராம கிருஷ்ணர்கள் அம்மலையினின்றும் ஒருவருமறியாமற் குதித்து வெளிப்பட்டுத் துவாரகை சென்று வதிந்தனர். சராசந்தன் அவர்கள் வெளிவரக் காணாமையின் அக்கினியாலிறந்தொழிந்தனர் என்றெண்ணித் தன்னூர் சென்றானென்பது.



48. வி—ரை: சாத்தகி - சத்தியகன் என்பானது புதல்வன்; சாத்யகி என்பது திரிந்தது. சத்யகன்: சிநி என்பானது மகனாய் வசுதேவனுக்குச் சகோதரமுறை பூண்டவன். ஆகவே கிருஷ்ணருக்குச் சாத்தகி தம்பிமுறை யானவன்; ஸ்ரீராமருக்கு இலக்குமணன் போல, கண்ணபிரானிடம் அன்புகொண்டு அவர் கருத்துக்கு மாறின்றி நடப்பவன்; மேலும், இவன் அருச்சுனனிடத்து வில்வித்தை பயின்றவனாதலின், தனக்கு ஆசானாகிய அருச்சுனனிடத்தும் அது காரணமாக மற்றப் பாண்டவரிடத்தும் நீதி முறை தவறாமல் அன்புடன் ஒழுகுபவன். இவனுக்கு யுயுதாநன், சைநேயன் என்ற வேறு நாமங்களும் உண்டு. சடை - (வார்ந்து அலங்கரித்து முடியாத படியாற்) சடையாகத் திரண்டுள்ளதாகிய, கோ - தலைமை பூண்டவனாகிய; அரசன் எனலுமாம். குலம் - உயர்குடி, மேன்மையுமாம். பங்கஜம் என்னும் வடசொல் பங்கயம் என்றாயது; பங்கம் - சேற்றில்; ஜம் - தோன்றுவது; (காரண விடுகுறிப்பெயர்). ஏத்து + அரிய=முன்னதனை முதனிலைத் தொழிற் பெயராகக்கொண்டு, 'புகழ்தற்கரிய' என்றலுமாம். உரைப்ப, அரற்ற: (=உரைத்தமையாலும் அரற்றியமையாலும்) காரணப் பொருளவாகிய செயவெனெச்சம்; 'பார்த்தருளி', 'உரைப்பான்' என்பவற்றை முறையே கொண்டுமுடியும். திரௌபதி கதறிப் புலம்பினமையாலும், அவளது துன்பத்தைத் தீர்க்கவேண்டுமென்பதை ஆதரித்து மானத்தாலும்

நீதியாலும் உந்தப்பட்டுச் சாத்தகி கூறியதனாலும் அவ்விருவர் கூற்றுக்கும் பஞ்சவரில் யாரேனும் சமாதானங் கூற முற்படுவாருண்டோ? என்று அறிதற் பொருட்டாக ஐவர் முகத்தை மாத்திரம் பார்த்து, அக்குறிப்பு ஒருவரிடமுங் காணப்படாமையால் தாமே அவளைச் சமாதானப்படுத்தும் நோக்கத்துடன் கண்ணபிரான் அவளுக்குக் கூறுவாராயினர் என்பதாம்.

இளையாள் - இலக்குமி; உவமையாகுபெயராய் ஈண்டுத் திரௌபதியை யுணர்த்திற்று; பாற்கடல் கடைந்த காலத்தில் மூதேவி முன் பிறந்தமையால் 'மூத்தாள்' என்றும், இலக்குமி பின் தோன்றியமையால் 'இளையாள்' என்றும் வழங்கப்படுவர். இனி, பாண்டவர் கண்ணனுக்கு மைத்துன முறை பூண்டவராதலின், அதற்கியையத் திரௌபதி அவர்க்குத் தங்கை முறையினளாதல்பற்றி 'இளையாள்' எனப்பட்டாள் என்றலுமாம்.

49. வி—ரை: முன்னொரு காலத்தில் தேவர்களும் அசுரர்களும் மாறுபட்டுப் போர் தொடங்குங் கருத்தினராக, அப்போது பாண்டியன் மாகீர்த்தி யென்பான் அவ்விருவர்க்கும் இடைநின்று 'இருவீரும் போரை ஒழிமின்; அன்றிப் பொருது ஒருவீர் மற்றவரை வெல்லுவீரேல் அங்ஙனம் வென்ற பகுதியாரை யான் பொருது அழிப்பேன்' என்று கூறினாற் போல, துரியோதனன் நாடு கொடானாகவும் பாண்டவர் போரை விடின், அநீதி செய்த துரியோதனாதியரைப் பொருது அழிக்கும் உரிமை தமக்கு உண்டு என்ற கருத்துப்பற்றி எழுந்தது இப்பாட்டின் பொழிப்பிற்குப் பின்னே கூறப்பட்ட விசேடவுரை என்றறிக. இங்ஙனமன்றி, யான் தூது சென்றாலும் அவன் நாடு கொடான் என்பது நிச்சயம்; ஆயினும் இரு பகுதியார்க்கும் சுற்றமாய்ச் சமாதானஞ் செய்யத்தக்க உரிமையும் ஆற்றலுமுடைய கண்ணனும் இவர்களைச் சமாதானப்படுத்த எண்ணினானில்லையே என உலகினர் பின்பு கூறாமைப்பொருட்டுயான் தூது சென்றே தீரவேண்டும்—மீண்டுவந்தபின், ஒருவேளை பாண்டவர் பின்னிட்டாலும் அவரைப் பொரும்படி தூண்டியும், அவர்களின் வெற்றிக்கு உற்ற உதவிகளைச் செய்தும் உன் கூந்தலை முடிப்பிக்க வேண்டும்முயற்சியை நானே கைக்கொள்வேன் என்று தேற்றியபடியாகவும் கருத்துக்கொள்ளலாம்.

தோல் ஆண்மை - இளமைதொட்டேயுள்ள வீரம். நல்லாய் - நற்குணமுடையவளே. விரிப்பது - விரிக்கப்படுவன; செயப்படுபொருளைச் செய்ததுபோலத் தொழிற்படக்கிளந்த வினையாலணையும் பெயர்; இஃது ஒருமையீறு தோன்றிய சாதியொருமையாம். புல்லார் - பகைவர்; கூடி வாழாதவர் என்ற காரணத்தாலாயது. புல்லுதல் - நட்பாய்ச் சேர்தல். நானே என்னும் பிரிநிலை ஏகாரம் 'பிறர்வேண்டா' என்னுங் கருத்துப்பட நின்றது. ஈற்றேகாரமும் பிரிநிலை,



50. வி—ரை: மை - கரிய, முகில்போன்ற எனலுமாம். மருவார் - பகைவர்; (மருவுதல் - கூடிவாழ்தல்). உடற்புலம் - உடம்பாகிய விளைநிலம். உழல் ஆதும் - உழுதற்கு ஏற்புடைய. கொழுவாகும்வாள்: விரியுருவகஅணி. உடற்புலம்: தொகைஉருவகஅணி. சேர - ஒருங்கே. "தொல்வேந்தர் தங்குலமும் இக்குழலுஞ் சேர முடியாதிரான்" என்பது ஒப்புமைக்கூட்டஅணிவகையுள் ஒன்று. இதனை வடநூலார் துல்யயோகிதாலங்காரம் என்பர். [ஈண்டமைந்த பிரிவு: 'உறவினரிடத்தும் பகைவரிடத்தும் சமனாக நடப்பதாகச் சொல்லும் இலக்கணமுடையது.] முடியாது: சிலேடையணி அமைந்த சொல்; மேலையணிக்கு அங்கமாயிற்று. குலம் - கூட்டம், சந்ததியுமாம். தொக்கு உழலும் - ஒன்றுகூடி (செருக்குக்கொண்டு) திரியும் எனலுமாம்.

51. வி—ரை: 'சாற்றுகின்ற மண் ......மா மாயன்' என்ற எழுவாய்ப் பகுதியை முதலில் மாற்றி இயைத்துப் பொருளுரைக்கப்பட்டது. சாற்றுகின்ற - (உலகினுக்குக் காரணமாகச்) சொல்லப்படுகின்ற. அனல் - தீ. அநிலம் - காற்று. அந்தர்யாமியாய் எங்கும் வியாபித்திருப்பதனால் பஞ்சபூத வடிவாகிய என்றார். மாமாயன் - மஹா மாயாசக்திகளை யுடையவன் (கிருஷ்ணர்); இக்காரணப் பெயரை ஈண்டு உபயோகித்ததனால், அவளது மனம் பொருந்தத் (=இயையும்படி) தேற்றுதல் அவர்க்கு எளிதாமென்னும் பொருள் தொனிக்கும். மகளிர்க்குரிய நாற்குணங்களேயன்றி, தங்குறைகளைத் தீர்க்க வல்ல உரிமையுள்ளவரிடத்தே சமயம் வாய்த்துழிக் கூறித் துன்புற்று முறையிடலாகிய பெண்ணியற்கையையும் 'பெண்ணீர்மை குன்றாத' என்பதன் கருத்தாகக் கொள்ளல் சந்தர்ப்பத்துக்குச் சிறக்கும். பொருந்திரு: திரௌபதியை இந்திரத் திருவின் அவதாரம் என்பர். கருணையெனும் தெள்நீரினால் - தயையாகிய வஞ்சனையற்ற தன்மையினால் எனினுமாம் (நீர் - தன்மை); வெற்றுபசார வார்த்தையாகாத உளப்பூர்வமான தயையால் என்றபடி. தேற்றினான் - தேறுதலைச் செய்தனன்; தேறு: தன்வினைப்பகுதி; தேற்று: பிறவினைப் பகுதி (பகுதியொற்றிரட்டித்தலாகிய விகாரத்தாற் பிறவினைப் பொருளையுணர்த்திற்று).

52. வி—ரை: இச்செய்யுள் தருமர் கூற்று; இது "என்னக்கழறி" எனப் பிற்கவியின் தொடர்பால் விளங்கும். கல்லாதவர் - மூடர். ஒன்றும் - சிறிதும். முறைமையுணராதவர் - ஒழுக்கமுறையறியாதவர், மிலேச்சத் தன்மையுடையவர். மந்தணம் - மந்த்ரம் என்ற வட சொல்லின் விகாரம்; ஆலோசனை யென்பது பொருள்; அஃது இலக்கணையால்அதற்குரியஇடத்தை யுணர்த்திற்று. எய்த: இழிவு சிறப்போடு கூடிய எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது; அடையவும்தகாதவர் என்க; எனவே, பேசவுந்தகாதவர் என்பது உம்மையாற் பெறப்படும் பொருளாம். ஆலோசனைச் சபைக்கு

அருகரல்லாதார் இன்னரென்பது இப்பாட்டின் கருத்து; இவருள் நோயாளர், மூடர், முறைமையுணராதவர், மகளிர் நால்வரும் மனுஸ்மிருதியிலும், மகளிரோடு இளைஞர் கம்பராமாயண - மந்திரப் படலத்தும், கன்றுசின மனத்தோர் காமந்தக நீதிநூலிலும் விலக்கப்பட்டிருத்தலும் காணலாம். இவர்கள் யாவரும் ஆராய்வுடன் செய்வன தவிர்வன அறிந்து பேசி முடிவு செய்து தக்கபடி ஒழுகாராதலின், மந்திராலோசனைச் சபையில் வரவுந் தகுதியில்லாதவராவர். மேலும், துறவிகள் உலகப்பற்றை விட்டவராதலின் தத்துவ விசாரணையில் செல்லுமியல்புடைய தம் மனத்தை லௌகிக விவகாரங்களிற் செலுத்தி ஆராயுமியல்பும் விருப்புமிலாதல்பற்றி நீக்கப்பட்டனர்; முடிவுவரையிற் பொறுமையுடன் அடங்கிப் பேசமாட்டாதவராதலின் அடங்காதவரையும், அநுபவஞானக்குறைவு முதலிய காரணங்களால் இளைஞரையும், "நுண்ணறிவுடைய நூலொடு பழகினும், பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே" என்பவாகலின் மகளிரையும் விலக்கினர் என்றறிக. "அடங்காதோர், கன்றுசின மனத்தோர், இளையோர், மகளிர்" என்ற சொற்களால் சகதேவ னொழிந்தவரைக் கண்டித் துரைக்குங் குறிப்பால், ஆலோசனைக்குதவாதவராகிய ஏனையோரையும் உடன் கூட்டிக் கூறியபடி.

53. வி—ரை: கழறி - இடித்துரைத்து. இருந்தோரென்றது சமாதானத்துக்குடன்படாதவராகிய சகதேவனொழிந்தோரை. கழறி, தவிர்த்து, உரைப்ப என்னும் வினைகளுக்குச் சந்தர்ப்பஆற்றலால் 'தருமன்' என்னும் கருத்தா வருவிக்க. நேமி - சக்கரம். விஷ்ணு தேவாதிதேவனாதலின், அவரது அவதாரமாய கண்ணனை "நின்னொப்பவரில்லாய்" என்றார். மன்னர்க்கு மன்னவன் - இராஜாதிராஜன், பேரரசன். ஏகசக்ராதிபத்தியம் பூண்டவனையே சக்கரவர்த்தி என்பர்; இவன் அங்ஙனமல்லன். இனி, உரைதவிர்த்து - உரையைப் பொருட்படுத்தாமல் (ஏகு)' எனக் கண்ணன் வினையாக்கலு மொன்று. இதற்குத் தருமன் கழறி, உரைப்ப என வினை முடிவுகொள்க.

54. வி—ரை: இச்செய்யுள் குளகம். அணி – அழகிய. சல்லரி - திமிலைப்பறை, கைத்தாளமுமாம். தாரை - காளம், சிறுசின்னம் என்னும் குழற்கருவி. வெண்குடை - வெண்கொற்றக்குடை. புடை - (இரு) பக்கங்கள். இரட்ட - வீசப்பட. அவனிபர் - அரசர். முழங்க, நிழற்ற, இரட்ட, சூழ: செயவென்னும் வாய்பாட்டு நிகழ்கால வினையெச்சங்கள்; இவை தம்முட் டொடராமல் அடுத்த செய்யுளில் வரும் 'சென்றருளி' என்பதைக் கொள்ள, அது 'கண்டான்' என்னும் வினையோடு தொடரும்.

55. வி—ரை: கல் - கூர்ங்கற்கள். வரையும் - (தன்னிடத்தே) கொண்டுள்ள. பாலைக் கடுஞ்சுரம் - பாலைநிலத்துள்ள கொடிய அருநெறிகள். கான்யாறு - காட்டாறு; இஃது உபலட்சணத்தால் ஈண்டு முல்லை நிலத்தை யுணர்த்தும். நாடு - மருதநிலமாகிய நாடு. எனவே, பாண்டவரிருந்த உபலாவிய நகரத்தி லிருந்து புறப்பட்ட கிருஷ்ணர் அதற்கும் அத்தினபுரிக்கு மிடையிலுள்ள பாலை, முல்லை, குறிஞ்சி, மருதமாகிய நான்கு நிலங்களையும் இரண்டு நாளில் சென்று மூன்று நாள் அத்தினபுரியை யடைந்தார் என்றறிக. நெய்தல் நிலமின்மையாற் கூறாராயினர். இனி, 'கல்வரையும்—பாறைகளையுடைய மலையிலும்' எனவும் 'நல்வரையும்— வறுமையை நீக்கும்: [நல்குரவு என்பது 'நல்' எனக் கடைக்குறைவிகாரம் பெற்றது; "ஒல்லுவ தொல்லும்" (196 பா.) என்னும் புறநானூற்றிற்போல] எனவும் உரைப்பதுமுண்டு. வரைய - வரைத் தன்மையை யுடைய; எனவே 'மலைபோலும்' எனத் தாற்பரியவுரையாக உரைக்கப்பட்டது: இப்பொருட்கு இவையிரண்டு பதமும் குறிப்புவினைப் பெயரெச்சமாகிய இலக்கணைச்சொல். இனி, '(தொல்) வரைய - உயர்ந்த இடத்தையுடைய' எனவும், 'மல் வரைய - மல்யுத்தத்திற்கு ஓர் எல்லையாகவுள்ள' எனவும் உரைப்பினுமாம். நகர் - ஈண்டு அத்தினபுரி. உம்மையால் எண்ணப்பட்ட பொருள்களி னீற்றில் 7-ம் வேற்றுமை விரிப்பதே யன்றி [சுரத்தையும், யாற்றையும், வரையினையும், நாட்டினையும் சென்று என] 2-ம் வேற்றுமை விரித்துரைப்பினும் தகும்; "கன்றலுஞ் செலவு மொன்றுமார் வினையே" என்னுந் தொல்காப்பிய வேற்றுமை மயங்கியற் சூத்திரத்தில் 'செல்லல்' என்னும் வினை முடிக்குஞ் சொல்லாய்த் தொடர்தற்கு இவ்விரு வேற்றுமையும் தக்கன என்று கூறப்பட்டமையால் என்றறிக.



56. வி—ரை: 'தாவும் ... ... தனக்கு எதிர் + பச்சிளங்கமுகம்' என்பவற்றை முதலிற் கொண்டுகூட்டி உரைக்கப்பட்டது. மேவு - (உச்சியிற்) பொருந்திய. துகிர் - பவளம். மரகதம் - பச்சைக்கல். கோவை - மாலை. கதிர் - ஒளி. தரளம் - முத்து. 'நிரை நிரை துயிற்றி' - (செழுமை மிகுதியால் ஒரே கமுகின்கண் அடிக்குலை பழமாகவும் மேற்குலை காயாகவும், அதன் மேற்குலை பூவிரிந்த பாளையாகவும் பல அடுக்குக் காணப்படுமாதலின்) அம்முறையே வரிசையாக அமைத்து என்றவாறு. சமைத்த - இயற்றப்பட்ட. காவணங்களின் - பந்தர்போல; 'இன்': ஐந்தாம் வேற்றுமை யுருபு, 'போல' என்னும் பொருளில் வந்தது. 'கமுகுகளின் தோற்றம் காவணம் போல இருந்தது' என்றது தற்குறிப்பேற்ற அணி.

இச்செய்யுள் முதலாக 99-ம் செய்யுள் முடிய உள்ளவை கலிநிலைத்துறை. அஃது ஐஞ்சீர்கொண்ட நாலடியான் வருதலை இலக்கணமாகவுடையது.

57. வி—ரை: 'உம்பர் நாயகன் வரவுகண்டு + சோலை' என்பவற்றை முதற்கண் மாற்றிக் கூட்டி யுரைக்கப்பட்டது. இங்ஙனமன்றி ஆற்றொழுக்காகக் கோடல் சிறவாமையை ஓர்க. உம்பர் - தேவர்கட்கு. நாயகன் - தலைவன் (கிருஷ்ணர்). வம்பு - வாசனை. வருக்கை - பலாமரம். தமா

லம் - பச்சிலைமரம். தயங்க - (அவரைப் பூசித்து உபசரித்தற்குப் போலத் தளிர், பூ, கனி முதலாயினவற்றைத் தாங்கி) விளங்க களி - களிப்பு, மகிழ்ச்சி. கூர்ந்து: (=மிகுந்து) கூர் என்னும் உரிச்சொல் லடியாகத் தோன்றிய இறந்தகால வினையெச்சம்; அது பாடின, ஆடின என்னும் இரண்டு வினைக்கும் அடையாய்த் தனித்தனி இயையும். தும்பி - வண்டு. தோகை - மயிற்பீலி; ஈண்டுச் சினையாகுபெயராய் மயிலை உணர்த்திற்று. ஆடின - (பாட்டிற்கிசைய) நடித்தன. சோலையின்கண் இயற்கையில் நிகழ்ந்த மரங்கள் பூத்து விளங்குதலையும், வண்டு ரீங்காரஞ் செய்தலையும், மயில்கள் ஆடுதலையும் கண்ணன் வரவினைக் கண்டமையால் உபசரித்தற் பொருட்டுச் செய்தன போலும் என்றது ஏதுத்தற்குறிப்பேற்ற அணி. அவ்வணியினுரு பாகிய 'போல' முதலாயின இன்மையினால், அவ்வணி குறிப்பாற்றோன்றிய வகையின்பாற்படும். வடநூலார் இவ்வகையை கம்மியோத்பிரேக்ஷாலங் காரம் என்பர்.

58. வி—ரை: பின்னீரடியினையும் முதலில் மாற்றி யுரைக்க. 'சிறந்த' என்னும் பெயரெச்சத்தைப் பொய்கைக்கு அடையாக்குக. புணரியின் - கடல் போல; 5-ம் வேற்றுமை 'இன்' உருபு ஒப்புப்பொருட்டு. உம்மை: (மலரைத் தழுவிக்காட்டும்) எச்சவும்மை. கொள்வன: அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை எதிர்கால வினையாலணையும் பெயர்; பொய்கை என்னும் எழுவாய்க்கு அடையாய்நின்றது. நீராசனம் - ஆலாத்தி; கண்ணூறுகழித்தற்கு மகளிரால் ஏந்திக் காட்டப்படுவது. கடுப்ப - போல்வன; 'அன்' சாரியை பெறாத அஃறிணைப்பன்மை வினைமுற்று ரூபமாகிய தற்குறிப்பேற்ற அணி யுருபு. நீருடன் கூடிய பொய்கைப்பரப்பு மஞ்சள் நீருடன்கூடிய ஆலாத்தித் தட்டையும், பொய்கையிலுள்ள மலர் தட்டின் மத்தியிலுள்ள தீபச்சுடரையும் போற் காணப்பட்டன என்பது தற்குறிப்பேற்ற அணி. இதற்கு அங்கமாக 'அத்தினபுரி எனும் அணங்கு' என்ற உருவகஅணி வந்ததுமறிக.

59. [மூலத்தில் முதலாமடியில், "கோலமாம்" என்றிருப்பதைக் "கோலமாய்" எனத் திருத்துக.]

வி—ரை: கோலம் - பன்றிக்கு ஒரு பெயர்; "போழ்முகக் கோட்டு மாவே போத்திரி வராகங் கோலம், சூழுமீரெட்டும் பன்றி சூகர மெறுழியும்பேர்" [விலங்-19] என்பது சூடாமணி நிகண்டு. விஷ்ணு பன்றி வடிவாகிச் சிவபிரானது திருவடியைத் தேடியமையை "ஓரேனந் தனைத்தேட வொளித்தருளு மிருபாதத் தொருவன்" என இந்நூலாசிரியரே அருச்சுனன் றவநிலைச் சருக்கத்து 87-ம் கவியிற் கூறியவாற்றானுமறிக.

விஷ்ணு வராகவடிவங் கொண்ட கதை வேறு வருமாறு: இரணிய கசிபுவினது சகோதரனாகிய இரணியாக்ஷன் என்னும் கொடிய அசுரராஜன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு கடலினுள் மூழ்கிச் சென்றபோது



தேவர் வேண்டுகோளால் விஷ்ணு பெரிய பன்றி வடிவங்கொண்டு கடலுள் புகுந்து அவ்வசுரனைத் தேடிக் கொன்று பாதாளலோகத்தை அடைந்திருந்த பூமியைத் தமது கோட்டினாற் குத்தி எடுத்துவந்து முன்னைய நிலையில் நிறுத்தினர் என்பது. இடந்த - கோட்டாற் பூமியைத் தோண்டிச் சென்ற; (ஈண்டுக் காட்டிய கதைக்கு) கோட்டாற் குத்தி எடுத்த. இடை: ஏழனுருபு. கிடந்தது ஆம் - கிடந்தது போலும்; தாழ் - ஆழ்ந்த. ஆழம், தெளிந்த நீர்ஆகிய இவற்றால் பாதல கங்கையை ஒப்பிட்டார். கோட்டாற் குத்திய துவாரத்தின் வழியாகப் பாதலகங்கை மேலே சுரந்து வந்து இந் நகரைச் சூழ்ந்து கிடந்தது போலும் என்றது தற்குறிப்பேற்ற அணி.

60. வி—ரை: அடிநிலம் - (மதிலின்) அடிப்பாகமாகிய இடம். முடி நிலம் - உச்சிப்பாகமாகிய இடம். உடுபதம் - நக்ஷத்திர மண்டலம். சக்கரப்பொருப்பு-சக்கரவாளமலை; அது பூமியைச் சூழ்ந்த கடலைச் சுற்றி மதில் போல வளைந்திருப்பது. தொடர்புயர்வு நவிற்சியணி இக்கவியில் அமைந்தமை காண்க. பொருப்பையும்: உம்மை உயர்வு சிறப்பு; ஐயுருபு 'எனும் படி' என்னும் வினைகொண்டு முடியும். ஓர்படி வதத்தது ஆம் என - ஒரு பிரதிரூபமாக (=படியெடுத்துச் செய்ததொன்றாக) இயற்றப்பட்டது போலும் என்று சொல்லத்தக்கதாக என்றுரைப்பினுமாம். [இனி 'இதற்கு ஓர் உவமையாகச் செய்யப்பட்டது' என்பாருமுளர் ] படியெடுத்தல் - ஒன்றைப்பார்த்து அதேவிதமாக மற்றொன்றைச் சிருட்டித்தல். இப்பொருளுக்குப் பின்னீரடிகள் மாத்திரம் தற்குறிப்பேற்ற அணியா மென்க.

61. [மூலத்தில், 'பரப்பாமால்' என்பதை 'பரப்பாமல்' எனவும், பொழிப்புரையில், 'காற்றை' என்பதைக் 'காற்று' எனவும் திருத்துக.]

வி—ரை: 'நெடுங்கொடி ஆடை' என்னும் எழுவாயை முதலிற் கொண்டுரைக்க. கடும்பரிதி - சூடுமிகுந்துள்ள சூரியன்; அங்ஙனமிகுவது நண்பகலிலென்பது தானே போதருமாதலின், அடையின்றிப் 'பகலினும்' என வாளா கூறினார்; ஆகவே அதற்கு நண்பகலாகிய உச்சிப்போதினும் என்றுரைத்துக்கொள்க; இகலி - மாறுபட்டு, மறைத்து என்றவாறு. எங்கணும் - இடைவெளியில்லாமல் என்றபடி. கால் எறிந்துபொருதலின் - காற்று வீசி மோதுதலால். மந்தாகினி - ஆகாயகங்கை. தரங்கம் - அலை. போல என்ற உவமையால் 'அசைந்து விரிந்து' என்னும் சாதாரண தர்மமாகிய வினை வருவித்துரைக்க; இது வினையுவமம். மிடைதல் - நெருங்குதல். கங்கையின்நீரலை வெண்ணிற முடையவாதலின், வெண்ணிறக் கொடிகளுக்காயின் நிறத்தாலும் உவமை கொள்ளலாம். பரப்பாமல் இகலி மிடைவன, எங்கணும் மிடைவன, போல மிடைவன எனத் தனித்தனி இயையும். எல்லாப் பொருளின் நிழலும் அவ்வவற்றின் அடியின்கண் உறைந்து ஒடுங்கத்தக்க நண் பகலினும் வெயிலை மறைத்து நிழலைச் செய்

யும்படி மதிலினும் மாடங்களினும் கட்டப்பட்டுள்ள கொடிகள் நெருங்கி நிறைந்துள்ளன என்பது கருத்து. முற்செய்யுளில் மதிலையும், பிற்செய்யுளில் மேல்மாடங்களையும் வருணித்து இடைச் செய்யுளாகிய ஈண்டு மத்திமதீப நியாயமாகக் கொடிகளைக் கூறியவாற்றான், அந்நகரத்தின் அவ்வெல்லா இடங்களினும் கட்டப்பட்ட கொடிகள் என்பது பெறப்படும்.

62. வி—ரை: 'புயங்க......தாத்த + மாடம் + வரையினின்று எழுவன + இயங்கு கார்முகில் + போல வயங்கு......உயிர்ப்பன' என மொழி மாற்றி ஏகவாக்கியமாக உரைக்கப்பட்டது. எனும் தாத்த - என்று ஐயுற்றுக் கூறுதற்கேதுவாகிய மேன்மையையுடையனவாகிய; [தாம் - மேன்மை; பக்குவம் (தகுதி) எனினுமாம்.] அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப் பெயர், மாடம் என்னும் எழுவாய்க்கு அடையாய்நின்றது. இனி, இச்சொல்லை அஃறிணைப் பலவின்பாற்படர்க்கைக் குறிப்புமுற்றாகக் கொண்டு, மாடம் என்னு மெழுவாய்க்குப் பயனிலையாக்கிப் பின்னவாக்கியமாக உரைப்பினுமமையும். 'போல' என்னும் உவமையுருபாகிய வினையெச்சம் வயங்கு என்னும் வினையைக் கொள்ள, அது புகைக்கு அடையாய் ('போல வயங்கு புகை' என) நிற்ப, அதனைக் காலுவன மாடம் என முடிக்க. முகில் போல வயங்குதலாவது முகில் வரையினின்றெழுந் தியங்குதல்போல, (மாடமாகிய தம்மிடத்திலிருந்து [புகை] கூட்டமாய் வானிலெழுந்தியங்கி) விளங்குதலென்க. 'வயங்கு' என்னுஞ் சொல்லானது உவமையுருபுக்கு முடிக்குஞ் சொல்லாதலேயன்றி, உவமான [முகிலின்] தர்மங்களுக்குச் சமானமாகிய உவமேய [அகிற்புகையின்] தர்மங்களை விளக்கும் அடையாயும் நிற்றலின், அதற்கு இவ்வாறு இசையெச்சத்தால் பொருள் புலப்பாட்டிற்கு வேண்டும் பல சொற்கள் வருவித்து அகலவுரை உரைக்கற்பாற்று என்பது இலக்கண நூற்றுணிபாம். எனவே, வரைக்கு மாடமும், முகிலுக்கு அகிற் புகையும், முகில் வரையினின்றெழுந்தியங்குதலுக்குப் புகை மாடத்தினின்றெழுந்து வானிலியங்கி விளங்குதலும் உவமேயமாதல் பெறப்படும். போகங்களாற் சிறந்த நாகலோகமோ, ஐசுவரியச் சிறப்புக்கள் வாய்ந்த சுவர்க்கலோகமோ, செல்வத்தால் நிகரின்றி விளங்கும் குபேரனது அளகாபுரியோ, அவ்வெல்லாச் சிறப்பும் வாய்ந்த இந்நகர் மாடங்களுக்கு அம்மூன்றனுள் எது நிகராகும் என்றையுறுந் தாத்தை யுடையன என்றபடி. ஆகவே, ஓகாரங்கள் ஐயப்பொருளில் வந்தன. இனி, அச்சிறப்பெல்லாம் நிறைந்த மாடங்களுக்கு ஒவ்வொரு வகைச் சிறப்பேயுடைய அவ்வுலகுகள் நிகராமோ (நிகராகா) எனக் கொள்ளின் ஓ: எதிர்மறை.

புயங்கம் - பாம்பு; புஜங்கம் என்னும் வடசொல்லது திரிபு; புஜம் - வளைவாக (வளைந்து வளைந்து), கம் - செல்வது எனக் காரணப்பொருள் படும். இச் சொல்லுக்கு இதுவே அவயவார்த்தம் என்பதனை வடமொழியிலுள்ள லிங்காபட்டீயம், சப்தஸ்தோமமகாநிதி என்னும் நூல்களிற்



காண்க. புரந்தரன் - இந்திரன். மாடம் - மேல்நிலை (உபரிகை) களையுடைய மாளிகைகள்; பால்பகா அஃறிணைப்பெயர், ஈண்டுப் பன்மைவினை கொண்டவாற்றாற் பன்மைப்பாலை யுணர்த்திற்று. இங்ஙனமன்றி, 'உயிர்ப்பன' என்பதற்கு 'எழுந்தன' என்றுரைக்கும் பொருள் பொருந்தாமையையும், அவ்வினைக்குப் புகையை எழுவாயாகக் கொண்டு, 'மாடம்' என்பதற்கு (செய்யுளீற்றில் தொகப்பெறாத 5-ம் வேற்றுமையை விரித்து) 'மாடத்திலிருந்து' என்றுரைத்தல் "ஐயுங்கண்ணுமல்லாப் பொருள்வயின், மெய்யுருபு தொகா விறுதியான" என்னுந் தொல்காப்பியச் சொல்லதிகாரச் சூத்திரவிதிக்கு மாறுபடுதலையும், மாடங்களினியல்பை வருணித்தலே நுதலிய பொருளாகக் கொள்ளுமிடத்து அம்மாடம் எழுவாயாக உற வாக்கியநிலை கோடலன்றி, 'புகைகள் எழுந்தன' எனப் புகை எழுவாயாக உற வாக்கியநிலைகொண்டுரைத்தல் பொருந்தாமையையும் ஓர்ந்துணர்க.

63. வி—ரை: 'வீதிகளெல்லாம்' என்றதை முதலிற் கொண்டுரைக்கப்பட்டது. வேழம் - யானை. எதிர் எதிர் - அவரவர்க்கு எதிரேயுள்ள இடங்கள்தோறும்; ஈண்டு அடுக்குப் பன்மைகுறித்து நின்றது. மயங்க - கலந்து நெருங்குதலால்; எ மருங்கினும் - (வலம் இடமாகிய) எப்பக்கத்திலும். பெயர்தல் - புடைபெயர்தல், அசைதல், நடத்தல். ஏகுமின் ஏகுமின் - செல்லுங்கள் செல்லுங்கள்; ஈண்டு அடுக்கு விரைவு குறித்து வந்தது; முன்னிலைப் பன்மை யேவலெதிர்காலத் தெரிநிலை வினைமுற்று. தொடர - (யாம்) தொடர்ந்து செல்லுதற்கு; இவ்வினையெச்சத்தை 'ஏகுமின்' என்ற வினைக்கு அடையாக மாற்றிக் கூட்டியுரைக்க. 'தொடர' என்பதற்குப் பதிலாக 'என்னும்' என்று பாடங்கொள்வதுமுண்டு; அப்பாடத்திற்கு 'என்னும் என்னும் - என்று பலமுறை சொல்லும்' என்று வினைச்சொல்லடுக்காகவுரைக்க.

64. வி—ரை: பல வரையெலாம் படுபொருள், பல வனமெலாம் படுபொருள் என்றிங்ஙனம் தனித்தனி இயைக்க. வளைந்த தரை - (அக் கடலாற்) சூழப்பட்ட நாடு நகரங்கள். முறையே மலைபடுதிரவியம், காடுபடுதிரவியம், கடல்படுதிரவியம், நாடுபடுதிரவியம், நகர்படுதிரவியம் என்பவற்றை முன்னீரடியிலும் அமைத்தார். மலைபடுதிரவியம்: மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம் முதலாயின. காடுபடுதிரவியம்: இருல், தேன், அரக்கு, மயிற்பீலி, நாவி முதலாயின. கடல்படுதிரவியம்: உப்பு, முத்து, பவளம், சங்கு, ஓர்க்கோலை முதலாயின. நாடுபடுதிரவியம்: செந்நெல், சிறுபயறு, கரும்பு, வாழை, செவ்விளநீர் முதலாயின. நகர்படு திரவியம்: கண்ணடி, பித்தன், கருங்குரங்கு, யானை, அரசன் முதலாயின. கவர் - அடக்கியிருக்கின்ற. இனி நிரைகளால் (தமக்கு இடமாகக்) கவரப்பட்ட என 3-ம் வேற்றுமைத்தொடராக விரித்துரைப்பினுமமையும்.

ஆவணம் - கடைவீதி. நீர்மை - இயல்பு, தன்மை. உரையெலாம் - செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச்சொல் என்னும் மூவகைச் சொற்றிரள். இனி, உண்மையுரை புனைந்துரைவகையாகிய எல்லாவற்றாலும் எனக்கொள்ளினுமாம்; தொடுத்துரைத்தல் - விரித்து வருணித்தல். உண்மையுரையால் தொடுத்தலாவது தன்மை நவிற்சியணி, வைதர்ப்ப நெறிபோன்றவற்றை அநுசரித்து வருணித்தல். புனைந்துரைவகையால் தொடுத்தலாவது உயர்வு நவிற்சியணி, கௌடநெறி போன்றவற்றை அநுசரித்து வருணித்தல். உரைப்பினும் - (ஒருவாறு) வருணித்துக் கூறுதற்கமையினும்; ஈண்டு உம்மை உரைத்தற்கருமைதோன்ற நின்றமையின் உயர்வுசிறப்பு. உவமை வேறு உளதோ - அதற்கு எடுத்துக் கூறத்தக்க உவமானம் (உலகில்) வேறு உண்டோ (இல்லை); எனவே அதற்கு அதுவே நிகராம் என்பது பெறப்படும். ஓ: எதிர்மறை.

65. வி—ரை: கான் - காடு. வீரரின் விதங்கள் என்றதனாற் காலாட்படை வீரரும், யானைவீரர் குதிரைவீரர் தேர்வீரருமாகிய பல பாகுபாடுகளையுங் கொள்ளவைத்தார் என்க. இன்னும் அதனால், காலாட்படைவீரருள்ளும் விற்போரில் வல்லவரும், வாட்போரில் வல்லவரும், வேல் வீரரும், மல்லில் வல்லவரும் ஆகிய பேதங்களும், தேர் வீரருள்ளும் அதிரதர் மகாரதர் சமரதர் அர்த்தரதர் என்னும் பாகுபாடுமாகிய எல்லாங் கொள்க. பரவை - கடல், கரைக்கு ஆகுபெயர். பந்தி - வரிசை. ஈட்டம் - கூட்டம். நிரைகோள் - விடாது பொழிதலைக் கொண்ட, (சோனை மாரி). அணி - வரிசை. இன் உருபுகள் 5 - ம் வேற்றுமை, உறழ்ச்சிப் பொருளில் வந்தன.

66. வி—ரை: ஆலயம் - வீடுகள்; 'பூதேவர்' எனப்படும் சிறப்பையும் ஆண்டுள்ள தூய்மை வேள்வி பூசனை முதலிய விசேடங்களையும் குறிப்பிப்பார் 'ஆலயம்' என்றார். ஆசு, மாசு, காசு - குற்றம். இவ்வாறு ஒரே பொருளிற் பல சொற்கள் வந்தமை பொருட்பின்வருநிலையணியாகும். பேரிடம் - பெரிய மாடங்கள். கடி - காவல் (உரிச்சொல்). பால் - பக்கம். அந்தணர்வீதி முதலியன இதனாற் கூறப்பட்டன. 'ஒருபால்' என்னுஞ் சொல் நான்கடிகளினிறுதியிலும் வந்தமையால், சொற்பொருட்பின்வருநிலையணியும், இயைபுத்தொடையாகிய சிறப்பும் அமைந்துள்ளன.

67. வி—ரை: முழவு - பறைப் பொதுப்பெயராயும், ஒருவகை வாத்தியம் மத்தளமிவற்றின் சிறப்புப் பெயராயும் வழங்கும் சொல்லென்றறிக. மகளிர் உலாவுதலானும், நடனம் பயிலுதலானும், பலவகை விளையாட்டுக்களை ஆடுதலானும் சிலம்போசை உளதாயிற்றென்க. இதனால் நகரின் செல்வமிகுதி குறிப்பிக்கப்பட்டது.

இச் செய்யுளிலும், 'ஓசை' என்னுஞ் சொல் மேலையணியும் தொடையும் பற்றி வந்தமை யறிக.



68. வி—ரை: திசைதொறும் - அரமனையின் நாற்பக்கமும் மேற்பக்கமுங் கீழிடமுமாகிய எல்லா இடங்களிலும். பொறி - பொன்பொடி. பொற்பொடிகள் மலைபோல் உன்னதமான அரமனையின் எல்லாவிடங்களிலும் தெறித்துப் படிந்து ஒளிருதலால், அது பொன்மலைபோன்ற தோற்றத்துடன் திகழ்ந்தது என்றபடி. அரசர் - துரியோதனனுக்குக் கப்பங்கட்டவும் நண்பினாற் காணவும் வரும் அரசர்கள்.

69. வி—ரை: "வேங்கை சண்பகம் வண்டுணாமலர்" என்று முன்னோர் கூறியது, அவற்றின் தேனை வண்டுகள் உண்டால் இறந்துபடும் என்ற காரணத்தாலாதலின், ஈண்டு ஏனை மலரிற்போல வாசம்பற்றி சண்பக மலரினும் சேர்தல் அசம்பாவிதமல்ல என்று இங்ஙனம் வருணித்தார். இனி, 'நின்று' என்பதற்குச் 'செல்லாமலொழிந்து' என்று பொருள்கோடற்கும் அச்சொல் ஏற்றவாறறிக; 'நெருநலளவும் வருத்திய பிணி இன்று நின்றது' என்புழிப்போலக் கொள்க. இனி, 'என்றிசைக்கும்-என்றிவ்வாறு சிறப்பித்துக் கூறப்படும்' என்றுரைப்பாருமுளர். நகருட்புகாது புறத்தே தென்பாலுள்ள சோலையிற் றங்கியது இளைப்பாறுதற்கும் துரியோதனனது நோக்கத்தையும் செயலையும் இருந்தறிதற்குமென்றறிக.

70. வி—ரை: 'தூதுவர் + சென்று + வண்டுஇனம் முரல் தொடையலான்றனக்கு + சேவடி வணங்கி + அன்று ... .. விளைத்தவன் + இன்று ஐவர்க்கு + தூதுவந்து......துன்று தூது + இயம்பினர்' என அந்நுவயங் கொள்க. இனி, 'தாது துன்று வண்டு' என வண்டிற்கு அடையாக்கின் 'மகளிரது தூதாகச் செல்லும் வண்டு' என்க.

எயில் - மதில். இறுத்தனன் - தங்கினான். முரல் - ஒலிக்கின்ற. 'அன்று......தீ விளைத்தவன்' என்னுந் தொடர் 'இங்குமவ்வாறே கேடு விளைப்பன்' என்னுங் கருத்தைக் குறிப்பாலுணர்த்தியது. 'தூது' என்னுஞ் சொல் பலமுறை வந்தது சொற்பொருட்பின்வருநிலையணியாம்.

71. வி—ரை: உலகுயிரனைத்தையும் தனது உந்திக்கமலத்திலிருந்து தோற்றுவித்த முன்னோனாதலின், 'தொல்லைநாயகன்' என்றார். மல்லல் - வளப்பம், செழுமை. 'மாலையான் + ஏவுதலினால்' என எழுவாய்த் தொடராகக் கொண்டு, 'என்றலும்' என்னும் வினையெச்சத்தை 'ஏவல்' என்னுந் தொழிற்பெயர்வினையொடு முடிக்க. ஒப்பனை-அலங்காரம். யோசனை: '4 முழம் = வில்; 2 வில் = தண்டம்; 2000 தண்டம் = குரோசம்; 4 குரோசம் = யோசனை' எனவும், பிறவாறும் வழங்கும். குரோசம் இரண்டுமைல் தூரம் எனவும், யோஜனை எட்டுமைல்தூரம் எனவும், அபிப்பிராய பேதம் வடமொழி நூல்களிற் காணப்படுகின்றது. ஈண்டு எழுநூறு யோசனை விஸ்தாரமுடையது என்றது அதிசயோக்தியாகிய உயர்வு நவிற்சியணியாகக் கூறப்பட்டதுபோலும். டெல்லி (Delhi)ப் பிரதேசமே பழைய அஸ்தினபுரி என்பர்.

72. வி—ரை: 'மன்னர் மன்னவன்+மின்னு.........முழங்க+மால் எதிர்கொள்வான்+எழுந்தனன்+கொடுமைகூர் சகுனி+நீ அவற்குஎதிர் செல்வது+என்னே+என்று ... ... ... தகைந்தனன்' என அந்நுவயங்கொள்க. கருமுதிர்ந்து பொழியும் பருவமேகமே பேரொலியுடனிடிக்குமாதலின், அதனை விளக்குவான் 'மின்னுமாமுகில்' என்றார். மா - கரிய. பல்லியம் - வாத்தியப் பொதுப்பெயர். 'விதங்கள்' என்றதனால் முரசு, சங்கு, கொம்பு, சின்னம், முழவம் முதலாகப் பலவகை வாத்தியங்களும் துரியோதனன் புறப்படும்போது ஒலிக்க என்க. முன் - புறப்படுமுன்னர் (அதனைக் குறிப்பிட்டு), எதிரில் எனலுமாம். எதிர்கொள்வான்: எதிர்கால வினையெச்சம். என்னே - எத்தன்மைத்து, அடாது என்றபடி; (குறிப்புவினைமுற்று). 'பாண்டவர்க்குத் தூதனுகி உரிமை வேண்டுதற்குக் காரணனுய் வருகின்ற கோபாலனை நீ அன்பினுற் சென்று எதிர்கொண்டாயானுல், உனது இச்செயல், பயத்தினுற் சென்று கண்டானென்று உனது சதுரங்க சேனுவீரரும் உனக்குப் படைத்துணையாகி முற்பட்டு நிற்கும் எல்லாவரசரும் எண்ணக்கிடக்குமாதலால், நீ கண்ணனை எதிர்கொள்ளக்கடவையல்லை' என்று கூறித் துரியோதனனது மனத்தைத் தனது வன்செய்கையால் பேதப்படுத்தித் தடுத்தான் சகுனி என்றறிக. சகுனிக்குச் சகோதரியாகிய காந்தாரியின் புதல்வனுதலின் மருகன் (=மருமகன்) முறையினன் துரியோதனன். தகைதல் - தடுத்தல்.

73. வி—ரை: 'வலம்புரித் தாரவன் என விகுதி பிரித்துக்கூட்டி அதனை எழுவாயாக முதலிற்கொண்டுரைக்க. வலம்புரித்தார் - நந்தியாவர்த்தப் பூமாலை; சீர் வலம்புரி - சிறந்த சங்கு=பாஞ்சஜன்னியம். இடம்புரிச் சங்கு ஆயிரஞ்சூழ்ந்தது வலம்புரி; வலம்புரி யாயிரஞ் சூழ்ந்தது சலஞ்சலம்; சலஞ்சலமாயிரஞ்சூழ்ந்தது பாஞ்சசன்னியம். இத்தகைய அருமை பெருமையுடைத்து ஆதலின் 'சீர் வலம்புரி' என விசேடித்தார். வலம்புரி திகிரி: உம்மைத் தொகையாதலின் இயல்பு புணர்ச்சியாயது. கோயில் - (கிருஷ்ணர் தங்கியிருத்தற்கு) விடுதியாகிய மாளிகை. காட்சி - அலங்காரங்கள். (போர்) வலம் புரி - வெற்றியை யீட்டுகின்ற; புரிதல் - விரும்புதலுமாம். நிருபர் - அரசர். மேகஞ்சூழ்ந்து செல்லுமாறு மேகமண்டலத்தின்மேலாகவுயர்ந்தகோயில் என்றது தொடர்புயர்வுநவிற்சியணி. நான்கடியிலும் முதலெழுத்தொழிந்த பல எழுத்துக்கள் ஒன்றி வந்தது திரிபெதுகையாம். வலம்புரி என்னுஞ் சொல் பலமுறை வெவ்வேறு பொருளில் மீண்டுஞ் சொல்லப்பட்டு வந்தமை சொற்பின்வருநிலையணியாம். போன் 'போலம்' என விகாரப்பட்டது புணர்ச்சி விகாரம்.

74. வி—ரை: பகீரதி-கங்கையினது (பாகீரதி என்பதன் குறுக்கல்விகாரம்). மைந்தன் - புதல்வன் (வீஷ்மர்). சுதன் - (துரோணரது) புதல்வன். விதூரான் - விதுரன் என்பதன் நீட்டல். பீஷ்மர் முதலாக எண்ணிக்



கூறப்பட்ட ஐவருள் துரோணரும், அசுவத்தாமனும், கிருபரும் அந்தணராயினும் அவரையுமுளப்படுத்தி 'வேந்தர்' என்றது அவர்கள் பீஷ்மர் திருதராட்டிரன் முதலியோரால் குடை கொடி முதலிய அரசசின்னங்களையும் அரசர்க்குரிய சிறப்பையும் பெற்று வாழ்ந்தமையால் என்க. முதன்மை வாய்ந்தவர்களை 'வேந்தர்' எனப் பிரித்து முதலிற் கூறினர். எதிர்சென்றார் - வரவேற்கச் சென்றார்.

75. வி—ரை: 'பைந்துழாய் முடிப் பரமனும்' என்னு மெழுவாய் முதலிற்கொண்டுரைக்கப்பட்டது. துழாய் - துளசி. பரமன் - (யாவரினும்) மேலானவன் (கிருஷ்ணர்). வந்து+உவந்து=வந்துவந்து; ஈற்றுக் குற்றுகரங் கெட, நின்ற மெய்யின்மேல் வருமுயிரேறிச் செய்கைபெற்றது. பரப்பி - அருள் நோக்கஞ்செய்து. 'அரசன் இல்' என்றது துரியோதனன் தாம் தங்கியிருத்தற்பொருட்டு அமைத்த மாளிகையை.

76. வி—ரை: வி+மலன் - களங்கமில்லாதவன் (கிருஷ்ணர்). நடுவண் - நடுவில். மிசை - மேல்.

77. வி—ரை: துவந்தனை - அலைவுக்கு இடமாகிய; (காரண காரியத் தொடர்ச்சியாய் ஒன்றோடொன்று கூடி) இணைந்தவாகிய என்றலும், பந்தமாகிய என்றுரைத்தலுமுண்டு. மருந்து - அமிர்தம். வந்தனை - வழிபாடு. தேவரும் அசுரரும் பாற்கடல் கடைந்த காலத்தில் விஷ்ணுவும் அவர்களோடு நின்று கடைந்து, அமிர்தம் தோன்றியகாலை மோகினி வடிவு கொண்டு அசுரரை விலக்கித் தேவர்க்கே அதனை ஈந்தருளிய கதை 3-ம் அடியிற் குறிக்கப்பட்டது. விருந்து - புதுமை; ஈண்டுக் குணவாகுபெயராய்ப் புதியராய் வந்த விருந்தினரை யுணர்த்திற்று.

78. [மூலத்தில், 1-ம் அடியில் 'கோகனகத்' என்பதைக் கோகனதக்' என்று திருத்துக].

வி—ரை: 'தோடுகொண்ட தார்விதுரன்' என்பதை முதலிற்கொள்க. தோடு - இதழ். கோடு - சங்கு. தூரிசில் - தலைவர். கோகநதம் - தாமரை, ஈண்டுச் செந்தாமரை; கிருஷ்ணரது கண், வாய் முதலிய உறுப்புக்களுக்கு உவமை அதுவேயாகலின். காடு - தொகுதி, கூட்டம். களியா - மகிழ்ந்து; 'செய்யா' என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு இறந்தகால வினையெச்சம்.

79. [மூலத்தில் முதலாமடியில் 'உள்ளினுல்' என்றிருப்பதை 'உள்ளினுன்' எனத்திருத்துக.]

வி—ரை: அளியோன்+தத்துவ அமுதை+மலர்த்தடக்கையால்+அள்ளினுன் என கண்களால் அருந்தினுன்+உணர்ந்து+உள்ளினுன்...... தள்ளினுன்' என அந்நுவயங்கொள்க. தட - பெரிய; (உரிச்சொல்).

தத்துவம் - உண்மைப்பொருள், பிரமசொரூபம். தத்துவ அமுது - அழியாததான பேரின்பம் எனினுமாம். அருந்தினன் என வாயின் றொழிலால் இலக்கணையாகக் கூறினர்; 'ஆசைதீரக் கண்டு இன்புற்றான்' என்பது கருத்து.

80. வி—ரை: 'சுருதி நீ எய்தற்கு இச்சிறு குடில் பயோததியோ, பாயலோ, ஆலிலையோ, சுருதியோ; (இது) என்ன மாதவம் செய்தது?' என்றான் (விதுரன்) என மொழிமாற்றி உரைத்தலே சிறக்கும்.

எனது புல்லிய வீடு நீ மதித்து எழுந்தருளுதற்கு பாற்கடல் முதலியன போன்ற மகிமை வாய்ந்ததோ? அன்று; அங்ஙனமாகவும் நீ எழுந்தருளியபடியால் அதற்குக்காரணமாக என்ன பெரிய தவத்தைச் செய்தது? என்று முகமன்கூறினான்என்பது கருத்து. ஓ: எதிர்மறை. பிரதான வாக்கியத்தின் செயப்படு பொருளாகிய உபவாக்கியங்களை இரண்டாக்க் கொண்டு அதற்கு இயைய வேண்டுஞ் சொற்பெய்து விரித்து உரைத்துக்கொள்க. உபவாக்கியமிரண்டில், முதலதற்கு:— எழுவாய்: சிறுகுடில். பயனிலை: பயோததியோ? பாயலோ? ஆலிலையோ? சுருதியோ? [வினாப்பயனிலை].

இரண்டாவதற்கு:— எழு: (இது). பய: செய்தது. செயப்படு பொருள்: என்னமாதவம். பிரதானவாக்கியத்திற்கு:— எழு: (விதுரன்). பய: என்றான். செய: 'முன்னமே ... ... குடில்'

பயோததி - (பயஸ் + உததி: வடசொற்றொடர்) பாற்கடல். பன்னகாதிபன் - (பந்நக + அதிப: = பந்நகாதிப:— தீர்க்கசந்தி) பாம்புகளுக்குத் தலைவன் = ஆதிசேஷன்; பந்நகம் - [பத் + ந + கம்] பாதங்களாற் செல்லாதது எனக் காரணப் பொருள்படும். பாயல் - மெத்தை. பந்நகாதிபனாகிய பாயல் என இருபெயரொட்டுப் பண்புத் தொகையாக விரிக்க. மகாப்பிரளயவெள்ளத்திலே விஷ்ணு அண்டங்களையெல்லாம் தமது வயிற்றிலடக்கிக்கொண்டு சிறு குழந்தை வடிவாகி ஆதிசேஷ அம்சமாயதோர் ஆலிலையின்மீது யோகநித்திரை செய்வர் என்பது புராணக்கதையாதலின் ஆலிலையும், வேதங்களின் உட்பொருளாகி அதனால் துதிக்கப்பட்டவராதலின் வேதங்களும் விஷ்ணுவுக்கு இருப்பிடமாகச் சொல்லப்படும்.

இனி, எனது வீடு உமது இருப்பிடமாய இந்நான்கனுள் யாதேனும் ஒன்றன் அம்சம் பொருந்தியதோ?' என அவற்றோடு ஒப்புமைதோன்ற ஐயுற்றுக்கூறியவாற்றான் ஐயுவமையணி பொருந்தியது என்றுரைப்பாருமுளர். இதற்கு ஓ; ஐயப் பொருளன. குடில் உணர்வுடைய பொருளன்றாகவும் 'நீ எழுந்தருளுதற்கு என்ன தவஞ் செய்தது' என்றது இயற்றாமரபினவற்றை இயற்றினபோலக் கூறும் இலக்கணையாகிய மரபு வழுவமைதியாம்; இத்தொடர் ஒருவர் தம்வீட்டுக்கு வந்த விருந்தினராதியர்க்குச் சொல்லும் முகமன்வார்த்தையாகிய உலகவழக்காயிருத்தலின், உலகவழக்குநவிற்சியணியாம் என்க. சுருதி - வேதம். சிறுகுடில் - சிறு குடிசை; விநயத்தால் விதுரன் தன்னைத் தாழ்த்திக்கூறியபடி யென்றறிக. சொன்ன - உம்மால் திருவாய்மலர்ந்தருளப்பட்ட; ஒருகாலத்தில் விஷ்ணு அன்னரூபியாயிருந்து வேதங்களை உபதேசித்தார் என்பது புராணவரலாறு. கருதி - மதித்து.

81. வி—ரை: '(விதுரன்) ஆறுநூறாயிர மடையர் தம்மை நோக்கினன் + அம்ம + மும்மையாகிய ......இசைந்தான் + என்றனன் + அவர்களும் விரைவுடன் சமைத்தார்' என அந்நுவயங்கொள்க. மூவுலகம்: சுவர்க்க மத்திய பாதலமென்பன; ஈரேழுலகும் இங்ஙனம் மூன்றாகச் சுருக்கிக் கூறப்படுதல் மரபு. உலகங்களை அருந்துவது மகாப் பிரளய காலமாகிய கற்பாந்த காலத்தில்; அதனை மேற்செய்யுளின் விசேடவுரையிற் காண்க. ஆறுநூறாயிரம் என்ற தொகை மிகப் பலரென்னும் பொருளில் புலவர் மரபாகிய அதிசயோக்தி வகையாற் கூறப்பட்டதாகக் கொள்ளல் சாலும். நோக்கினன்: வினையெச்சப்பொருட்டாகிய முற்று. இனி, ஆற்றுநீர்ப் பொருள்கோளாகக்கொண்டு, 'அம்ம' என்பதனை வியப்பிடைச்சொல்லாக்கி, 'அம்ம என்றனன் - இஃதென்ன ஆச்சரியமென்று கருதி' எனவும், 'நோக்கினன் - (அடிமினென்னுங் குறிப்பால்) பார்த்தனன்' என உரை கூறலும் சாலும். மடையர் - [மடை: (சமைத்தல்) பகுதி.] சமையற்றொழிலாளர். அறிவீனர்என்னும் பொருளில் மடையர் என வழங்கும்உலகவழக்குச் சொற்கு 'மடமை' என்னும் பண்புச் சொல் பகுதியாமென்க. கிருஷ்ணருக்கும் அவருடன் வந்த சேனைக்கும் விருந்திடற்கு விதுரன் இங்ஙனம் ஏவினன் என்றறிக. விருந்து - புதுமையின் பெயர் புதியவராய் வந்தவர்க்காகிப் பின் அவர்க்கிடும் உணவை ஈண்டு உணர்த்தலின், இருமடியாகுபெயராம்.

82. வி—ரை: இச்செய்யுள் குளகம். வரிசிலை - வரியப்பட்ட (கட்டுதலமைந்த) வில். கந்து - கட்டுத்தறியை. அடர்த்தல் - (மதத்தால்) முறித்தல். கரி - யானை; கரத்தை (துதிக்கையை) யுடையதெனக் காரணப் பொருள்படும். வெங்கவனம் - (வெம்மை + கவனம்) விரும்பத்தக்க வேகத்துடன். வாவும் - என்னும் பெயரெச்சம் 'வாம்' என விகாரப்பட்டது; (= தாவிப் பாயும்). யானைக்குக் கவளவுணவும், குதிரைக்குக் கொள்ளு முதலிய முதிரைவகையுணவும் அமைத்தனர் என்க. இயற்ற என்னும் வினையெச்சம் அடுத்த செய்யுளில் 'அருந்தி' என்னும் எச்சவினையைக் கொள்ள, அது 'இருந்தார்' என்னு முற்றைக்கொண்டு முடிந்தது.

83. வி—ரை: '(கண்ணபிரானும் பிறரும்) வாசம் + அமைத்த + நல் நீர் கொடு மஞ்சனம் ஆடி + உமைக்கு ... ... இயல்பு என + சமைத்த ......

அருந்தி+இருந்தார்' என அந்நுவயங்கொள்க. 'கொண்டு' என்னு மூன்றாம்வேற்றுமைச்சொல்லுருபு 'கொடு' என விகாரப்பட்டது. மஞ்சனமாடல்-ஸ்நானஞ்செய்தல். அடிசில்-சோறு. 3-ம் அடியிற் குறித்த வரலாற்றின் விரிவை 15-ம் பாவின் விசேடக்குறிப்புரையிற் காண்க. இயல்பு என - தன்மையைப்போல.

84. வி—ரை: வாசநீர் - வாசமூட்டிய நீர். சுண்ணம் - சுத்திசெய்தற்குரிய பொடி. 'வாசம்' என்னு மடையினைச் சுண்ணத்துக்குங் கொள்க. மூறை - முறைப்படி. மூறை வழங்க - பலமுறை வழங்க. அஃதாவது உண்டபின் கை முதலியன சுத்திசெய்யுங்கால், நீரும் நெய்ப்பற்றுமுதலியன நீங்கச் சுண்ணமுங்கொண்டு சுத்திசெய்தல் இயல்பாதலின், சுண்ணத்திற்கு முன்னும் பின்னும் நீர் வழங்குதலும் வாய் கொப்பளிக்கப் பலகால் வழங்குதலு முதலாயின. இனி, முறை முறை வழங்க - ஏற்போரும் வழங்குவோரும் தத்தந் தகுதிமுறைக்கேற்பவும் முன்பின் பெறும் வரிசைமுறைக்கேற்பவும் வழங்க என்றுரைப்பினுமாம். பூசறுத்தல் - சுத்திசெய்தல். கேசவன்-விஷ்ணு=கண்ணன். கேசரி - சிங்கவேறு; பிடர்மயிரை யுடையதெனக் காரணப்பொருள்படும்; (கேசரம் - பிடர்மயிர்.)

ஈண்டுப் 'பூசறுத்துழிப் பூசினார்' என்பதே நாவலர் பதிப்பு மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்புக்களிற் கைக்கொள்ளப்பட்ட பாடமாகவும், 'பூசுறுந் தொழிற் பூசினார்' எனத் திரித்துப் பாடங்கொண்டு, 'வாசநீரும் வண் சுண்ணமும் முறை முறை வழங்கப் பூசுறும் தொழில் பூசினார்' என்பதற்கு '(யாவரும் புசித்த பின்னர்) நல்ல வாசனையுடைய பனிநீரும் அழகிய வாசனைப் பொடிகளையும் அடுக்கடுக்காகக் கொடுக்க அவற்றைப் பூசவேண்டிய முறைப்படி பூசினார்கள்' என உரை கூறுவார் சிலர். அங்ஙனம் அவர் கொண்ட பாடத்தால் ஒரு பொருட்சிறப்பின்மையானும், பூசினார் சூடினார் புனைந்தார் எனப் பின்னர் மூன்று வினை கூறி அவற்றிற்குரியவாகப் பனிநீர் சுண்ணம் என இரண்டே பொருளை வழங்கினாரென்றல் தகாமையானும், அவ்விரண்டனுள்ளும் பனிநீரானது பூசுதல் முதலிய வினை மூன்றனுள் யாதொன்றற்கும் செயப்படுபொருளாதற்கு யோக்கியமில தாகையானும், உண்டு கை வாய் சுத்தஞ்செய்த பின்னர்ச் சந்தனம் முகவாசத்திரவியம் முதலியன வழங்குதலே உலக வழக்கினும் நூல் வழக்கினுங் காணப்படுகின்றதன்றிச் சூர்ணம் வழங்குதல் காணப்படாமையானும், வலிந்து வாசநீரையும் சுண்ணத்தையும் பூசுதற்குச் செயப்படுபொருளாக்கலாமென்பரேல், அங்ஙனங் கொள்ளின் உடனெண்ணப்பட்ட வினை மூன்றனுள் ஒன்றற்குச் செயப்படுபொருள் கூறி ஏனையவற்றிற்குச் செயப்படுபொருள் கூறாமை குன்றக்கூறல், ரீதிபங்கம் முதலிய குற்றங்கட்கிடனா மாகையானும், உபலக்ஷணத்தால் ஏனைய செயப்படுபொருள்களை அடக்கிச் சுருங்கக் கூறல் நோக்கமெனில் அது கருத்தாயின் "வாசநீரும் வண்சுண்ணமு மாதிய வழங்க" என்றாற் போல ஓதினும் அமையும், அங்ஙனமன்றி, மயங்கக் கூறல் முதலாய குற்றத்துட்பட இங்ஙனம் ஓதாராசிரிய ராகையானும், உண்டபின் சுத்தி செய்தலைப்பற்றி "அடுகின்றவுண்டி கறிவர்க்கமேனை யவையன் பிலாதவசுரன், இடுகின்றதேது முடிவெய்து காறு மினிதுண்டு பின்றை முனிவன், கடிகொண்ட நாரம் அனையன் கொணர்ந்து கரமுய்ப்ப நுங்கி யெழுவான், பொடிகொண்டு தன்கை மலர்நீவிமிக்க புனல்கொண்டு மண்ணல் புரியா" "மைக்காரின் மெய்யனருள்கின்ற நாரம் வாய்க்கொண்டுமிழ்ந்து பலகால், முக்காலினுங்கி வாய்பூசறுத்து" [அசுர. வில்வலன் வாதாவி வதை. 27—28] என்னுங் கந்தபுராணம் முதலிய சான்றோர் செய்யுளுட் கூறப்படுகின்ற மரபுண்மையானும் நாவலர்பதிப்பு சங்கப்பதிப்புக்களில் பூசறுத்தல் - சுத்திசெய்தலென்று உரைகொண்டு காட்டப்பட்டவாற்றானும் மேற்படி பதிப்புக்களை ஒப்ப ஈண்டுக் கொண்ட பாடமும் உரையுமே சிறத்தலை ஓர்ந்துணர்க.



85. வி—ரை: உடலுக்குத் தீங்கு புகுதாமற் காக்குங் கவசம்போல, உயிர்க்குப் பழிபாவமாதி தீங்குகள் எய்தாமற் காத்தல்பற்றி ஞானத்தைக் கவசமாக உருவகித்தார். போனகம் - போசனம். பானு-சூரியன். குடக்கு+திசை=குடதிசை (=மேற்குத்திசை). படிந்தான் - மூழ்கினான். சூரியன் மேருவை வலங்கொண்டு திரிவதாகவும், உதித்தலைக் கீழ்கடலில் தோன்றுவதாகவும், அஸ்தமித்தலை மேல்கடலில் மறைவதாகவும் கூறல் கவிமரபு. மேருவுக்கிப்பால் சஞ்சரிக்கும்போது பகலும் அப்பாற்சஞ்சரிக்கும்போது இரவும் உளவாதலியல்பு. பூமியின்கீழுள்ள நாகலோகத்தில் தேவாமிர்தமுளதாகையால் அங்குள்ள அமிர்தத்தைத் தான்சென்று உண்ணுதற்கு எண்ணியவன்போல ['உண்பொழுது நீராடியுண்டலாகிய' முறைபற்றிக்] கடலில் மூழ்கினான் என்பது கருத்து. இஃது ஏதுத்தற்றுறிப்பேற்ற அணி. அவ்வமுது: உலகறிசுட்டு.

86. வி—ரை: 'கழிப்ப+கருதி' எனவும், 'விடுத்தலின்+நிவந்து எழ+பரந்த குருதி ஆம் என+குடபால்+சிவந்தது' எனவும் மாற்றுக. சாபம் - வில். அம்பு: (சிலேடையால்) நீரையும் பாணத்தையும் உணர்த்துமாதலின், நீராகிய பாணம் எனச் சிலிஷ்டரூபகமாய்நின்றது. 'சுருதி...... விடுத்தலின்' என்பது உருவக அணி. குருதி ஆம் என - இரத்தம்போலும் என்று சொல்லும்படி. அந்திவானத்தின் இயற்கைச்சிவப்பைக் குருதிபோலும் என்றது தற்றுறிப்பேற்ற அணி. இதற்கு மேலை உருவகஅணி ஏதுவாகிய அங்கமாய்ச் சிறப்புத் தந்து சேர்ந்து நின்றது. மந்தேகர் என்னும் அசுரர் பிரமனிடம் அழியாத வரம்பெற்றுச் சூரியனை யெந்நாளும் எதிர்த்துப் போகவொட்டாமற் பொருகின்றனர் என்றும், அந்தணர் மூன்று சந்தியாகாலங்களிலும் காயத்திரி மந்திரத்துடன் விடும் அர்க்கியநீர் வச்சிராயுதம் போன்று அவர்கள்மேல் விழுந்து, சூரியனது சஞ்சாரத்துக்குத் தடை யேற்படாதபடி அவர்களைக் கொல்லுகின்றன என்றும், அவ்வசுரர்

வரபலத்தால் மீளவும் உயிர்ப்பர் என்றும் நூல்கள் கூறும். 'குருதியாம் என' என்பதில் 'ஆம்' அசையெனவும். 'என' போல என்னும் பொருட்டாகிய தற்குறிப்பணியுருபெனவும் கொள்ளினும் அமையும்.

87. [மூலத்தில் 4-ம் அடியில், 'துகிற்காடு' என்பதைத் 'துகிர்க்காடு' எனவும், பொழிப்புரையின் 5-ம் வரி யிறுதியில், 'கிரணங்களை' என்பதைக் 'கிரணங்களாகிய கைகளை' எனவும் திருத்துக ]

வி—ரை: 'தரங்கவாரிதிப்புறத்து+கரைதொறும் வளர்துகிர்க்காடு+துரங்கம் ஏழ் உடை கடவுளை+உடன்ற மங்தேகர்+எதிர்மலைந்த......... படைகளால்+நிரை நிரை துணித்த காங்கள் போன்றன' என அந்நுவயங் கொள்க. இனி, 'வாரிதிப் புறத்து எதிர்மலைந்த' என நின்றுங்கே கொண்டு, மலைதற்கு அடையாக்கலுமாம். வாரிதிப்புறத்து - கடலின் மேற்பக்கத்தில் (உயர்ந்து); நீர்த்திரள் மிகத் தங்கியிருக்கின்ற காரணத்தால் கடல் 'வாரிதி' எனப் பெயர் பெற்றது. மலைந்த - போர்செய்த. உடன்ற - பகைத்த. துரங்கம் - குதிரை. காம் - கிரணம், கை என்னுமிருபொருளுக்குமுரிய பெயராய் ஆயிரங் 'கிரணங்களாகிய கை' எனப் பொருள்படுதலின், சிலிஷ்டரூபகம் (சிலேடையுடன் கூடிய உருவக அணி). துகிர் - பவளம். காடு - தொகுதி. 'துகிர்க்காடு துணித்தகரங்கள் போன்றன' என்பது பொருள் தற்குறிப்பேற்ற அணி.

88. [பொழிப்புரையின் 3-ம் வரியில் 'உறைத்து எழுகின்ற வெம்மையாகிய' எனத் திருத்துக.]

வி—ரை: 'தாமரை அடவி+நீர் அரமகளிர்......படாவகை+புகல் பகல் எலாம்+நீதியின்+விரித்து...போன்றன' என அந்நுவயங்கொள்க. இனி, நீதியின் புகல் - நீதிகாரணத்தால் விரும்பப்படுகின்ற' எனிற் பொருள் சிறக்கும்; இரவினும் பகல் புண்ணியகாலமாதலை விளக்குவது இப்பொருள். நீர் அரமகளிர் - நீரில்வாழும் ஒருவகைத் தெய்வமகளிர். மகளிர் விரித்து, சுருக்கிய, ஆதபத்திரம் என முடிவுகொள்க. உறைத்து எழும் - உக்கிரத்துடன் படுகின்ற. 'பகலெல்லாம் விரித்து' என முன்னர் வந்ததனால், பின்னர் 'போதுபுக்கது' என்பதற்கு அப்பகற்காலம் கழிந்துவிட்டது' என்றுரைப்பினுமாம். இனம்பட - கூட்டமாக, ஒருங்கே. ஆதபத்திரம் - குடை; (ஆதபம் - வெயிலிலிருந்து. த்ரம்-பாதுகாப்பது). அடவி - காடு. வெண்டாமரை வெண்பட்டுக்குடைபோலவும், செந்தாமரை செம்பட்டுக் குடைபோலவும் காணப்பட்டன என்றவாறு. இதுவும் பொருள் தற்குறிப்பேற்ற அணி; தாமரை மலர்களின் விரிதல் குவிதலாகிய இயற்கைத் தன்மையைப் புலவன் மறைத்து அவற்றின்மேல் தனது கற்பித எண்ணத்தை ஏற்றிக் 'குடைவிரித்ததையும் சுருக்கியதையும் போன்றன' என (தாமரைமலரைக் குடையாகிய பொருளாகச் சம்பாவனை பண்ணி)க் கூறுதலின் என்க,



89. வி—ரை: 'வட்டம்+நகர்+(பிரதோஷகாலத்திலே) மங்கலமுழவு வெண்சங்கொடு+கலந்து+கறங்க......குவிந்ததுகண்டு(வண்டொலியோடு) மலர்ந்த தாமரைவாவிபோன்றது' என அந்நுவயங் கொள்க. பிரதோஷ காலம்-இரவின் ஆரம்பவேளை. கறங்க-ஒலித்தலால்; இவ்வொலி தாமரைத் தடாகத்திலுள்ள பலவகைப் பறவை ஒலியோடு ஒத்ததாமென்க. மிலைந்த-சூடிய; வனிதையர் - பெண்கள், மெய்விளக்கு - உண்மையான (நெய்த்) தீபங்கள்; "தணிமலர்த் திருமகள் தயங்கு மாளிகை, இணரொளி பரப்பி நின் றிருள்துரப்பன, திணிசுடர் நெய்யுடைத் தீ விளக்கமோ, மணிவிளக் கல்லன மகளிர்மேனியே" எனக் கம்பராமாயணத்து இரத்தினதீபங்களும், மகளிர்மேனியும் இருள் துரப்பனவாகச் சொல்லப்பட்டமையின், ஈண்டு நெய்விளக்கை மெய்விளக்கென்றூர். இனி, 'மெய்விளக்கு - தமது மேனி போல் ஒளிருந் தீபம்' என உரைப்பினும் அமையும். தடம் - தடாகம். வாவி - பொய்கை. தடாகம் சிறிய நீர்நிலையும், வாவி பெரிய நீர் நிலையுமாமென்க. மலர்ந்த - (தடங்களுக்கு மாறுக) மலர்ந்த. இச்செய்யுள் தற்குறிப்பேற்ற அணி பொருந்தியதாம்.

90. வி—ரை: உரகம்-பாம்புகளுக்கு [உரம்-மார்பினுல். கம்-செல்வது எனக் காரணப்பொருள்படும்] புங்கவன் - தலைவன் (ஆதிசேஷன்): சேஷனது ஆயிரந் தலைகளினும் விளங்கும் நாகரத்தினங்கள்போல் பல தீபங்கள் ஏந்தப்பட என்றவாறு. அரி - சிங்கம், புரவலன் - அரசன் (கிருஷ்ணர்.)

91. [மூலத்தில், 2-ம் அடியிறுதியில் 'தவழ்ந்த' என்பதைத் 'தவழ்ந்து' என மாற்றுக.]

வி—ரை: 'மா+கங்கை+நதி கால் வழி கருணையங்கடலே+தனி+நீ+பொங்கு அரா அணை......தவழ்ந்து+இங்கு நடந்த ஆறு உரைத்தருள் என்றான்' என மாற்றியுரைக்கப்பட்டது. இங்ஙனமன்றி, 'தவழ்ந்த' எனப் பெயரெச்சமாகவே பாடங்கொண்டு 'கருணையங்கடலே' என்னும் விளிக்கு அடையாக்கி, யாற்றுநீர்ப்பொருள்கோளாகக் கொண்டு உரைத்தலே சிறக்கும். போந்த - வந்த, அவதரித்த; (புகுந்த என்பதன் மரூஉ என்பர்). பொதுவர் - இடையர். பாடி - சேரி, (இடையரூர்). வாமனராய்ச் சென்று மகாபலியிடத்தே மூவடிமண் பெற்றபின்பு கொண்டருளிய நெடிய வடிவமாகிய திரிவிக்கிரமாவதாரத்தில் மேலுலகளந்த தாள் அண்டத்தைத் துளைத்தவழி கங்கை வருதலால், 'கங்கை மாநதி காலினுல் வழிந்து பெருகப்பெற்ற கருணைக் கடலே' என்றூர். இது அளகநந்தை என்னும் பெயருடையதாய் மேருவில் விழுந்து கீழ்கடலிற்சேர்ந்தது. இச்சரிதம் வாமன கூர்ம புராணங்களிற் காண்க. பகீரதன்பொருட்டு வந்த கங்கை வராக கற்பத்தில் பிரமலோகத்தினின்றும் வந்ததாகலின், ஈண்டுக் கூறியகங்கை பாகீரதியன்றேன அறிக. நடந்த ஆறு - வந்த காரணம். முதல் மூன்றடி

யால் கண்ணபிரானைப் புகழ்ந்து கூறியபடி. கண்ணனைக் கடலென்று உருவகித்தமைக்கு ஏற்பக் 'கங்கைமாநதி கால்வழி' என்று அடைகொடுத்தோதிய சமத்காரம் (சாதுரியம்) பாராட்டத்தக்கது; கால் — வாய்க்கால் என்னும் பொருளும் தொனிப்பிக்க வல்ல சொல்லாகும்.

92. வி—ரை: காட்டுவந்தென்புழி வந்து: சென்று என்னும் பொருளில் வந்த இடவழுவமைதிச் சொல்; "தருசொல் வருசொல் லாயிரு கிளவியுந், தன்மை முன்னிலை யாயீரிடத்த" என்னுந் தொல்காப்பியச் சூத்திர வுரையா லறிக. இனி, 'காட்டு + உவந்து' எனப் பதச்சேதஞ் செய்தற்கும் ஏற்புடைமை யறிக. தொடை - மாலை; (தொடு + ஐ) ஐ என்ற செயப்படுபொருட்பெயர் விகுதி பெற்ற சொல்; (=தொடுக்கப்பட்டது). குருநாடானது வடகுருதேசம், தென்குருதேசம் என இரு பிரிவாக இருந்ததென்றும், இந்திரப்பிரஸ்தத்தினைத் தலைநகராகக்கொண்டு தென்குரு நாட்டைப் பாண்டவர்கள் ஆண்டனர் என்றும் கூறுவர்.

93. வி—ரை: வழக்கினல் - உமது நியாயத்தோடு கூடிய வார்த்தையினல் எனினும், 'தழக்கின்' என்பதனை வேற்றுமைத் தொகைக்கண் 'இன்' சாரியை தோன்றிய சொல்லாகக்கொண்டு 'பேரொலியுடன்' என்றுரைப்பினுமாம். உழக்குதல் - கலக்குதல்.

94. வி—ரை: உகண்டு எழ - துள்ளி மேலெழுதலால்; காரணப் பொருட்டாய் இறந்த காலங்காட்டிய செயவென் வாய்பாட்டு வினையெச்சம். அளி - வண்டு. முதலீரடியினடைமொழியால் 'பாண்டவர்கள்போர்க்கு எழுவாராயின் துரியோதனுதியர் தோற்பர்' என்பது உள்ளுறைப் பொருளாய்த் தொனித்தல் காண்க. வாய் - ஆயுதம்பட்ட வெட்டுவாயிலிருந்து. இனி, மூளையும் (அநீதிபேசிய) வாயும் சிதற என்றுரைப்பினுமமையும்.

96 வி—ரை: காவலர் - ஊர்காப்பாளராது. துடி - ஒரு வகைப் பறை. மன்றல் - வாசனை. நாள் மலர்-அன்றலர்ந்த பூ, புதிய பூ. துயிலுதற்குரிய காலம் வந்தமையைத் துடி முழக்கத்தால் அறிவித்தல் வழக்கம். கோடுமை - கர்ணகடூரமான சப்தத்தையுடைமை.

97. [மூலத்தில், 2-ம் அடியில் 'பரப்பு' என்பதைப் 'பரப்பி' எனவும், 73-ம் பக்கம் 12-ம் வரியில், 'எதிர்மறை' என்பதை 'அசைநிலை' எனவும் திருத்துக.]

வி—ரை: களிகோள் தோள் விலை - (பொருளீவார் பலரும் தழுவி) மகிழ்ச்சிகொள்ளுதற்குக் கருவியாகிய தமது தோள்களாலாகும் இன்பத்தை விற்றல்புரியும்; (தோள்: கருவியாகுபெயராய் இன்பத்தை யுணர்த்திற்று). கணிகை - பரத்தை, வேசை. கங்குல்-இரவு. முதல் மூன்றடியும் சிலேடையினல் உவமேயமாகிய இரவிற்கும் உவமானமாகிய பரத்தைக்கும் ஏற்ப இரு பொருளுணர்த்தி அவ்விரண்டிற்கும் அடையாய்நின்றன. ஆகையால்,



இது சிலேடையுவமையணியாதும். பொழிப்புரையில் இரவுக்கு அடையாதற்குரிய பொருள் உரைக்கப்பட்டது. இனி, அவ்வடையாகிய தொடர்கள் உவமானமாகிய பரத்தைக்கு உரியவாங்கால் உணர்த்தும் பொருள் வருமாறு:— பூரணசந்திரன்போன்ற முகத்திடத்தே விளங்குகின்ற செவ்வாம்பல் மலர்போன்ற வாயைத் திறந்து, முல்லைமலர்போன்ற ஒளிபொருந்திய புன்முறுவலைச் செய்து, செந்தாமரை மலர்போன்ற கைகளை (ப் பொருள் கொடுக்கும்) வரையில் குவித்து அஞ்சலி செய்து அன்புடையராய் நீங்காது உடனுறைபவராகிய கணிகைமாதரை என்பது. அளி: சிலேடைவகையாலிருபொருளுணர்த்திற்று. தளவம் - முல்லை; குமுதம் - ஆம்பல்; இரண்டும் பொருளாகுபெயராய் மலர்களை யுணர்த்தின. சததளம் - தாமரை (சதம் - நூறாகிய [=மிகப் பலவாகிய.] தளம் - இதழ்களை யுடையது; பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகிய காரணப் பெயர்) இனி, உவமேயமாகிய இரவுக்கு அடையாக்குங்கால் பொழிப்புரையிற் கூறப்பட்டவாறேயன்றிப் பிறவாறும் பொருளுரைக்கலாம். அது வருமாறு:—சந்திரமண்டலத்துக்கு எதிரிலே மலர்ந்தொளிருகின்ற ஆம்பற்போதின் மேற் (நுதிப்) பக்கத்தை [அல்லது ஆம்பலை வாய்போல] மலரச்செய்து, முல்லைமலர்களின் ஒள்ளிய பிரகாசத்தைத் தோற்றுவித்து, தாமரைமலரினிடத்தை (தனக்குரிய கால எல்லை) அளவும் குவியச்செய்து, அவ்வண்டுகளோடும் நீங்காதிருக்கின்ற இரவு என்பது. இரவில் மலர்ந்த முல்லை ஆம்பல் முதலிய மலர்களில் வண்டு மொய்க்குமாதலின், இரவு வண்டோடு கூடியிருந்ததென்க. இப்பொருளுக்கு: நகை - பிரகாசம். கை - இடம்.

98. வி—ரை: ஆர் - நிறைந்த. அண்டம் - ஈண்டு அண்டகடாகம் (அண்டகோளத்தின் சுவர்). படாம் - ஈண்டுப் படாம் வீட்டைக் கருவியாகுபெயரா லுணர்த்தியதாகக் கொண்டு, உலகைக் கவிந்து மூடிய இருளானது படாம் வீட்டை ஒத்திருந்ததென்றல் சிறக்கும். 'ஒருபுடை' என்னும் அடையைப் படாத்திற்குங் கூட்டி ஒருபக்கம் (கிழக்குத் திசையில்) பீறியது (கிழிந்தது) போல என்க; படம் (=ஆடை) என்னும் வடசொல்லது திரிபாகும். (கீழ்த்திசையில்) இருள் நீங்கி வெளுத்தமைக்கு முதலீரடியால் ஒப்புக் கூறினர். வடவை - பெண்குதிரை. அதன் முகத்திலுள்ள தீ யென்றது வடவாமுகாக்கினியை. அது கடலின் நடுவிலிருந்து ஆற்றுநீர் மழைநீர் முதலியவற்றல் அக்கடல்நீர் பெருகி மிகாதவாறு அதனை உறுஞ்சுவதாகவும், யுகமுடிவில் அங்குநின்றெழுந்து உலகை எரித்தழிப்பதாகவும் நூல்கள் கூறும். மேல் + கிளர்ந்தது ஆம் என - கடலின் மேலே சுவாலித்து எழுந்ததுபோலும் என்று சொல்லும்படி. பின்னீரடியால் சூரியனது செங்கிரணம் சூரியோதயத்தின் முன்னதாகத் தோற்றியபடியைக் கூறினர். 'ஆம்' என்னுஞ் சொல்லை பீறியது ஆம் எனப் பிறுண்டுங் கூட்

டிப் 'போலும்' எனப் பொருளுரைக்க. இச்செய்யுளால் சூரியோதயத்தின் முன்னர் நிகழ்வதாகிய அருணோதயத்தைத் தற்குறிப்பேற்ற அணி பொருந்த வருணித்தார் கவி.

99. வி—ரை: இக் கவி சூரியோதய வருணனை. வாள் - கொலைத் தொழிலையுடைய. அகில நாயகன் - (உலகம் உயிர்கள் ஆகிய) எல்லா வற்றிற்கும் தலைவர் (கிருஷ்ணர்). ஒருதனி - துணையின்றித் தனிமையாக என்று ஆற்றொழுக்காகக் கொண்டு உரைத்தல் சிறக்கும்; என்றது தமைய னாகிய பலராமன், தம்பியாகிய சாத்தகி, மகன் பேரன்மாராகிய பிரத்தி யும்ந அநிருத்தர்கள், பாண்டவர்கள் ஆகியவருள் ஒருவரும் உடன்வாராமை யைக் குறித்தது; ஒரு பொருட் பன்மொழியாகிய இச்சொல் 'தன்னந்தனி யே' என்ற பொருளைக் குறித்தது என்றறிக. பகைக்குமியல்புடைய துரி யோதனனிடம் தனியே தூது செல்வதனால் அவரது சக்கராயுதமாகிய சுதரிசனம் தான் உதவி செய்வதற்கு அவருக்கு அருகிற் செல்லுதற்பொருட் டுப் பாற்கடலைவிட்டு எழுந்ததைப்போல உதித்தான் சூரியன் என்றது தற் குறிப்பேற்றஅணி. மகரம் - சுறாமீன். வாரிதி-ஈண்டுப் பாற்கடல். பாற்கட லிற் சயனித்திருந்த விஷ்ணு கண்ணனாக அவதரித்தமையால், ஆங்கு அவர்க்கு ஆயுதமாயிருந்த சக்கராயுதம் இப்போது ஈண்டிவரை யடைதற்கு அவ்விடத்தை விட்டு எழுந்தாற்போல என ஒப்பிட்டுக் கற்பித்தபடி. மா - பெருமைபொருந்திய. இரவி - சூரியன்.

100. [மூலத்தில், 3-ம் அடியில் 'நீதி யாலும் வகை' என்பதை 'நீதி யாறு வகை' எனவும், 74-ம் பக்கம் 5-ம் வரியில் உள்ள இலக்கங்கள் மூன்ற னிறுதியிலும்தனித்தனி ஒவ்வொரு சுன் சேர்த்தும் திருத்திக்கொள்க.]

வி—ரை: சோதி - ஒளி; என்றது தாம் உறங்காநிற்கவும் உலகங் காக் கின்ற அரசாது கடவுட்டன்மை; வீஷ்மருக்கு அடையாய் நின்றது. இனி, மதிப்பு (புகழ்) எனக் கொண்டு, நதிக்கு அடையாக்கலுமாம். வேதம் ஒருவராலும் ஆக்கப்படாமல் அநாதியாயுள்ளது என்பதுபற்றிப் "பழைய சுருதி" என்றார். சுருதி - வேதங்கள். ஆதியாக - முதலாக; துரோண னும் முதலாகிய வேந்தர் எனத் துரோணரையும் வேந்தருள் வைத்தெண் ணியதற்குக் காரணம் 74 - ம் கவியின் விசேடவுரையி லுரைக்கப்பட்டது; அதனை ஈண்டுக்கொள்க. ஐந்துபத்து - ஐம்பது. ஆறு வகை ஐம்பது - ஆறு கூட்டமாகிய ஐம்பது=முந்நூறு. முந்நூற்றொடு அறுபத்தொரு ஆயி ரம் - முந்நூற்றறுபத்தோராயிரம்=ஈண்டு இத்தொகைச் சொல் மிகப்பலர் என்னும் பொருட்டாய் நின்றது. நிருபர்- அரசர். தீது இலாத திறல்-குற்ற மில்லாத வலிமை; என்றது தோல்வி யெய்தாத வலிமை என்றவாறு. அக்ஷௌஹிணி என்னும் வடசொல் அக்குரோணி எனத் திரிந்தது; "இரு பத்தோ ராயிரத்தெண் ணூற்றெழுப தியற்றேர்கள் யானை யஃதே, பொரு



வற்ற பரிகளறு பத்தையா யிரத்தறுநூற் றொருபான் போர்செய், திருமிக் கோ ரிலக்கமுட னொன்பதினா யிரத்துமுந்நூற் றைம்பான் சேர, நிருமித்த வகைநான்கு மக்ரோணி யென்றொருபேர் நிகழு மன்றே" என்னுஞ் செய்யு ளால் அக்குரோணி என்னுஞ் சேனைத் தொகையை அறிக. இனி 'நீதி ஆறுவகை - அறநிலையறம், மறநிலையறம், அறநிலைப்பொருள், மறநிலைப் பொருள், அறநிலை யின்பம், மறநிலையின்பம் என்னும் அரசியல் ஆறனை யும், [அல்லது] படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு அரண் என்னும் அரச நீதி இனிது நடத்தற்கு ஏதுவாகிய ஆறு அங்கங்களையும் உடைய' எனப் பொருள் கொள்ளினும் அமையும். அதற்கு, 'ஐந்து பத்தொ டறுபத்தொ ராயிரவர் நிருபர்—ஒரு லட்சத்துப் பதினோராயிரம் அரசர்' எனக் கொள்க.

இது முதல் 140-ம் செய்யுள் முடிய உள்ளவை எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

101. வி—ரை: தொக்க - கற்றையாயுள்ள. ஆலவட்டம் - (வட்ட வடிவான) பேராலவட்டம். பரிசை - கேடகம், அது எதிரிகளின் அம்பு வாள் வெட்டு முதலியவை தம்மேல் ஊறுபடுத்தாதபடி தடுத்தற்குரிய கருவியாம். துகில் - மங்களகரமாகக் கையில் வஸ்திரத்தைக் கொய்து [அரசாதியோர்க்கு] எதிரே விசிறிப் பணிமாறற் குரியது; இனி, விருதுக் கொடிச்சீலை என்பாருமுளர். களாசி - தம்பலமுமிழும் படிக்கம்; "பொன் றரை யுழியின் மணிசொரிந் தென்னப் புகட்டுறு தம்பலக் களாசி" என்றார் கந்தபுராணத்தும் [சூரன் அரசிருக்கை —13] உலாவிவரு - தன்னுடன் கூடப் பணிசெய்து உலாவிவருகின்ற. நிருபர்தம் — 6 - ம் வேற்றுமைத் தொகைக்கண் "தம்" என்னும் சாரியை தோன்றிப் புணர்ந்தது. பிரான்- தலைவன்.

102. வி—ரை: உத்திரம் - வளையாகிய மரம். பதுமராகம் - ஒரு வகை மாணிக்க (சிவப்புக்கல்) ரத்தினம். துலா - கைம்மரங்களை. மிசை பரப்பி - உத்திரங்களின் மேலே பரப்பி. முத்துக்களையும் வயிடூரியங்களை யும் துலாமரங்களின் மேல் மச்சுப் பலகையாகத் தைத்தனர் என்று கொள் ளல் சாலும். கோமளம் - அழகு. அரோ - அசைநிலை.

103. வி—ரை: முட்ட - (ஒன்றோடொன்று) நெருங்க. முத்துப் பந்தரிட்டு அதன்கீழ்ச் சிங்காசனமிடப்பட்டது என்க. நகைத்த - பற்கள் விளங்க அமைக்கப்பட்ட. அரி - சிங்கம். வாசவன் - இந்திரன். கோல்: ஐயப்பொருட்டாகிய இடைச்சொல். பட்டவர்த்தனர் - பட்டந் தரித்த அரசர். மகுடவர்த்தனர் - பரம்பரையாகக் கிரீடந் தரித்து ஆளும் அரசர். ஒரு கோடி கிராமம் ஆள்பவன் மகுடவர்த்தனன் என்றும், அவனுக்கு மேற் பட்டவன் பட்டவர்த்தனன் என்றுங் கூறுவர். தவிசு - ஆசனம்.

104. வி—ரை: முறைமைமாறினான் என்பதை முதலிற்கொண்டு உரைக்கப்பட்டது. காவல் - தேசத்தைப் பரிபாலித்தல். ஓவல் - (உபசரியாது) ஒழிதல். யது குலமாகிய க்ஷத்திரிய வம்சத்துற்பவித்த வசுதேவனுக்கும் தேவகிக்கும் மகனாகப் பிறந்த கிருஷ்ணர், பிறந்த உடனே கஞ்சனுக்குப் பயந்த அவர்களால் கோகுலம் என்னும் இடையர்சேரியில் வாழ்ந்த நந்தகோபன் என்ற இடையர்தலைவன் மனையில் கொண்டுபோய் விடப்பட்டு அவனாலும் அவன் மனைவி யசோதையாலும் வளர்க்கப்பட்டு வளர்ந்தமை பற்றி அவரை 'இடையன்' என வெகுளிபற்றி இழித்துக் கூறினானென்க.

105. வி—ரை: 'ஒளி தங்கு + தந்தவண்ணனுடன் வந்த அண்ணல் + இசைகொள் வேயினான் + கண் துயிலுணர்ந்த பின் + காலையில் பல கடன் கழித்து + கந்த வண்ண மலர்கொண்டு கை தொழுது + இந்த வண்ணம் ... ... ஏயினான்' என மொழிமாற்றி யுரைக்கப்பட்டது. அண்ணல் - அரசர் (கிருஷ்ணர்). இனி, 'ஒளி தங்கு கண் துயில்—அறி துயில், (யோக நித்திரை) [ஒளி-அறிவு]' எனினுமாம். உணர்தல் - விழித்தல். கந்தம் - வாசனை. கிருஷ்ணர் உபமந்நியுமகாமுனிவரிடத்தே சிவதீக்ஷை பெற்றுச் சிவலிங்க பூசை செய்தவராதலின், "கந்த வண்ண மலர்கொண்டு கை தொழுது" என்றார்; இதனை உபதேசகாண்டம் முதலிய நூல்களானுணர்க. வேய் - வேய்ங்குழல் (புல்லாங்குழல்); கருவியாகுபெயர்.

106. [மூலத்தில் 3-ம் அடியில் 'அளன்று' என்பதை 'அழன்று' எனத் திருத்துக.] வி—ரை: மோய் - செறிந்த எனலுமாம். முகில் - (உவமையாகுபெயர்) கிருஷ்ணர்.

107. வி—ரை: நகம் - மலை. காளம் - கருமை. அகம் - வீடு. நென்னல் - நேற்று. இடை - ஏழனுருபு. பொன் நகம் - மேருமலை. இவ்வடையைப் புயத்துக்கேயன்றி இல்லத்திற்குக் கொள்ளலும் தகும். கோல் - அசை. பன்னகம் - பாம்பு (கொடிக்கு ஆகுபெயர்). கோ - அரசன். என + உரை பகர என இயைத்துரைக்க. முகம் கோடாது - இன்முகம் இன்சொல் முதலாகிய முகமன் செய்தலின்றி என்றபடி. இனி, பொன் அகம் கோள் இல் - இலக்குமி தனக்கு இடமாகக்கொண்டு வாசஞ் செய்யும் மாளிகை எனலுமாம்.

108. வி—ரை: விறல் - வெற்றியைத் தரும். எதிர்வந்து விளம்பினான் - எதிர்கொண்டு (விருந்தாகத் தன் வீட்டுக்கு வரும்படி) கூறியழைத்தான். பஞ்சவர் - ஐவர் (தொகைக் குறிப்புமொழி). அடிசில் - சோறு, உணவு. "மின்னின் ... ... நெடும்படை" என்னும் அடையால் விதுரனது விற்படையை நினைத்தன்றோ அவனிடஞ்சென்றது என்னுங் கருத்துத் தொனிக்கின்றமை காண்க. யான் வந்த காரியம் நிறைவேறுதொழியின், உன்னோடு வெறுப்பு உளதாம் என்பார் "வெறுக்க எண்ணுவது" என்றார்.



109. வி—ரை: பதாகை - கொடி. பதாகையாய்: ஈறு திரிந்த விளிப்பெயர். துரியோதனன் வீட்டிலுண்ணாமைக்கு ஏதுக்கூறவந்தவர்க்கு 3-ம் அடி விஷயமே உரைப்பது அமையுமாயினும் இனமாக ஏனையவற்றையும் உடன் கூறியது 'நீயும் உன்னைச் சேர்ந்த சகுனி முதலிய தீயவர்களுமே இவ்வகைப் பெரும் பாவங்களைக் கூசாது புரிபவர், யான் அப்படிப்பட்டவன் அல்லேன்' எனச் சுட்டாமற் சுட்டிக் கூறுதற்கென்றறிக. உன் அமைச்சர்கள் உனக்கு நல்லன கூறாது உன் அரசை அழிப்பவரென்றும், நீ வீஷ்மர், துரோணர், விதுரர் முதலிய பெரியோரது உறுதிமொழிகளைக் கேளாமல் மறுத்து நடப்பவன் என்றும், சித்திரசேனன் உம்மைக் கட்டினது முதலிய ஆபத்துக்களில் உமக்குப் பாண்டவர் செய்த நன்றியை மறந்து நடப்பவர் நீவிர் என்றும், பீஷ்மர் முதலிய பெரியோர் உன் கட்டளைப்படி நடப்பது உன் செயலெல்லாம் நீதியானவை என்பதனாலன்று, மற்றுச் செஞ்சோற்றுக் கடன்கழித்தற் பொருட்டேயாம் என்றும் இன்னோரன்னவற்றைக் குறிப்பாலுணர்த்தியவாறுமாயிற்று. உலகங்கள் அழியுங் கற்பாந்த காலம்வரையும் நரகில் அழுந்துவர் என்பதாம்.

110. வி—ரை: 'ஒப்பு இலா நாத நாயகன் + சீத நாள் மலர் மடந்தை கேள்வன்' என ஒரு பொருள்மேற் பல பெயராக இயைத்தும், தெரிய + செப்பவும் என மொழிமாற்றியும் உரைக்கப்பட்டது. (வேதம்) நாறுதல் - தோன்றுதல்; என்றது உந்திக்கமலத்தில் தோன்றிய பிரமனது நான்கு முகங்களினும் வேதங்கள் தோன்றினமையை.

111. வி—ரை: 'செகத்தில் கோது இலாத குருகுலமகீப' என்னும் விளியை முதலிற்கொண்டு உரைக்கப்பட்டது. இவ்விளியடை, குற்றமற்ற உனது உயர்குடிப்பிறப்பிற்கு ஏற்ப நீயும் உனது வாக்குத்தவறாமல் ஒழுகல்வேண்டி அவருரிமை கொடுத்தலே கடன் என்பதைக் குறிப்பித்து நின்றதறிக. சொன்ன சொல் - (சூதாடித் தோற்ற நாளில்) நீ நிபந்தனையாகச் சொன்ன சொல். தீது இலாவகை - ஊறுபாடு இல்லாமல்; இனி, 'அந்நிபந்தனைக்குப் பழுது வாராமல்' என்று உரைத்து, இதனால் அஞ்ஞாதவாச முடித்தமை குறிக்கப்பட்டதாகக் கொள்ளலும் சாலும்; அஞ்ஞாதவாசகாலத்தினெல்லையுள் பிறர் 'இவர் பாண்டவர்' என்று அறிய ஏற்படுமாயின், அது மீண்டும் வனவாசஞ் செய்தற்குக் காரணமாய்ப் பாண்டவர்க்குத் தீதாமாகலின் என்க. 'நின்துணைவர் நீ சொன்ன சொல்லும் வழுவாதுபோய்......கழித்துவந்தனர்; நீ உரிமை கொடாது மறுத்தியேல், நீயே சொன்ன சொல் வழுவினாய் ஆகுவை' என எச்சரிக்கை செய்தபடியும் தொனித்தல் காண்க. ஏதிலார்கள் என - அயலார்கள்

போல: இராஜராஜனாகிய நீ செல்வவாழ்க்கையிலிருக்கும்போது உன் துணைவர் இங்ஙனம் காட்டில் திரிந்தமை உனக்கே இழிவு பயப்பதை நீ அறியாது மகிழ்ந்தாயாதற்குக் காரணம் அவர்களிடம் சகோதரத்துவ உரிமையன்பு பாராட்டாமல் அவர்களை அயலார் போலப் பாவித்தமையே காரணம் என்ற கருத்தை விளக்குவார் 'ஏதிலார்போல' என்றார். இனி, இச்சொற்குப் பகைவர், ஏழைகள் என்னும் பொருள்களு முண்டாமாதலின், அப்பொருள்களை ஈண்டுக் கொள்ளினும் சாலும்; இவற்றால், பகைவராயுள்ளார் நாடிழந்து காடுற்று வருந்துதல் அமையும், உமக்கு ஒரு தீங்கு மிழையாத இவர்கள் அன்னராதல் தகாதென்பதும், 'சம்ராட்' பட்டம் பெற்று நீதிதவறாமல் யாவர்க்கும் இதமே புரிந்தாண்ட பெருவாழ்வு வாழ்ந்தவர் ஏழைபோல் காட்டில் துன்புற்று வாழ்தலரிது, அதனையுமுடித்து வந்தமை நல்லோர் யாவர்க்கும் இவர்மீது பரிதாபமும் உன்மீது வெறுப்பும் விளைக்கும் செயலாமென்பதும் தொனிக்குமென்றறிக.

112. வி—ரை: 'சோல் அவாவு' எனப் பதச்சேதங்கொண்டு 'புகழை விரும்புகின்ற' என்றுரைத்து, அடையாக்கினுமாம். துவசம் - கொடி. வல்ல ஆறு - தக்க முறைமையினால். கெழுமி - உறவு பொருந்தி. அல்ல - (அழைத்தலும் நாடளித்தலும் கெழுமி வாழ்தலும்) செய்யத்தக்கன அல்ல; (அஃறிணைப்பன்மைக் குறிப்பு முற்று). ஆம்: அசை. மறுத்தல் உனது தருமத்தையும் வீரத்தையும் புகழையும் அழிக்குமென்றபடி; பின்னதாகிய 'அல்ல' என்பது ஒருமையிற் பன்மைச்சொல் மயங்கி வந்த வழுவமைதி. ஏ: தேற்றம்.

113. வி—ரை: 'ஐவரும், யாவும்' என்னும் உம்மைகள் முற்றும்மை. மீளவும் கவர - (முன் ஆண்டதுபோல) மீளவும் பெற்று ஆள. விரகின் - உபாயத்தால்; கொடாவிடில் ஐவர் பொருது வெல்லுதல் நிச்சயம் என்று நீ வெருட்டுதலால் என்றபடி. உறுதி - நன்மை பயப்பது.

114. வி—ரை: திகைத்தல் - மயங்குதல். என் - (எனக்கு விளையும் தீங்கு) யாது, ஒன்றுமில்லை என்றபடி, வேய்தல் - தலையிற் சூடுதல்; போர் குறித்தோர் தும்பைப்பூமாலை சூடுதல் மரபாதலின், அதனைக் குறித்தது. மிகைத்து - (தமது வீரத்தை) மிகுத்து.

115. வி—ரை: மதலை - குமாரன். பார் - உரியபாகமாகிய குரு நாட்டின் பகுதி. அவனி பாதி - (உரிய) பூமியிற் பாதி; என்றது பாண்டவர் முன் ஆண்ட நாட்டிற் பாதியை. 'உருமெனச் சினத்தினோடு கழறவும்' என்ற உவமையும் துரியோதனனது கொடுமைமிகுதியோடு அவ்வார்த்தையைக் கேட்ட கண்ணன் சமாதான முறையால் மீளக் கேட்டற்கு இடமின்மையையும் உணர்த்தியன. உற்று இரந்தனன் - மிக வேண்டிக்கொண்டார்; சமாதானத்தையே விரும்பிய தருமாது எண்ணத்தை



யும் அது முடிக்க இசைந்துவந்த தமது தூதலட்சணத்தையும் சபையார் யாவர்க்கும் வெளிப்படுத்த இங்ஙனம் இரந்தார். ஐந்தூர் இன்ன என்பதை 45-ம் செய்யுளின் விசேடக்குறிப்புரையிற் காண்க.

116. வி—ரை: மாடு - பக்கம். அளிகுலம் - வண்டின்கூட்டம். ஓகாரங்கள்: எதிர்மறை. உறை - உறையுமிடம்; என்றது அஞ்ஞாதவாசத்துக்குரிய நாட்டினை. காந்து போயினர்கள் - மறைந்து (உருமாறிப்) போய் வசித்தவர்கள். இனி, காண - (தமக்குரிய வாகக்) கண்டுகொள்ளும்படி ('பெற' என்னும்பொருட்டு; இப்பொருளில் இச்சொல் உலகவழக்கிலுள்ளது) என்றலுமாம். எதிர்விளம்பினன் - உத்தரங்கூறினான், விரோதமான வார்த்தையைக் கூறினான் என இருபொருளும் தருமென்க.

117. வி—ரை: இந்த வாழ்வு - இச்செல்வ வாழ்க்கை; அன்றியும், இவ்வுலகவின்பத்துக்குரிய இல்லறவாழ்க்கையுமாம். அரசியல் - அரசநீதி, இராச்சியபரிபாலன முறை. என்னது ஆகும் - எத்தன்மையையுடையதாகும்; யாவராலும் இகழ்ந்து கூறப்படும் தன்மையை யுடையதாகும் என்பது. இச்செய்யுளின் கருத்தாவது: அரசுக்குரியரல்லாத சிறியதாயின் புதல்வருக்கு மூத்த மகனாகிய பிறப்புரிமையால் தனக்கே யுரியதாய்ப் பிதாவினாலும் கொடுக்க எண்ணப்பட்டிருந்த இராச்சியமுற்றுமே கொடுத்தான் உன் குல முன்னோன்; அவனது சீவியகாலத்திலேதானே அந்த நீதிக்கு மாறாக, உன் பிதாக் குருட்டுத் தன்மையினால் இராச்சியத்தை நிர்வகிக்கும் ஆற்றலுரிமைகள் அற்றவனாயிருக்க, தனது புயபலத்தாற் பகைவரையடக்கி இராச்சியத்தை நிர்வகித்து ஆண்டு முழு அதிகாரமும் படைத்தவனாகிய பாண்டுமகாராசனின் புதல்வர்களாய், (தருமபுத்திரன் வயதினால் உனக்கு மூத்த உரிமையுமுடையவனாயிருக்க) அதனாற் குருநாடு முழுவதையுமே ஆள உரிமைபடைத்தவர்களாகிய பாண்டவர்க்கு அந்நாட்டிற் பாதியையாவது அல்லது ஐந்தூர்களையாவது இளையவனாகிய நீ கொடாதுவிடுதல் உனது வம்சப்பெருமைக்கும் இராசநீதிக்கும் அடாது என்றபடி.

இனி, பின்னீரடிக்கும் வேறோர் கருத்து வருமாறு: இராசசூய யாகத்தின்பொருட்டுப் பூமண்டலத்தரசர் யாவரையும் திக்குவிஜயஞ் செய்து வென்று 'சம்ராட்' ஆகிப் பூமி முழுவதையும் ஆளும் உரிமை பெற்ற தருமபுத்திரன் முதலிய ஐவர்க்கும் ஐந்து ஊராகிலும் கொடாது மறுப்பாயாகில், உனது அரசாட்சி என்னநிலைமையை யடைவதாகும்? (பூமண்டலத்து அரசரனைவரையும் வெல்லுதற்கேற்ற அதிபராக்கிரமம் படைத்த அவர்களாற் போரில் வெல்லப்பட்டு நிலைநில்லாது அழிந்தொழிந்தேவிடும் என்பது). 'எவன்' என்னும் வினைக்குறிப்புமுற்று 'என்' என்றாகி, பின் பகுதிப்பொருள் விகுதிபெற்று 'என்னது' என்றாயிற்று;

அது 'கொடாதொழியின்' என்னுங் காரணத்தோடு கூடிய செயற்கை வினையாதலின், 'ஆகும்' என்னும் ஆக்கச்சொற்பெற்றுநின்றது. 'வசு' என்னும் அரசனது வீரியத்தால், முன்னமே சாபத்தால் மீனாகி யமுனையில் வாழ்ந்த ஒரு தேவஸ்திரீயின் கருப்பத்திற் பிறந்து, பின் பரதவ ராஜனால் வளர்க்கப்பட்டு அவனுக்கு மகள் முறையாயினள் பரிமளகந்தி என்றறிக. இவ்வரலாற்றின் விரிவை இந்நூலில், குருகுலச் சருக்கத்து 90-ம் கவி முதலியவற்றிற் காண்க.

118. வி—ரை: தலக்களிறு - திக்குயானைகள். திசைக்கண் - திகந்தம்வரையில் என்றபடி. தருதலத்தவர் - குருகுலத்திற் பிறந்த நமது; முன்னிலையிற் படர்க்கைச் சொல் வந்த வழுவமைதி. இயற்கை - (இவ்வண்ணம் ஒத்து வாழாத) இயல்பு. நன்று - நன்றாக இருக்கின்றது; தீது என்றபடி; (எதிர்மறைப் பொருளை யுணர்த்திய குறிப்பு மொழி; இதனை வடநூலார் வியதிரேக்லக்ஷணை என்பர்).

119. வி—ரை: 'வன்பினொடு' எனப் பிரித்துத் துரியோதனனது குணமாக உரைக்கப்பட்டது. இனி, அதனை 'அன்பினொடு' எனப் பதச்சேதஞ்செய்து கிருஷ்ணரது குணமாகக்கொண்டு, 'பேச' என்பதன் முன்னும் கூட்டியுரைத்து, அவரது விநயவார்த்தையாகிய பெருமைக்குணமும், துரியோதனனது கடுஞ்சொல்லாகிய கீழ்மைக்குணமும் ஒருங்கே வெளிப்படுத்தியதாகக் கொள்க; இவ்விருபொருளும் பயந்தமையின், இச்சொல் தாப்பிசைப் பொருள்கோளாக நின்ற சிலேடைப் பதமாமென்க. உளே செயிர்த்து - மனத்துட் கோபங்கொண்டு. நிருபன் - அரசன். சூடிகை - உச்சிக்கொண்டை. கோடு - கொண்டு. பொறுத்த - சுமந்த. அல்லவோ - 'அல்ல' என்னும் எதிர்மறை வினையை ஓகாரமாகிய எதிர்மறை யிடைச்சொல் மறுத்தமையால், [இரண்டு எதிர்மறையடுக்கு உடன்பாட்டுப் பொருளை வற்புறுத்தும்; "அபாவத்தின் அபாவம் பாவ பதார்த்தமே, வேறன்று" என்னும் முறைமையால்] 'ஆம்' என்னும் பொருளை வற்புறுத்தியதென்றறிக. அல்ல: நேமிநாதத்துட் கூறியபடி இச்சொல் இருதிணையைம்பால் மூவிடத்துக்கும் பொதுவாதலின், ஈண்டு அஃறிணை யொருமைக்கண் வந்தது என்க; மேல் 112-ம் கவியில் 'அல்லவே' என வந்ததற்கும் ஆண்டுரைத்த வுரையேயன்றி இவ்வுரை கொள்ளலும் பொருந்தும்; 123-ம் கவியில் உயர்திணைப் பலர்பாலில் 'கண்டவர்களல்லவோ' என வருவதற்கும் இவ்வாறே கொள்க. 'ஓ' பின்னதும் எதிர்மறை. "பலோ ராஜா பிருதிவி" என வடமொழியில் வழங்கும் பழமொழியின் கருத்து ஈற்றடியிற் கூறப்பட்டது. அஃதாவது "முந்தமாநிலமனைத்தினுக்கு முயர் முறைமையாலுரிய அரசர்" என நீர் சொன்னபடி பாண்டவர்கள் உரியவர்களேயாயினும், நாங்கள் இப்போது வீரர்களாயிருப்பதனால் நாங்களே ஆளத்தகும்; அவர்கள் வீரர்களாயின் எம்மை வென்றாளுக என்றபடி.



120. வி—ரை: மற்று: அசை. அடல் ஆண்மை - வெற்றிக்குரிய தைரியம் என்றுரைப்பினுமமையும். அடர்த்தியே - போர் செய்வையோ. ஏ: வினா. மெய் - (உனது இவ்வார்த்தை) மெய்யாகுகைக்கு. கைவழங்குக - என் கையில் அடித்து உறுதிசெய்க. உறுதிகூறுவோன் அதற்கு அறிகுறியாக உறுதியைப் பெறுபவனது அகங்கையில் தன்கையால் அடித்தல் இன்றும் உலகில் நிகழ்கின்றது. விளங்கவரு குருநிலம் - (புண்ணிய பூமியென்று) பிரசித்தமாக அறியப்படும் குருக்ஷேத்திரபூமி; இதுவே பாரதப்போர் நடந்த இடமாகும். இனி, 'மெய்விளங்கவரு குருநிலம் - அவரவர் பராக்கிரமம் உள்ளது உள்ளபடியே வெளிப்படுதற்கிடமாகிய குருக்ஷேத்திரம்' என்றுரைப்பதுமொன்று. "அடர்த்தியேல்" என்பதும் பாடம். என - என்று (கண்ணன்) கூற. காவலன் - துரியோதனன்; ('கா - பூமண்டலத்தைக் காத்தலில். வலன் - வல்லவன்' என அரசனையுணர்த்துங் காரணப் பெயர்). இவை - (பிற்கவிகளிற் கூறப்படும்) இவ்வார்த்தைகளை. அவன் தூணில் அறைந்தது கிருஷ்ணர் தன் சொல்லில் அவநம்பிக்கைப்பட்டுக் 'கைவழங்குக' என்று கேட்டமை பற்றி உண்டாகிய கோபத்தால் என்றறிக.

இனி, சிலர் 'காவலன்-கண்ணபிரான்' எனவும், 'இவை உரைக்கும் - இங்ஙனம் கூறினன்' எனவும், தூணில் அறைந்தமையைக் கண்ணன் தொழில் எனவும் கொண்டு உரைப்பர். 'உரைக்கும்' என்னுஞ் செய்யுமென்முற்றுக்கு இறந்தகாலப்பொருளுரைத்தல் பொருந்தாதாகையானும், துரியோதனன் கோபித்துப் பேசியகாலத்தும் கண்ணபிரான் தாம் கோபமின்றி அமைதியாக நயம்படவேகூறியமை முன்னர் "கார்வழங் தருமேனச் சினத்தினொடு கண்ணிலான் மதலை கழறவும் ... ... ... உற்றிரந்தனனுலகெலாமுதவு முந்தியான்" என்பது முதலிய செய்யுளானும், பின்னரும் "ஞால முற்றுமுடை யவன்மொ ழிந்திட நகைத்து வண்துவரை நாதனும் ... ... ... விதுரன் வாழ்வுபெறு கோயில்சென்று நனி குறுகினன், சீலமற்றவர் சினத்த போதுமொரு தீதிலாதவர் செயிர்ப்பரோ" என்று கூறுமாற்றானும் பெறப்படுதலின், அவர் தூணில் கையறைந்தாரென்றற்குக் கோபம் முதலிய காரணமொன்றும் கூறல் பொருந்தாமையானும், அடுத்த நான்கு செய்யுளும் துரியோதனன் கூற்றென்பதைப் படிப்போர் விளங்குதற்கேற்பத் தொகுத்துரைக்குந் தோற்றுவாய்த் தொடர் இதுவேயன்றி அடுத்த செய்யுளில் வேறின்மையாலும், இதன்மேல்வரும் 5-ம் கவியில் "ஞாலமுற்று முடையவன் மொழிந்திட" [125] என்பதனால் விளங்கலாமெனில் அது வெகுதூரத்ததாகலின் ஈண்டுத் தொடக்கத்துக் கூறாதொழிதல் குறித்த பொருள் விளங்காமை, மயங்கவைத்தல் முதலிய குற்றத்துக்கிடனாமாகையானும் அவர் கொண்ட வுரை பொருந்தாமை தெளிக.

121. வி—ரை: புன்மை - இழிவு. போதுவர் - இடையர். புறவு - முல்லைநிலம், காடு. ஆ நிரை - பசுக்கூட்டம். புரத்தல் - (மேய்த்துக்) காத்தல். உன்பிறப்பு - உனது குலம்; வசுதேவரது மகனுயிருந்தும் கஞ்சனுக்குப் பயந்து ஒருவரும் அறியாமல் இடையர் சேரியில் நந்தகோபன் மனையில் அவள் பிரசவித்த குழந்தைபோல எண்ணும்படி விடப்பட்டு, இடைக்குலத்தவனுகிய அவனாலும் மனைவியாகிய யசோதையாலும் வளர்க்கப்பட்டமையின், இடைக்குலத்தவன் எனக் கண்ணனை இகழ்ந்தான். 'கோபி' என்னும் வடசொல் 'கோவி' எனத்திரிந்து பலர்பால் விகுதிபெற்றது; கோபி - இடைக்குலப் பெண். இதன் எதிராய ஆண்பாற் சொல் கோபன் (=கோ - பசுக்களை. ப:- காப்பவன்) என்பது. மன் - மன்னர்களது. பிறப்பு - குலம். தான்: அசை. வாய்மைதானும், என்பிறப்பும் என்ற உம்மைகள்: உயர்வுசிறப்பு, இந்த வாசகமென்றது 'கைவழங்குக' என்னுஞ் சொல்லை. ஓகாரத்தை 'மறந்தோ' என ஏனையிடத்துங் கூட்டி ஐயப்பொருளவாகக் கொண்டு, மறந்தமையாலோ உணராமையாலோ இவ்வாசகமியம்பினை; மறவாமலும் உணர்ந்தும் நடப்பையேல் இங்ஙனமியம்பாய் என்பது கருத்தாகக் கொள்க; மறந்து: ஈண்டுக் காரணப்பொருளோடிறந்தகாலங்காட்டிய செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம், 'ஓதியுணர்ந்தான்' என்புழிப்போல. உணராமல் என்னும் எதிர்மறையெச்சமும் காரணப் பொருட்டு. ஒரு மாசும் என்னும் இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. 'பிணித்ததும்' என்றதனுல் அங்ஙனம் பிணித்தற்குக் காரணமாகிய வெண்ணெயாதியன களவாடி யுண்டமையும் அவற்றை மறைத்தற்குச் சொல்லும் பொய்யும் முதலிய கண்ணனது இழிவுகளைக் குறிப்பாற் காட்டியிழித்தபடி. இது 'உயர்குருகுலத்தவர்தம் வாய்மைதானும்' என்றற்கெதிராயொப்புக்காட்டிய கண்ணனைப்பற்றிய இழிவாமென்றறிக.

122. வி—ரை: ஏ இலங்கு சிலை - அம்பு(தொடுக்கப்பட்டு) விளங்குகின்ற வில். எளிது - (வெல்லப்படுதற்கு) எளிய தன்மையுடன்; இளைத்தவனாய் என்றபடி. ஓகார முன்னைய இரண்டும் முறையே 'விரைந்து சென்று எதிர்த்துப் பொருது வெல்லுவேன்' எனவும், 'அஞ்சாது எதிர் பாய்ந்து கொல்லும்' எனவும் பொருடந்து நின்றன; எதிர்மறை. கோவிலங்கு - 'மிருகங்களுக்கு அரசன்' என நிலைமொழி வழிமொழியாக மாறித் தொக்க வேற்றுமைத்தொகை. கரடம் — மதம்பாய் சுவடு. குஞ்சரம்-யானை. கொண்டக்கால் என்னும் வினையெச்சம் சந்த நோக்கி மிகாது நின்றது. மேவில்-வந்தால். இனி, 'அங்குமலைத்தல் மேவில்' என மொழிமாற்றி, 'அக்குருக்ஷேத்திரத்திலே போர் செய்தற்கு உடன்பட்டால்' என்றுரைப்பினுமாம்; (மேவல் - உடன்படல்). நாவிலங்கும் - நா விலகும்=(எனது) சொல் தவறும்; (நா: கருவியாகுபெயர்). மேன்மையோ - செருக்கினுலோ என இழித்துரைத்தபடி. அரசர் ஞாயம் - அரசர் விஷயத்தில் இந்த நியாயம். மிகவும் நன்று நன்று - 'மிகவும் அடாது' என்ற பொரு



ளைக் குறிப்பா லுணர்த்தியது (எதிர்மறையிலக்கணை). முன்னீரடியும் எடுத்துக்காட் டுவமையணி; 2-ம் அடி உவமானவாக்கியம்; அதனீற்றில் 'அதுபோல' என வருவித்து, அதன்பின் முதலாமடியைக் கொண்டு கூட்டியுரைக்க.

123. [மூலத்தில், 'மன்னவயில்' என்பதை 'மன்னவையில்' எனத் திருத்துக]

வி—ரை: 'பரிந்து - (போதாமையால்) வருத்தத்துடன்' எனினுமாம். இடு - (யாரேனும்) இட்ட. வனவாசகாலத்தில் சூரியன் கொடுத்த அக்ஷயபாத்திரத்தாலும், அஞ்ஞாதவாசகாலத்தில் விராடராசனுலும் பெற்ற சோற்றை இடுசோறென்ருன். உண்டற்குரிய சோற்றைத் 'தின்று' என வேற்றுவினையாற் கூறியது திருப்திபெருமற் புசித்ததைக் குறிப்பிக்க வழங்கிய உபசார வழக்கு. மானம் வீரம் முதலியவற்றை யிழந்து உயிரைமாத்திரம் பயனின்றித் தாங்கி என்பான் 'சுமந்து' என்ருன். தோள் எளிவரும்படி - தோள்கள் (வலி குன்றி) வசை பெறும்படி. பாவியர் - (இவ்வாறு நாடிழந்து காடு போந்து துன்புறுதற் கேற்ற) தீவினையை யுடையவர். 'மனைவியைத் துகிலுரிந்த காலத்து ஒன்றுஞ் செய்ய வலியில்லாது பார்த்துக்கொண்டு வாளா இருந்தவர் இப்போது மான முடையராய்ப் பொர முற்படுவரோ, முற்படார்' என்று இழித்துக் கூறியவாறு. 4-ம் அடி முதற்கண் 'இளிவரும்படி' என்பதும் பாடபேதம்; அதற்கு 'இழிவுண்டாம்படி' என் றுரைக்க.

124. [மூலத்தில், 'தந்தையரும்' என்பதைத் 'தந்தையர்கள்' எனத் திருத்துக.]

வி—ரை: உரிமை - பிறப்புரிமை. 'என்னையாம்' என்பதில் உள்ள 'ஆம்' என்பதனை 'என்பது' என்னுஞ் சொல்லின் பின்னே மாற்றிக் கூட்டுக. முதல் - (உற்பத்திக்குக்) காரணமாக இருந்து; முதல் என்பதற்குக் காரணம் என்பது பொருளாதலை "வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்" என்னுந் தொல்காப்பியப் பாயிரச்சூத்திரத்து, 'முதலின் - காரணத்தால்' எனச் சிவஞான முனிவர் உரைத்தவாற்றானுமுணர்க. இனி, இதற்கு 'முதன்மையாக (பிரதானராக) இருந்து' என்பாருமுளர். முதலாமடியின் கருத்து: 'பாண்டு இவர்க்குச் சொந்தத் தந்தையல்லன்' என மறுத்து, பாண்டவர் தம் பிறப்பளவால் குருகுலத்தோடு தொடர்பற்றவராவர் எனச் சாதித்தபடியாமென்க. அவரோடு ஒருகுலத்து அரசன் - அவரோடு ஒரு குலத்துப் பிறந்த துணைவனுகிய அரசன். 2-ம் அடிக்கு முதலாமடி விஷயம் ஏதுவாக நின்று, 'தமக்கு உற்பத்திகாரணமாயுள்ள தாய் தந்தையராகிய இருவழியாலும் குருகுலத்தோடு தொடர்பற்ற இவர்கள் குருகுலத்துரிமைபெறுமாறு யாங்ஙனம்?' என்னும் பொருளை விளக்கிற்று.

2-ம் 3-ம் அடிகள் 4-ம் அடிக்கு ஏதுவாக நின்று, 'பிறப்புரிமையாலாவது அல்லது ஒழுக்கமுறையாலாவது என்னோடு சிறிதும் ஒவ்வாதவர்களை என் துணைவர் என்பதும், அவர்க்கு யான் தாயபாகம் கொடுக்கக் கடமைப் பட்டுள்ளேன் என்பதும் ஒரு சிறிதும் தகா என்பதைக் குறிப்பித்தன. அம்ம இவை என் - ஆஹா! இவ்வார்த்தைகள் எப்படிப்பட்டன? (ஒரு சிறிதும் பொருத்தமற்றன என்றபடி). 117—118-ம் கவிகளில் கிருஷ்ணர் கூறியவற்றை நியாயங்காட்டி இதனால் மறுத்தான் என்றறிக. மின் - திரௌபதி (உவமையாகுபெயர்).

125. விரை: ஞாலம் - உலகம். துவரை - துவாரகைப்பதி (மரூஉமொழி). சாலமுற்றும் - மிக நிறைவேறும். அவர்கருத்து என்றது பாண்டவர் துரியோதனுதியரைக் கொன்று சபதமுடித்தலை. தணந்து - நீங்கி. கோயில் - இராசமாளிகை. சீலம் - நல்லொழுக்கம். ஒருதீது இலாதவர் - (மனமொழி மெய்கள்) சிறிதும் தீமையற்ற மேலோர். கோலம் - அழகு; இனி, கோலம் உற்ற சிலை - (திண்ணிய) வடிவத்தால் (உலகத்து வில் லெல்லாவற்றிலும்) சிறந்த வில்; (கோலம் - வடிவம். உற்ற: 'உறு' என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சம்)' எனினுமாம். ஈண்டும் "கோலமுற்ற சிலைவிதுரன்" என வில்லை விதுரனுக்கு அடையாக எடுத்துக் கூறியது 'அவ்வில்லை முறிப்பிக்கவேண்டுமெனக் கருதியே விதுரன் மனைக்கு விருந்தாகச் சென்றான்' என்பதைக் குறிப்பிப்பான்வேண்டி என்றறிக. 'துரியோதனன் சினந்துரைத்தபோது கிருஷ்ணர் எதிராகச் சினந்து ஒன்றுங் கூறவில்லை' என்னுஞ் சிறப்பு விஷயத்துக்குரிய நியாயத்தை 4-ம் அடியிற் கூறிய பொது விஷயத்தால் விளங்கவைத்தது வேற்றுப்பொருள் வைப்பணியாம்.

126. [மூலத்தில் 3-ம் அடியில் 'பேரவையி நேடிது' என்பதைப் 'பேரவையி னேடிது' எனத் திருத்துக.]

வி—ரை- இது முதல் மூன்று கவிகள் விதுரனைப் பழித்துக் கூறுதலை நுதலியவாகலின், ஒரு தொடர். சொல்லின் கொடுமையை வாய்மேலேற்றிக் "கொடியவாய்" என்றார். இதழ் - உதடு. விருந்து செய்த உறவு - விருந்து செய்தமைக்கு ஏதுவாகிய தொடர்பு; யாதுமில்லை என்பான் "என்கொல்" என்றான். கோல்: அசை. வெகுளி என்னும் மெய்ப்பாடு விளங்கித் தோன்றலின், இக்கவி உருத்திரம் என்னும் சுவையணி பொருந்தியதாகும்.

127. வி-ரை: வௌவ - (பாண்டவர்)கவர்ந்துகொள்ளட்டும்; (அகரவீற்று வியங்கோள்). என்றுகொல் - என்று (விதுரன்) கருதிப்போலும்; (கொல்: ஐயவிடைச்சொல். அசை எனினுமாம்); 'என்று' என்னும் வினையெச்சம் 'இயற்றினான்' என்னும் வினைகொண்டது. இனி, 'வௌவவென்று' என்



பதனை 'என்று' என்னும் இடைச்சொல்லோடியைந்த (காரியப்பொருட்டாகிய) செயவெனெச்சமாகக்கொண்டு கண்ணனது வினையாக்கி, 'மறுத்தவன்' என்னும் வினையாலணையும் பெயராகிய வினையைக் கொள்ள உரைப்பதுமொன்று; இதற்கு 'வௌவ வென்று - (பாண்டவரோடு [கண்ணனாகிய] தானும் சேர்ந்து அவர்பொருட்டுப் போரினால்) அபகரித்தற்காக' என்றுரைக்க. 'இவ்விதுரன் இயற்றினான், (ஆதலால்) தான் என் மீது அன்புடையனல்லனாவன், (அதுவேயுமன்றி) எனக்கு உற்ற பகைவனுமேயாவன்' என வாக்கியச் சுருக்கங் காண்க. ஓதனம் - சோறு. அல்லன்: காரணத்தை முன்னேகொண்டு ஆக்கச்சொல் தொக்குவந்த வினைக்குறிப்புமுற்று. பகைதனக்கு: (பகை+கு: 'தன்', 'அ' என்னுமிரு சாரியை இடையேதோன்றிப் புணர்ந்த உருபு புணர்ச்சி) ஈண்டுக் குவ்வுருபு ஐந்தாம்வேற்றுமையுறழ்ச்சிப்பொருளில்வந்த வேற்றுமை மயக்கம்; பகைவரைப் பார்க்கிலும் என்பது பொருள். இதனிறுதியிலுள்ள உம்மையை, உற்ற பகை என்பதனீற்றில் மாற்றிக்கூட்டி 'மிக்க பகைவனும்' என எச்சவும்மையாகக் கொள்க. உற்ற: 'உறு' என்னு முரிச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சம். பிறந்தும் அருந்தியும் என்புழி உம்மைகள்: மகனென்ற உரிமையால் தன்மாட்டு அன்பு செய்தும், செஞ்சோற்றுக் கடன் கழிப்பான்வேண்டி நட்புக்கொண்டும் நடத்தற்கேற்ற காரணங்களாகிய உரிமையைப் புலப்படுத்தி நின்ற இழிவு சிறப்பும்மைகள். இதனால், கடப்பாடாகிய அன்பும் நன்றியறிவும் இலனென்று விதுரனை இகழ்ந்தபடி. இனி, 'பகை+தனக்கும்' என்பதைத் தொடர்மொழியாகக் (எழுவாய்த் தொடர்) கொண்டு, 'என்பகைவராயுள்ளார் தனக்கும்(=இவ்விதுரனுக்கும்) உற்ற பகைவராகக் கொள்ளத்தக்கவரல்லவோ, அங்ஙனமாகவும் என் பகைவர் பக்கத்தானாகிய கண்ணனுக்குத் தன்னில்லின்கண் இன்னமுதியற்றினான், ஆகையால் என்மீது அன்புடையனல்லன்' என்பது திரண்ட பொருள் எனக் கொள்ளினுமாம். பாண்டு ஐவர்க்குச் சொந்தத் தந்தையல்லன் என முன்னே [124-ல்] கூறினானதலின், ஈண்டு விதுரனைத் தனக்கு மாத்திரம் சிறிய தந்தையாயுள்ளான் என்பான் "என்பிதாவொடு பிறந்தும்" என்றான்.

128. வி—ரை: 'மண்ணில்+பொதுமடந்தையர்+முதல்+இயைந்த பொருள்பற்றி + ஒருவனுடன் + விழைந்து + இன்பு உற முயங்கினும் + வேறு + ஒருவன் + அதிகம் என்ற பொருள் தரின்' என மொழிமாற்றி உரைக்கப்பட்டது. விழைந்து - விரும்பி. இனி, 'விழைந்த' என்னும் பெயரெச்சத்தீறு தொக்கதாகக் கொண்டு, ஆற்றுநீர்ப் பொருள் கோளாக உரைப்பினு மமையும். இயைந்த - (தமது மனத்துக்கு) இசைந்த. அறிவரோ - (முன் பொருள் கொடுத்தவனை) நினைப்பாரோ. பொதுமடந்தையர் - (பொருள் கொடுப்பார் யாவருக்கும்) பொதுவாகிய பெண்கள், பரத்

தையர். கோண்டது: இறந்தகாலங் காட்டிய தொழிற்பெயர்; வியப்புக்கு அடையாயிற்று. வெறுப்பது: எதிர்காலங்காட்டிய தொழிற்பெயர்; 'யான்' என்னுந் தோன்றா எழுவாய் கொண்டது. பாண்டவர்க்கு இராச்சியம் கிடைப்பின் தனக்கு இப்பொழுதையினும் அதிக செல்வாக்கு உண்டாகும் என்று எண்ணி இங்ஙனம் செய்தான்போலும் என்று கருதிக் கூறினான் துரியோதனன். இனி, 'ஐ' யுருபைப் பிரித்துக் கூட்டி, 'உறவுகோண்டதை ஓர் வியப்பு [ஆக] சோல்லி வெறுப்பது என் - (விருந்தளித்து) உறவுகொண்டு நடந்ததை ஓராச்சரியமாகச் சொல்லி வெறுப்பானேன்? (வெறுக்க ஏதுவில்லை என்றபடி)' என மொழிமாற்றி யுரைப்பினும் அமையும்.

129. வி—ரை: துணிப்பன் - வெட்ட வல்லேன்; ஈண்டு எதிர்காலத்தோடு ஆற்றற்பொருளையு முணர்த்திற்று. இருந்தியோ - உயிர்வாழ வல்லாயோ; (இகரவிகுதி எதிர்காலங் காட்டியது. ஓ: எதிர்மறை). தான் தண்டிக்கலுறின், அவனால் தடுக்கலாற்றாமை கூறியபடி. வெளவுதல் - கவர்தல்.

130. வி—ரை: உலகம் எங்கணும் நீண்டவற்கு + ஈண்டு அவர்க்கு உதவியாய தூது என இசைப்பவற்கு + உதவி ஆயினேன்......' என மொழி மாற்றி உரைக்கப்பட்டது. குவ்வுருபேற்ற முன்னைய இரண்டு பெயரும் கிருஷ்ணரை யுணர்த்தி ஒருபொருட் பல்பெயராய் நின்றன. மாண் + தவர்க்கு உதவியாய பாண்டவர், வளர்த்திடும் பாண்டவர் எனத் தனித்தனி இயையும். இவ்வடைகளால் பாண்டவர்க்குப் போர்த்துணையாதல் நீதியேயாய்ப் புகழப்படுமென்பது பெறப்படும். உதவியாகில் - (நேர்முகமாகப் போரில்) உதவியாவனேல். புதல்வர் என்ற முறையால் இரு திறத்தரும் ஏற்றிழிவின்றி ஒப்பாராயினும், திருதராட்டிரனுக்கும் அவன் புதல்வனுக்கும் அமைச்சுத்தொழில் பூண்டு தான் அவரால் சீவித்துவந்தாலும், அவர் வாய்மையும் நீதியும் திறம்பி நடக்கு மிக்காலை தான் நற்புத்தி கூறியும் கேளாமையால், அதனை முன்னிட்டு அவரைவிட்டு விலகி நீதியுடைய புதல்வராகிய பாண்டவர் பக்கலில் அறம்நோக்கிச் சேர்ந்து அவர்க்குத் துணைபுரியின் அந்நிலைபற்றி முடிமன்னர் பழியாரென்றவாறு. அடர்த்தி - (இகழ்ந்து) கண்டிக்கின்றாய். பாண்டவர்க்குப் போரில் உதவியாவதே பழித்தற்கிடமாகாத போது, பாண்டவர்க்குத் தூதாக வந்த கிருஷ்ண பரமாத்மாவுக்கு உதவி செய்தமை ஒரு சிறிதும் பழிக்கப்படாத செயலே என அவன் கண்டித்தமைக்கு உத்தரங் கூறியபடியாம். இனி, 'நீண்டவன் - திரிவிக்கிரமாவதாரங் கொண்டவர்' எனலும், 'மாண்டவர் - (அறிவு குணம் செயல்களில்) மாட்சிமைப்பட்டவர்' என்றுரைத்துப் பாண்டவர்க் கடையாக்கலும் பொருந்தும்.



131. வி—ரை: சொல் இரண்டு புகலேன் - யான் சொல்லுஞ் சொல்லினின்றும் (மரணபரியந்தம்) தவறேன். தன்னைத் துரியோதனன் நிந்தித்தமையினால், அவனுக்குப் போர்த்துணையாய் நின்று தாம் உதவா தொழிதலே அவன் தூஷணைக்குத் தக்க பரிகாரமாமெனக் கருதியே "இனிச் சமரில் நின்று வெங்கணை தொடேன்" எனச் சபதஞ் செய்தார். தாம் இருதிறத்தர்மீதும் பக்ஷபாதமின்றிச் சமத்துவபுத்தியுடன் நடக்குமியல்பினர் ஆதலால், ஒருகால் துரியோதனனுக்குத் துணையாதலை மறுத்துச் சபதஞ்செய்தமையை உணர்ந்து, பாண்டவர் தமக்குப் படைத்துணையாக வரும்படி தம்மை வேண்டலுங் கூடும், அங்ஙனம் அது நேராமைப் பொருட்டும், தமது வில்லிருப்பின் விஷ்மர் திருதராட்டிர னாதியோர் போர்க்காலத்தில் தம்மைச் சமாதானப்படுத்தித் துரியோதனனுக்கு உதவி செய்விக்க மார்க்கந் தேடவுங்கூடுமென்ற நோக்கத்தாலுமே தமது வில்லை இப்பொழுதே இரு துண்டாக்கினாரென் றறிக. வில் இரண்டு - அக்காலத்தில் இவ்வுலகத்துள்ள விற்களுட் சிறந்தவாகிய அருச்சுனன் வில்லும், விதுரன் வில்லும்ஆகிய இரண்டுவில் என்றலும்சிறக்கும். இது பொருந்துமாற்றை "இருசிலையுண்டென்றிந்த விருநிலத்தியம்பும்வில்லின், ஒருசிலை முறித்த சீற்றம் என்கொலோ" [141] எனப் பின் ஓதப்படுமாற்றானு முணர்க. இனி, அடுத்த செய்யுளில், "அச்சுதன் சந்த வில்லு மரன் வில்லு மொப்ப தொரு தாமவில்லினை முறிப்பதே" என விதுரன் வில்லை அவ்விரண்டனையும் ஒப்பதென்றமையின், அதனோடு மாறுபட, ஈண்டு 'சிவன்வில் விஷ்ணுவில் ஆகிய இரண்டனுள்ளும் உயர்ந்ததாகிய விஷ்ணுதனுசை முறித்தான்' என் றுரைத்தலும் பொருந்தாமை யோர்க. மல் இரண்டு - (ஆகுபெயரால்) மல்லர் இருவர்: சாணூரன், முஷ்டிகன் என்பார். இருவர் ஆகி - பலராமர், கிருஷ்ணர் ஆகிய இரு வடிவங்கொண்டு; பலராமரும் திருமாலின் பத்தவதாரங்களுள் ஒன்றாதலின், இங்ஙனங் கூறினார். காளம் - கருமை.

132. வி—ரை: முறிப்பதே - (விதுரன்) முறிக்கத்தகுமோ; ஏகாரம் இரங்கற் பொருளில் வந்தது. வில்லி - வில்வீரன். ஆலயம் - வீடு. அச்சுதன் - விஷ்ணு (அ + ச்யுதம் = அழிவின்மை.) அரன் - சிவன் (ஆன்மாக்களின் மலங்களை அழிப்பவன் என்பது முதலிய காரணங்களாலாகிய பெயர்.) 'வில்லியரில் + முந்த + எண்ணும்' என மொழிமாற்றுக. காவலர் - (சபையிலிருந்த) அரசர். இரங்கினர் - பச்சாத்தாபப்பட்டனர். விற்போரிற் சிறந்த விதுரனுதவியைத் துரியோதனன் இழந்தமைபற்றி வருந்தினர் அரசர் என்பதாம்.

133. வி—ரை: 'உயர்பிதாமகன் + உள் அழிந்து' என்பவற்றை முதலிற்கொண்டு உரைக்கப்பட்டது. பிதாமகன் - பாட்டன் (வீஷ்மர்). உள் - உள்ளம். அழிந்து - வருந்தி. எங்ஙனம் என்பது கடைக்குறைந்தது. ஈண்டு இவ் வினா 'வெல்லாய்' என்னும் எதிர்மறைப் பொருளை யுணர்த்

திற்று. கோல்: அசை. ஆளும்வகை - ஆளுதற்கு ஏதுவாகிய செய்கைத் திறம்; என்றது விதுரன் போர்த்துணை மறுத்து வில் முறித்தமையை. 'அனைத்தும்+அழிந்தது': பன்மையில் ஒருமை மயங்கிய வழுவமைதி.

134. வி—ரை: விதாரம் - போர். மொய்ம்பு - வலிமை. உதார சீலன் - கொடையினையே விரத ஒழுக்கமாகவுடையவன், (கன்னன்). அங்கர்கோன் - அங்கதேசத்தவர்களுக்கு அரசன். வரி - நீண்ட. பதாதி - சேனை. பட - இறக்க. பரணி: ஆயிரங் களிற்றியானைகளைப் போரிற் கொன்று வெற்றிபெற்ற வீரனைத் தலைவனாகக் கொண்டு பாடப்படும் பிரபந்தம். பாண்டவரையும் அவர் சேனையையும் அழித்து வெற்றிபெறுதற்குக் கன்னன் ஒருவனே அமையும், விதுரன் வேண்டா என்றபடி.

135. [மூலத்தில் 3-ம் அடியில் "வேயிருக்கம்" என்பதை "வேயிருக்கும்" எனத் திருத்துக.]

வி—ரை: வில்கை - விற்றொழில் என்றலுமாம். சேய் - புதல்வன் (அசுவத்தாமன்). வேய் - மூங்கில், கருவியாகுபெயராய்ப் புல்லாங்குழலையுணர்த்திற்று. மலைந்து - தாக்கி. விதுரனிலும் மேம்பட்ட நீவிரும், நிகரற்ற துரோணரும், அசுவத்தாமனும், பிற அரசருமாகிய பலருதவியிருக்கும்போது இவ்விதுரனொருவன் வெறுத்ததனால் விளையும் நட்டமொன்றுமில்லை யென்றான்.

136. வி—ரை: விறல் - வலிமை. பூபதி - அரசன், (கன்னன்). இகல்+விசயன்: வினைத்தொகை. விள - விளமரம். 'இகல் விசயனை சென்று சீறி உயிர் கொள்ள+யான் இருக்க+நனி+வல்லவர்கள் யாவர் என்று+செப்புவீர்+கன்றினால் .........கடாவினும்+போரினிடை+எனது ஆடல்வெஞ்சிலையின் ஆண்மை+அன்று+காணலாகும்' என மொழிமாற்றுக. ஆடல் - வெற்றியைத்தரவல்ல. சிலையின்ஆண்மை - விற்போர்த்திறமை.

137. வி—ரை: அம்பரத்தவர் - தேவர். பணிப்பகழி - நாகஅஸ்திரம். ஓகாரத்தை 'மீளுவான்' என்பதனீற்றிற் கூட்டியுரைக்க. தளம் - சேனை. 'நேர்+புகல' எனக் கூட்டுக. உம்பர் - தேவர். நாண - (தன்னிற்) குறைவடையும்படி. வண்மை - ஈகை.

138. வி—ரை: 'ஓர் அசைவு இலாதவன்' என்பதை முதலிற் கொண்டுரைக்கப்பட்டது. நாற்றிசையிலுஞ் சூழ்ந்து பரந்த இருளைச் சூரியன் கீழ்த்திசையாகிய ஒருதிசைக்கண்ணே தோன்றி அழிக்குந் தன்மை போல, நாற்புறமும் தன்னை வளைத்துப்பொருத அசுரரை அருச்சுனன் தனியனாகச் சென்றெதிர்த்து வென்றனன் என்பதாம். இந்திராதிதேவரனைவராலும் வெல்லமுடியாத திரண்ட அசுரராகிய பெரும்பகையை



வென்ற அருச்சுனனுக்கு நீ நிகராகாய் என்றபடி. கோல்: அசை. ஓ: எதிர்மறை. தானவர் - அசுரர். நிசி - இருள். இனி, ஆற்றொழுக்காகவன்றி, 'நிசியை+ஒருதிசையின்வாய்+வந்ததாகிய+இரவி+அழிப்பது என+தானவரை+பொருது (அழித்து) வானவர்க்கு' என அந்வயப்படுத்திப் பொருள் கொள்ளலே மிகப்பொருந்தும். என - போல (உவமையுருபு).

அருச்சுனன் நிவாதகவசர் காலகேயர்களைக் கொன்ற வரலாறு:— அருச்சுனன் வனவாசகாலத்தில் தவஞ்செய்து சிவபிரானிடம் பாசுபதாஸ்திரம் பெற்று இந்திரனால் சுவர்க்கலோகத்துக்கு அழைக்கப்பட்டுச் சென்று அவனது வேண்டுகோளால், அவனுக்குப் பகைவர்களாய்ப் பூலோகத்திற் கடல் மத்தியில் உள்ள தேயமாபுரத்தில் வாழ்ந்த நிவாதகவசர் என்று வழங்கப்படும் மூன்றுகோடி அசுரர்களோடு கடும் போர்செய்து ஈற்றில் அவர்களைப் பாசுபதாஸ்திரத்தினாற் கொன்றனன். அவ்வெற்றியோடு இந்திரலோகத்துக்குச் செல்லும் வழியில் ஆகாயத்தில் இயங்கும் இரணியபுரம் என்னும் நகரிலிருந்த இந்திர சத்துருக்களாகிய காலகேயர் என்று பெயர்பெற்ற அறுபதினாயிரம் அசுரர்களோடும் போர் தொடுத்து அவர்களையும் பாசுபதாஸ்திரத்தினாலே கொன்று வெற்றிபெற்று இந்திரனது நகரம்புக்கு அவனாற் பல சிறப்புக்களைப் பெற்றான் என்பது.

139. வி—ரை: 'செவிப்படலும்' என்பதன்பின் 'இரவிசிறுவன்+நனிசீறி' என்பவற்றைக் கூட்டியும், 'என்று நனிசீறினன்' என்பவற்றில் விகுதி பிரித்துக் கூட்டியும் உரைக்கப்பட்டது. மற்று: அசை. இசை - கீர்த்தி. புவனம் - உலகு. அஞ்சும்: செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்று; ஈண்டு ஆண்பாலில் எதிர்காலத்தை உணர்த்தி நின்றது. இரவி சிறுவன் - சூரியனது குமாரன் (கன்னன்).

140. வி—ரை: எதிர்வாய்மை - மறுமொழி. அறிந்திடுதும் - அறிவோம். உற்றது - அடைந்தமை; ஈண்டு இச்சொல் அதன்மேல் நடந்த செய்தியை இலக்கணையா லுணர்த்தியது. இசைத்திலன்: வினையெச்சப் பொருட்டாகிய முற்று. இனி, 'துளபமாலையான் விரவு விதுரன் மனையில் உற்றது - கிருஷ்ணர் முன்னமே சென்று தங்கியிருந்த விதுரன் மாளிகையில் சம்பவித்த செய்தியை' என்று மொழிமாற்றி யுரைத்தலுஞ் சிறக்கும்; 'விதுரன் மனை' ஒரு சொன்னீர்மையாய் நின்று 'விரவு' என்னும் அடையை ஏற்றது.

141. வி—ரை: நேமிக் குரிசில் - சக்கராயுதத்தையுடைய தலைவர் (கிருஷ்ணர்). முறித்த சீற்றம் - முறித்தற்குக் காரணமாகிய கோபம்; (பெயரெச்சம் ஏதுப்பெயர் கொண்டது). கோல், ஓ: அசை.

இச்செய்யுள் முதல் 190-ம் செய்யுள் முடிய உள்ளவை அறுசீரடியாசிரியவிருத்தம்.

142. வி—ரை: ஆவது - (இம்மை மறுமைகளுக்கு) நன்மையாக உள்ளன; அவை அறம் பொருளின்பங்களுக்குக் காரணமான செயல்கள்; (சாதியொருமை). கருதானுகில் - (தான்) ஆலோசித் தறியானாயின். வீவது - அழிதல். விளைவது - (ஆவது கருதாதும் கேளாதும் நடப்பதனால்) சம்பவிக்கும் பழி பாவங்கள்; (சாதியொருமை). நாவது: 'நா' என்பது பகுதிப்பொருள் விகுதிபெற்று நின்றது. நாவைக் காத்தல் - கடுஞ்சொல் முதலிய தீய சொற் சொல்லாமல் அதனைக் காத்து நடத்தல். என்று அன்றே - என்றல்லவோ=என்றே; [அன்றே: தேற்றத்தைக் குறித்தது]. 'ஆக' என்பது 'ஆ' எனக் குறைந்தது. ஆவது, விளைவது: எதிர்கால வினையா லணையும் பெயர். வீவது, சாவது: எதிர்காலவிடைநிலை பெற்ற தொழிற்பெயர்.

143. வி—ரை: 'தெய்வமும்' என்ற உயர்வுசிறப்போடு கூடிய எச்சவும்மையால், குரவர் முதலாயினோரையுங் கொள்க. அறிந்து - (இது தகும், இது தகாது என்று) உணர்ந்து. 'சிறிதும்' என்னும் இழிவுசிறப் பும்மை விகாரத்தாற் றொக்கது. வல்வினை விளைவு - (செல்வச் செருக்குக் காரணமாக வரம்புகடந் தொழுகுதலால்) பெரும் பாவம் சம்பவித்தல்; (தமது) அநீதி முதலிய பாவச் செயலால் விளையுந் துன்பம் எனினுமாம். துரியோதனன் இவ்வா றொழுகுதலைக் குறிப்பா லுணர்த்துவார் மாந்தர்மேல் வைத்துப் பொதுவாகக் கூறியது இதனை நீதிச்செய்யுளாக உலகம் போற்றி யொழுகுதற்பொருட்டாம் என்றறிக. மேற்செய்யுளும் இத்தன்மையதே.

144. வி—ரை: தமர் - சுற்றத்தவர் (பாண்டவர்). எண்ணான்: எதிர்மறைத் தெரிநிலைவினையா லணையும் பெயர், 'கனவினான்' என்னும் பெயர்க்கு அடையாய் நின்றது. புன்சொல் - நிந்தைமொழி. இறுத்தது: இறந்தகால விடைநிலைபெற்ற தொழிற்பெயர், பயனிலையாய் நின்றது.

145. வி—ரை: மாசுணம் - பாம்பு. தாயம் - தமது உரிமைப் பாகம். தரணி - துரியோதனனாண்ட பூமி முழுவதும்.

146. வி—ரை: ஏற்றிய + இந்தனம் - அதிகப்பட அடுக்கிய விறகு; இனி, 'ஏற்றிய-ஏற்றும்படி, தீயைப்பற்றவைத்த' எனினுமாம். கதுவுதல்-பற்றுதல், மூளுதல். வற்று - வல்லமையுடையது; (குறிப்புவினைமுற்று; வன்மை: பகுதி) ஓ: எதிர்மறை. நீற்றணி - விபூதியாகிய பூச் (அங்கராகம்) சினை யுடைய. நிமலன் (நி + மலன்) - மலமற்றவர் (சிவன்). பகையைத் தப்பா தழிக்கும் ஆற்றலால் விதுரனுக்குச் சிவனை ஒப்பிட்டார். தென்புலம் - தெற்கின்கணுள்ள உலகம், யமலோகம். படர்கை - செல்லுதல் (தொழிற் பெயர்; கை: விகுதி). நெய், விறகு இவைகளைப்போன்ற ஏனைய துணைக ளெல்லாம் துரியோதனனுக்கு அமைந்திருந்தாலும் தீயானது சுவாலித்து



ஓங்குதற்குப் பிராணவாயுவின் உதவி இன்றியமையாதவாறுபோல, அவனது வெற்றிக்கு உனது உதவி அவசியமானதென்னும் பொருள் முதலீரடிகளாற் பெறப்படவைத்தது பிறிதுமொழிதல் என்னும் அணியாம்.

147. [மூலத்தில் 3-ம் அடியில், 'அன்னகர்' என்பதை 'அந்நகர்' எனத் திருத்துக.]

வி—ரை: புரைஇல் - (ஐயந்திரிபுகளாகிய) குற்றம் இல்லாத என் றுரைத்தலுஞ் சிறக்கும். பொறுப்பதற்கு ஏது விளியடையாற் குறிப்பிக் கப்பட்டது. பயந்த - பெற்ற. பேசும் - பேசப்படும்; (இது 'படு' விகுதி தொக்க செயப்பாட்டுவினைப் பெயரெச்சம்). பொறுத்தி: முன்னிலை ஏவ லொருமைமுற்று.

148. வி—ரை: மகரம் - சுறுமீன். வேலை - சமுத்திரம். நீருண்ட கரிய முகில் மழைபொழியுமாதலின், அதனைக் கண்ட மயில் மகிழும் என்க. தோகை - பீலியின் பெயர்; மயிலுக்குச் சினையாகுபெயர்.

149. வி—ரை: 'என' என்னும் ஆறும் வேற்றுமைப் பன்மை யுருபேற்ற பெயர் சந்த நோக்கி விரித்தல்விகாரம்பெற்று 'என்ன' என்றாயது; என்னுடைய என்பது பொருள்; தவம் - தவச்செயல்கள். இனி, 'எவன்' என்னும் வினைக்குறிப்புப்பெயரின் மரூஉ மொழியாகக் கொண்டு, எப்படிப் பட்ட பெரிய தவப்பயனோ என்று புகழ்ந்ததாகவும் கொள்ளலாம். உறை + மைந்தர்: இறந்தகால வினைத்தொகை; உறைந்த புதல்வர் என்க. நெடுநாட் பிரிந்திருந்த அம்மைந்தரைக் கண்டாற்போன்ற மகிழ்ச்சி கண்ணன் அவர்க ளிடத்திலிருந்து வந்தமையாலும், அவர்களின் யோக க்ஷேமங்களை உள் ளவா றறியலாமென்ற காரணத்தாலு மாயது. வான் - ஆகாயத்தின் பெயர்; இடவாகுபெயராய் முகிலை யுணர்த்திற்று; இனி, ஆகாயத்தை அளாவி உயர்ந்த என்றலுமாம். அருடி: (அருள் + த் + இ); ஏவல் ஒருமை முற்று.

150. வி—ரை: அரசர்கோமான் - அரசர்க்கரசன்: (மான்: ஆண் பாற் பெயர் விகுதி). தென்புல வேந்தன் - யமன். வெஃக - விரும்ப, யமன் செய்யுந் தொழில் இவரது போரால் அவனுக்குச் சிரமமின்றியே உண்டாதலின் 'வெஃக' என்றார். செரு - போர். புரிவன்: செய்வேன் (தன்மையொருமைவினைமுற்று). என் - (பெறும்பயன்) யாது. 'சொல்லி' என்னும் வினையெச்சம் வருவிக்கப்பட்ட 'பெறும்' என்னும் பெயரெச்ச வினைகொள்ளும்.

151. வி—ரை: சால - மிக. பொன்றுதல் - இறத்தல்.

153. வி—ரை. மதலை - புதல்வன், வடு - (கன்னிகையாயிருக் குங் காலத்தில் களவினொழுக்கக் கேட்டால் புதல்வனைப் பெற்றாளென்று உலகஞ் சொல்லக்கூடிய) வசை. மிதவை - மிதத்தலைப் பொருந்திய, தெப் பம்போன்ற எனலுமாம். பொதிந்து-உள்ளேவைத்து மூடி. அன்று, ஏ:அசை.

154. வி—ரை: சூதன் - தேர்ச்சாரதி. சுதன் என - (தனக்குப் புத்திரனாகக் கொண்டு. ஆதபன் - சூரியன். கன்னன் - கர்ணன் என்னும் வடசொல்லது திரிபு; பிறக்கும்போதே குண்டலத்துடன் கூடிய காதையுடையவனாயிருந்தபடியால், இப்பெயர் காரணப்பெயராம்; கர்ணம் - காது. என்றான் - என்று (அசரீரிவாக்கினால்) கூறினான். தாதை - (வளர்த்த) பிதா.

155. வி—ரை: பண்பு - (அழகு, ஆண்மை, வீரம் முதலிய) குணங்கள். படைத்தொழில் - அஸ்திரவித்தைகள். பணி - பாம்பு. உடை உரிமை - தமக்குள்ள குடை கொடி முதலிய அரச வரிசைகள். முடியும் சூட்டி - (அங்கதேசத்திற்கு அதிபதியாக) மகுடமுஞ் சூட்டி. வாழ்வு - (அரசருள் ஒருவனாக வாழுஞ்) செல்வ வாழ்க்கை. தேர்வல்லோரில் - (அதிரதர் முதலிய) தேர் வீரரில். 'யார்' என்னும் வினா ஈண்டு 'ஒருவருமிலர்' என்னும் பொருளைக் குறிப்பால் உணர்த்திற்று. பாண்டவ துரியோதனாதியர்கள் துரோணரிடம் வில்வித்தை பயின்று முடித்து அரங்கேற்றுகையில், கர்ணனும் தனது விற்றிறமையை, அச்சபையில் வந்து காட்டக் கண்டான் துரியோதனன் என்றறிக.

156. வி—ரை: மலைய நின்றான் - போர் செய்து கொல்லுதற்கு (இதற்கு முன்பே சபதஞ் செய்து) நின்றனன். 'ஐயம் தீர......தெளிய...' என்றது முன்னரும் பல மகளிர் கன்னனிடம் பெரும்பொருள்முதலிய சிறப்புப்பெறக் கருதித் தாமே கன்னனுக்குத் தாய் என்று சொல்லிக் கொண்டு அவனிடம் சென்று தம் எண்ணம் வீணாகப் பெற்றனராதலின், அவனுக்கு நீயே தாய் என்னும் நம்பிக்கை வரச்செய்து அதன்மேல் இவ்வரலாற்றைச் சொல்லி அவனைப் பாண்டவரோடு கூடச்செய்க என்றவாறு. அம்மா: 'கேண்மின்' என்னும் பொருட்டாகிய இடைச் சொல்லான 'அம்ம' என்பதன் நீட்டல்; அசையுமாம்; 'அம்மை என்பதன் விளிரூபம் (=தாயே) உயர்த்திக் கூறுதற்கண் வந்தது என்பாருமுளர்.

157. வி—ரை: வம்பு - வாசனை. 2-ம் அடியை முதலில் மாற்றியுரைக்கப்பட்டது. நீயே: 'பொதுநீக்கித் தனிச் செங்கோல் செலுத்தி' என்னும் பொருளைத் தந்தது; ஏகாரம் பிரிநிலை. கா - சோலை; ஈண்டுக் கற்பகமரம்.

158. வி—ரை: அழதுஅருந்த - உணவாக உண்ணும்படி. கானம் - காடு (காண்டவ வனம்). அரவு - தக்ஷகன் என்னும் பாம்பின் மகனாகிய அசுவசேனன் என்னும் பாம்பு. ஆசுகம் - பாணம். மறுகணை தொடுக்கா வண்ணம்—ஒரு முறைக்குமேல் இரண்டாம்முறை நாகாஸ்திரத்தைப் பிரயோகிக்காதபடி. ஒருமுறை தொடுப்பதனால் தீங்குநேராமற் காக்கத் தம்மால் முடியுமென்று இவ்வாறு வரம் வேண்டச்சொன்னார் என்பதாம்.



159. வி—ரை: அன்று - அவ்விளமைக்காலத்தில். அணுக எனவும் நணுக எனவும் பிரித்தற்கு அமையும். இனி, 'சென்று - (அவன் யுத்த களத்திற்) போய்; உயிர் ஒழிக்குமாறு - உயிரை மாய்க்கும்படி; செரு + வினை - போருக்குக் காரணமாகிய வஞ்சங்களை; விளைத்து - விளைய விட்டு (ப்பார்த்துக்கொண்டிருந்து); பின்னை - அதன்மேல்' என்று இங்ஙனம் உரைத்தலுஞ் சிறக்கும். ஐயா: அன்புபற்றிவந்த மரபு வழுவமைதிச்சொல்; உயர்ந்தோராகிய பிதா, குரு முதலியோரைக் குறித்துச் சொல்லுஞ் சொல் ஈண்டு வயதிற் குறைந்த மருகனைக்குறித்துச் சொல்லப்பட்டமையின் என்க. என் நினைந்து - என்ன எண்ணத்தை எண்ணி [இவ்வுண்மையை வெளியிடல் என்பெருமை, குடிப்பெருமை முதலியவற்றிற்குத் தகுதியன்று என எண்ணிப்போலும் என்ற கருத்தையும் தர வல்லது]. என்செய்தாயே - நீக்க முடியாத இவ்வின்னல்கள் விளையும்படியான செயலைச் செய்துவிட்டனையே. ஏகாரம்: பச்சாத்தாபப்படுதற்கண் வந்தது.

160. வி—ரை: படும் - இறப்பான் (செய்யுமென்னும் வாய்பாட்டு முற்று). மகவான் - இந்திரன். கொடுமை - (இருதலைக்கொள்ளியெறும்புபோல இரண்டில் ஒரு கருமமுஞ் செய்யக்கூடாத) கொடுந்துன்பம். நன்று: எதிர்மறைப் பொருளை யுணர்த்திய குறிப்பு மொழி; (வியதிரேகலக்ஷணை).

161. வி—ரை: சிந்து - அடித்து வீசுகின்ற. சூரசேனன்பெற்ற புத்திரியாய், குந்திபோசராசனுக்கு அபிமான புத்திரியாகக் கொடுக்கப்பட்டு வளர்ந்தமையின், குந்தியரசன் பாவை என்றார்; வசுதேவரும் இச்சூரசேனனது புதல்வரேயாவர். மீ துந்தி - மேலே குதித்து (தாவி) எனினுமாம். வாக்கு - சொல்லின் இயற்பெயர் அதற்குக் கருவியாகிய வாயை யுணர்த்திக் காரியவாகுபெயராய் நின்றது.

(151-ம் கவியில்) முன்னுமொருகால் குந்தியைத் தேற்றினமையின், ஈண்டு 'பின்னும்' எனப்பட்டது.

162. வி—ரை: பை - படம். பன்னகம் - பாம்பு. கன்னனுக்கும் அருச்சுனனுக்கும் நடக்கும் போரில் கன்னனால் அருச்சுனனே மாள்பவனாயினும், அவன் பிரிவால் ஏனை நால்வரும் சீவியார் ஆதலின், ஐவரும் படுதல் நன்றோ என்றார்; 3 - ம் அடி ஐவரும் படுதற்கு ஏதுவாக வந்தமையின், அதனை 2 - ம் அடியின் முதலிற் கொண்டு கூட்டியுரைக்க. ஐந்தலை நாகம் ஒரு தலையிழந்தாலும் ஏனைநான்கு தலையுடனும் வாழாமைபோல, ஒருவர் ஆவிபோனால் மற்றொருவரும் (நால்வரும்) உய்யார் என்க. உய்வு அரு - பிழைத்தற்கரிய. நடப்பதே - (கன்னனைப் பாண்டவருடன் சேர்த்தற்கும், சோரவிடின் மறுகணை தொடாமல் வரம்வேண்டுதற்குமாகக் கன்னனிடம்)

செல்வதே. கருமம் - (இத்தர்ம சங்கடத்தில் ஒருதலை துணிந்து) செய்யத் தக்க காரியம்.

163. வி—ரை: அசுராம்சமாகிய கர்ணனைக் கொல்ல வேண்டுமென்ற வஞ்சகக் கருத்துடையவாற்றால் 'நஞ்சினும் பெரிய' என்றும், ஐவரையும் காத்தற்கு மாத்திரம் எண்ணியவர்போலக் காட்டிக் குளிர்ந்த வார்த்தை கூறலின் 'மேகம்போல்' என்றும் கண்ணனுக்கு உவமை கூறினார். இங்ஙனமன்றி, 'கரிய பெரிய முகில்போல மேனி கரிதாயிருக்கப்பட்ட நாயகன்' என்றுரைத்தலு மொன்று; (காளம் - கருமை). இனி, 'விகுதி பிரித்துக் கூட்டாமல், 'வருணன் திக்கிலுள்ள + வாளமால் வரையில் குறுகினன்' என்றும், நீள மால் - நெடிய கரிய' என்றும் கோடலு மொரு வகை. இப்பொருட்கு உவமையணி.

164. வி—ரை: மாலை - சந்தியாகாலம். அணங்கு - தெய்வப் பெண். மாற்று - உவமை. இனி, (உரைத்தறியும் ஒளியாகிய) மாற்றுக் கூறுதற்கு முடியாத என்றுரைப்பாருமுளர்; அது பொருந்தாமை ஓர்க. பீடம் - வட்டவடிவமான ஆசனம். ஆதி என்பதனை வருணனுக்கு அடையாக்கி, 'பழமையாகிய' என்று (முற்செய்யுளிலிருந்து 'வெய்யோன்' என்பதனை எழுவாயாக வருவித்து) உரைப்பது மொன்று.

165. வி—ரை: கோண்ட - (தம்மை) எதிர்கொண்ட (அணையவந்த); [விவாகஞ் செய்துகொண்ட]. கொழுநர் - கணவர். முண்டகம் - தாமரைகளாகிய. குலத்து மாதர் - குல மகளிர். முகம் - (மலராகிய) முகம். குவிந்து - கூம்பி [வாடி]. ஊடி - மாறுபட்டு; [ஊடல் கொண்டு]. கயிரவம் - செவ்வாம்பலாகிய. காதல் கணிகையர் - காதற் பரத்தையர். துறை - நீர் நிலைகள்; [வாயிலின் முன்னிடம்]. வாய் - (மலராகிய) வாய். மலர்ந்து - திறந்து. இச்செய்யுள் உருவகஅணி.

166. வி—ரை: ககனம் - ஆகாயம். தாரை - நட்சத்திரம். மலர்ந்து - பரவி. வேனிலான் விழவின் - இளவேனிற் பருவத்தைத் துணையாகவுடையவனாகிய மன்மதனது உற்சவகாலத்தில்; அக்காலம் இரவு. கும்பம் - (மங்கலகரமாகிய) நிறைகுடம். தூ - சுத்தமாகிய (வெள்ளிய). குணக்கு + திசை = குணதிசை - கிழக்குத்திக்கு. உவமையணி.

167. வி—ரை: துணைவர் - நாயகர். காவி - நீலோற்பலமலர். மேவிய - (கணவருடன்) கூடின. பரவை - கடல். உழை - மான். காதல் சகோரம் - (நிலவிடத்து) ஆசையையுடைய சகோரப்பறவை; அது நிலாவை உணவாகக் கொள்வது என்பர். கணவரைப்பிரிந்த மாதர் கண்கள் இராக்காலத்தில் விரகவேதனையால் உறக்கமின்றி விழித்திருத்தலின், அக்காலத்தில் மலர்ந்திருக்கும் காவி முதலிய மலர்களைப்போன்றன.



இரவில் நாயகரோடு கூடிவாழும் மகளிர் கண்கள் கிளர்ச்சியுற்று மகிழ்ந்திருத்தலால், அவ்விரவில் கிளர்ச்சியுடையவான கடல் முதலியவற்றை ஒத்தன. மாது, ஓ: அசை. உவமையணி.

168. வி—ரை: ஓதை - ஓசை. சூழ்தல் - ஆலோசித்தல். ஊரரவம் அடங்கியபின் சூழ்ந்தது, உற்றவரல்லாத பிறரறியாமற் செய்த வஞ்சகச் சூழ்ச்சியாதல்பற்றி என்றறிக.

169. வி—ரை: மந்திரம் - ஆலோசனை.

170. [மூலத்தில், 4-ம் அடியில், 'வந்தால்' என்பதை 'வந்தான்' எனத் திருத்துக.]

வி—ரை: மதிக்குடை - சந்திரன்போன்ற வெண்கொற்றக் குடை. பாதபம் - மரம். யாதவன் - யதுவம்சத்திற் பிறந்தவர் (கிருஷ்ணர்). பாண்டவரைத் தூண்டுங் காரணனும் தக்க உதவி புரிபவனுமாகிய கண்ணனை மீண்டுபோகாதபடி செய்துவிட்டால், வெற்றி நமக்கேயாம்; அதற்கு என்ன செய்யலாமென்று வினவினனென்க.

171. வி—ரை: எயினர் - வேடர். கரும்பொழுது - இருளாற்கரிய இரவு. எடுத்துக்காட்டுவமையணி.

172. வி—ரை: 'யாவர்' என்னும் வினைப்பெயர் 'ஆர்' என மருவியது. முறுவல் - சிரிப்பு.

173. வி—ரை: தூதரைக் கொல்லல் ஆகாது என்று தடுக்கலுற்றவன் இனம்பற்றி ஏனையரையும் உடன் கூறினன். வேத முனிவார் - வேதங்களை யுணர்ந்த பிராமணர். தோத்திரமொழிவோர் - துதிபாடகர்; (மாகதர் முதலாயினோர்); இனி, துதித்துக் கீழ்ப்படிந்தவர்களையும் கொள்ளத்தகும். பார்த்திவர் - அரசர். "பாவம் மற்றிதனினில்லை" என முன்னர்க்கூறி, மேலும் "பின்னும் நரகினும் புகுவர்" என்றதனால் இப்பாவம் எவ்வகைப் பிராயச்சித்தத்தாலும் தீராமல் அநுபவித்தே தீரவேண்டுமென்றபடியாமென்க.

174. வி—ரை: கோறல்: கொல் + தல் = பகுதிமுதல் நீட்டல்விகாரம் பெற்று, (கோல் + தல்) நிலைமொழியீற்று லகரமெய்கெட, வருமொழித் தகரம் றகரமாகத்திரிந்தது; தொழிற்பெயர். சேறல், வேறல் என்பனவும் இங்ஙனமாய பிறசொல்லாம். ஆண்மை - ஆண்டன்மைக்கு அழகான காரியம்; (உபசார வழக்கு) கழி - மிகுந்த. வளைந்திடல் - முற்றுகையிட்டுப் பொருதல். எழில் - அழகு, எழுச்சி. கொண்டல் - மேகம் போன்ற. வண்ணன் - நிறத்தையுடையனாகிய கண்ணன்.

175. வி—ரை: மந்தணம்-இரகசியாலோசனை. அலங்கல் - பூமாலை. இம்பர் - (அதற்குரிய) இவ்விடத்தில். மற்று: அசை. யாது சொல்ல - என்ன ஆலோசனையைச் சொல்லுதற்கு (சொல்வார்களென்று கருதி). இளைஞரை—அறிவு அனுபவங்களிற் குறைந்தவர்களை என்னும்பொருட்டு. அழைத்தது - நீ அழைத்தாயென்றபடி; பயனிலையாய் வந்த (தொழிற்பெயர்).

177. வி—ரை: செங்கதிர் - சூரியன். கனன்று - கோபித்து விளிந்திட - இறக்கும்படி. 'யான் வெகுண்டு போருக்கு எழின் கண்ணன் இறவாதிருக்க வல்லனோ' என்னும் உவமேயப்பொருளைத் தோற்றுவித்து நிற்றலின், முதலாமடி பிறிது மொழிதல் என்னும் அணியாம்.

178. வி—ரை: கூடுமாயின் - சேருவானேல். வேறு மதிப்பது என் - வேறு ஆலோசித்துச் செய்யத்தக்கது யாது; வேறு ஆலோசிப்பானேன் எனலுமாம். கோலி - சூழ்ந்து, வளைத்துக்கொண்டு. சதிப்பது - அழிப்பது; 'சூதி' என்னும் வடசொல் திரிந்த வினையடியிலிருந்து தோன்றிய வினை. பின்னும் சொல்வான் - வேறுமோருபாயத்தை (எண்ணிச்) சொல்வான் என்றபடி. துச்சாதனன், கன்னன் ஆகியவர்களின் கூற்றை இதனால் ஆமோதித்துக் கூறி, அடுத்த கவியில் அதனின் மிக்க உபாயம் பிறிதொன்று எண்ணிக் கூறுவதாகக் கருத்துக் கொள்க. இனி, வருங்கவியோடு கருத்து ஒன்றுபடுமாறு, 'மனையில் கோலி சதிப்பதே—(நமது) மாளிகையில் (தந்திரமாக அழைத்து) அவனை அகப்படுத்தி (வலியை) அழிப்பதே (=ஒடுக்குவதே)' என்று ஈண்டுத் தொகுத்துக் கூறியதாகக்கொண்டுரைப்பினுமாம். இதற்கு 'சொல்வான் - விரித்துரைப்பான்' என்க. சௌபலன் - சகுனி (சுபலனது மகன்: தத்திதாந்தப்பெயர்).

179. வி—ரை: எல்லிடை - பகலில். இகல் - வலிமை.

180. வி—ரை: மாதுலன்-மாமன் (சகுனி). மாற்றம்-வார்த்தை. 'நீதியின்+சமைத்தபின்னர்' எனக் கூட்டி யுரைக்கப்பட்டது. தாழ - ஆழமாக. சமைத்த – அமைத்த. ஆதி - முதலில். நூறயிரம் - இலட்சம். நில அறை - சுரங்கமாகச் செய்யப்படும் அறை.

181. வி—ரை: மற்று - அசை. 'அறிவனை அலைக்க என்று+அல்லில் ஓர் கடிகைதன்னில்' என்பவற்றை முதலிற்கொண்டுரைக்கப்பட்டது. பப்பரவர் - பர்ப்பரதேசத்தவர்; இவர் மிலேச்சசாதி வகையினர்; ஆப்கானிஸ்தானப்பக்கத்திலுள்ள முரட்டுச் சாதியாராகலாம்; பர்ப்பரதேசம் பாரசீகத்திற்கும் சிந்துநதியின் மேற்பாகத்திற்கும் இடைப்பட்டதாகும். இனி, மற்போரில் வல்லவராகிய பப்பரவர் என்று இருபெயரொட்டுமாம்,



182. வி—ரை: 'வரம்பு இலா வென்றி வேலான்' என்பதை முதலிற் கொண்டு கூட்டுக. பில அறை - சுரங்கமாகிய அறை. வேய் - மூங்கில். பிளப்பு - பிளந்த சலாகைகள். நிரைத்து - வரிசைபொருந்தப் பரப்பி. 'பேறல்+அரு' என மொழிமாற்றிப் 'பேறுதற்கு அரிய' எனவுரைக்க. சுரும்பு - வண்டு. இமிர் - ஒலித் (து மொய்த்) தற்கேதுவாகிய. தொழில் - சித்திரவேலை. விதானம் - மேற்கட்டி.

183. விரை: ஆர் இருள் - நிறைந்த அஞ்ஞானம்[வினைத்தொகை]; (நீக்குதற்கு) அரிய அஞ்ஞானம் [அருமை என்னும் பண்புப் பெயர் 'ஆர்' என விகாரப்பட்டது; பண்புத்தொகை] எனலுமாம்; இன்னதன்மைத்து என ஒருவராலும் கூறப்படாமையின், அஞ்ஞானத்தை 'இருள்' என்றார். கங்குல் - இருள்; இரவு என்றலுமாம். அஞ்ஞானத்தைக் கங்குலாக உருவகப்படுத்தியதற்கு ஏற்ப, நெடியவனுகிய சூரியன் என்றுரைக்க. இஃது ஏகதேச வுருவக அணி. விரகின் - உபாயத்தினால். போக - கழியாநிற்க; [நிகழ்கால வினையெச்சங்கள்]. படியவர் - பூவுலகத்தவர். தன்னியல்பாற் கழிந்த இரவை, அஞ்சியமையாற்போலக் கழிய என்றது ஏதுத்தற்குறிப்பேற்றஅணி.

184. வி—ரை: சூடிகை - உச்சி. நிரந்தரம் - இடைவிடாமல். அருக்கன் - சூரியன். புரந்தரன் - இந்திரன். கோயில் - (தனது) அரமனை. கிழக்கிலுதித்த சூரியனை இந்திரன் தனது மாளிகையில் ஏற்றிவைத்த தீபரூபமாகக் கற்பித்தமை தற்குறிப்பேற்றவணி. அருவி வீழ்ச்சியாற் பளிங்குநிறமும் நாகரத்தினங்களாற் செந்நிறமும் விளங்கப்பெற்ற உதயகிரி இந்திரனது நாஞவிதரத்தினகசிதமாகிய உந்நத மாளிகையை நிகர்த்தது என்க

185. [98-ம் பக்கம் 17-ம் வரியில் 'விளங்குகின்ற' என்பதன் பின்னே 'சூரியன் போன்ற' என்பதைச் சேர்க்க. 20-ம் வரியில் 'அசைந்து' என்பதை 'அசைதலால்' எனத் திருத்துக. 22 - ம் வரியில் 'பாடி ... ... ...' எனத் தொடங்கும் வாக்கியத்தை நீக்கிவிடுக.]

வி—ரை: இச்செய்யுள் சிலேடையணி. சூரியோதய வருணனையாகிய நுதலிய பொருளுக்குத் தாமரை மலர்ச்சியும் மாதர் துயிலுணர்ந்து முகமலர்தலுமாகிய இரண்டும் வர்ணியங்களாதலறிக. முதலிலிருந்து 'உலாவ' என்பது வரையில் உள்ள தொடர் தாமரை மலருக்கு ஏற்ப ஒரு பொருள் தந்து அதற்கு அடையாகவும், மடந்தையர் முகத்திற்கு ஏற்ப மற்றொரு பொருள் தந்து அதற்கு அடையாகவும் நின்றது. ஆகையால், இச்சிலேடைத் தொடரை இருமுறை படித்துத் தாமரை மலருக்கும் மாதர் முகத்துக்கும் வேறு வேறு கூட்டி 'அரி பாடவும், கயல் உலாவவும் தாமரை

முகமும் மணம்பெற மலர்ந்தது' எனவும்; 'தடங்கயல் (=கண்கள்) நெருங்கி+செவ்வரிகள் அடர்ந்து பரவப்பெற்று+மலைந்து உலாவ, மடந்தையர் முகமும் மணம்பெற மலர்ந்தது' எனவும் தனித்தனி வாக்கியமாகப் பிரித்து வினைமுடிபு காண்க. ஆகவே, தாமரை மலருக்கும், மாதர் முகத்துக்கும் இச்செய்யுள் முழுதும் சிலேடையாய் (ப் பொருள் பயந்து) நிற்றலையறிக.

'அரி (=வண்டு)+தொடர்ந்து+நெருங்கி மேல்மேல் அடர்ந்து (=சமீபித்து ஒன்றன்பின்னொன்றாகச் செறிந்து)+பரந்து (=பரவி)+ஒளிர் உதய ராகத்தோடு (=விளங்குகின்ற விடியற்கால ராகத்தோடு) உற (=பொருந்த)+காமன் ஆகம வேதம் பாட (=காம சாஸ்திரத்தோடு இயைந்த காந்தர்வ வேதமாகிய இசையைப் பாட) தட கயல் மலைந்து உலாவ (=பெரிய கயல் மீன்கள் தம்மீதே ஒன்றோடொன்று பொருது உலாவ) தாமரை முகமும்+தட கயல் (=பெரிய கண்கள்) தொடர்ந்து ஒளிர் உதய ராக தோடு (=இடைவிடாதொளிர்கின்ற உதயகாலச் சூரியன்போற்செந்நிறத்தையுடைய காதணியை) உற நெருங்கி மேல் மேல் அடர்ந்து அரி (=செவ்வரிகள்) பரந்து, காமன் ஆகம ஏது அம்பு ஆட (=காதல் வருகைக்குக் காரணமாகிய மன்மதபாணம்போல [ப் பிறழ்ந்து] அசைதலால்)+மலைந்து (=ஆடவர் மனத்தைப் பொருது) உலாவ+காதல் மடந்தையர் முகமும்+மணம்பெற+சேர+மலர்ந்த' என அந்நுவயங் கொள்க.

தட - பெரிய (உரிச்சொல்). மாது, ஓ: அசை. விடியற்கால ராகங்கள்: இந்தோளம், இராமகலி, தேசாக்ஷரி, நாட்டை, பூபாளம் என்பன. காமனது ஆகமம் - காமசாஸ்திரம். இசைநூலானது நால்வகை உபவேதங்களுள் ஒன்றாய்க் காந்தர்வவேதம் எனப்படுதலினாலும், காமசாஸ்திரப் பொருளாகிய இன்பத்துக்கு உறுதுணையா யிருப்பதனாலும் ஈண்டு அவ்விசையைக் 'காமனாகமவேதம்' என்றார். மாதர் முகத்திற்கு அடையாகுங்கால்:—உதயன் - உதயகாலத்துச் சூரியன். காமன் ஆகம ஏது அம்பு - மன்மதனால் விளைவதாகிய காதல் வருகைக்கு ஏதுவாகிய அவனது பாணம் என்க; (காமன்: இலக்கணையால், அவனால் விளைவதாகிய ஆசையை யுணர்த்தியது; ஆகமம் - ஆகமநம்=வருகை). தட கயல் - அகன்ற பெரிய கண்கள் (உவமையாகுபெயர்). தோட்டைப் பொருந்த நெருங்கி என்றது 'காதளவும் நீண்டகண்' என வருணிக்கும் கவிமரபுபற்றி என்க. அரி - செவ்வரி. ராகம் - சிவப்பு நிறம்; இனி, இச்சை என உரைத்து 'நாயகர் மீது தொடர்பாக விளங்கித் தோன்றுதலையுடைய இச்சையால் காதணியைப் பொருந்த நெருங்கி' (என்றது காதலைப் புலப்படுத்தும் கடைக்கண் பார்வையைக் குறித்தது) என்றுரைப்பினுமாம்.



தாமரைமலர்க்கு அடையாகுங்கால்:—பொழிப்பிற்கூறியவாறன்றி, 'தொடர்ந்து ஒளிர் உதய ராக தோடு உற நெருங்கி-கலந்து விளங்கித் தோன்றுதலையுடைய செந்நிறமும் வெண்ணிறமும் பொருந்திய பூவிதழ்கள் மிக அடர்ச்சியாகப் பொருந்தப்பெற்று' எனினுமாம்; இதற்கு நெருங்கி, பாட, உலாவ என்னும் வினையெச்சங்கள் தனித்தனியே 'மலர்ந்த' என்னும் முற்றோடு முடியும்; [ராகம் - நிறம். உதயம் - தோன்றுதல். தொடர்தல் - (வெண்மையும் செம்மையும்) தொடர்புறக் கலந்திருத்தல்; செந்தாமரையினிதழ் நிறம் வெண்மை கலந்த சிவப்பாதலின், இங்ஙனங் கூறியதென்க]. தாமரை முகம் - தாமரைப்பூவின் மேற்பக்கம். மணம் - பூவிற்கு வாசனையும், மாதர் முகத்திற்குக் கலியாண (=மங்களகரம்) முமாகக் கொள்க. ஈண்டுச் சிலேடைப் பொருளால், முகத்துக்கும் தாமரைமலர்க்கும் ஒப்புமை தொனிப் பொருளாகத் தோன்றுதலும் உணர்க. இச்செய்யுளுக்குப் பிறவாறு உரைப்பாருமுளர்.

186. [98-ம் பக்கம் 32-ம் வரியில், 'அருந்துயில்' என்பதை 'வருந்துயில்' எனத்திருத்துக]

வி—ரை: அனந்தன் போகம் பேர் அணை - ஆதிசேஷனது உடலாகிய பெரிய மெத்தை. பெருந்துயில்+துறந்த - பெருமையாகிய அறிதுயிலைக் கைவிட்டு வந்த; விஷ்ணு திருப்பாற்கடலினை நீங்கிக் கண்ணனாக அவதரித்தமையால், இங்ஙனம் கூறினார். மால் - திருமால், கிருஷ்ணர்.

187. வி—ரை: மாதவன், முகுந்தன் - கிருஷ்ணர்; (மா - இலக்குமிக்கு. தவன் - நாயகன்). தோன்றல் - பெருமையிற் சிறந்தோன், (அரசன் முதலியோர்க்கு வழங்கும் பெயர்). துளபம் - துளசிமாலை. யாதவகுலம் - (யயாதி மகாராசனின் குமாரருள் ஒருவனாகிய) யது என்பவனிலிருந்து தோன்றிய வம்சம். எழுந்தருள்க என்றான்-(நம்மை) வருக என்றழைத்தான்.

188. வி—ரை: கந்து அடு - கட்டுத்தறியை (மதத்தால்) முறிக்கும். அரசு - அரசன் (திருதராட்டிரன்). தந்திரம்-சேனை. இந்திரன் இருக்கை-இந்திரனது அரசிருக்கை மண்டபம், (சுதர்மை எனப் பெயரிய தேவ சபா மண்டபம்). கோயில் - இராசமாளிகையினுடைய. ஊடு - நடுவிடம்; ஈண்டு அவ்விடத்துள்ள கொலுமண்டபத்தை உணர்த்திற்று இலக்கணையால்.

189. வி—ரை: நாம் என்னு முரிச்சொல் நாம என ஈறு திரிந்தது. அச்சத்தைத் தரும் என்னும் பொருட்டு. வீ - பறவைப் பொதுப்பெயர்;

ஈண்டு வண்டிற்காயது. வேத்திரம் - பிரம்பு. கண்ணனுடன் சென்ற
சரும் சேனையும் உள்ளே செல்ல அநுமதிக்கப்பட்டிலர் என்பது பிரிநிலை
ஏகாரத்தாற் பெறப்பட்டது.

190. வி—ரை: அலங்கல் - மாலை. இன்பு உற-[illegible]ரியோதனனது
வஞ்சனை தமக்குப் புலப்பட்டும், அதனாற் சிறிதும் சிந்தனை அச்சம் வெகுளி
ஒன்றுமின்றி) மகிழ்ச்சியே தோன்ற. மின் - ஒளி. இனி, 'துவசநாகவிடம்-
கொடியாகிய பாம்பினது விடம்' எனத் தொடர்ப்பொருள் விரித்தலுமாம்.
திகிரியான் என்னும் பெயர், தம்மோடு எவ்வளவு பேர் பகைத் தெதிர்த்த
லும் அவர்களை யெல்லாம் கொல்ல வல்ல ஆயுதமும் வலிமையும் உடையா
என்பது தோன்ற நின்றது.

கிருட்டிண[illegible]றூது சருக்கம்
விசேடக் குறிப்புரை
முற்றிற்று.